# பொருளியல் நோக்கு

பெப். / மார்ச் 1991

இரட்டை இதழ்

## 2000 ஆவது ஆண்டில் நீர்ப்பாசனம்

சீ. ஆர். பானபொக்கே
என். ஜி. ஆர். டி. சில்வா
நிஹால் பெர்னான்டோ
டக்ளஸ் ஜே. மெரி
ஆரிய அபசிங்க
அநுர விதானபத்திரன
டப். எஸ். விக்ரமாரச்சி
டி. எம். ஆரியரத்ன
ஆர். டி. வணிகரத்ன
எஸ். எல். திலகசிரி

சோஷலிசத்தின் நெருக்கடி
ஜோ ஸ்லோவோ

கலாச்சார சுய நிர்ணயம்
ஆர். ஸ்டவன்ஹகன்

21ஆவது நூற்றாண்டில் இலங்கை
பொன்னா விக்னராஜா

சோவியத் யூனியன் : புதிய சுற்றி வளைப்பு
தயான் ஜயதிலக

மக்கள் வங்கி வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணோட்டம்

நீர் என்பது, எந்த ஒரு சமூகத்தினதும் உயிர் நாடியாக - ஆக்கத்தினையும் அழிவினையும் எடுத்து வரும் ஒரு சக்தியாக - இருந்து வருகிறது. நீரைப் பெற்றுக்கொள்வதும் அதனைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதும் மிகத்தொன்மைக் காலத்திலிருந்தே மனித குலத்தின் முதன்மை அக்கறையொன்றாக இருந்து வந்துள்ளது. பண்டைய உலகின் சிறப்பு மிகுந்த நாகரீகங்களின் அமைவிடங்களை தீர்மானிப்பதில் நீரே மிக முக்கியமான நிர்ணய காரணியொன்றாக செயற்பட்டு வந்திருக்கிறது. எனவே நீர்ப்பாசனமானது, எப்பொழுதும் மனித சமூகத்தில் ஒரு மைய அந்தஸ்தினை நிலையாக பெற்று வந்திருக்கிறது.

இலங்கை பெருமளவுக்கு வளர்ச்சியடைந்த நீர்ப்பாசன அமைப்புக்களின் வரலாறொன்றை தன்னகத்தே கொண்டிருக்கிறது. செயற்றிறன் கொண்ட நீர்ப்பாசன அமைப்புக்களை கட்டியெழுப்புவது, கி. மு. மூன்றாவது நூற்றாண்டில் போலவே கி. பி. இருபதாம் நூற்றாண்டிலும் அதிகளவு முக்கியத்துவம் கொண்ட ஒரு பணியாக இருக்கிறது. இன்றைய நிலையில் அது மேலும் முதன்மை பெற வேண்டியுள்ளது. ஆகவே, நீர்ப்பாசனம் என்பது எமது இன்றைய முழு அபிவிருத்தி முயற்சியினதும் வெற்றியை அல்லது தோல்வியை நிர்ணயிக்கும் முக்கிய காரணிகளில் ஒன்றாக காணப்படுகிறது.

பொருளியலாளர்கள், அரசியல்வாதிகள், கொள்கை வகுப்போர் மற்றும் பொறியியலாளர்கள் ஆகிய அனைத்துப் பிரிவினருக்கும் சம்பந்தமுள்ள ஒரு முக்கிய விடயத்தை 'பொருளியல் நோக்கின்' இந்த இரட்டைச் சிறப்பிதழ் விசேஷ அறிக்கையாக தருகிறது. அதாவது, 21 வது நூற்றாண்டுக்கு தேவையான நீர்ப்பாசன முறைகள் பற்றிய பல்வேறு கோணங்களிலுமான கட்டுரைகளை இவ்விதழில் தருகிறோம். இத்துறையில் சிறப்புத் தேர்ச்சி பெற்றுள்ள வல்லுனர்கள் நீர்ப்பாசனத்தின் பல்வேறு அம்சங்கள் குறித்தும் இங்கு எழுதியிருக்கின்றார்கள். சிக்கல் மிகுந்ததும், பல பரிமாணங்களைக் கொண்டதுமான சர்ச்சைக்குரிய இந்த விடயத்தை வாசகர்கள் புரிந்துகொள்வதற்கு இக்கட்டுரைகள் உதவும் என நம்புகிறோம்.

இது தவிர, கலாசாரம், ஆராய்ச்சி மற்றும் சர்வதேச உறவுகள் என பல்வேறு அம்சங்களையும் உள்ளடக்கிய பரந்த வீச்சிலான கட்டுரைகளும் இவ்விதழில் இடம் பெறுகின்றன. ரொடொல்போ ஸ்டவன்ஹகன் சிக்கலான, கலாச்சார உரிமைகள் தொடர்பான பிரச்சினையை இங்கு ஆராய்கிறார். கலாசாரத்துக்கான உரிமை சுயநிர்ணய உரிமைக்கான ஒரு முன்நிபந்தனையாகும் எனகிறார் அவர். பல இனங்களையும், பல மதங்களையும், பல கலாசாரங்களையும் கொண்ட எம்முடையதைப் போன்ற ஒரு சமூகத்துக்கு — முக்கியமாக இன்னமும் தீர்க்கப்படாத இனப் பிரச்சினையின் பின்னணியில் - அவரது கருத்துக்கள் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தனவாகும்.

நெல்சன் மண்டேலாவின் தோழரும் இன ஒதுக்கலுக்கெதிரான போராளியும், மார்க்சிச உத்தி வல்லுனருமான ஜோ ஸ்லோவோவின் கட்டுரையில், சோஷலிச உலகில் இடம் பெற்று வரும் மாற்றங்களை விளங்கிக்கொள்வதற்கு ஒரு முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. சோவியத் யூனியனிலும் மற்றும் பல நாடுகளிலும் முதலாளித்துவத்தை முற்று முழுதாக ஆதரித்து, அதனை புதிய சிந்தனையாக கருதும் போக்கு நிலவி வருவதாக அவர் எச்சரிக்கை விடுக்கிறார். அதே வேளையில், இன்று, சோஷலிசம் குறித்து உண்மையான புதிய சிந்தனை அவசியம் என்பதனையும் அவர் வலியுறுத்துகிறார்.

அபிவிருத்தி ஆராய்ச்சி குறித்த பொன்னா விக்னராஜாவின் அறிக்கை ஆய்வாளர்களுக்கும் மாணவர்களுக்கும், கொள்கை வகுப்போருக்கும் மிகுந்த பயனுள்ளதாகும். இலங்கையில் அபிவிருத்தி முயற்சிகள் குறித்த சுருக்கமான வரலாற்றையும் இக்கட்டுரை தருகிறது. வறுமை ஒழிப்பு, கலாசார பரிமாணம் மற்றும் இனப்பிரச்சினை என்பவற்றையும் கவனத்தில் எடுக்கும் அபிவிருத்தி உத்தி தொகுதியொன்றின் அவசியம் இங்கு வலியுறுத்தப்படுகிறது.

இறுதியாக, தயான் ஜயதிலக, சோவியத் யூனியனில் நிகழ்ந்து வந்துள்ள மாற்றங்கள் குறித்த வரலாற்று ரீதியான அணுகுமுறையொன்றை இங்கு தருகிறார். லெனினின் புதிய பொருளாதார கொள்கை தொடக்கம் சீர்திருத்தத்துக்கான சோவியத் முயற்சிகள் அனைத்தும் மேற்கத்தைய வல்லரசுகளின் பகைமையினாலும் பேராசையினாலும், சோவியத் யூனியனுக்குள்ளேயே மூண்ட வர்க்கப் போராட்டங்களாலும் தோல்வி கண்டன என்பதனை அவர் சுட்டிக்காட்டுகிறார். இதே காரணிகள் (குறிப்பாக வளைகுடா போரின் பின்னணியில், கோர்பச்சேவின் கொள்கைகளில் சில மாற்றங்களுக்கு வழிகோல முடியும். இந்த நிலையில், சித்தாந்த போராட்டங்களின் எழுச்சி, அமெரிக்காவுடனான புதுப்பிக்கப்பட்ட போட்டி மற்றும் சீனாவை நோக்கிய நகர்வு போன்ற மிக முக்கியமான புதிய போக்குகள் தோன்றும் வாய்ப்புள்ளது என்றும் அவர் விளக்குகிறார்.

திசரணி குணசேகர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளியல் நோக்கு

மலர் 16 இதழ்கள் 11/12 பெப்/மார்ச் 1991

வெளியீடு: ஆராய்ச்சிப் பகுதி,
மக்கள் வங்கி, தலைமையலுவலகம்,
சேர் சிற்றம்பலம் ஏ. காடினர் மாவத்த,
கொழும்பு 2.
இலங்கை

## உள்ளே


| | | |
|---|---|---|
| | 2 | அறிமுகம் |
| ஜோ ஸ்லோவோ | 45 | ஆகவே சோஷலிசம் தோல்விடைய மாட்டாது........... |
| பொன்னா விக்னராஜா | 47 | இலங்கை: 1990களில் அபிவிருத்தி ஆய்வு தொடர்பான பிரச்சினைகள் |
| ரொடொல்போ ஸ்டவன்ஹகன் | 52 | கலாசார உரிமைகள் தொடர்பான பிரச்சினை |

**விசேஷ அறிக்கை** 2000 ஆவது ஆண்டில் நீர்ப்பாசனம்

| | | |
|---|---|---|
| சி. ஆர். பானபொக்கே | 3 | 2000 ஆவது ஆண்டில் நீர்ப்பாசனம் பெற்ற விவசாயம் |
| அநுர விதானபத்திரன | 8 | 21 ஆம் நூற்றாண்டில் நீர்ப்பாசனத் துறை: நிலம், நீர் மற்றும் மக்கள் தொடர்பான பிரச்சினைகள் |
| டக்ளஸ் ஜே. மெரி | 14 | இலங்கை நீர்ப்பாசன முகாமை நிறுவனங்கள் |
| என். ஜி. ஆர். டி. சில்வா | 18 | 2000 ஆவது ஆண்டில் நீர்ப்பாசன முகாமை குறித்த ஒரு தரிசனம் |
| ஆரிய அபேசிங்க | 25 | நீர்ப்பாசனத்தை மக்கள்மயப்படுத்தல் |
| எஸ். விக்ரமாரச்சி | 30 | சுற்றுச்சூழல், நிலம் மற்றும் நீர் |
| எஸ். எல். திலகசிரி | 35 | நீர்ப்பாசனமும் சுற்றுச்சூழல் பாதுகாப்பும் |
| டி. எம். ஆரியரத்ன | 37 | நீர்ப்பாசன புனருத்தாரணம் குறித்த சில சிந்தனைகள் |
| நிஹால் பெர்னாண்டோ | 40 | வருங்காலத்தில் நீர்ப்பாசன விவசாயத்துக்கான தொழில்நுட்ப தெரிவுகள் |
| ஆர். டி. வணிகரத்ன | 43 | நீர்ப்பாசன விவசாயத்தை பாதிக்கும் நிலம் தொடர்பான பிரச்சினைகள் |
| தயான் ஜயதிலக | 57 | புத்தம் புதிய கெடுபிடி யுத்தத்தை நோக்கி |


"பொருளியல் நோக்கு" கருத்துக்களையும், அறிக்கைகளையும், புள்ளிவிபரத்தரவுகளையும், உரையாடல்களையும் பல்வேறு கோணங்களிலிருந்து அளிப்பதன் மூலம் பொருளாதாரத்திலும், பொருளாதார அபிவிருத்தியிலும் ஆர்வத்தினை தூண்டி, அறிவினை வளர்ப்பதைக் குறிக்கோளாகக் கொண்ட ஓர் இதழாகும்.

"பொருளியல் நோக்கு" வெளியீடு மக்கள் வங்கியின் ஒரு சமூகப் பணித்திட்டமாகும். எனினும், அதன் பொருளடக்கம் பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டதாயிருக்கும். அவை வங்கியின் கொள்கைகளையோ உத்தியோகபூர்வமான கருத்துக்களையோ பிரதிபலிப்பவையல்ல. எழுத்தாளரின் பெயருடன் பிரசுரிக்கப்படும் சிறப்புக்கட்டுரைகள் அவ்வாசிரியர்களின் சொந்தக் கருத்துக்களாகும். அவை அவர்கள் சார்ந்துள்ள நிறுவனங்களைப் பிரதிபலிப்பனவுமாகா. இத்தகைய கட்டுரைகளும் குறிப்புகளும் வரவேற்கப்படுகின்றன.

"பொருளியல் நோக்கு" மாதந்தோறும் வெளியிடப்படும். அதனை சந்தா செலுத்தியோ அல்லது விற்பனை நிலையங்களிலிருந்தோ பெற்றுக்கொள்ள முடியும்.

விசேஷ அறிக்கையின் முக்கியத்துவத்தை கவனத்தில் கொண்டு 'பொருளியல் நோக்கு' இம்முறை 64 பக்கங்களைக்கொண்ட இரட்டை இதழாக வெளிவருகின்றது. சந்தா நோக்கங்களுக்காக, இந்த இதழ் இரு இதழ்களாக கருதப்படும் என்பதை சந்தாதாரர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிமுகம்

மனித நாகரிகம் முழுவதிலுமே, விவசாய அபிவிருத்தியில், நீர் நிர்ணயகரமான ஒரு காரணியாக இருந்து வந்திருக்கிறது. மனிதர்கள் உபயோகிக்கும் நன்னீரில் 73 சதவீதம் விவசாயத்துக்கே செல்கிறது என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. கடந்த பத்தாண்டு காலத்தில், பாரிய நீர்ப்பாசன திட்டங்கள் மூலம் பெருமளவிலான உலர் நிலங்கள் விவசாயத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. ஆனால், வறண்ட நிலங்களை செழிப்படையச் செய்வதற்காக அபரிமிதமான நீர் இப்பொழுது கிடைப்பதாக இல்லை. சாகுபடி செய்யப்படும் (நீர்ப்பாசனம் பெறும்) நிலத்தின் பரப்பளவு கடந்த தசாப்த காலத்தில் 7 சதவீதமாக வீழ்ச்சியடைந்திருப்பதாக உலக அவதானிப்பு நிறுவன தலைவர் லெஸ்டர் பிரவுண் தெரிவிக்கிறார்.

உலக குடித்தொகையும், அதே போல பொருள் நுகர்வும் பெருகி வருகிறது. அதிகம்திகமாக உணவு உற்பத்தி செய்யப்படாவிட்டால் பட்டினி பரவும் அபாயம் உள்ளது. உணவு தானிய கையிருப்பு, 1987ல் 101 நாட்களுக்கு போதுமானதாக இருந்து, 1989ல் 54 நாட்களுக்கு போதுமானதாக வீழ்ச்சியடைந்திருப்பதாக 'டைம்' சஞ்சிகை (நவம்பர் 5, 1990) எழுதியுள்ளது. வரும் நாட்களில் நீர் மிக அருமையான மூலவளமொன்றாக இருக்கும் என்பதனையும், இந்த அருமையான வளத்தைப் பெற்றுக் கொள்வதற்காக நாடுகள் போர் தொடுக்கும் என்பதனையும் இது காட்டுகிறது. இலங்கையின் நிலைமை இதற்கு வேறுபட்டதல்ல. இலங்கையின் அபிவிருத்தி பண்டைக்காலம் தொட்டே நீருடன் இணைந்ததாக இருந்துவந்துள்ளது. நீர் நிலைகளை அடியொற்றியே இராச்சியங்கள் இடம்பெயர்ந்தன.

ஒல்லாந்தர் காலத்துக்குப் பின் - குறிப்பாக பிரிட்டிஷ் ஆட்சியில் - நீர்ப்பாசன புனருத்தாரணத்துக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. நிலம், நீர்ப்பாசனம் என்பன, அபிவிருத்தி முயற்சியில், ஒன்றுடனொன்று பின்னிப்பிணைந்துள்ள இரு காரணிகளாகும். இலங்கை, 1950கள் தொடக்கம், பாரிய பல நோக்கு அபிவிருத்தி திட்டங்களுக்கூடாக 'பெரும் பாய்ச்சலில்' வளர்ச்சியை எட்டுவதற்கு முயன்று வந்திருக்கிறது. இதற்காக கல்லோயா, வளவே, மகாவலி போன்ற ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்தி திட்டங்களில் முழுக்கவனமும் செலுத்தப்பட்டது. இந்த வகையில் பெருந்தொகையான மூலவளங்கள் நீர்ப்பாசனத்தின் மீது முடக்கப்பட்டன.

ஈர வலயத்தில் வாழ்ந்த மிதமிஞ்சிய குடித்தொகையினரே குடியேற்றத்திட்டங்கள் மூலம் அதிகளவில் நன்மையடைந்தவர்கள் என்று கருதப்படுகிறது. நீர், எல்லையறுக்கப்பட்ட ஒரு மூலவளம் என்பதனை இவர்களில் பலர் உணராமல் இருக்கலாம். 1940களிலும் 1950களிலும் குடியேற்றத்திட்டங்கள் துரிதமாக விஸ்தரிப்படைந்ததனையடுத்து பெருமளவு நிலம் அபிவிருத்தி செய்யப்பட்டு, மனித குடியிருப்புக்கள் உருவாக்கப்பட்டன. இந்த முன்னேற்றங்கள் நில, நீர் வளங்களின் நிர்வாகத்தை ஒரு சிக்கலான பிரச்சினையாக மாற்றியது. விவசாய வளர்ச்சியில் வறையறைகளை எடுத்துவரும் நிர்ணய காரணி, நீர்ப்பாசன நீர்தான் என்பது குறித்து அதிகளவு அக்கறை காட்டப்படவில்லை. நீர் நிர்வாகம் ஒரு முக்கியமான பிரச்சினையாகவும் கருதப்படவில்லை.

நீர் நிர்வாகம் என்பது தொழில்நுட்ப கூறுகளையும், சமூக கூறுகளையும் உள்ளடக்கிய ஒரு நிகழ்வுப்போக்காகும். சமீப காலம் வரையில், நீர்ப்பாசனத்தை ஒரு தொழில்நுட்பத் துறையாக மட்டுமே பலர் - கொள்கை வகுப்போர் கூட - கருதி வந்தனர். நீர்ப்பாசன நீரை துஷ்பிரயோகம் செய்வது குறித்து விவசாயிகள் மீதே கண்டனக்கணைகள் தொடுக்கப்பட்டன. ஆனால், கடந்த தசாப்தத்தின் போது இந்த அணுகுமுறைகளும் கருதுகோள்களும் மாற்றமடைந்து வந்துள்ளன. இதன் விளைவாக பங்கேற்பு முகாமை குறித்த புதிய சிந்தனை தோன்றியது.

ஆனால், இந்த புரட்சிகர நிகழ்வுப்போக்கு இன்னமும் முற்றுப் பெறவில்லை. புதிய நீர்ப்பாசன முறைகள் மற்றும் அனுபவங்கள் என்பவற்றிலிருந்து மட்டுமன்றி, கிராமிய நீர்ப்பாசன நடைமுறைகளிலிருந்தும் நாங்கள் இன்னும் பல படிப்பினைகளை பெற வேண்டியிருக்கிறது. நீர்ப்பாசன அபிவிருத்தியின் சுற்றுச் சூழல் தொடர்பான அம்சங்களிலும் நாம் கவனஞ் செலுத்துவது அவசியமாகும்.

நீர்ப்பாசனம் குறித்து 'பொருளியல் நோக்கு' வெளியிடும் நான்காவது இதழ் இது. முதன் முதலில், 1977ல் வெளியிடப்பட்ட இதழொன்றில் நீர்ப்பாசன அபிவிருத்தி குறித்த பொது மதிப்பீடொன்றை மேற்கொண்டோம். பின்னைய இதழ்கள் கிராம நீர்ப்பாசனம் மற்றும் நீர் நிர்வாகம் போன்ற விடயங்களை பகுப்பாய்வு செய்தன. எமது அபிவிருத்தி கலந்துரையாடலில் 2000 ஆவது ஆண்டில் நீர்ப்பாசனம் குறித்த தரிசனத்தையும் உள்ளடக்கி கொள்வதற்கு இப்பொழுது காலம் வந்திருக்கிறது. பொது மக்களும் கொள்கை வகுப்போரும் இந்த முக்கியமான பிரச்சினை பற்றி தெரிந்து கொள்வதற்கு இந்த அணுகுமுறை வழிகோல முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2000 ஆவது ஆண்டில் நீர்ப்பாசன விவசாயம்

சீ. ஆர். பானபொக்கே

கலாநிதி சீ. ஆர். பானபொக்கே நீர்ப்பாசன திணைக்களத்தின் நிலப்பாவனை பிரிவின் தலைவராக வும், விவசாய திணைக்களத்தின் ஆராய்ச்சிப் பணிப் பாளராகவும் பணிபுரிந்தவர். அவரது 25 ஆண்டு களுக்கு மேற்பட்ட இப்பணிகளின் போது இலங்கை யில் நீர் நிர்வாக ஆராய்ச்சி முயற்சிகளை அவர் முன் னின்று நடத்தி வந்துள்ளார். 1985-1989 காலத்தில் சர்வதேச நீர்ப்பாசன முகாமை நிறுவனத்தில் விவசா வல்லுனராக அவர் அமர்த்தப்பட்டிருந்தார். தற் பொழுது அதே நிறுவனத்தில் சிரேஷ்ட ஆலோசக ராக பணிபுரிகிறார். இக்கட்டுரையில் தெரிவிக்கப் பட்டிருக்கும் கருத்துக்கள் அவரது சொந்தக் கருத்துக் களாகும்.

## அறிமுகம்

1960 ம் ஆண்டிற்கு முன்னர் இலங்கையின் நீர்ப்பாசன விவசா யம் நிலத்தினை பண்படுத்திச் செய்யும் நீர்ப்பாசன நெற் செய் கையாகவே இருந்து வந்தது. நாட்டின் வறண்ட பிரதேசத்தின் நீர்ப்பாசன அபிவிருத்தி இக் காலப் பகுதியில், பிரதானமாக அரிசியில் நாடு தன்னிறைவினை அடைந்து முன்னேறுவதனைக் கருத்தாகக் கொண்டிருந்தது. கைவிடப்பட்டிருந்த புராதன கால நீர்ப்பாசனத் திட்டங்களை புனரமைத்ததுடன், புதிய நீர்ப் பாசன தொகுதிகளையும் உரு வாக்கி அரிசியில் தன்னிறைவினை அடைவதற்கு எடுக்கப்பட்ட ஒருங்கிணைந்த உபாயமாக இவை இருந்து வந்தன.

நிலத்தைப் பண்படுத்திச் செய் யும் மரபுரீதியான அரிசி பயிரிடு கைக்குப் பதிலாக அறிமுகம் செய் யப்பட்ட நீர்ப்பாசன விவசாய முறை ஒரு கொள்கை மாற்றமாக 1960 களின் தொடக்கத்தில் உரு வாகியது. பரஸ்பரம் தொடர்பு டைய பல்வேறு காரணிகளின் கூட்டு விளைவாக இது தோன்றி யது. இதில் மிக முக்கியமான காரணி நீரானது நிலத்தினைவிட பிரதானமானதும், கட்டுப்படுத் தும் ஆற்றல் கொண்டது என்ப தும் உணரப்பட்டதாகும். மேலும் வரண்ட பிரதேசத்தில் நீர்ப்பாய்ச்சும் நிலத்தினை அதி கரிப்பதற்கும் இது தடையாக இருக்கிறது என்பது கண்டறியப் பட்டிருந்தது.

இக் கொள்கை அறிமுகம் செய்த காலப்பகுதியானது அரிசி யற்ற மற்ற உணவுப் பயிர்களை வறட்சியான சிறு போகத்தில் நீர்ப்பாசன நிலங்களில் பரீட்சித் துப்பார்ப்பதற்கு உசிதமானதாக அமைந்தது. 1960 களின் கடை சிப் பகுதியில் அத்தியாவசியமான ஆராய்ச்சி தகவல் அடித்தளமும் உருவாகியிருந்தது. பல்வேறு பயிர்களை நீர்ப்பாசன நிலத்தில் பயிரிடுவதற்கு அவசியமான திட் டங்களை அறிமுகம் செய்யக் கூடியதாகவிருந்தது. அன்றிலி ருந்து சிறிய மற்றும் பெரிய நீர்ப் பாசன திட்டப் பகுதிகளில் பயிர் பன்முகப்படுத்தலில் நல்ல முன் னேற்றம் ஏற்பட்டு வந்திருக் கிறது.

எனினும், உள்ளார்ந்த ஆற்ற லுக்கும் சாதனைக்கும் இடையில் தற்பொழுது அவதானிக்கப்பட் டுள்ள இடைவெளி மற்றும் குறைந்து செல்லும் வீதத் திலுள்ள பல்வேறு பயிர்களின் விரிவாக்கம் என்பன கவலையளிப் பதாக உள்ளதுடன், இவ்விடயம் குறித்து கவனமான பகுப்பாய் வினையும் வேண்டி நிற்கின்றன. இலங்கையில் (பிலிப்பைன்ஸ் இந் தோனேஷியா போன்ற வேறுசில நாடுகளிலும், அண்மையில் மேற் கொள்ளப்பட்ட பயிர் பன்முகப் படுத்தலுக்கான நீர்பாசன முகா மைத்துவம் குறித்த ஆய்வுகள், விவசாயிகள் பயிர் பன்முகப்படுத் தல் முறைகளை எளிதில் பின் பற்றுவதற்கு தடங்கலாக இருப் பவை நீர்ப்பாசனத்தின் தொழில் நுட்பஅம்சங்கள் அல்ல என்ப தனை எடுத்துக் காட்டியுள்ளன. மாறாக, நீர்ப்பாசனத் தொகுதி களின் முகாமை, நிறுவன அமைப்பு போன்ற அம்சங்களே இதற்கு தடையாக இருப்பதாக அவை தெரிவிக்கின்றன.

இக் கட்டுரையில் மேற்கொள் ளப்பட்ட முயற்சியானது தற் போது கண்டறியப்பட்ட பிரச்சி னைகளை கொள்கைத் திட்ட உருவாக்குபவர்களும், சிரேஷ்ட நிர்வாக உத்தியோகத்தர்களும், நீர்பாசன தொகுதி முகாமையா ளர்களும், பொறியலாளர்களும், விவசாய வல்லுனர்களும் கருத் திற் கொண்டு, இலங்கையின் நீர்ப்பாசன விவசாயத்திற்கு உந் துதல் அளிப்பதுடன் நீண்ட கால அபிவிருத்தியை இருபத்தி ஓராம்

நூற்றாண்டிற்கு முன்னேடுத்துச் செல்லக் கூடியவர்களாக இருக்க வேண்டும் என்பதாகும்.

**நீர்ப்பாசன விவசாய சூழலும் மாற்றத்துக்கான ஆற்றலும்**

இப் பகுதி பன்முகப்பட்ட நீர்ப்பாசன விவசாய சூழல்களின் பௌதிக, உயிரியல் அம்சங்களை விளக்குவதுடன் தற்போது கண்டறியப்பட்டதும், எதிர் காலத்தில் திருத்தியமைக்கப்பட முடியுமானதுமான வள ஆற்றலையும் எடுத்துக்காட்டுகிறது.

**ஈர வலயம்**

நிலத்தினைப் பண்படுத்தி மேற்கொள்ளப்படும் ஈரலிப்பு வலயத்தின் நெற்செய்கை நாட்டின் மொத்த நெற் செய்கை காணியின் 25% ஆக இருக்கிறது. இந்த நிலத்தின் பெருமளவு பகுதி உள்நாட்டு ஆற்றுப்படுக்கைளில் வேறுபட்ட அமைப்பினையும் அளவினையும் கொண்டதாக அமைந்துள்ளன. இவை ஆறுகளிலும் ஓடைகளிலுமுள்ள வண்டல்களிருக்கும் சமவெளிகளை ஒட்டி நீண்டு செல்கின்றன. எனினும், பொதுவாகச் சொல்லப்போனால் இவை மானாவாரி நெற்செய்கை நிலங்கள் எனப்படும். அவற்றின் நீர்ப்பாசன தன்மையினைப் பொறுத்து, இவற்றில் வேறுபட்ட நீர்ப்பாசன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றனவென்பதை அறிய முடிகின்றது. இந்த நிலத்துக்குரிய பொருத்தமான பெயர் மானாவாரி என்பதனை விட நீலக் கீழ் நீர் பொசியப்படும் நெற் செய்கை நிலம் என்பதாக இருத்தல் வேண்டும்.

இந் நெற் செய்கை நிலங்களின் அமைப்புக்கிணங்க ஈர தாழ் நில நெற் செய்கையே இவற்றுக்கு உகந்த, பொருளியல் ரீதியில் சாத்தியமான தெரிவாக உள்ளது. அடுத்த தசாப்தத்திலும் தற்போதுள்ள இவ் இரட்டை பயிர்ச் செய்கை முறையில் ஏதும் மாற்றம் ஏற்படப் போவதில்லை.

நாட்டின் மத்திய பகுதியிலும் ஈரலிப்பு குறைந்த தாழ் நிலத்திலும் தற்போது விளைச்சல் ஹெக்டெயாருக்கு 3 தொன்களுக்கு அதிகமாக உள்ளது. அத்துடன் இது பகுதி நேர விவசாயிகளுக்கும் அதிக நன்மை பயப்பதாகும். ஈர வலயத்திலும் உப ஈர வலயத்திலும் உள்ள நெற் காணிகளை வகைப் படுத்தும் அண்மைய ஆய்வுகள் (சோமசிரி,ரத்னாயக 1988) இக் காணிகளின் உண்மையான உள்ளார்ந்த ஆற்றல்களை மாறி வரும் தொழில்நுட்ப, சமூக பொருளாதார அம்சங்களின் பின்னணியில் நாங்கள் விளங்கிக் கொள்வதற்கு உதவியுள்ளன. தற்போது ஒரு பருவத்தில் ஹெக்டயர் ஒன்றுக்கு 3 தொன்களுக்கு அதிகமான உற்பத்தியை தரும் நிலங்களில் தொடர்ந்தும் ஈர வலய தாழ்நில நெற்செய்கையை மேற்கொள்ளலாம். அதே வேளை 2.5 தொன் அளவு விளைச்சலை தராத நிலங்களை 21ம் நூற்றாண்டில் வேறு தேவைகளுக்காக மாற்ற முடியும் என்பதை இந்த ஆய்வுகள் காட்டுகின்றன. தாழ் நிலங்களில் உள்ள இடங்கள் கைத்தொழில், நகர அபிவிருத்தி என்பவற்றுக்காக அதிக அளவில் தேவைப்படுகின்றன. அதனால் முதல் தர விவசாயத்திற்குகந்த பள்ளத்தாக்குகள் கைத்தொழில் மற்றும் மனித குடியிருப்புத் தேவைகளுக்கு மாற்றப்பட முடியும்.

**இடை மத்திய வலயம்**

சீராக்கப்பட்ட வயல் நிலங்களை மாத்திரம் கொண்ட மத்திய மற்றும் மலை நாட்டு இடைநிலை வலயம் நாட்டின் மொத்த நெற் காணிகளில் 8 சதவீதத்தை மட்டுமே கொண்டுள்ளது. அவை மிகவும் விசேடமான உற்பத்தி பிரதேசத்தினை உள்ளடக்குகின்றன. நெல் உற்பத்தி செய்யும் தாழ் நிலத்தின் இடை மத்திய வலயத்தினைப் பற்றி இதனையடுத்துள்ள பிரிவில் ஆராயப்படவிருக்கின்றது. இந்த வலய நிலங்கள் யாவும் படிக்கட்டு முறையில் சரிவுகளைக் கொண்டுள்ள மலைநாட்டுப் பிராந்தியத்திலும், பள்ளத்தாக்குகளிலும் காணப்படுகின்றன. இவ்விடங்கள் உடனடியாக நீர் தேங்கி நிற்கும் இடங்களல்ல. இந்த நிலங்களுக்கு நீர் வழிகளை திசை திருப்புவதன் மூலம் இலகுவாக நீர்ப்பாசனம் வழங்கப்படுகின்றது. இந்த நீர் வினியோகம் பொதுவாக பெரும் போகச் செய்கைக்குப் போதியளவிலும், வறட்சியான சிறு போக காலத்தில் (நெற் செய்கை தவிர்ந்த ஏனைய பயிர்களின் செய்கைக்கு) ஓரளவுக்கும் கிடைக்கிறது. பெறுமதி மிக்க மரக்கறிச் செய்கை உயர்ந்த மலை சரிவுகளிலும் புகையிலைச் செடிகள் மத்தியமான மலை சரிவுகளிலும் இடம் பெறுகின்றன. இவையே சிறு போக காலத்தில் இடம் பெறும் பொதுவான பயிர்ச் செய்கை முறைகளாகும். சீதோஷ்ணமும் ஈரப்பதனும், விலையுயர்ந்த மரக்கறி பயிர்களுக்கு பொருத்தமான முறையில் உயரம் கூடிய மலைப் பகுதிகளில் நிலவுகின்றன. இந்த பாரிய அம்சங்கள் உச்ச மட்டத்தில் பயன்படுத்திக் கொள்ளப்படுகின்றன. தற்போதைய பயிர்ச் செய்கை முறையில்எந்தவித மாற்றமும் ஏற்படுத்தாமல் அடுத்த தசாப்தத்திற்கும் அதற்குப் பின்னரும் தொடரக் கூடியதாக இருக்கும். அதிக அனுகூலமான பகுதிகளில் உற்பத்தியை மேலும் செறிவாக்க முடியும்.

**வறண்ட வலயம்**

நிலம் பண்படுத்தப்பட்டு நெற் செய்கை மேற்கொள்ளப்படும் தாழ்நில, உயர் வலய, நடுத்தர வலய நிலங்கள் இந் நாட்டின் அரிசி உற்பத்தி நிலப்பரப்பில் 68 சதவீதம் வரையில் உள்ளன. அத்துடன் அவை அகலமான உள் நாட்டு பள்ளத்தாக்குகளிலும், சிறிய வெள்ளச் சமவெளிகளிலும் கரையோர சமவெளிகளிலும் அமைந்துள்ளன. அரிசி உற்பத்தி செய்யும் கிழக்கு வடக்கு கடற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர்ப்பாசனம்

கரை சமவெளி நிலங்கள் யாவும் மழையை நம்பியே உள்ளன. பொதுவாக மானாவாரி வயல் நிலங்கள் என இவை அழைக்கப் படுகின்றன. இங்கு நீர்ப்பாசனத் திற்குட்படும் நிலங்கள் மாத்திரமே கலந்துரையாடலில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

நீர் வினியோகஸ்திரத் தன்மையினை அடிப்படையாகக் கொண்டு வரண்ட வலய நீர்ப்பாசன நிலங்களை அவற்றின் நீர் மூலம் மற்றும் வழங்கல் ஆகியனவற்றினைக் கொண்டு ஐந்து பிரிவுகளாகப் பிரிக்க முடியும்.

நீர்ப்பாசன மூலத்தின் வகையும் வழங்கலின் தன்மையும்

பிரிவு i.

பெரிய நீர்பாசன திட்டங்கள்; ஒன்றில், வடி நிலங்களுக்கிடையிலான திசை திருப்பல் (உதாரணம் மகாவலி தொகுதி). ஈர வலய நீர்த் தேக்கம் அமைந்திருத்தல்; (உடவளவை, கல்லோயா)

பிரிவு ii.

பெரிய நீர்பாசனத் திட்டங்கள் பிரதானமாக வறண்ட பிரதேசத்திலுள்ள நீர்த் தேக்கங்கள். (உ-ம் கிரிந்திஓயா, பதவியா)

பிரிவு iii.

சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள்; மிதமான, உறுதியான நீர் வழங்கல் முறை; இவற்றின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 4 மகா பருவங்களில் 3 பருவங்களின் போது முழுவதுமாக அல்லது ஓரளவுக்கு சாகுபடி செய்ய முடிகிறது.

பிரிவு iv.

சிறிய நீர்ப்பாசன திட்டங்கள்; நிச்சயமற்ற நீர் வினியோகம். முழுவதும் அல்லது ஓரளவுக்கு விவசாயம் செய்ய முடியும்.

பிரிவு v.

ஆழமற்ற திறந்த கிணறுகளிலிருந்தும், கால்வாய்களிலிருந்தும், ஏனைய பல்வேறு முறைகளினாலும் நீர்ப்பாய்ச்சப்படுவன (யாழ்ப்பாணம், வவுனியா கல்பிட்டி).

முதலாவது பிரிவு நீர்ப்பாசன வினியோகம் மிகவும் சாதகமான ஒன்றாகும். இது நெற் செய்கைக்கு மகா பருவம் முழுவதும் நீரை வழங்குகின்றது. அத்துடன் மகாவலி 'எச்' தொகுதி மற்றும் உடவளவேயின் தாழ்ந்த பகுதி என்பன தவிர்ந்த பகுதிகளுக்கு இரு போகங்களிலும் (அநேகமாக) போதிய நீரை வழங்குகிறது. இப் பிரிவிற்குள் நீர்ப்பாசன நீர் வழங்கல் திடமாக இருப்பதால் உலர் பருவ பயிர் பன்முகப் படுத்தலுக்கும், ஏற்றுமதி அடிப்படை நீர்ப்பாசன பயிர்களை உற்பத்தி செய்யவும் இப்பகுதியில் நிறைய வாய்ப்புக்களுள்ளன. எனினும், பயிர் பன்முகப்படுத்தலில் காணப்பட்ட கடந்த கால செயலாற்றுகை திருப்திகரமானதாக இல்லை. பெறுமதிமிக்க பயிர்களின் நிரந்தர உற்பத்திக்கான அதன் ஒப்பீட்டு ரீதியான அனுகூல நிலை வருங்காலத்தில் உச்ச மட்ட அளவில் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

நீர்ப்பாசன வழங்கல், பிரிவு iiல் அவ்வளவு சாதகமானதாக இல்லை. சாதாரண மழைவீழ்ச்சி வருடங்களில் நீர் வழங்கலானது பெரும் போக நெற்செய்கைக்கு முழு அளவில் போதியதாக உள்ளது. அத்துடன் 25-50% சிறுபோக நெற் செய்கைக்கும் போதுமானதாகவுள்ளது. சென்ற இரண்டு தசாப்தங்களாக இப் பிரிவுக்குள் வரும் நீர்ப்பாசனத் திட்டங்களில் உலர் யால போகத்தில் பயிர்பன்முகப் படுத்தல் நல்ல முறையில் இடம்பெற்று வந்திருக்கிறது. யால பருவத்தில் நீர்ப்பாசன நீர் வழங்கல் வருடத்துக்கு வருடம் வேறு பட்டதாக இருப்பதால் வேறு பயிர்களின் பயிர்ச் செய்கை பரப்பளவையும் வீச்சையும் திட்டமிடுவது மிகச் சிக்கலான ஒரு முகாமைப் பிரச்சினையாக இருந்து வருகிறது. கடந்த கால புள்ளி விபரங்கள் பயிரிடப் பட்ட நிலப்பரப்பில் மிகவும் அதிகரித்தளவிலான மாற்றங்களை காட்டுகின்றன. இப் பிரிவில் வறண்ட காலத்தில் உள்ளூர் தேவைகளுக்காகவே பல்வேறு பட்ட பயிர்களின் பயிர்ச் செய்கை மேற் கொள்ளப்பட வேண்டும். ஏற்றுமதிச் சந்தையில் கூடிய கவனம் செலுத்த முடியாது. நாட்டின் வறண்ட தென் பகுதிலும் வடமேற்குப் பகுதிலும் பெரும் போகத்திலும் பல்வேறு பயிர்களை பயிரிடுவதற்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டது. இது தொடர்பான அண்மைக்கால பரீட்சார்த்த நடவடிக்கைகள் கிரிந்திஓயா திட்டத்திலும் மகாவலி திட்டத்தில் 'எச்' பிரிவிலும் வெற்றியளித்துள்ளன.

சிறிய நீர்ப்பாசன திட்டங்களில் ஓரளவு நிரந்தர நீர்ப்பாசன வசதியானது (பிரிவு iii ல் குறிப்பிட்டவாறு) இடை மத்திய வலயத்தில் பிரதானமாக அமைந்துள்ளதுடன் உலர் வலயத்தில் நீர்த் தேக்க நீரேந்து பரப்பு விசாலமாக உள்ள இடங்களிலும் காணப்படுகிறது. ஈரலிப்புள்ள காலத்தில் பெரும் போக பயிர்ச் செய்கை இப் பிரதேசங்களில் தொடர்ந்தும் இடம் பெற்று வரும். ஆனால் யால பருவத்தைப் பொறுத்தவரையில் வருங் காலத்தில் கணிசமான அளவில் பயிர்பன்முகப்படுத்தல் இடம் பெறும்.

பிரிவு IV நீர்ப்பாசன நீரின் அளவு மற்றும் நம்பகத்தன்மையைப் பொறுத்தவரையில் மிகக் குறைவான அனுகூலங்களைக் கொண்டதாக இருக்கிறது. இத் திட்டங்களில் அரிசி உற்பத்தியினை செறிவுபடுத்தும் நோக்கத்தினைக் கொண்ட கடந்த கால திட்டங்கள் அதிகம் வெற்றியளிக்கவில்லை. எனினும் நீர்ப்பாசனம் பெறும் சில பகுதிகளில் யால பருவத்தில் ஏனைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


களுப் பயிர்களைப் பயிரிடுவதில் கணிசமான அளவில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

பிரிவு V ஐச் சார்ந்த பாரம்பரிய நீர்ப்பாசன முறை யாழ்ப்பாண தீபகற்பம், வவுனியா (தோண்டப்பட்ட கிணறுகள்), கல்பிட்டி (ஆழமற்ற கிணறுகள்) ஆகிய பகுதிகளில் காணப்படுகிறது. மேலும் ராஜாங்கனையிலும் சமீபத்தில் இது தொடர்பான முயற்சிகள் (பிரதான கால்வாய்களிலிருந்து நீரை இறைத்தல்) மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### கடந்த கால செயற்பாடும் வருங்கால செல் நெறிகளும்

வளர்ச்சியின் இரு வேறு பட்ட நோக்கங்கள் கடந்த காலத்தில் அவதானிக்கப்பட்டு வந்துள்ளன. ஒன்று நீர்ப்பாசன நெல் உற்பத்தி பற்றியது; மற்றையது நீர்ப்பாசனம் பெறும் பன்முகப்பட்ட பயிர்கள் பற்றியதாகும். கடந்த ஒன்றரை தசாப்தங்களுக்கு மேலாக வருடாந்த நெல் உற்பத்தியானது இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது. இது நெல் உற்பத்தி பரப்பளவை 30% ஆகவும் விளைச்சலை 44% ஆகவும் அதிகரித்தமையினால் ஏற்பட்ட விளைவாகும். நிலத்தின் அளவிலும் விளைச்சலின் அளவிலும் எல்லைகள் இருப்பதனால் நெல் உற்பத்தி இப்பொழுது இனி உயர முடியாத ஒரு நிலைக்கு வந்திருக்கிறது. எதிர்நோக்கப்படவேண்டிய பிரதான சவால், அதிகரித்து வரும் அரிசித்தேவைகளை (உள்ளூர் அரிசி உற்பத்தி தொடர்ந்து அதிகரிக்காதிருக்கும் நிலையில்) சமாளிப்பதாகும். கடந்த பத்து வருடங்களுக்கு முன்னர் அரிசி பற்றிய கருத்தரங்கில் எடுக்கப்பட்ட தீர்மானத்தினை இப்பொழுது கடைப்பிடிக்க வேண்டியுள்ளது. அரிசியில் தன்னிறைவடையும் வகையில் முக்கியத்துவம் மாற்றப்பட வேண்டுமென இந்த தீர்மானம் தெரிவித்தது. இதற்கு ஏனைய தானியங்களும் மாப்பொருட்களும் அதிகரித்த அளவில் சேர்க்கப்படுதல் வேண்டும்.

இலங்கையின் நெல்வயல்களின் பரவல்





இலங்கையின் நீர்ப்பாசன முதலீடுகளின் போக்குகள் குறித்த சமீபத்திய ஆய்வொன்று (அலுவிஹார, கிக்குச்சி, 1990) நீர்ப்பாசனம் பெறும் நெல்லுற்பத்தி நிலப்பரப்பினை மேலும் விரிவுபடுத்துவதற்குள்ள வாய்ப்புக்களை மிகத்தெளிவான ஒரு நோக்கில் எடுத்துக் காட்டியுள்ளது. அதன்படி நாட்டில் மொத்த நெற்செய்கையில் நீர்ப்பாசனம் பெறும் நிலப்பரப்பு, 1950ல் 250,300 ஹெக்டேராக இருந்து 1985ல் 500,000ஹெக்டேயார் வரை அதிகரித்துள்ளது. குறிப்பாக, உலர் வலயத்தில் பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழ் புது நிலங்கள் நீர்ப்பாசனத்தின் கீழ் கொண்டு வரப்பட்டமையே இந்த அதிகரிப்புக்குகாரணமாக இருந்தது. இந்த விஸ்தரிப்பின் மிக முக்கிய அம்சம் இதேகாலப் பகுதியில் புதிய நீர்ப்பாசன நிர்மாண துறையில் செலவு-நலன் விகிதத்தில் ஏற்

பட்டு வந்த மாற்றமாகும். அத்துடன் முக்கியமாக புதிய விதை உரம்பற்றிய தொழில் நுட்பம் பல்வேறு கட்டங்களில் இக்காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டது மற்றுமொரு விடயமாகும்.

சுதந்திரத்துக்குப் பின்னர் நீர்ப்பாசன நிர்மாணம் மிகவும் கவர்ச்சிகரமான ஒரு முதலீட்டு வாய்ப்பாக இருந்து வந்திருப்பதனை இந்த ஆராய்ச்சியாளர்கள் எடுத்துக்காட்டியுள்ளார்கள். பாரம்பரிய அரிசி தொழில்நுட்பத்திலும் கூட செலவு நலன் விகிதம் 2.3 என உயர் விகிதத்தில் இருந்து வந்துள்ளது. இந்த விகிதம் 1950 களில் 1.7 விகிதமாக நிலையாக இருந்து 1958ல் 1.5 விகிதமாக வீழ்ச்சியடைந்திருக்கிறது. எனினும், பழைய திருந்திய நெல்லினங்கள் அறிமுகம் செய்ததும் செலவு - நலன் விகிதமானது அதிகரித்து 2.0 விகிதமாகியது. 1970 களில் அலகுக்கான நிர்மாணச்செலவு அதிகரித்துச் சென்றதுடன் செலவு-நலன் விகிதம் குறைந்து கொண்டும் வந்தது. 1980ன் ஆரம்பப்பகுதியில் இது 1.0 வீதத்திற்கும் குறைந்து காணப்பட்டது. நீர்ப்பாசனம் பெறும் நில ஆதாரம் இப்பொழுது நன்கு ஸ்தாபிதமாகி இருப்பதாகவும், தற்போதுள்ள நீர்ப்பாசனத் தொகுதிகளில் நீர் முகாமை முறையை புனருத்தாரணம் செய்வதற்கு இனி முழுக்கவனமும் செலுத்தப்பட வேண்டுமென்றும் இவர்கள் கருத்து தெரிவிக்கிறார்கள்.

### பன்முகப்பட்ட பயிர்ச்செய்கை

நீர்ப்பாசனத்திற்குட்பட்ட பன்முகப்பயிர்ச்செய்கையை மேற்கொள்ளும் நிலப்பரப்பு கடந்த 15 ஆண்டுகளில் கணிசமான அளவில் அதிகரித்து வந்திருக்கிறது. 1987 சிறுபோகத்தின் போது ஏனைய களப் பயிர்களின் மொத்த பரப்பளவு (பெரிய, சிறிய நீர்ப்பாசன




திட்டங்களில்) கிட்டத்தட்ட 17,000 ஹெக்டெயார்களாகவும் 'எச்' பிரிவில் கிட்டத்தட்ட 12,700 ஹெக்டெயார்களாகவும் இருந்தது. சுமார் மூன்று ஆண்டுகளில் இது குறைந்து செல்லும் ஒரு போக்கினைக் காட்டியுள்ளது. மகாவலி 'எச்' பிரிவில் 1989 ல் ஒரு செங்குத்தான வீழ்ச்சி (2300 ஹெக்டயர் அளவுக்கு) காணப்பட்டது. இந்த வீழ்ச்சியானது நெல் உற்பத்தியுடன் ஒப்பிடும் போது, அண்மையில் ஏற்பட்ட சீர்குலைவுகளின் விளைவாக ஏனைய உணவுப் பயிர்களின் உற்பத்திக்கு ஏதுவாகவுள்ள உபசேவைகளின் செயலிழப்புக்களினால் ஏற்பட்ட குறையெனக் கூறலாம்.

ஒரு தெளிவான பாடம் என்னவென்றால், எதிர்காலத்தில் ஏனைய உணவுப்பயிர்களின் உற்பத்தி விரிவாக்கத்தின் முன்னேற்றமானது பெருமளவு எமக்கு உதவக்கூடிய உபநிறுவனங்களின் இயல்பிலும் கட்டமைப்பிலுமே நிர்மாணிக்கப்படவிருக்கின்றது என்பதாகும். அவை உண்மையில் பல்வேறுபட்ட விவசாய முறைகளுக்கும் மிகவும் அவசியமானவையாகும். எங்களது அண்மைய அனுபவம் எமக்கு நன்றாகக் காட்டுவதென்னவென்றால், முக்கியமாக நிறுவனத்தின் இயல்பும், நிறுவன முகாமைத்துவ இணைப்பும் விரிவாக்கச் சேவையின் தரமும், பயனுள்ள வரி, சந்தை வசதிகளின் அமைப்பும் போதியளவு தொழில்நுட்ப உந்துதலும், பீடைக்கட்டுப்பாடும் என்பவற்றைக் கொண்ட ஒரு விரிந்த அமைப்பு இதற்கு தேவைப்படுகின்றது என்பதாகும்

சரியான ஒழுங்கமைப்பின் அவசியத்தை மகாவலி 'எச்' பிரதேச அனுபவம் எடுத்துக்காட்டுகிறது. இப்பிரதேசம் எட்டாண்டு காலத்தில் (1979-1987) களப் பயிர்களில் முழு அளவு ஆற்றலை அடைந்துள்ளது. நீர் சரியான தருணத்தில் கிடைப்பதும், நம்பகமான முறையில் கிடைப்பதும் இதற்கு ஒரு முன் நிபந்தனையாகும். தேவையான அளவுக்கு தாவரவியல் ஆராய்ச்சிகளும் இருக்கின்றன. அத்துடன் பரந்தவீச்சிலான தெரிவுகள் குறித்த பரீட்சார்த்தங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கடன்பெறுவதற்கும் சந்தைப்படுத்துவதற்குமான திட்டத்திற்கு இடையிலுள்ள வேறுபாடுகள் இரண்டுமே மிக முக்கியமான பிரச்சினைகள் என எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. அடுத்தது, நிலமும் நீருமாகும், விவசாயிகள் கடனையும் சந்தையினையும் கண்டறிவதே பல்வேறு பயிர்களைப் பயிரிடுவதற்கு முக்கியமாக இருக்கவேண்டிய விடயமாகும்.

( 13 ம் பக்கம் பார்க்க )

# 21ஆவது நூற்றாண்டில் நீர்ப்பாசனத்துறை : நிலம், நீர் மற்றும் மக்கள் தொடர்பான பிரச்சினைகள்

அநுர எஸ். விதானபத்திரன

விவசாயப் பொருளியல் பட்டதாரியான திரு. விதானபத்திரன தேசிய, சர்வதேசிய நிறுவனங்களில் பணிபுரிந்து இத்துறையில் பரவலான அனுபவம் பெற்றவர். பல்கலைக்கழக ஆசிரியராகவும், இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தில் ஆலோசகராகவும், கமநல ஆய்வு, பயிற்சி நிறுவகத்தில் ஆய்வாளராகவும் அவர் பணிபுரிந்துள்ளார். பின்னர் சூடான் நாட்டின் விவசாய, இயற்கை வள அமைச்சில் விவசாய பொருளியலாளராகவும், அந்நாட்டுக்கான ஐ. நா. நிபுணர் நிலையிலும் அவர் பணியாற்றினார். ஐ. நா. வின் பல துணை அமைப்புக்களுக்கு அவர் தொடர்ந்தும் விவசாயப் பொருளியலாளராக சேவைகளை வழங்கி வருகிறார்.

மூன்று உற்பத்திக் காரணிகளான காணி, உழைப்பு, மூலதனம் என்பவற்றை பொருளியலாளர்கள் அடையாளங்காணுகின்றனர். இவற்றின் சேர்க்கையே இறுதியில் உற்பத்தியாக இடம் பெறுகின்றது. நீர்ப்பாசனத்துறை விடயத்தில், நீர்ப்பாசன நீரை வெறெந்தக்காரணியும் வழங்க மாட்டாதென்பதால் நீரை முக்கிய உற்பத்திக் காரணியாகக் கருதுதல் அவசியமாகின்றது. உற்பத்திக் காரணியென்ற வகையில் மிருக, தாவர உற்பத்தி செயல் முறையின் அடிப்படைக் கூறாயமைவதால் நீர் மிக முக்கியத்துவம் பெறுகின்றது. நீர் மையப்பிரச்சனையாக அமையின், மூலதனம்கிடைக்கப் பெறுதல் குறைந்த முக்கியத்துவமுடையதாகின்றது. நீர்ப்பாசனத்துறையின் நடுக்குவிமையமாக நீரும் மக்கள் காணி என்பவற்றுடனான அதன் தொடர்பும் அமைகின்றது. மக்களால், மக்களுக்காக நீர்ப்பாசனம் மேற்கொள்ளப்படுவதால் 'மக்கள்' அம்சத்துக்கு நாங்கள் அதிக முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். 'மக்கள்' எனும்போது முதியோரும் இளையோருமுட்பட உற்பத்தி அம்சத்தினையும், சமூக பரிமாணத்தினையும் அச்சொல் உள்ளடக்குவதால் 'உழைப்பு' எனும் சொல்லினை நாங்கள் தவிர்க்கின்றோம்.

இந்த மூன்று உற்பத்திக் காரணிகளும் 2000 ஆவது ஆண்டளவில் எவ்விதம் தோற்றமளிக்குமென்பதை அவதானிப்பது சுவாரஸ்யமானதொரு விடயமாகும். நீர்ப்பாசனத்துறையில் உற்பத்தியை மேம்படுத்தும் உத்திகளை வளர்ப்பதற்கும் இது உதவும். தூரதிருஷ்டி நோக்கின் மூலமான அணுகுமுறையானது எதிர்காலத் திட்டமிடலுக்கும் இதில் பங்குபற்றுபவர்களான விவசாயிகள், திட்டவறிஞர், அரசியல்வாதிகள் ஆகியோரை தூண்டுவதற்கும் உதவும்.

இக்கட்டுரையின் முக்கிய நோக்கம் மேற்கூறப்பட்ட மூன்று உற்பத்திக்காரணிகளின் மாதிரி வடிவத்தை, 2000 ஆவது ஆண்டிலும் அதற்கப்பாலுமாக நீர்ப்பாசனத் துறை தொடர்பில் ஆராய்தலாகும். நீரும் நீர்ப்பாசனத்தின் ஏனைய உற்பத்திக் காரணிகளும், நீர்ப்பாசனமல்லாத துறைகளுடனும் நெருங்கிய தொடர்புடையனவாயிருந்த போதிலும் (உதாரணமாக, வீட்டு நீர் வழங்கல்கள்) இக்கட்டுரை நீர்ப்பாசனத் துறையில் மட்டுமே கவனம் செலுத்துகின்றது.

இந்நூற்றாண்டிற்குள் இம் மூன்று உற்பத்திக் காரணிகளும் துரித மாற்றப் படிமுறைகளுக்குட் படுத்தப்பட்டன. இவற்றுள் முக்கிய மாற்றங்கள் எவை என்பதையும், அடுத்த நூற்றாண்டில் அவை செல்லும் திசை வழி எது என்பதையும் கவனிப்போம். நீர்ப்பாசத்திற்கான முக்கிய காரணி நீர் என்பதால், இவ் விவாதம் முதலில் நீர் மீதும், பின்னர் ஏனைய இரு காரணிகள் மீதும் குவிமையப்படுத்தப்படும்.

நீர் நிறைந்த ஒரு நிலையிலிருந்து நீர் தட்டுப்பாடு நிலவும் ஒரு சூழ்நிலைக்கு நாம் நகர்ந்து கொண்டிருக்கின்றோம். இறைவனால் அருளப்பட்ட முடிவற்றதொரு கொடைப் பொருளாக நீரைக் கருதிவந்தோம். ஆனால், இப்போது நாங்கள் நீர் விஷயத்தில் அதிகளவு கவனம் செலுத்தி, இது தொடர்பிலான நிறுவனங்களைத் தாபிக்கும்தேவையையும் உணர்ந்துள்ளோம். நீரை மித





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிஞ்சிய அளவில் பயன்படுத்தி, உழைப்பு, பண்ணைச் சக்தி போன்ற ஏனைய உள்ளீடுகளைச் சிக்கனப்படுத்தும் பழக்கத்தினை விவசாயிகள் பின்பற்றிவந்தனர். இதன் விளைவாக, நீர்ப்பாசனத்தில் பயன்படுத்தப்பட்ட நீர் ஒரு ஏக்கர் நெல் காணிதொடர்பில் 15 அடிவரையான உயர்வில் இருந்தது. நாங்கள் இன்னமும் நீரினை அளப்பதற்கு முயற்சிக்காதிருப்பதிலிருந்து நீருக்குச் செலுத்தும் குறைந்தகவனம் தெரிகிறது. ஏனைய இரு உற்பத்திக் காரணிகளான காணி, உழைப்பு என்பன தொடர்பில் உகந்த அளவுகோல்கள் இருந்து வருகின்றன.

காணிக்கன்றி நீர் அலகிற்கான உற்பத்தி என்ற நியதியில் நாங்கள் சிந்திக்க ஆரம்பித்துள்ளோம். இந்த நூற்றாண்டு ஆரம்பத்தில் நாங்கள் நீர் வினியோகத்தின் போதிய தன்மை, நம்பகத்தன்மை, சமவுரிமை என்பவற்றின் அடிப்படையில் சிந்திக்கவில்லை. இந்நூற்றாண்டின் இறுதிப்பகுதியிலேயே இச்சொற்களின் எதிரொலி அடிக்கடி எழ ஆரம்பித்தது. அடுத்து, துரிதமாக வளர்ந்துவரும் ஒரு பிரச்சினை நீரின் தரம் துரிதமாக குன்றி வருவதாகும். சில பிரதான நீர்ப்பாசனத்திட்டங்களில் நீர்ப்பாசன நீரில் ஏற்கனவே உயர்மட்ட அளவுகளில் காணப்படும் நைதரசன், பொட்டாசியம், கிருமிநாசினி எச்சங்கள் பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது. இப்பிரச்சினைகள், வீட்டுநீர்ப்பாவனையையும் தாக்கத்திற்குள்ளாக்கியிருப்பதால் நீர்த்தரக்கட்டுப்பாட்டு நடைமுறைகளை இவை அவசியப்படுத்துகின்றன.

1980ன் தொடராண்டுகளில் சிறந்த நீர்முகாமைத்துவ நடைமுறைகளையும் ஏனைய விவசாய முகாமைத்துவ தொழில் நுட்பங்களையும் கடைப்பிடித்த ஒரு போக்கு காணப்பட்டது. இது நீர்ப்பாசன நீரின் மிதமிஞ்சிய பாவனையைக் குறைத்திருக்கலாம். நீர்ப்பாவனையில் இத்தகைய நடைமுறைகளின் தாக்கம் இன்னமும் பகுத்தாயப்படவேண்டியுள்ளது. 1980களில் நீர்ப்பாவனைவிகிதம் 1000மி. மீற்றரிலிருந்து 25,000மி. மீற்றர்வரை மாறுபாடு உடையதாக இருந்ததைக் கிடைக்கக்கூடியதாகவுள்ள புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. (நீர்வரியினடிப்படையில் கணிக்கப்பட்ட அளவு). நீர்ப்பாசனத் திட்டங்களுக்கும், பருவகாலங்களுக்குமிடையே நீர்வரியில் பெருமளவு வேறுபாடுகள் காணப்படுகின்றன.


அடுத்த நூற்றாண்டில் இடம்பெற சாத்தியமுள்ள சில அபிவிருத்திகளை நோக்குவோம். பிரதான உற்பத்தி குறிகாட்டியாக நீர் தோன்றலாமென்பதுடன் தோதான அளவீட்டு செயல்முறைகள் மேற்கொள்ளப்படவும் வேண்டும். நீர் அளவீட்டு உபகரணங்கள் நிறுவப்பட்டு, விவசாயிகள் நீர்வழங்கலை அவதானிப்பதற்கும் பயிற்றப்படுவர்.

நீர்ப்பாவனை தொடர்பிலான சட்ட விவகாரங்களும் (நீர்த்தகராறுகள் அதிகரிக்கும் சாத்தியமுள்ள காரணத்தால்) தேவைப்படலாம். விவசாயிகள் கழகங்களின் முக்கிய கவனம் நீர் முகாமைத்துவத்தில் இடம் பெறும். நீரின் தரம், பாதுகாப்பு என்பவை பற்றி மக்களும் உணர்வுடையவராயிருப்பர். அத்துடன் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான ஏற்ற நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முயல்வர். நீரில் குவிமைப்படுத்தப்பட்ட பயிற்சி, கல்வி நிகழ்ச்சித்திட்டங்களும் காணப்படும். தற்போது காணி, ஊழியப் பயன்பாட்டினில் அதிகளவு கவனத்தை பயிற்சித்திட்டங்கள் மேற்கொள்கின்றனவேயன்றி, நீரில் அதிக கவனம் செலுத்துவதில்லை. நாட்டின் பொருளாதார அபிவிருத்தியின் பிரதான குறிகாட்டியாக நீர்ப் பயன்பாடு காணப்படும்.

## நிலம்

மிக முக்கியமான உற்பத்திக் காரணியொன்றான நிலம் இருப

விவசாய காணியிலும் நீர்ப்பாசனம் பெற்ற நிலப்பரப்பிலும் ஏற்பட்ட மாற்றம்



தாம் நூற்றாண்டில் பல முக்கிய மாற்றங்களுக்கு உட்பட்டது. அத்தகைய மாற்றங்களுக்கான முக்கிய காரணம் சனத்தொகை அதிகரிப்பும் அதன்விளைவாக ஏற்பட்ட உற்பத்தி அதிகரிப்புமாகும். தற்போது நாட்டின் நீர்ப்பாசனப்பரப்பளவு ஏறக்குறைய 550,000 ஹெக்டேர்களாக - மொத்த பயிர்செய்கைக் காணிகளில் 22% ஆக - உள்ளது. காணிப்பாவனையை பேணும் தேவையைப் பொறுத்தவரையில் நீர்ப்பாசனப்பரப்பின் உச்சமட்ட விஸ்தரிப்பினை நாடு அடைந்துள்ளது. 2000 ஆவது ஆண்டளவில் சனத்தொகை அசைவின் அடிப்படையில், சனத்தொகையில் ஆளொருவருக்கான நீர்ப்பாசனக் காணி 0.023 ஹெக்டேராகவிருக்கும்.

நீர்ப்பாசனக் காணிகளின் பயன்பாட்டு மட்டம் பற்றியதே அடுத்த கேள்வியாகும். இங்கு மூன்று முக்கிய பிரிவுகளுள்ளன. அவையாவன முறையே நீர்ப்பாய்ச்சிப் பண்படுத்தப்பட்டது, பயிரிடப்பட்டது, அறுவடையாக்கப்பட்டது என்ற மூன்று பிரிவுகளுமாகும். கடந்தகால செயலாற்றுகை கோட்பாட்டுரீதியில் நீர்ப்பாசனமயமாக்கக்கூடிய நீர்ப்பாய்ச்சிப்பண்படுத்தப்பட்ட நிலப்பரப்பில் மேல்நோக்கிய போக்கினைக் காட்டுகின்றது. எவ்வாறெனினும், நீர்ப்பாசன வசதிகள் கிடைக்கக்கூடியதாகவிருந்த அளவு, இதன் ஒரு பின்னமேயாகும். மூன்றாவது வகுதியாக அறுவடைசெய்யப்பட்ட பரப்பளவு உள்ளது. இது பயிரிடப்படும் இடத்திலும் குறைவாகவேயுள்ளது. இவ்விதமான பரப்பளவு வகைகளை உற்று நோக்குகையில், சிறு திட்டங்களை விட பெருந்திட்டங்கள் ஒப்பீட்டளவில் அதிகளவு பரப்பளவில் பயிரிட்டு அறுவடை செய்துள்ளதைக் காண முடிகின்றது. இதேபோன்று பெரிய, சிறிய திட்டங்களிரண்டிலும் சிறுபோக பயிர்ச்செய்கையிலும் பார்க்க பெரும்போகப்பயிர்ச்செய்கையில் பயிரிடப்பட்ட காணிகள் அதிகமாகவுள்ளன.

காணி தொடர்பான மூன்றாவது விடயம் உரித்து தொடர்பில் நீர்ப்பாசனக் காணிச் செயற்பாட்டு முறையாகும். உரிமையாளர் - பயிர்ச்செய்கை அந்தஸ்து குறைந்துவருவதை புள்ளிவிபரங்கள் காட்டுவதுடன் குறிப்பாக பழைய நீர்ப்பாசனத் திட்டங்களில் வேறுவகை குத்தகை முறைகள் விரைவாகத் தோன்றிவருகின்றன. சில பழைய நீர்ப்பாசனத்திட்டங்களில் குத்தகை முறை சீர்திருத்தத்திற்கான வாய்ப்புக்கள் தென்படவில்லை. சிக்கலான குத்தகை ஒழுங்குகள் இவற்றில் காணப்படுகின்றன. இத்தகைய குத்தகை முறை தொடர்பிலான ஒரு அம்சம் பழைய திட்டங்களில் உயர் அளவுகளில் காணப்படும் அத்துமீறல்களாகும். பல நீர்ப்பாசனத் திட்டங்களில் பல்வேறு நோக்கங்களுக்காக ஒதுக்கப்பட்ட காணிகளில் அத்துமீறல்கள் செய்யப்பட்டுள்ளமையால் ஒருபுறம் காணி நீர்ப்பாவனையின் செயற்திறன் பாதிக்கப்படுகிறது. மறுபுறம், பாதுகாப்புக்கும் ஊறு விளைகின்றது. அடுத்த நூற்றாண்டில் இந்த பிரச்சினைகளும் முக்கியத்துவம் பெறும் சாத்தியமுள்ளது.

**மக்கள் :**

சனத்தொகை தொடர்பில், எதிர்கால நீர்ப்பாசனத்துறையின் விடயத்தில் முக்கியத்துவம் பெறும் மூன்று பரிமாணங்களுள்ளன. அவையாவன வளர்ச்சி வீதம், ஊழியர் படை, அதன் உள்ளடக்கம் என்பனவாகும். நாட்டின் சனத்தொகை வளர்ச்சி வீதம் 1960 இல் 2.4% உயர் அளவில் காணப்பட்டு 1980களில் 1.5% சத வீதமாக வீழ்ச்சியடைந்தது. எவ்வாறாயினும், உலர் வலயத்தில் நாட்டில் அதிகளவு நீர்ப்பாசன தொகுதிகள் செயற்பட்டு வருவதால் இது உயர் அளவிலுள்ளது. நாட்டின் மொத்த சனத்தொகை வளர்ச்சி வீதமான 1.5% உடன் ஒப்பிடுகையில் உலர் வலயத்தின் சனத்தொகை வளர்ச்சி வீதம் 2.7% ஆகவுள்ளது. இந்த உயர் வளர்ச்சிவீதம் நீர்ப்பாசனமயமாக்கப்பட்ட விவசாயத்தில் பாதிப்புக்களையேற்படுத்தலாம்.

இறுதி குடிசனமதிப்பீட்டின் பிரகாரம் ஊழியர் படையானது மொத்த சனத்தொகையின் மூன்றிலொரு பங்காகவுள்ளது. தற்போது ஊழியர் படையின் வளர்ச்சிவீதம், சனத்தொகை வளர்ச்சி வீதத்திலும் பார்க்க உயர்வாகவுள்ளது. அதிகளவு நீர்ப்பாசனம், கிராமியப் பிரதேசங்களில் இடம்பெறுவதால் அடுத்துவரும் தசாப்தங்களில் நீர்ப்பாசனத்துறைக்குள்ளான ஊழியர்படை வளர்ச்சி வீதம் உயர் அளவிலேயே இருக்குமென எதிர்பார்க்கப்படலாம். மேலும், ஊழியர்படையில் பெண்களின் கூறு ஆண்களின் கூறினைவிட அதிகமாகவுள்ளது.

இவ்விதமாக வளர்ந்துவரும் ஊழியர் படையானது, (முன்னைய நிலையுடன் ஒப்பிடுகையில்) இப்போது கல்வியறிவுடையோரை அதிகளவில் கொண்டுள்ளது. கல்வித்தராதர முன்னேற்றத்துடனும், அதனுடன் தொடர்புபட்ட வாழ்க்கைத்தர முன்னேற்றத்துடனும் நீர்ப்பாசனத்துறையிலீடுபட்டுள்ள எதிர்கால சந்ததியினருக்கு அவர்களின் பெற்றோருக்குத் தேவைப்பட்டதைவிட அதிகளவு பொருட்செல்வம் தேவைப்படுகின்றது. நீர்ப்பாசனமய வேளாண்மை, தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் தொழில்நுட்ப மட்டத்துடன், இத்தகைய உயர்மட்ட வருமானத்தை அவர்களின் செலவுகளுக்கு ஈடாக உருவாக்க முடியுமா என்பது ஐயத்திற்கிடமான விடயமாகவுள்ளது. நாட்டிற்கான தரவு, உண்மை நியதிகளில் 1981 இல் ரூபா 185 ஆக





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்த வருமானம் 1985ல் 284 ரூபாவாக அதிகரித்தமையை காட்டுகின்றது. நீர்ப்பாசனத் துறை தொடர்பில் இதையொத்த தரவுகளெதுவுமில்லை. நீர்ப்பாசன நெற்செய்கையின் இலாபரத்தன்மை குறைந்து வருவதாக பரவலாக கருதப்படுகிறது. மேற்கூறப்பட்ட சூழ்நிலையில் இரு விருப்பத்தெரிவுகள் சாத்தியமாகவுள்ளன. நியாயமாக நீர்ப்பாசன விவசாயத்தை நவீனமயப்படுத்தி, எதிர்கால சந்ததியினர் உயர் வருமானத்தைப் பெற வகைசெய்தல் ஒரு முறையாகும். இது தொடர்பில் நவீன நீர்ப்பாசன தொழில் நுட்பங்களின் பிரயோகம், பயிர்கள், கால் நடைகள் உட்பட முயற்சிகளை பன்முகப்படுத்தல், இரட்டிப்பு மூன்று மடங்கு பயிர்ச் செய்கை போன்றவை சாத்தியமான விருப்பத் தெரிவுகளாகவுள்ளன. மற்ற விருப்பத் தெரிவாவது, நாங்கள் நிச்சயமாகத் தவிர்க்க விரும்பும் தற்போதைய சூழ்நிலையில் தொடர்ந்துமிருத்தலாகும்.

இறுதியாக நீர், காணி, மக்கள் என்பவற்றிற்கிடையிலான பிரச்சினைகளும் கவனிக்கப்படல் வேண்டும். இது தொடர்பில், நீர்ப்பாசனத் துறையில் துரித கதியில் பரவிவரும் சூழல் மாசடைதல் பிரச்சினை முக்கியமானதாகவுள்ளது. இருபதாம் நூற்றாண்டில் தோன்றியுள்ள சில சூழற் பிரச்சினைகளாவன: உயர்மட்ட மண் அரிப்பும் வண்டல்படிதலும், காணி, நீர் வளங்களின் தரம் சீரழிதல், காணி உடைமைகள் பிரிவுபடல் போன்ற சமூக பொருளாதார பிரச்சினைகள், பல்வேறு குத்தகை வடிவங்களின் தோற்றம், நதிமூலங்களின் அழிவு போன்றவையாகும். இப்பிரச்சினைகள், சனத்தொகை அதிகரிப்புடனும், சூழலைப் பாதிக்கும் பயிர்ச்செய்கை நடைமுறைகளின் கையாள்கையுடனும் துரிதமாக வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

மேற்கூறிய பகுப்பாய்வின் அடிப்படையில், நீர், காணி, சனத்தொகை வளங்களிலேற்படும் மாற்றங்கள் 2000 ஆவது ஆண்டளவிலும் அதற்கப்பாலும் நீர்ப்பாசனத் துறையில் கட்டாய மாற்றமொன்றினையேற்படுத்தும் அதிகளவு வாய்ப்புள்ளதெனக் கூறலாம்.

### அடுத்த நூற்றாண்டிற்கான சிந்தனை

காணி, நீர், மக்களுடன் தொடர்புடைய பிரச்சினைகள் அடுத்த நூற்றாண்டிற்கும் தொடரலாம். உயர் காணித் தேவையும், நீர் வழங்கலைப் பெறுவது தொடர்பிலான பிரச்சினைகளும், வேலை வாய்ப்பின்மையும், சூழல் மாசடைதலும் அடுத்த நூற்றாண்டில் நீர்ப்பாசனத் துறையில் மேலதிகப் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கலாம். அப்பிரச்சினைகள் இறுதியில் நாட்டின் பிரச்சினைகளாகவும் மாறுமென்பதையும் கவனித்தல் வேண்டும். ஆகவே, இத்தகைய பிரதிகூலமான நிலைமைகளை மேவுவதற்கு இத்துறையில் சில மாற்றங்கள் தவிர்க்க முடியாதனவாயுள்ளன.

21ஆம் நூற்றாண்டிற்கான சில யோசனைகளை முன்வைக்கும் இக்கட்டுரையாசிரியரின் ஒரு சில அபிப்பிராயங்கள் கீழே விவாதிக்கப்பட்டுள்ளன.

### காணி ஒன்று திரட்டல்:

விவசாயக் காணிகளை நீர்ப்பாசனத் துறைக்குள் திரட்டுதலின் தேவைப்பாடு எதுவித பயனுமின்றி பல தசாப்தங்களாக விவாதிக்கப்பட்டுவரும் ஒரு விடயமாகும். இந்நாட்டில் நீர்ப்பாசனத்துறை இயங்கிவரும் சமூகப் பொருளாதார, கலாச்சார, அரசியல் சூழ்நிலையில் இது அதிகளவில் காணப்படுகின்றது. குறிப்பாக, சிறு திட்டங்களில் காணப்படும் நிலவாட்சியின் தீவிர பிரச்சினைகள் இப்போதிருந்துவரும் ஒரு தெளிவான பிரச்சினையாகும். உண்மை நியதிகளில் காணித் திரட்டுதல் மேற்கொள்ள முடியாதென்று கூறலாம். இப்பிரசினைக்கான நடைமுறைச் சாத்திய அணுகுமுறை அவசியம் தேவைப்படுகின்றது. நீர்ப்பாசனத் திட்டங்கள் கம்பனிகளுடன் இணைந்து செயற்படுவதன் மூலம் உற்பத்திச் முயற்சிகளாக மாற்றப்படலாமெனும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. கம்பனியின் பங்குகள் பங்கு மூலதனத்தில் சேர்க்கப்படக்கூடிய காணியுள்ளவர்களிடையேயும் ஏனைய உற்பத்தி வளங்கள் உள்ளவர்களிடையேயும் பகிரப்படலாம். ஒரு தனிக் கூறாக இது செயற்படலாமென்பதுடன் (பல பிரிவுபட்ட, பிரிவுபடாத உடைமைகளுக்கு எதிராக) ஒவ்வொரு அங்கத்தவராலும் மேற்கொள்ளப்பட்ட உதவுதொகைகளுக்கு இணக்கமாக இலாபங்கள் பங்குதாரரிடையே பகிர்ப்படலாம். உண்மை வேலையை சம்பனியினால் ஊதியம் வழங்கப்படும் ஊழியர் படை அல்லது பங்குதாரர்கள் மேற்கொள்ளலாம். ஏற்றுமதிக் கிராம கருத்திற்கிணக்கமாக கம்பனி செயற்படலாம்.

மேற்கூறிய தேவைக்கு இந்த அம்சம் தொடர்பாக நடைமுறை அனுபவங்களை சேகரிக்கக்கூடியவாறு பல நீர்ப்பாசன திட்டங்களில் ஒரு முன்னோடித் திட்டமொன்றினை மேற்கொள்ளுதல் அவசியமாகின்றது. நீர்ப்பாசனத்திற்குட்படுத்தப்பட்ட விவசாயத்தில் அத்தகைய அனுபவங்களெதுவும் இதுவரையில் இல்லையெனலாம்.

### நீர்ப்பாசன முகாமைத்துவம்

நீர்ப்பாசன முகாமைத்துவத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுவத்துடன் தொடர்புடைய இரு முக்கிய விடயங்களுள்ளன. இவற்றுள் முதலாவதாக நியாயமான அடிப்படையில் விவசாயத்திற்கான நீரை வழங்குதல் அடிப்படைத் தேவையாக அமைகின்றது. இதை மேற்கொள்கையில், குறிப்பிட்ட நீர்ப்பாசன தொகுதியினை இயக்குவதும் பராமரிப்பதும் தவிர்க்கமுடியாத தொரு செயலாகின்றது. முன்னர் குறிப்பிடப்பட்டவாறு நீர் வழங்கல் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான அடிப்படை தேவையொன்றாக விவசாயிகள் கழகங்களை அமைத்து அவைமூலமாக நீர்ப்பாசன நீர் தொடர்பிலான ஒதுக்கீடு, பகிர்வு, சேகரிப்பு, தரம் ஆகிய அம்சங்களை கவனித்தல் அமைகின்றது. முன்னைய இரு அம்சங்களும் நாடளாவிய முறையில் பல விவசாயிகள் கழகங்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனால், மற்றப் பிரச்சினைகளில் இன்னமும் கவனம் குவிமையப்படுத்தப்படவில்லை. இப்பிரச்சினைகள் அடுத்த நூற்றாண்டில் முக்கியமானவையாகக் காணப்படலாம்.

### அதிகரிக்கும் உற்பத்தித்திறன்

உற்பத்தித் திறனென்பது. அடிக்கடி விவாதிக்கப்பட்டுவரும் ஒரு சிக்கலான பிரச்சினையாகும். காணி, நீர், ஊழியம் ஆகியவற்றினடிப்படையில் இது அளக்கப்படலாம். நீர்ப்பாசன விவசாயத்தின் மையக்கவனம், தொடர்ந்தும், அதிகரித்த உற்பத்தியிலேயே இருந்து வருகின்றது. முதனிலை உற்பத்தி, இரண்டாம் நிலை உற்பத்தி ஆகிய இரு கோணங்களிலிருந்து இவ்விடயம் ஆராயப்படுகின்றது.

முதனிலையுற்பத்தித் தொடர்பில் அது பல திட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படும் தோதான, செலவுப்பயன், நீர் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டங்கள் மூலமாகவும், பயிர் பன்முகப்படுத்தல் மூலமாகவும், அதிகரிக்கப்படுதல் வேண்டும். இது 2000 ஆவது ஆண்டுகளுக்கப்பாலும் நீடித்தல் வேண்டும். இரண்டாம் நிலை உற்பத்தியானது, பதனிடல் மூலமாக விவசாய உற்பத்திப் பொருட்களின் பெறுமதியை வலுப்படுத்த எதிர்பார்த்துள்ளது. விவசாய கைத்தொழில் முயற்சிகள், புதிய வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்களையும் வருமானங்களையும் அதிகரித்து, முதனிலை உற்பத்தி செயல்முறையிலிருந்து மிகை ஊழியத்தை உறிஞ்சுகின்றன. இதன் காரணமாக, மொத்தத்தில் நீர்ப்பாசன விவசாயத்தின் இலாபகரத்தன்மை அதிகரிக்கின்றது. இந்நாட்டில் நீர்ப்பாசனத்துறைக்குள் விவசாய கைத்தொழிலை அறிமுகப்படுத்துவதற்கு மிகச் சிறுமுயற்சியே மேற்கொள்ளப்பட்டுள்ளது. உயர் கல்வியறிவுடனான வேலை அணியின் உயர் வளர்ச்சி வீதத்தினையும், வருமானத்தை பன்மடங்கு அதிகரிக்கும் தேவையினையும் கருத்திற்கொண்டு, நீர்பாசனத் துறையில் விவசாய கைத்தொழிலை நிறுவுதல் அவசியத்தேவையாகின்றது. எதிர்காலத்தில் ஊக்குவிக்கப்பட வேண்டிய மற்றுமொரு விடயம் தனியார் துறையை முதனிலை, இரண்டாம் நிலை உற்பத்தி செயல்முறைகளில் ஈடுபடுத்துதலாகும். தற்போது தனியார் துறையானது, மின்சார, இலத்திரனியல், தைத்த ஆடைகள், உல்லாசப்பயணம் போன்ற துறைகளில் தீவிரமாக ஈடுபட்டுவருகின்றது. இவையாவும் நாட்டின் வேலையில்லா பிரச்சினையைத் தீர்ப்பதில் பெருமளவு உதவியுள்ளன. இத்துறைகளில் உள்ள ஊழியருள் பெருமளவினர் படித்த இளைஞராவர். அத்தகைய அனுபவங்களிலிருந்து நாம் கற்று, அடுத்த நூற்றாண்டில் நீர்ப்பாசனத்துறையில் தனியார் துறையினரை ஈடுபடுத்தும் உசிதமான உத்திகளை மேற்கொள்ளல் வேண்டும். முதனிலை உற்பதியை வசதிப்படுத்தி இரண்டாம் நிலை உற்பத்தி வசதியை நிறுவுதல் இதன் முக்கிய பங்காக இருக்கும். ஏனைய கைத்தொழில்களில் போன்று, ஊக்குவிப்பு வசதிகளும் விவசாய கைத்தொழிலினை நிறுவுதன்பொருட்டு தனியார் துறைக்கும் நீடிக்கப்படுதல் வேண்டும்.

### சூழல் முகாமைத்துவம்

நீர்ப்பாசன விவசாயத்தில் சம்பந்தப்பட்டுள்ள சூழல் பிரச்சினைகள் கடந்தகாலத்தில் போதியளவு கவனத்தைப் பெற்றிருக்கவில்லை. நீர்ப்பாசனத்துறையானது பெரும் எண்ணிக்கை மக்களையுள்ளடக்கியதொன்றாகக் காணப்படுவதால் சூழலில் உயர் தராதரத்தினைப் பேணுதல் மிக முக்கியமாகின்றது. கடந்த காலத்தில் சூழல் விடயங்கள் விவசாய இரசாயனங்களினாலேற்படும் மாசுபடிதல், மலேரியா ஒழிப்பு, மண் அரிப்புக் கட்டுப்பாடு போன்றவற்றிக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. மனித அம்சங்களும், மொத்த சூழல் பாதுகாப்பு என்பனவும் கருதப்படவில்லை. அடுத்த நூற்றாண்டில் சூழல் தொடர்பான பிரச்சினைகள் காரணமாக சூழலைப் பாதுகாப்பதற்கென விரிவான நிகழ்ச்சித் திட்டத்தினை மேற்கொள்ளுதல் அவசியமாகின்றது. இந்நிகழ்ச்சித்திட்டத்தில் பௌதீக, சமூக அம்சங்களாகிய இரண்டும் உள்ளடங்குதல் வேண்டும். இதுதொடர்பில் மக்களை சூழல் விடயங்கள் பற்றி அறிவுறுத்தி பயிற்சிகளை வழங்குவதற்கு முக்கியத்துவமளிக்கப்படல் வேண்டும்.

### முடிவுரை

நீர்ப்பாசனத் துறையின் பங்கு 21 ஆம் நூற்றாண்டில் நாட்டில் சமூக, பொருளாதார அபிவிருத்தியில் தொடர்ந்தும் முக்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கியத்துவம் பெற்றிருக்கும். அதே வேளையில், காணியில் இலாபகரத்தன்மையும், உற்பத்தியாற்றலும் வீழ்ச்சியடைவதுடன், நீர்ப்பாசனத் துறையில் ஏனைய சமூகப்பொருளாதார பிரச்சினைகளும் துரிதமாக வளர்ந்து வருகின்றன. நீர்ப்பாசன விவசாய இலாபகரத்தன்மையைப் பேணி, அது அடுத்த நூற்றாண்டில் நிலையான முறையில் மொத்த பொருளாதாரத்திற்கும் உதவும் நிலையில் இருக்க வேண்டியதன் அவசியத்தை இது கோடிட்டுக்காட்டுகின்றது. இதற்கு வகைசெய்யும் பொருட்டு இத்துறை மீளமைக்கப்படுதல் வேண்டும். இது தொடர்பில் 20 ஆம் நூற்றாண்டின் சில நடவடிக்கைகள் தொடர்ந்தும் பேணப்படுதல் தவிர்க்கமுடியாதென்பதுடன், புதிய நடவடிக்கைகளும் அறிமுகப்படுத்தப்படல் வேண்டும். 20 ஆம் நூற்றாண்டு நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில், சமநிலையுடன் உற்பதீதியை அதிகரித்தல், விவசாயிகள் கழகங்களை உருவாக்குதல், விவசாயிகள் கழகத்திடம் திட்டங்களை ஒப்படைத்தல், நீர்ப்பாவனை விழிப்புணர்வை ஏற்படுத்துதல் நீர்ப்பாசனத் திட்டங்களை பல மாதிரிகளுடன் பரீட்சித்தலென்பன அடுத்த நூற்றாண்டிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்படல் வேண்டும். அறிமுகப்படுத்தப்பட வேண்டிய புதிய நடவடிக்கைகளில், விவசாயகைத்தொழில்கள், அதிகரித்த சூழல் உணர்வு, நீர்ப்பாதுகாப்பு, நீருக்கு உயரளவு பொருளாதார பலாபலன்களை பெற்றுக்கொடுத்தலென்பன அடங்கும். இவற்றை செயற்படுத்துவதில் விவசாயிகள் கழகங்களை உருவாக்குதலும் நீர்ப்பாசனத்துறையில் தனியார் துறையின் அதிகரித்த பங்குபற்றலும் முக்கியத்துவமுடையவையாகின்றன. இது தொடர்பில் அரசாங்கம் வசதிகளையும் விவசாய ஆதார சேவைகளையும் வழங்கும் பங்கினை வகிக்க வேண்டும். கண்காணித்தல், நடவடிக்கைகளை ஒன்றிணைத்தலாகிய மேலதிக பொறுப்புகளையும் அரசாங்கம் ஏற்கவேண்டும். இத்தகையதொரு சூழ்நிலையில் தான் நீர்ப்பாசனத்துறை, 21 ஆம் நூற்றாண்டினை உறுதியாக எதிர்கொள்ளலாம்.

( 7 ம் பக்கத் தொடர்ச்சி )

மொத்தமாக கிட்டத்தட்ட 80,000 ஹெக்டயர் அளவே பெரிய நீர்ப்பாசனத்திட்டங்களின் கீழுள்ள உகந்த நிலப்பரப்புகளாகும். சிறுபோகங்களில் பல்வின பயிர்ச் செய்கைமுறைக்கு இவை மிகப்பொருத்தமான நிலங்களாகும். உணவுப் பயிரல்லாத பயிர்ச் செய்கையில் கரும்புச் செய்கையும் ஒன்றாக சிபார்சு செய்யப்பட்டுள்ளது. மருந்து ஆராய்ச்சி நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சமநிலையான போசாக்குத்தன்மைக்கு இவ்விதமான வேறு பயிர்ச்செய்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

கூட்டுமொத்தமாக பார்ப்பதாயின், 2000ம் ஆண்டளவில் குறிப்பிடத்தக்களவு மாற்றங்களும், பயிர்வகையிலும், பயிர்ச் செய்கை அட்டவணைகளிலும், முறைமைகளிலும், வரண்ட பிரதேச நீர்ப்பாசன விவசாய நிலப்பரப்பில் இடம்பெற முடியும் என்று கூறலாம். அத்துடன், விவசாயிகளின் வருமானத்தில் அதிகரிப்பும், நீர்ப்பாசன வழங்கல் முறையில் அதிக வருமானம்தரக் கூடிய பயிர்களை பயிரிடுவதும் அந்த மாற்றத்தில் இடம்பெறும்.

முடிவுரை

நாட்டின் நாலாபக்கங்களிலும் நீர்ப்பாசன விவசாய சூழலையொட்டிய தன்மையினை மனதிற்கொண்டு பார்க்கும்போது, ஒரு மாற்றமுறும் அல்லது ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு மாறும் தன்மையின் அளவானது 2000ம் ஆண்டளவில் ஏற்படும். அது சூழலை அடிப்படையாகக் கொண்டு வேறுபட்டு காணப்படும். இது பற்றித் தொடர்புள்ள விடயங்கள் முன்னைய பிரிவுகளின் போது கலந்துரையாடப்பட்டுள்ளது. ஆசிரியரின் கருத்துப்படி நீர்ப்பாசனத்திற்குட்பட்ட நெற் செய்கை தொடர்ந்தும் இடம்பெற்றுவரும். இந்த வகையில் 2000 ஆவது ஆண்டுக்கு அப்பால் அரிசி தன்னிறைவில் 75% அசையும் சராசரி காணப்படும் என்று நியாயமாகவே ஊகிக்கலாம். வரண்ட பிரதேச சூழலானது பல்வேறு இனப்பயிர்களின் அபிவிருத்திற்கு உதவுவதுடன் காரியசாத்தியமானதும் நீண்டகாலத்திற்குசேவைகளைதரக் கூடியதுமான நிறுவனங்கள். விவசாயத்திற்குரிய நிலங்களை விரிவடையச் செய்ய பல்வேறு பயிர்ச்செய்கைகளுக்கான நீர்ப்பாசனமுகாமைத்துவத்தை உருவாக்க வேண்டும். முன்னர்கூறியவாறு அரிசிக்குப்பதிலாக வேறு பயிர்களைப்பயிரிடும் மாற்றுச் செய்கைக்கு நடைமுறையிலுள்ள நிறுவனங்கள் மூலம் போதியளவு சேவைகளை வழங்க முடியாதிருக்கும். சேவைகளுக்குரிய, திட்டமிடலில் மாற்றங்களையும் நீர்ப்பாசன பங்கீட்டு முறையிலும், நடவடிக்கைகளிலும் கண்காணித்தலிலும் வேறுபட்ட மாற்றங்களையும் கொண்டு வருதல் வேண்டும்.

இறுதி பகுப்பாய்வில், நீர்ப்பாசன விவசாயத்தில் மாற்றத்தின் கதிப்போக்கு பல தர்க்க நியாயங்களுக்கு உட்பட்டதாகவே இருக்கிறது. இதன் நிலை மாற்றத்தை பல காரணிகள் நிர்ணயிக்கின்றன. எனினும், அடுத்த தசாப்தத்துக்குள், உற்பத்திசார் நீர்ப்பாசன விவசாயமொன்றுக்கு அவசியமான துணை நிறுவனங்களையும் சேவைகளையும் வழங்க முடியுமாயின், 2000 ஆவது ஆண்டுக்கு அப்பால் துரித வளர்ச்சியையும் நிலைமாற்றத்தையும் எடுத்துவர முடியும். வரும் தசாப்தத்தில் நம்முன் உள்ள முக்கிய பணி இதுவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் நீர்ப்பாசன முகாமை நிறுவனங்கள்

டக்ளஸ் ஜே. மெரி

கலாநிதி டக்ளஸ் ஜே. மெரி, இலங்கையில் தலைமையகத்தை கொண்டுள்ள நீர்ப்பாசன முகாமைக்கான சர்வதேச நிறுவனத்தின் இலங்கைக்கான வெளிக்கள செயற்பாடுகள் பிரிவின் தற்போதைய தலைவராவர். பாகிஸ்தானிலும் வேறு சில நாடுகளிலும் நீர்ப்பாசன முகாமை குறித்த அனுபவம் பெற்றிருக்கும் அவர் 1980 தொடக்கம் இலங்கையின் நீர்ப்பாசன முகாமை அபிவிருத்தியில் இணைந்து செயலாற்றி வந்துள்ளார். சமூக மானிடவியல் வல்லுனராக பயிற்றப்பட்ட அவர், 1980-82 காலத்தில் கல்லோயா செய்திட்டத்தில் பணிபுரிந்துள்ளார். இக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டிருக்கும் கருத்துக்க அவரது சொந்தக் கருத்துக்களாகும்.

ஏறத்தாள 550,000 ஹெக்டேயார் பாசனப்படுத்தப்பட்ட காணிகளைக் கொண்ட இலங்கையின் நிலவள அமைப்பானது ஆசியாவின் பாசனப்படுற்தப்பட்ட காணிகளுடன் ஒப்பிடும் போது மிகுந்த சக்திவாய்ந்ததாக இல்லாவிடினும், அரசாங்கத்தினால் நிறுவனப்படுத்தப்பட்டுள்ள தன்மையைக் கொண்டிருப்பது ஆச்சரியப்படத் தக்கதாகும். பல நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இந்நாடு ஹெக்டெயார் ஒன்றுக்கான அதிக நீர்ப்பாசன வசதிகளைக் கொண்டுள்ள நாடு என பெருமை கொள்ள இடமுண்டு. நீர்ப்பாசனத் திணைக்களம், இலங்கை மாகாவலி அபிவிருத்திச் சபைக்குள் வரும் நிறுவனங்கள், கமத்தொழில் சேவைகள் திணைக்களம், நீர்ப்பாசன முகாமைப் பகுதி என்பன இங்கு குறிப்பிடத்தக்க பாசன வசதிகளைச்செய்து வரும் நிறுவனங்களாகும். மாகாண மட்டத்திலும் பல நிறுவன அமைப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளன: இந் நிறுவனங்கள் ஒன்றுக்கொன்று சார்ந்தும், தனித்தும் பல்வேறு வழிகளில் பல நோக்கங்களுடன் இலங்கையின் நீர்ப்பாசன முகாமைத் துறையில் போட்டியுடன் ஈடுபாடு கொண்டுவருகின்றன. இது சமீப காலம் வரையில், ஒட்டுமொத்தமான அரசாங்க வழிகாட்டு கொள்கையொன்று இருக்கவில்லை என்பதை காட்டுகிறது. இந் நிறுவனங்கள் அனைத்தும், கொள்கை மாற்றங்களுக் கேற்பவும், முன்னைய முகாமை உத்திகளின் தோல்விகளின் பின்னரும் துரிதமாக தம்மை மாற்றியமைத்துக் கொள்கின்றன.

## சமூக தொழில்நுட்ப இயல்பு

இக் கட்டுரை இத்துறையில் 2000 ஆவது ஆண்டளவில் ஏற்படக்கூடிய மாற்றங்கள் மற்றும் பிரச்சினைகளை இனங்காட்டும் ஒரு முயற்சியாகும். நீர்ப்பாசன முகாமை என்பது ஒரு சமூக தொழில்நுட்ப நிகழ்வுப்போக்காக அறியப்பட்டுள்ளது. அதாவது தொழில்நுட்ப அம்சங்களையும் சமூக அம்சங்களையும் கொண்ட ஒரு முகாமை முறையாக இது இருக்கிறது. ''வன் பொருள்'' ''மென் பொருள்'' என இவை அழைக்கப்படுகின்றன. நீர்ப்பாசனத்திற்கு பொறியியல் துறை அவசியமானதுதான், ஆனால் நீர்ப்பாசன முகாமைக்கு அதுமட்டும் போதாது. நீர்ப்பாசன தொகுதிகளின் முகாமைத்துவமானது, மனிதர்களால், மனித மேம்பாட்டுக்காக மேற்கொள்ளப்படுவதாக கூறலாம். மனிதர்கள் வேறுபட்ட விருப்பு வெறுப்புக்களையும், கண்ணோட்டங்களையும் கொண்டவர்கள். நீர்ப்பாசன முகாமை என்பது, தொழில்நுட்ப நிகழ்வுப்போக்கு என்பதிலும் பார்க்க ஒரு சமூகவியல் காட்சியுண்மை என்று கூறமுடியும்.

இதுவரை பலர் இதனைத் தொழில் நுட்பத்துறை என்றே கருதினர். இக்குறுகிய நோக்கு, அண்மைக்காலம் வரையில், நீர்ப்பாசனத்திட்டங்களின் முகாமையில் மாறிவரும் தேவைகளுக்கு அனுசரித்துச் செல்வதற்கு தடங்கலாக இருந்துவந்துள்ளது. இக்கட்டுரையில் அமைந்துள்ள விடயங்கள், 10 வருடங்களுக்கு முன்னர் தீவிரமானவை என்று கருதப்பட்டிருக்கும். ஆனால் இப்பொழுது இத்துறை வல்லுனர்கள் இதனை ஏற்றுக்கொள்வார்கள். இக்கருத்துப்படி, நிறுவன அமைப்புக்கள் தாக்கமற்றவையாக இருப்பின் தொழில்நுட்ப ரீதியில் எவ்வளவு முன்னேற்றம் ஏற்பட்டாலும் அது செயற்திறனை உயர்த்தமாட்டா என்பதே கூறப்படுகிறது. மறுபுறத்தில் பார்க்குமிடத்து, தொழில்நுட்பம் முறையாகவும், முன்னேற்றகரமானதாகவும் இல்லாதிருக்கும் நிலையில், நிறுவன அமைப்பு தாக்கமானதாக இருந்தால் இத் தொழில் நுட்பத்திலிருந்து உச்ச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டப்பயனைப் பெறமுடியும். சுருக்கமாக சொல்வதானால், நவீன நீர்ப்பாசன தொழில் நுட்பங்களில் எவ்வளவு முதலீடுகள் முடக்கப்பட்டாலும், நீர்ப்பாசன திட்டங்களை இயக்கி, பராமரிக்கும் முகவரகங்கள் செயற்தாக்க மற்றவையாகவும் திறமையற்றவையாகவும் இருக்குமிடத்து இந்த முதலீடுகள் அதிகளவில் பலனளிக்கப் போவதில்லை என்றே கூறவேண்டும்.

**1980கள் தொடக்கம் மாற்றங்கள்**

1980 ம் ஆண்டு வரையில் இலங்கையிலுள்ள நீர்ப்பாசன முகவர் நிலையங்களில் பணிபுரிந்து வந்த பொறியியலாளர்கள் நீர்ப்பாசன தொகுதிகளுக்கு தாம் முழுப் பொறுப்பு வகிப்பதாகவும், ''எல்லாச் சிக்கல்கலளுக்கும் தம்மிடம் தீர்வுகள் உள்ளன என்றும் சிறந்ததோர் பணியை தாம் ஆற்றி வருவதாகவும் நம்பிவந்தனர். முகாமைத்துவ முறைகள் பற்றி தாம் எல்லாம் அறிந்தவர்கள் என்று எண்ணிவந்தனர். பொறியியலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு விவசாயிகளே காரணம் என்றும், அவர்கள் கருதி வந்தனர். இது நீர்ப்பாசனத் தொகுதிகளை முகாமை செய்பவர்களிடம் காணப்படும் ஒரு பொதுவான குணவியல்பாகும். இப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமானால், விவசாயிகளின் ஒத்துழைப்பின்மைக்கு அவர்களைத் தண்டிக்க சட்டங்கள் கொண்டுவரப்பட வேண்டுமென்றும் கூறப்பட்டது. மேலும் கடுமையான ஒழுங்கு முறைகளை சட்டமூலம் கொண்டுவராவிட்டால் ''விவசாயிகள் பங்குபற்றலை'' உருவாக்குவது சாத்தியமற்றது என்றும் கூறப்பட்டது. அரசியல் தலையீடு, நிறுவக முகாமை, நிதிப் பற்றுக்குறை என்பனவும் தமது செயற்திறனை குறைத்து வருவதான பல பொறியியலாளர்கள் கூறினர்.

விவசாயிகளோ இதற்கு மாறான கருத்துக்களைக்கொண்டிருந்தனர். நம்பகமற்ற நீர் வழங்கல், நீர்ப்பாசன தொகுதிகளின் மோசமான பராமரிப்பு, நீர்ப்பாசன உத்தியோகத்தர்களின் முறைகேடுகள், அரசியல் குறுக்கீடுகளால் ஒரு சிலருக்கு அனுகூலம் காட்டுதல் ஆகியனவே தம் பிரச்சினைகளுக்கான காரணங்கள் என அவர்கள் சுட்டிக்காட்டினர். அரசியல் உதவி மூலம், தமது பயிர்களுக்கு நீர் பெற்றுக்கொண்ட விவசாயிகள், தம்மைப் புறக்கணிக்கும் முகவர் நிலையங்களிடம் உதவிபெற முடியாமையை காரணம் காட்டி தமது செய்கையை நியாயப்படுத்தினர்.

இருசாராரும் திக்குத்தெரியாத ஒரு நிலையில் இருந்தார்கள் என்று கூறுவது பொருந்தும். நீர்ப்பாசனத் தொகுதி விவசாயிகளுக்கும், முகாமையாளர்களுக்கும் இடையே உடன்படிக்கை நிலையொன்றை கொண்டுவரக் கூடிய நிறுவக முறைகள் எதுவும் இல்லாதிருந்தன. மாற்றங்களைக் கொண்டுவருவதில் வெளியாரும் நம்பிக்கை தெரிவிக்கவில்லை. டாக்டர் மிக் மூர், மாற்றங்களைக் கொண்டுவருவதில் நீர்ப்பாசன திணைக்களம் நம்பிக்கையற்ற நிலையில் இருப்பதனைக் கண்டித்து பல கட்டுரைகளை எழுதியுள்ளார்.

ஆனால், கடந்த பத்து ஆண்டுகளில், இலங்கை நீர்ப்பாசன வல்லுனர்களின் சிந்தனைகளிலும், மனப்பாங்குகளிலும் ஒரு புரட்சிகர மாற்றம் ஏற்பட்டுள்ளதைக் காணக் கூடியதாயிருக்கிறது. ''பங்குபற்றும் முகாமைக் கொள்கை'' ஒன்றை அரசாங்கம் நீர்ப்பாசனத் துறையில் கடைப்பிடித்தது. பழைய முறைகளில் ஊறிப்போயிருந்த நீர்ப்பாசனப் பொறியியலாளர்கள் கூட, நன்கு ஒழுங்கமைந்த விவசாயிகளுடன் சேர்ந்து கருமமாற்றுவதையும், நீர்ப்பாசன தொகுதிகளின் கூட்டு முகாமைப்படுத்தலையும் ஏற்றுக்கொண்டனர். எண்ணத்திலும் மனப்பான்மையிலும் ஏற்பட்ட இந்த மிகப் பெரிய மாற்றங்களை, 1990 இல் சமர்ப்பிக்கப்பட்ட பல சீர்திருத்த யோசனைகளில் காணக்கூடியதாயிருக்கிறது. மேற்கூறப்பட்ட குழுவினரின் குறிப்புக்கள், கடந்த காலத்தின் பிரச்சினைகளில் நீர்ப்பாசன பொறியலாளரும் ஒரு பகுதியினராக இருந்தனர் என்ற ஊகக் குறிப்பினை தெரிவித்தன.

சிந்தனையின் புரட்சி நான்கு முக்கிய இடைவெளிகளை அடையாளங்காட்டியுள்ளது. அவை யாவன முகாமை இடைவெளி, மனிதவள இடைவெளி, நிதிவள இடைவெளி, கொள்கை இடைவெளி என்பனவாகும். முகாமை இடைவெளியானது, நீர்ப்பாசன நிறுவகங்கள் துரிதமாக உருவாகமையாகும், பயிற்சி முறைகளில் துரித முன்னேற்றம் காணப்பட்ட போதிலும் தொழில்சார் திறன்களை வளர்த்துக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் இன்னமும் குறைவாக இருப்பது மனிதவள இடைவெளியாகும். நிதிவள இடைவெளி, நிறுவக முகாமைக்குப் போதிய நிதி ஒதுக்கப்படாமையாகும். கொள்கை வகுப்போர் புதிய கருத்துக்களின் பரீட்சார்த்தங்களுக்கு ஊக்கமளிக்கும் அதே வேளையில், எதிர்காலத்துக்கான திடமான செல்நெறிகளை வழங்குவதில் அவர்கள் துரிதமாக செயற்படாமை கொள்கை இடைவெளியாக இருக்கிறது.

**மாற்றங்களுக்கான மூலங்கள்**

இந்த ''சிந்தனைப் புரட்சி'' எவ்வாறு ஏற்பட்டது? இக்குறுகிய கட்டுரையில் மாற்றங்களுக்கான முழுக்காரணங்களையும் தரமுடியாது. பரீட்சார்த்தங்கள், பிரயோக ஆய்வு, தனிப்பட்ட தலைமைத்துவ கற்பனா சக்தி, உசாத்துணை, உள் முயற்சிகளுக்கு உதவியளித்து ஊக்கம் தந்த வெளியார் உதவி என்பவற்றை உள்ளடக்கிய ஒரு சிறப்புமிக்க கலவையின் செல்வாக்

கினை இது கொண்டிருந்தது. முக்கியமான சில பரீட்சார்த்த முயற்சிகள் இங்கு தரப்படுகின்றன.

வெளியார் உதவியின்றி முழுக்க முழுக்க ஒரு சில உள்ளூர் மக்களினால் மேற்கொள்ளப்பட்ட முக்கியமான சில பரீட்சார்த்தங்களை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். "கிம்புல்லான" சம்பவமும் "மினிப்பே" சம்பவமும் இரு முக்கிய உதாரணங்களாகும். குருநாகலை மாவட்டத்தில் உள்ள கிம்புல்லான கிராமத்தில் வசித்த அர்ப்பணிப்புமிக்க தொழில்நுட்ப உதவியாளரான திரு. ஏ. எம். எஸ். குணதாச, விவசாயிகளினது பங்கீடு இல்லாது எந்தவித நிதிப்படுத்தப்பட்ட புனருத்தாரன செய்திட்டங்களும் பயனளிக்காது எனக் கருதினர். எனவே, இவர் விவசாயிகளை குழுக்களாகச் சேர்ந்து, நீர்ப்பாசனத் தொகுதிகளின் அபிவிருத்தியில் ஈடுபடவும், அவற்றை நடைமுறைப் படுத்தி நிர்வகிப்பதிலும் அவர்களுக்கு ஊக்கமளித்தார். சிறந்த நீர் அவர்களுக்கு சமமாக, சரிவரக் கிடைக்கவும் அதன் மூலம் பயிர் விளைச்சலை விருத்திசெய்யவும் அவர் தூண்டுதல் வழங்கினர். மிகவும் முக்கியமாக, செயற்படுத்துதல் மற்றும் பராமரிப்பு ஆகிய முக்கிய பொறுப்பை விவசாயிகள் ஏற்றுக்கொள்ளும் பொருட்டு அகற்கிசைவான ஒரு முகாமை முறையை நிறுவவும் அவர்களுக்கு உதவியளித்தார்.

மினிப்பேயில், நீர்ப்பாசன திணைக்களத்தைச் சேர்ந்த இன்னுமொரு அர்ப்பணிப்புமிக்க ஊழியர் (அப்போது அவர் கண்டி பிராந்தியத்தின் நீர்ப்பாசன பதில் பணிப்பாளராகக் கடமையாற்றினர்) மினிப்பே திட்டத்தில் நீர் விநியோக முகாமைத்துவத்தையும், அதன் பராமரிப்பினையும் அபிவிருத்தி செய்வதற்காக ஒரு குழு முறையை அமுல்படுத்தினார். இந்த பரீட்சார்த்தத்துக்கு திரு என். ஜி. ஆர். டி. சில்வா தலைமை தாங்கினார். இந்த பரீட்சார்த்தம், தற்பொழுது பாரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் பலவற்றில் பிரயோகிக்கப்படும் பல முகாமைக் கோட்பாடுகளுக்கான தனியொரு மூலமாக இருந்தது. ஆனால் அப்போதைய நீர்ப்பாசன பணிப்பாளர் முழு ஒத்துழைப்பை இம்முயற்சிக்கு அளிக்கவில்லை. இந்த இதழின் இன்னுமொரு கட்டுரையின் ஆசிரியரான திரு. டி. சில்வா, பின்னர் நீர்ப்பாசன பணிப்பாளராகவும், ராஜாங்க செயலாளராகவும் பதவியேற்றார். இலங்கை நீர்ப்பாசன முகாமை சிந்தனையில் பெரும் செல்வாக்கைக் கொண்டவராக அவர் இருந்து வருகிறார்.

வெளியாரின் உதவியுடன், (USAID) உள்ளூர் மற்றும் சர்வதேச நிபுணர்களிடையே மிகச் சிறந்த ஒத்துழைப்பு உருவாவதற்கான மிகச்சிறந்த உதாரணத்தை பரீட்சார்த்தம் தருகிறது. 1979 ம் ஆண்டில் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்ட கல்லோயா நீர் முகாமைத்துவ செயல்திட்டமானது இலங்கையில் மட்டுமன்றி அதற்கு அப்பாலும் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. இத்திட்டத்தின் மூல கருத்தானது, கல்லோயா இடதுகரையை புனருத்தாரணம் செய்வதேயாகும். ஆனால், இதில் பெரும் பயிற்சி முறைகள், தொழில்நுட்ப உதவி, ஆராய்ச்சி, மற்றும் விவசாய நிறுவனங்களுடன் பரீட்சார்த்த முறைகள் ஆகியன உள்ளடங்கியிருந்தன. இச்செயல் திட்டத்தில் பங்குபற்றியதன் மூலம், அதிக அனுபவத்தைப் இக்கட்டுரையாளர் பெற்றுள்ளார். இதன்மூலம் நிறுவன அமைப்புக்களை நிர்மாணிக்கக் கூடியதாயிருந்தது. இச்செய்திட்டத்தின் மூலம் அறியப்பட்ட பாடங்களில் ஒன்று விவசாயிகள் தம்மைச் சிறந்த முறையில் ஒழுங்கமைக்கும் பொருட்டு "நிறுவகப்படுத்தப்பட்ட அமைப்பாளர்கள்" முக்கியமானவர்கள் என்பதாகும். அத்துடன் "பிரயோக புனருத்தாரணம்" எனப்படும் முறையைப் பயன்படுத்தி, பங்குபற்றல் முறையை அமுல் செய்ததன் மூலமும், நீர்ப்பாசன திட்டங்களில் கூட்டு முகாமைத்துவத்தை வடிவமைத்ததன் மூலமும் இப்பரீட்சார்த்தம் வெற்றி கண்டது.

இந்த நிறுவன வடிவமைப்பு முறை தற்போது பொதுவாக அங்கீகரிக்கப்பட்டு பல முக்கிய திட்டங்களில் அமுல் படுத்தப் பட்டு வருகின்றது. சாதாரணமாக, 'ஆதாரகுழு'' ஒன்றை அஸ்திவாரமாக இது கொண்டுள்ளது. கால்வாய் விநியோக முறையில் தமது நலன்களை பேணும் பொருட்டு இக்குழு ஒரு பிரதிநிதியை (தலைவர் அல்ல) தேர்ந்தெடுக்கின்றது. இது தேவைப்படும்போது தமது கூட்டங்களுக்கு உத்தியோகத்தர்களை அழைக்கும் ஒரு முறையான விவசாயிகள் நிறுவனமாகும். விநியோக குழுக்களின் பிரதிநிதிகள் இச்செய்திட்ட முகாமைக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர். விவசாய பிரதிநிதிகளையும், உத்தியோகத்தர்களையும் கொண்ட இந்தக் கூட்டு குழுவில் விவசாயிகளே பெரும்பான்மையானவர்களாயிருக்கின்றனர்.

நீர்ப்பாசன முகாமைப் பிரிவினால் அமுல்செய்யப்படும் INMAS செய்திட்டம் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழுள்ள 35 செய்திட்டங்களில் செயலில் விடப்பட்டுள்ளது. விவசாயிகளினதும், அரசாங்கத்தினதும் கூட்டு முயற்சிகளினால் மிகக் குறைந்த முதலீட்டில் நீர்ப்பாசன திட்ட முகாமையை அபிவிருத்திசெய்வதற்கு உத்தியோக பூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட முதல்திட்டம் இதுவேயாகும். கூட்டுமுகாமைப் படுத்தல் கொள்கைகள் குறித்த

படிப்பினைகளுக்கான ஒரு மூலமாக எதிர்கால விஸ்தரிப்பு திட்டங்களுக்கான ஒரு மாதிரியாகவும் இது இருக்கிறது.

கல்லோயா செய்திட்டத்தை நிதிப்படுத்திய அதே நன்கொடை அமைப்பு முன்னைய அனுபவத்தின் அடிப்படையில் பொலநறுவையிலும் நான்கு முக்கிய திட்டங்களையும் நிதிப்படுத்தியுள்ளது. நீர்ப்பாசன தொகுதிகள் முகாமைச் செய்திட்டத்தின் நோக்கம். இந்த திட்டங்களில் உறுதியான முகாமை முறைகளை ஸ்தாபிப்பதாகும். விவசாயிகளின் நிறுவனங்களை உருவாக்குதல், பிரயோக புனருத்தாரணம், ஒப்பந்தங்களின் கீழ் விநியோக நிறுவனங்களினுல் மேற்கொள்ளப்படும் வேலைகள் என்பன இதன் முக்கிய பாகங்களாகும். செய்திட்ட முகாமைக் குழுவிற்குச் சமமாக, ''செய்திட்டமட்ட விவசாயிகள் நிறுவனங்கள்'' என்ற கருத்தையும் இது அறிமுகப்படுத்தியுள்ளது.

மேற் கூறப்பட்டவையும் ஏனைய முயற்சிகளும் நீர்ப்பாசனத் துறை சம்பந்தமாக அரசாங்க கொள்கையின் மீது முக்கிய செல்வாக்கை எடுத்து வந்துள்ளன. சர்வதேச நீர்ப்பாசன முகாமை நிறுவகத்தின் சர்வதேச தலைமை அலுவலகம் இலங்கையில் அமைந்திருப்பது, இம்முறையை அபிவிருத்தி செய்வதில் உதவி புரிந்துள்ளது. 1988 ம் ஆண்டிலிருந்து, முன்னர் கடைப்பிடிக்கப்பட்ட பரீட்சார்த்தத்தை ஊக்குவிக்கும் கொள்கைக்குப் பதிலாக ''பங்குபற்றும் முகாமை'' கொள்கை நவீனப்படுத்தப்பட்டு கையாளப்பட்டு வந்தது, பெருந்திட்டங்களில் நீர்ப்பாசன திணைக்களத்துடன் இணைந்தும் சிறிய திட்டங்களில் தனித்தும் விவசாயிகள் அமைப்புக்கள் கூட்டு முகாமையில் கூடியளவு பொறுப்புக்களை எடுப்பதை ஊக்குவிப்பதே இக்கொள்கையின் முக்கிய நோக்கமாகும்.

வெகு அண்மைக் காலத்தில் சர்வதேச அபிவிருத்திக்கான ஐ. அ. முகவரகத்தின் (USAID உதவியுடன் நீர்ப்பாசன முகாமைத்துவ கொள்கை நடவடிக்கை (IMPSA) த்திட்டத்தை அரசாங்கம் அமுல்படுத்தி வந்தது. இதுபற்றி இன்னுமொரு இடத்தில் விரிவாகக் கூறப்படப்பட்டுள்ளது. 1991 ம் ஆண்டின் இறுதியில் இச்செயற்பாட்டின் மூலம் பங்குபற்றும் முகாமைத்துவ கொள்கையை நன்கு அமுல்படுத்துவதில் அரசாங்கம் மிகவும் நிலையான அடிப்படையை வைத்திருக்கும் என எதிர் பார்க்கப்படுகிறது.

இம்முழு நிகழ்வுப் போக்குகளிலும் வளங்களைத் திரட்டுவது அதாவது நிறுவக முகாமைக்கு யார் செலவு செய்வது என்பதே முக்கிய கேள்வியாகும். விவசாயிகள் மூலதனச் செலவுகளுக்கன்றி அமைப்பு மற்றும் முறைமைகளுக்கு பணம் செலுத்த வேண்டுமென அரசாங்கம் கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டுள்ளது.

1980 களின் மத்தியில், விவசாயிகள் நீர்ப்பாசன சேவைக் கட்டணம் செலுத்த வேண்டுமென்ற வகையில் முயற்சிகள் எடுக்கப்பட்டன. ஆனல், பல்வேறு காரணங்களினுல் 1980 களின் இறுதியில் இவை தோல்விகண்டன. தற்போதைய அணுகுமுறை என்னவென்ருல், அரசாங்கம் தொடர்ந்து, முக்கிய தொகுதியின் நிறுவக முகாமைக்கும், புனருத்தாரணத்துக்கும் பணம் செலுத்தும்; அதேவேளையில் விவசாயிகள் சிறிய தொகுதிகளுக்கு நேரடியான நிறுவக முகாமைப் பொறுப்பையும், பெரும் தொகுதிகளுக்கு விநியோக பொறுப்பையும் ஏற்கவேண்டும் என்பதாகும். ஒரு சில நாடுகள் விவசாயிகள் அமைப்புக்கள் மூலம் (பிலிப்பைன்ஸ்) விவசாயிகளைப் பணம் செலுத்தச் செய்கின்றன. ஆனல், இலங்கை அரசாங்கமானது நிறுவக சீர்திருத்தங்கள் மூலம் அரசாங்கத்திற்கு விவசாயிகள் கட்டணம் செலுத்துவதை ஊக்குவித்து வருகிறது.

### எதிர்கால செல்நெறிகள்

நிறுவன ரீதியான சீர்திருத்தங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, நீர்ப்பாசன விவசாயத் துறையில் அண்மையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், போக்குகள் என்பன இந்தக் கட்டுரையில் விளக்கப்பட்டது. எதிர்கால செல்நெறிகள் எவ்விதம் அமையும்? 2000 ஆவது ஆண்டில் நிறுவன கட்டமைப்பு எவ்வாறு தோற்றமளிக்கும்? தொடர்ந்து இவற்றை உருவாக்கி வருவதிலும், கடந்த கால அனுபவங்கள் கற்ற பாடங்கள் மூலம் அவற்றைச் சரியாக நிர்வகிப்பதிலும், -மிகவும் முக்கியமாக, அவற்றைச் சரிவர அமுல் செய்தால்- சிறந்த எதிர்காலம் உண்டு என்பதை இக்கட்டுரையாளர் உணர்கிறார்.

முதலாவது, தேசிய மட்டத்தில் நிறுவன கட்டமைப்பு மிகவும் எளிதானதாக இருக்கும். ஓரே ஒரு நீர்ப்பாசன முகாமைத்துவ ஆதார முகவர் நிலையம் இருக்கும். அது தற்போதைய நீர்ப்பாசனத் திணைக்களத்திலிருந்து உருவாகி மகாவலி அபிவிருத்தி சபை போன்ற வேறு சில முகவரகங்களின் கூறுகளை சேர்த்துக்கொள்ளும். மகாவலி, கல்லோயா போன்ற முக்கிய ஆற்று வடி நில திட்டங்கள் போன்றவற்றின் கூட்டு மொத்த முகாமைத்துவத்திற்கு இந்த முகவர் நிலையம் பொறுப்பாயிருக்கும். மாவட்ட நீர்ப்பாசன முகவர் நிலையங்களுக்கும், விவசாயிகள் அமைப்புக்களுக்கும் தொழில்நுட்ப, முகாமை உதவிச்சேவைகளை அர்ப்பணிப்

( 24 ம் பக்கம் பார்க்க )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2000 ஆவது ஆண்டில் நீர்ப்பாசன முகாமை குறித்த ஒரு தரிசனம்

என். ஜி. ஆர். டி. சில்வா

(பணிப்பாளர், நீர்ப்பாசன முகாமை கொள்கை ஒத்துழைப்பு நடவடிக்கை) (INPSA)

சமூகத்தினதும் பொதுவில் நாட்டினதும், அபிவிருத்திக்கான முறைமை அணுகுமுறையினூடாக நிலையான அடிப்படையில் நீர்ப்பாசன விவசாயத் துறையின் செயலாற்றுகையை வலுப்படுத்தப்படும் செயல்முறையே நீர்ப்பாசன முகாமைத்துவமாகும். இச்செயல்முறையானது ஆறு முக்கிய பரிமாணங்களை உள்ளடக்கியுள்ளது.

(i) மூலவளங்கள் (நீர், நிலம், மூலதனம், தொழில்);

(ii) தொழில்நுட்பம் (உ-ம் மதிப்பிடுதலும் கொள்வனவும், போக்குவரவு, பகிர்வு, பிரயோகம், நீரினை அகற்றுதல்;

(iii) சமூகப் பொருளியல் (உ-ம் வருமானம், சமத்துவம், நிலவாட்சி மூலவளங்கள் கிடைக்கப்பெறுதல் கலாச்சாரம்);

(iv) விவசாயம் (உ-ம் உற்பத்தித்திறன், பயிர்களும் கால்நடைகளும், மண், நிலப்பரப்பு);

(v) நிறுவனவியல் (உ-ம் சந்தைப்படுத்துதல், விஸ்தரிப்பு கடனுதவி, பயிற்சி முகவர் நிலையங்கள், ஒழுங்கமைப்புகள், சட்டமுறைமை);

(vi) அரசியல் (உ-ம் கொள்கைகள், சட்டவாக்கம், ஒழுங்குவிதி);

(vii) ஆராய்ச்சியும் பயிற்சியும் (புதுமாற்றமும் அபிவிருத்தியும்);

நீர்ப்பாசன மயமாக்கப்பட்ட விவசாய விடயத்தில் வைத்து நீர்ப்பாசன முகாமைத்துவம் நோக்கப்படல் வேண்டும். இதே போன்று நீர்ப்பாசன மயமாக்கப்பட்ட விவசாயத்துறையானது, பாரிய விவசாயத்துறையினுள் வைத்து நோக்கப்படலும் வேண்டும். உலகப் பொருளாதாரத்துடன் நெருங்கிய தொடர்புடைய நாட்டின் பேரண்ட பொருளாதாரத்தின் முக்கிய கூறொன்றாக விவசாயத்துறை விளங்குகின்றது. இதன் காரணமாக நீர்ப்பாசன முகாமைத்துவத்தினை உள்ளூர் நிலைமைகளில் மட்டும் வைத்துக் கருதாது, இலங்கையில் தாக்கமேற்படுத்தும் உலகப் பொருளாதாரப் போக்குகள் தொடர்பிலும் கருதுதல் வேண்டும்.

## நீர்ப்பாசன முகாமைத்துவ கொள்கை ஒத்துழைப்பு நடவடிக்கை (IMPSA)

விவசாயத்துறையில் உற்பத்தித்திறனையும், இலாபகரத் தன்மையையும் மேம்படுத்துவதற்காக நீர்ப்பாசனத்திலும், குடியேற்றத் திட்டங்களிலும் பங்குபற்றல் முகாமைத்துவத்தின் ஏற்கப்பட்ட கொள்கை அமுலாக்கலில் இலங்கை அரசாங்கத்திற்கு உதவுமொரு திட்டமாக இது உள்ளது. இச்செயற்திட்டமானது காணி, நீர்ப்பாசன, மகாவலி அபிவிருத்தி அமைச்சினால் முனைப்பாக்கப்பட்டதொன்றாகும். இத்திட்டத்திற்கான ஆதரவினையும் நிதியுதவியையும் சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவரகம் (USAID) வழங்குகிறது. அத்துடன் ஆசியா மற்றும் அண்மைக் கிழக்குக்கான நீர்ப்பாசன ஒத்துழைப்பு திட்டமும் (ISPAN) சர்வதேச நீர்ப்பாசன முகாமைத்துவ நிறுவனமும் (IIMI) இதற்கு உதவியளித்து வருகின்றன.

இத்திட்டம், குறித்துரைக்கப்பட்ட கொள்கைக் கூற்றுகளை அபிவிருத்தி செய்வதையும். 1988 பிற்பகுதியில் இவ்விடயத்தில் அங்கீகரிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தில் விவரிக்கப்பட்டவாறாக, நீர்ப்பாசனதிட்டங்களில் பங்குபற்றல் முகாமைத்துவம் மீது ஏற்கெனவே இருந்த பரந்த கொள்கை வரைச்சட்டத்தினை விஸ்தரிப்பதற்கும், இடைவெளிகளை நிரப்புவதற்குமான அமுலாக்கல் உத்திகளை சோசனை கூறுவதையும் குறிக்கோளாகக் கொண்டது. கூட்டு நீர்ப்பாசன முறையொன்றின் பிரதான அம்சங்களை ஸ்தாபிப்பது குறித்த பிரேரணைகளை இப்பத்திரம் உள்ளடக்கியிருந்தது. இதன்படி சிறிய திட்டங்களின் செயற்பாட்டிற்கும், பராமரிப்புக்கும் மற்றும் பெரிய திட்டங்களின் பகிர்வுக்கும் விவசாயிகள் அமைப்புக்கள் பொறுப்பாக இருக்கும். தலை வேலைகளுக்கும், பெரிய திட்டங்களின் முக்கிய வழிநெறிகளைப் பேணி முகாமைப்படுத்துவதற்கும் அரசாங்கம் பொறுப்பாக இருக்கும். தெளிவான பரந்த நெறிப்படுத்தலை இத்திட்டம் அமைத்தபோதிலும், அமுலாக்கல் தொடர்பில் பல முக்கிய பிரச்சினைகளை இக்கொள்கை தீர்த்துவைக்கவில்லை. புதிய பங்குபற்றல் முகாமைத்துவ முறைமைக்கான உரிய, தொடர்சியான மாற்றத்தினை உறுதிப்படுத்தும் புதிய அனுபவங்களுக்கும் கொள்கை சீராக்கலுக்குமான சந்தர்ப்பத்தினை இத்திட்டம் வழங்குகின்றது.

இத்திட்டத்தின் நிறைவேற்றலுக்கென அமைச்சுக்கிடையி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லான ஆலோசனைக்குழுவும், நீர்ப்பாசன முகாமைத்துவக் கொள்கை ஆலோசனைக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் பிரிவுகள், திணைக்களங்களுக்கிடையே ஏற்கப்பட்டு அமுலாக்கப்பட வேண்டிய சிபார்சுகள் தொடர்பாக கருத்தொருமையை பெறுவதற்கென ஒரு செயலமைவுத் திட்டமொன்றினை வழங்கவென நீர்ப்பாசன முகாமைத்துவ கொள்கை மதியுரைக் குழு உருவாக்கப்பட்டது. இம்மதியுரைக் குழுவின் தலைவராக காணி, நீர்ப்பாசன, மகாவலி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் இருந்ததுடன், சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் செயலாளர்கள், இராஜாங்க செயலாளர்கள், அவர்களின் கீழுள்ள திணைக்கள, முகவர்நிலையத் தலைவர்களையும் இக்குழு கொண்டிருந்தது. இம்மதியுரைக் குழுவின் செயற்பாடுகளுக்கு வசதிகளை வழங்குவதற்கும், திட்டத்தின் கீழான நாளாந்த வேலைகளை மேற்கொள்வதற்குமென தனியான செயலகமொன்று நிறுவப்பட்டது.

குழுவின் ஆலோசனையின் கீழ் தற்போதிருந்துவரும் முதல் நகல் கொள்கைப் பத்திரத்தின் அடிப்படையில் இந்தக் கட்டுரை அமைந்துள்ளது. இலங்கையில் நீர்ப்பாசன மயமாக்கப்பட்ட விவசாயக் கொள்கையை, நீர்ப்பாசன முகாமைத்துவத்திற்கு முக்கியத்துவமளித்து எதிர்காலத்தில் நெறிப்படுத்துவதற்கான மொத்தப்பார்வை பரந்த வழிகாட்டித் தொகுதிகள் தத்துவங்கள், நோக்குகள் என்பவற்றை இது முன்வைக்கிறது. இப்பார்வையின் முக்கிய குவிமையம், நீர்ப்பாசன முகாமைத்துவம் மீதானதாகவும், விசேடமாக நீர்ப்பாசன முறைமைகளில் பங்குபற்றல் முகாமைத்துவத்திற்கான கொள்கை மீதானதாகவுமுள்ளது. ஆயினும், நாட்டின் பரந்த அபிவிருத்தி விடயத்தில் நீர்ப்பாசன மயமாக்கப்பட்ட விவசாய துணைந்துறைகளில் விசேட கவனத்துடன், விவசாய நீர்மூலவளத் துறைகளையும் இது உள்ளடக்குகின்றது.

**புது நோக்கு ஏன்?**

கடந்த காலத்தில், நீர்ப்பாசன விவசாயத்துறை பொருளாதாரத்தின் ஏனைய துறைகள் தொடர்பில் எவ்விதம் அபிவிருத்தியாக்கப்பட வேண்டுமென்பது பற்றி தெளிவான புலப்பாடெதுவுமிருக்கவில்லை. இதன் விளைவாக சில சந்தர்ப்பங்களில் எதிர்மாறாகச் செயற்படக்கூடிய பிரிவுபட்ட, முரண்பாடான கொள்கைகள், நிறுவனங்கள் உருவாக வழிகோலப்பட்டது. மறுபக்கம் எதிர்காலத்தில் இத்துறை, மேற்கொள்ளக்கூடிய திசை வழிகளை வழங்கிய பத்து வருடகால முக்கிய பரீசார்த்தங்களையும், ஆராய்ச்சிகளையும் இலங்கை கொண்டிருந்தது.

ஆங்கில மொழியில் (VISION) என்ற சொல்லிற்கு மூன்று அர்த்தங்களுள்ளன. முதலாவது நேரடிக்கருத்து உண்மைப் பார்வையென்பதாகும். இரண்டாவது அசாதாரண தூரநோக்கு அல்லது பகுத்துணரும் கற்பனைத் தோற்றத்தைக் குறிக்கின்றது. மூன்றாவது, சாதாரண கற்பனைக்கும், கனவுக்குமான கட்புலனுக்கப்பாற் பட்டதாகவுள்ளது. இந்த தசாப்த முடிவிலும் அடுத்த நூற்றாண்டிலும் நீர்ப்பாசன விவசாயம் எந்நிலையிலிருக்குமென்பதுபற்றிய தரிசனத்தை நாம் பெற முயலுகையில் இம்மூன்று வகைத் தரிசனங்களினதும் ஒரு கலவையுடன் நாங்கள் தொடர்பு கொள்கிறோம்.

தூரநோக்கும் தீர்க்கதரிசனமும் கொண்டவர்களால் மனித இனம் வெற்றிகரமாகவும், உறுதியாகவும் தூண்டப்பட்டுவந்துள்ளது. யதார்த்த பகுப்பாய்வினதும் கற்பனாவாத் சிந்தனையினதும் இணைப்பின் மூலமாக தாபிக்கப்படும் திடமான குறிக்கோள்களைக் கொண்ட ஒரு நோக்கானது, அத்தகைய இலக்குகளை நோக்கி முயற்சிகளை நெறிப்படுத்தி தூண்டுதல் மூலம் பெரும் முன்னேற்றத்தினை ஏற்படுத்த முடியும். இங்கு தரப்படும் தரிசனமானது கற்பனை, கனவு நிலைகளின் விளைவாகத் தோன்றியதன்று, திடமாகவும் சாதகமாகவும் யதார்த்தமாகவும் சிந்திக்கும் முயற்சியினடிப்படையில் எழுந்ததொன்றாகும்.

தற்கால நிலைமைகள், ஒரு புதிய தரிசனத்துக்கு தடையாக இருக்கக்கூடாது. விரும்பப்படத்தக்கதென்ன என்பதை அது வெளிப்படுத்தி, விபரமான கொள்கைகள் அமுலாக்கல் உத்திகளாகியன அமைவாக்கப்பட்டு, பின்பற்றப்படக்கூடிய தொரு மொத்த நெறிப்படுத்தலை வழங்குதல் வேண்டும். மேலும்கடந்த கால அனுபவங்களில் படித்த பாடங்களிலும், திடமான போக்குகளிலும் தங்கியிருந்து, எதிர்மறைப் போக்குகளைத் தவிர்க்கும் வழிகளையும் தேட விழைதல் வேண்டும். சகல திறத்தவராலும் இத்திடமான குறிக்கோள்கள் ஏற்கப்பட்டு, அவற்றை எய்துவதற்கு மேற்கொள்ளப்படும் சகல செயற்பாடுகளுக்கும் ஆலோசனைகள் வழங்கப்படுதல் வேண்டும். இத்தகையதொரு செயற்பாட்டிற்கு இணக்கம், புரிந்துணர்வு, கலந்துரையாடல் என்பவை அடையாளங்களாக இருத்தல் அவசியமாகும். இத்தகையதொரு தரிசனத்தின் அபிவிருத்தியானது, நீர்ப்பாசன முகாமைத்துவ விடயம் தொடர்பிலான பிரச்சினைகள், தடைகள், மாற்றங்கள், போக்குகள் என்பவற்றை பரிசீலனை செய்வதும் ஆரம்பிக்கப்படுதல் வேண்டும்.

**நீர்ப்பாசனத்துறையின் மாறிவரும் பங்கு**

சுதந்திரத்தையடுத்து வந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலகட்டத்தின் அபிவிருத்தி முயற்சிகள், பொருளாரத்தின் விவசாயத்துறைக்கு குறிப்பாக அரிசி உபதுறைக்கு நெறிப்படுத்தப்பட்டன. நான்கு தசாப்தங்களாக மேற்கொள்ளப்பட்ட நீர்ப்பாசனம் ஆராய்ச்சி, மானியங்கள் போன்றவற்றின் வடிவிலான பாரிய முதலீடுகள் காரணமாக நாடு 1980 நடுப்பகுதியில் அரிசியில் தன்னிறைவு நிலையை அடைந்தது. நீண்டகால அரிசி தன்னிறைவுக் குறிக்கோள் கொள்கை கைகூடிவரும் இச்சந்தர்ப்பத்தில், விவசாயம் பலவழிகள் சந்திக்கும் ஓரிடத்தில் நிற்கிறது.

விவசாயத்துறையின் எதிர்கால நெறிப்படுத்தல் பின்வரும் பின்னணியில் அமைதல் அவசியமாகும். முதலாவதாக பேரண்ட பொருளாதார நிலை. பொருளாதாரமானது. துரிதப்படுத்தப்பட்ட கட்டமைப்பு உருமாற்றத்தினை எதிர் நோக்கியுள்ளது. ஆரோக்கியமானதொரு விவசாயத்துறையின்றி குறிப்பாக உணவு உபதுறையில் ஆரோக்கிய நிலையின்றி பொருளாதாரமானது நீண்டகால அபிவிருத்தியைப் பெறுதல் கடினமாகும். எவ்வாறெனினும், உணவு உற்பத்திக்கென நிறுவப்பட்ட திடமான அடித்தளத்தில் உணவுத் துறை மட்டுமன்றி முழுப்பொருளாதாரமும் மாற்றுப்பாதையில் செல்லவேண்டியுள்ளது. இத்தகையதொரு கட்டத்துக்கு இலங்கை இன்றுவந்துள்ளது. பொருளாதார அபிவிருத்தியில் விவசாயத்தின் முக்கியபங்கு, நிதிசார் மனிதவளங்களை பொருளாதாரத்தின் ஏனைய துறைகளுக்கு வழங்குவதாகும். தற்போது உணவுற்பத்தி ஆதாரம் (குறிப்பாக நீர்ப்பாசன மயமாக்கப்பட்ட காணி ஆதாரம்) நன்கு ஸ்தாபிக்கப் பட்டிருப்பதால் உணவு உபதுறை, விசேஷமாக நீர்ப்பாசனத்துறை ஏனையதுறைகளிலிருந்து மூலவளங்களை உறிஞ்சாது, அவற்றிற்கு உதவவேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இரண்டாவதாக, விவசாயத் துறையில், மரப்பயிர், உப உணவுப்பயிர் ஆகிய இரு உபதுறைகளிலும் அதிக கவனஞ் செலுத்தப்படுதல் வேண்டும். மரப்பயிர் துறையானது, சர்வதேசவர்த்தக நிதிகளில் காணப்படும் பல வீனங்களைப் பொருட்படுத்தாது தொடர்ந்தும் வெளிநாட்டு செலாவணியைப் பெற்றுத்தரவல்லதாக உள்ளது. மூன்றாவதாக, நீர்ப்பாசனத்துறைக்குள் நீர்ப்பாசனக் காணி ஆதார அபிவிருத்தி சாத்தியவளம் அதன் நடைமுறை எல்லையயடைந்துள்ள வேளையில் நாடு அரிசியில் தன்னிறைவு பெறக்கூடியதாக இருந்தமை அனுகூலமானதொரு நிலையாகும்.

கடந்த நான்கு தசாப்தங்களில் மேற்கொள்ளப்பட்டுவந்த நீர்ப்பாசனக் கட்டமைப்புகளின் பாரிய முதலீடுகள், புதிய நீர்ப்பாசனக் காணிகளை உருவாக்கும் சாத்திய வளத்தை ஓரளவு சோர்வடையச் செய்துள்ளன. சமீபத்தைய எதிர்காலத்தில் பெரும் செலவிலான நீர் மூலவள அபிவிருத்தி பொருளாதாரரீதியில் அனுகூலங்களை கொண்டுவரும் சாத்தியமில்லை. எவ்வாறெனினும், இத்துறையின் எதிர்கால பலன்கள் மந்தமாகவுள்ளதென்பது இதன் பொருளல்ல.

நீர்ப்பாசனக் காணி ஆதாரங்களை துரிதமாக அபிவிருத்தி செய்ததன் மூலம், இலங்கை, அரிசி உற்பத்தியை வெற்றிகரமாக அதிகரித்த போதிலும், இதுவரை அமைக்கப்பட்ட நீர்ப்பாசன திட்டங்களின் செயலாற்றுகையானது எதிர்பார்ப்பினை விட குறைந்தளவிலேயே உள்ளது. சிறந்த நீர்ப்பாசன முகாமைத்துவத்தின் மூலமாக இச்செயலாற்றுகையை மேம்படுத்தப்படுவதற்கு அதிக வாய்ப்புக்கள் உள்ளன என்பதனை கிடைக்கக்கூடியதாகவுள்ள சான்றுகள் தெரிவிக்கின்றன. தற்போதுள்ள நீர்ப்பாசன காணி ஆதார அடிப்படையில் பயிர்ச்செய்கை தீவிரப்படுத்தப்படின் கணிசமானளவு மேலதிக பயிரிடும் இடப்பரப்புகள் நெற்செய்கைக்கும் அரிசியல்லாத ஏனைய பயிர்ச்செய்கைகளுக்கு உட்படுத்தப்படலாம். ஆகவே, நீர்ப்பாசனத்துறையின் முக்கிய முயற்சி, தற்போதுள்ள திட்டங்களின் செயலாற்றுகையை மேம்படுத்துவதாக அமைதல் வேண்டும்.

பேரண்ட பொருளாதார விடயத்தில், இத்துறையின் பங்கிற்கு இசைந்ததாக இம்மாற்றம் அமைகின்றது. புதிய முயற்சிகள் பிரதான மனித ஒழுங்கமைப்பு மேம்படுத்தல் என்பவற்றை அடிப்படையாக கொண்டவையாகும். எனவே கட்டமைப்பு காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் இதற்கு தேவைப்படும் நிதிசார் மூலவளங்கள் மிகக் குறைவானவையாகும். இதனால் பொருளாதாரத்தின் ஏனைய துறைகளுக்கு கணிசமானளவு மூலதன நிதிகளை விடுவிப்பதற்கு வாய்ப்புள்ளது. விரிவடைந்துவரும் விவசாயம் சாரா துறைகளுக்கு நியாயமான விலைகளில் உணவு வழங்குதல் இத்துறையின் முக்கிய பணியாக அமையும். துரித கைத்தொழில் மயமாக்கம், ஊழியர் செலவில் பெருமளவு தங்கியுள்ளது. முக்கிய உணவுப் பொருட்களுக்கு மேலதிகமாக (பெறுமதி உயர்ந்த) முக்கியமற்ற உணவுப்பொருட்களின் தேவை அதிகரிக்கலாம். இத்தகைய புதிய தேவைகளை நீர்ப்பாசனத்துறை நிறைவேற்றவேண்டும். அது நிறைவேற்றவும் முடியும். மேலும், நாட்டின் வர்த்தக நிலுவைக்கு உதவும் வகையில், ஏற்றுமதிப் பயிர்களை உற்பத்தி செய்து வெளிநாட்டுச் செலாவணியை சேகரிக்கவும் முடியும். இத்துறை நிறைவு செய்யவேண்டிய பணிகள் அனைத்தும் இப்போதுள்ள நீர்ப்பாசன காணி ஆதாரத்திற்குள் ஏலவேயுள்ள





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர்ப்பாசன முறைகளினதும் நீர்ப்பாசன விவசாயத்தின் விளைதிறனினதும் செயலாற்றுகையை வலுப்படுத்துவதன் மூலம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

நீர்ப்பாசனத் துறையினால் பின்பற்றப்படவுள்ள இப்புதிய நெறிப்படுத்தலானது, இறுதியாக, முன்னர் குறிப்பிட்ட பரந்த கொள்கைவரைச் சட்டத்திற்கு இயைபானதாக அமைதல் வேண்டும். நாட்டில் கட்டமைப்பு மாற்றத்தின் எதிர்கால நடைமுறையானது பொருளாதாரத்தின் பன்முகப்படுத்தலாக (நீர்ப்பாசனத்துறையில் பயிர் பன்முகப்படுத்தலுட்பட) அமையும். இப்பன்முகப் படுத்துதலில் தேவைப்படுவது யாதெனில் நெகிழ்ச்சித் தன்மையாகும். இதை நன்கு இயங்கும் சந்தைகளினால் மட்டுமேவழங்கமுடியும். சந்தைப் பொறிமுறையில் உள்ளார்ந்த பல குறைபாடுகள் காணப்படுகின்ற போதிலும் பன்முகப்படுத்தப் பட்டதொரு பொருளாதாரத்தினை பயனுள்ள வகையில் கையாளுவதற்கான ஒரேவழி இதுவாகவுள்ளது. இப்பொறிமுறையில் உள்ள குறைபாடுகளை தனியார்துறையில் விவசாயிகளிடையேயும்கூட சிறு தொழில் முனைப்பினை ஊக்குவிப்பதன் மூலம் நிவர்த்திசெய்யும் அதே வேளையில் எந்தவொரு பொருளாதாரக் கொள்கையும் இந்தப் பொறிமுறை மூலம் உச்சமட்ட பயனைப் பெறவேண்டும். நீர்ப்பாசனத் திட்டங்களும் அவற்றின் சேவைகளும் பொதுநலன்களைத் தங்கள் உள்ளார்ந்த தன்மைகளாகக் கொண்டிருப்பதால், இவ்விரு சரிசமவலுக் காணிகளையும் இணங்கச்செய்யும் எதிர்கால கொள்கைகளை எவ்விதம் வகுத்துக் கொள்வதென்பது நீர்ப்பாசன விவசாயத்துறை இன்று எதிர்நோக்கியுள்ள சவாலாகும்.

**அரிசியில் தன்னிறைவு**

1980 ன் தொடராண்டுகளின் நடுப்பகுதி வரையிலான நீண்டகால போக்கினை அவதானிக்கையில் அரிசியில் ஓரளவு தன்னிறைவினை இலங்கை கண்டுள்ளதெனலாம். அதுமுதலாக, அரிசியுற்பத்தி தேக்கநிலையிலும் (அல்லது சிறிதளவு குறைந்த நிலையிலும்) காணப்பட்டது. 1985 இல் 29 இலட்சம் மெற்றிக் தொன் உயர் மட்டத்தினை அடைந்தபின், அடுத்துவந்த ஆண்டுகளில் இம்மட்டத்திலிருந்து வீழ்ச்சியடைந்து 1989 இன் உற்பத்தி மதிப்பீடு 21 இலட்சம் மெ. தொன்னாக இருந்தது. அரிசியுற்பத்தியிலேற்பட்ட இந்த தேக்கநிலைக்கான ஒரு காரணம் விளைச்சல் தொடர்ந்தும் ஹெக்டயார் ஒன்றுக்கு 3.5 மெ. தொன் அளவில் மாறாதிருந்ததாகும். இந்தகைய தேக்கநிலைக்கான அடிப்படைக் காரணங்கள் தெளிவாக இல்லாத போதிலும், உள்ளீடுகளுக்கு சார்புரீதியிலான குறைந்த அரிசிவிலை, சாதகமற்ற காலநிலை, சமூக கொந்தளிப்பு போன்றவை சாத்தியமான காரணிகளாகவுள்ளன. உண்மைக் காரணங்கள் கவனமாக ஆய்ந்தறியப்பட வேண்டும். எவ்வாறெனினும், இத்தகைய தேக்கநிலை முறையான நீண்டகால போக்கினை பிரதிபலிக்கவில்லை. 1980 களின் கடைசிக்கால கட்டத்திலேற்பட்ட அரிசி உற்பத்தி தேக்கநிலை காரணமாக தன்னிறைவு மட்டம் 1984 இன் 98% உயர்வீதத்திலிருந்து 1989 இல் 80 சதவீதமாக வீழ்ச்சி கண்டிருந்தது. அரிசித்தன்னிறைவு அதிக தூரத்திலுள்ள தெனப் பலர் வாதிடலாம். எனினும் குறைந்த சனத்தொகை வளர்ச்சி வீத சார்புரீதியிலும், அரிசியுற்பத்தி சாத்தியவளத்திலும் நோக்கும்போது அரிசி தன்னிறைவை அடைதல் அதிக கடினமானதல்ல என்பது தென்படுகின்றது.

மிக முக்கியமான கேள்வி 100% அரிசி தன்னிறைவு பெறப்பட முடியுமா என்பதாகும்.

இது சாத்தியமாக இருப்பினும் கூட, எல்லா வருடங்களுக்கும் முழு அளவு தன்னிறைவினை இலக்காக்குதல் அறிவு பூர்வமானதொரு செயலல்ல. ஏனெனில் காலநிலை காரணமாக வருடத்திற்கு வருடம் ஏற்படும் பெருமளவு உற்பத்தி ஏற்ற இறக்கங்களின் விளைவாக விரும்பத்தகாத மிகை அரிசி சேமிப்பு ஏற்படக்கூடும். இதற்கான சாத்திய அணுகுமுறையாவது 90-100% வரையிலான இலக்கு வீதத்தினை பேணுதல், எல்லைக் குறைபாடுகள் ஏற்படுமிடத்து இறக்குமதி, ஒதுக்கு சேமிப்புகள் செயற்திட்டத்தினூடாக சமாளித்தலாகும். எவ்வாறாயினும், தெளிவான, உறுதியான அரிசிக் கொள்கை யொன்றினைத் தாபித்தல் முக்கியமானதாகின்றது. ஏனெனில், உணவு விவசாய நீர்ப்பாசனத் துறையில் அரிசி முக்கிய நிலையை வகிப்பதால் இது அவசியமாகின்றது. தெளிவான அரிசிக் கொள்கையின்றி இத்துறைக் கொள்கை ஆக்கம் குறிப்பிட்டளவு மட்டுப்படுத்தப் படுகின்றது.

**பயிர் பன்முகப்படுத்துதல்**

1980 களில் அரிசியில் ஓரளவு தன்னிறைவுநிலை ஆரம்பித்தது முதல்பயிர் பன்முகப்படுத்தல் அதிகளவுமுக்கியத்துவ பெறலாயிற்று, அத்துடன் இக்காலத்தில்தான் ஒருபோதுமில்லாதளவு குறைந்த விலையை அரிசி பெற்றது. கட்டமைப்பு மாற்றம் இடம் பெறுகையில், முழு பொருளாதாரமும் பன்முகப்படுத்தல் அத்தியாவசியமான தொன்றாகும். எவ்வாறெனினும், பல அம்சங்கள் தெளிவு படுத்தப்படல் வேண்டும்.

முதலாவதாக, நீர்ப்பாசனத் துறையில் பயிர் பன்முகப்படுத்தலானது, அரிசிக் கொள்கைத் தொடர்பில் நோக்கப்படல் வேண்டும், இரண்டாவதாக இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்குகள் எப்போதும் அசையும் தொடர்ச்சியான ஒரு நிகழ்வுப் போக்காக உள்ளது. அரிசிக்குப்பதிலாக வேறுபயிர்களைத் தெரிந்தெடுத்தல் பயிர்களிலிருந்து சார்புரீதியில் பெறப்படும் விளைவில் தங்கியுள்ளதுடன் அந்த விளைச்சல் விலைகளில் தங்கியுள்ளது. விலைகள் மாற்றமடைவதுடன் விவசாயிகளும் விரைவாக ஒரு பயிரிலிருந்து இன்னுமொன்றிற்கு மாறவேண்டியுள்ளனர். ஆகவே, அரிசித் தன்னிறைவு போன்றதொரு கொள்கை இலக்கு தெளிவானதாகவும், நிலையானதாகவும் இருக்கும் ஒரே தன்மையான அரிசிக் கலாச்சாரத்திலிருந்து பயிர் பன்முகப்படுத்தல் முரண்பட்ட தொன்றாகவுள்ளது.

மூன்றாவதாக, இத்தகைய பயிர் பன்முகப்படுத்தல் தன்மைக்கு, தேவையான உள்ளீடுகளைப் பெறுவதிலும், விளைபொருட்களை சந்தைப்படுத்துவதிலும் நெகிழ்வுத்தன்மை தேவைப்படுகின்றது. இத்தகைய நெகிழ்வுத் தன்மையினை சிறந்த சந்தைப்படுத்தல் முறை போன்று மட்டுமே வழங்கமுடியும். இத்தகையதொரு சந்தை முறையை வளர்த்தெடுப்பதிலேயே பயிர் பன்முகப்படுத்தலின் வெற்றி தங்கியுள்ளது. நீர்ப்பாசன திட்ட முகாமைத்துவத்தில் தற்போது காணப்படும் கடினப்போக்கினையும் இந்நெகிழ்வுத்தன்மை மாற்றவேண்டும்.

நான்காவதாக, நீர்ப்பாசனத் துறையின் பயிர் பன்முகப்படுத்தலானது அரிசியிலிருந்து விலகிச் செல்லாது அரிசியுடனானதாயிருப்பின், விசேடப்படுத்தப்பட்ட முறைமைகள் கிடையாக அல்லது நேராக வழங்கும் ஒப்பீட்டளவிலான அனுகூலத்தினையும், சிக்கனங்களையும் தடைப்படுத்துவதாக அது இருக்கும்.

ஐந்தாவதாக, அரிசியல்லாத பயிர்கள் அரிசியினைவிட உயர் விளைவுகளைத் தருவதாகக் கூறப்படுகின்ற போதிலும், அந்தகைய பயிர்களின் நிரலில் பல பாரம்பரிய உணவுப் பயிர்களான சோளம், பயற்றினம் போன்றவை, சிறந்த நீர்ப்பாசன நிலைமைகளில் பயிரிடப்பட்ட நெற்செய்கையைவிட குறைந்தபலனையே பொதுவில் காட்டுகின்றன. விவசாய வருவாயை அதிகரிக்கும் பொருட்டு இந்தப் பாரம்பரியப் பயிர்களை நீர்ப்பாசனத் திட்டங்களுக்குள் அறிமுகப்படுத்துவதற்கு நீர்ப்பாசன நீரை சேகரிப்பதன் மூலமாக பயிரிடல் செறிவை கணிசமான அளவு அதிகரிக்கும் தேவை ஏற்படுகின்றது. பாரம்பரிய பயிர்களுள் உயர் பெறுமதியுள்ள அரிசியல்லாத பயிர்களான மிளகாய், வெங்காயம் போன்றவையும், ஏற்றுமதிப் பயிர்களுள் வெள்ளரிவகை, தோட்டக்கீரை போன்றவையும், அரிசியை விட சிறந்த வருவாயைத் தருவனவாயுள்ளன. இத்தகைய உயர் பெறுமதிப் பயிர்கள் அதிகளவுக்கு முதலீட்டுச் செறிவும் தொழிற் செறிவும் கொண்டனவாக உள்ளன.

பன்முகப்படுத்தலைப் பின்பற்றுவதில் கொள்கை வகுப்போரும் விவசாயிகளும் விலை ஆதாரங்களிலும் மான்யங்களிலும் தங்கியிருக்கும் ஒரு மனப்போக்கை காட்டியபோதிலும் இக்கருத்துடன் அடிப்படை கொள்கை வரைச் சட்டமோ அல்லது அரசாங்க வரவுசெலவுத்திட்டச் சிக்கனமோ (தீர்வை நடவடிக்கைகளுட்பட அரிசிசாரா பயிருற்பத்தியின் உள்ளார்ந்த ஆபத்துக்களை குறைப்பதற்கான சில நடவடிக்கைகளின் விடயத்தில் தவிர) இசைந்து இருப்பதாக தெரியவில்லை.

சுருங்கக்கூறின், நீர்ப்பாசனத் துறையில் பயிர் பன்முகப்படுத்தலானது, தவிர்க்கப்படமுடியாத தொன்றாகவிருப்பினும், அதை ஊக்குவிப்பதில் அதிகளவு கஷ்டங்களுமுள்ளன. இக்கஷ்டங்களை மேவுவதற்கான தீவிர முயற்சி மேற்கொள்ளப்பட்டாலன்றி நீண்டகால நோக்கில் வெற்றிகரமான பயிர்ப்பன்முகப்படுத்தல் நிகழமாட்டாது. நீர்ப்பாசனத்துறையில் பயிர்ப்பன் முகப்படுத்தலென்பது துறையின் கட்டமைப்பு மாற்றமேயன்றி வேறில்லை. இம்மாற்றமானது உண்மையில் அதிக நேரமெடுக்கும் ஒரு செயற்பாடாகும். இச்செயல்முறை உடனடி வெற்றியளிக்குமென எதிர்பார்க்கமுடியாது. இது காலப்போக்கில் வளர்ச்சியடைவதொன்றாகும்.

**பிரதான நீர்ப்பாசனத் திட்டங்களின் புனர் நிர்மாணம்**

ஏற்கெனவே அறியப்பட்டவாறு, பிரதான நீர்ப்பாசன திட்டங்களின் செயலாற்றுகையானது எதிர்பார்த்ததிலும் பார்க்க குறைவானதாகவுள்ளது. இதற்கான காரணம் இத்திட்டங்களின் கட்டமைப்புகளின் பின் போதியளவு செயற்பாடும் பராமரிப்பும் இல்லாதிருந்தமையாகும். 1950 ஆம் ஆண்டுகள் முதலாக மொத்த நீர்ப்பாசன முதலீடுகளில் செயற்பாட்டு பராமரிப்பு முதலீடுகளின் பங்கு 4 சதவீதமாக இருந்தது. ஆகவே மூலவளங்கள் போதியளவு [illegible] படுத்தப் படாமை, இ[illegible] சினையின் முக்கியமான [illegible] பரிமாணமாகவுள்ளது. [illegible] சன முறைமையின் [illegible] றலில் முக்கிய பேய்ப[illegible] சிறந்தநீர் முகாமை[illegible] ணம் கொண்டுவர[illegible] பதை காட்டும் பெ[illegible] னகயான ஆராய்ச்சி[illegible] கள் இப்போ[illegible]

சிறந்த நீர்முகா[illegible] மேலதிகமாக, [illegible] சீர்கேட்டினை[illegible] தடுப்பதற்கான போதியளவு பராமரிப்பு மட்டுமில்லையென்பதும் தெளிவாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீர்ப்பாசனத் திட்டங்களின் துரிதமான சீர்கேடு, எதிர்பார்த்ததை விட முன்னராகவே அவற்றின் புனருத்தாரன தேவைக்கு இட்டுச் சென்றுள்ளது. 1970 களின் இறுதிக்காலப் பகுதியிலிருந்து பல புனருத்தாரண செயற் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளதுடன் மொத்த நீர்ப்பாசன முதலீட்டில் புனருத்தாரணத்தின் பங்கும் 15-20 சதவீதம் வரை அதிகரித்துள்ளது. செலவுத்தாக்க உத்திகளைப் பரீட்சித்துப்பார்ப்பதிலும் நிறுவன கட்டமைப்புக்கான வழிகளாக புனருத்தாரண செயற்றிட்டங்களைப் பயன்படுத்துவதிலும் இலங்கை ஒரு முன்னோடியாகவுள்ளது.

புதிய கட்டமைப்பு முதலீடுகளிலும் பார்க்க, புனருத்தாரண முதலீடுகள் சிறந்தவையாகக் கருதப்படுகின்ற போதிலும் சில புனருத்தாரண செயற்திட்டங்கள் வெற்றிகரமாக அமையாததுடன், நலன்களுடன் ஒப்பிடுகையில் அதிக செலவுடையனவாயுமிருந்தன. மறுபக்கம், கல்லோயா இடதுகரை புனருத்தாரன முதலாவது பிரதான வெற்றிகர பரீட்சார்த்தமானது. செயற்திட்ட அமுலாக்கலின் போது நிறுவனக் கட்டமைப்பிற்கான கவனமும், செயற்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்ட பின்னர் செயற்பாட்டு, பராமரிப்புக் கவனமும், புனருத்தாரணத்தின் வெற்றிக்கு அத்தியாவசியமென்பதைக் காட்டுகின்றது. தற்போது நீர்ப்பாசனத்திட்ட முகாமைத்துவ செயற்திட்டமும் ஏனையவையும் இக்கற்பிதங்களில் ஆதாரப்படுத்தப்பட்டு, நீர்ப்பாசனத் திட்டங்களின் சிறந்த் கூட்டு முகாமைத்துவத்திற்கென முகவர் நிலையங்களுடன் கூட்டாகச் செயற்படக்கூடிய வலுவான விவசாயிகள் ஒழுக்கமைப்புகளை ஊக்குவிப்பதற்கு முயன்றுவருகின்றன. அடுத்த தசாப்தத்தில் நீர்ப்பாசன விவசாயத்தின் செயலாற்றலை மேம்படுத்துவதற்கு நிலையானசெயற்பாட்டுபராமரிப்புக்கான செலவுப்பயன் புனருத்தாரண முதலீடுகள் அதிக முக்கியத்துவம் பெறும்.

செயற்பாட்டு, பராமரிப்பு முறைக்கான நிதிப் பொறுப்புக்களை அரசாங்கம் ஏற்றுக் கொண்ட நீண்ட காலத்தின் பின்னர், 1970 களின் இறுதிப் பகுதியிலிருந்து நீர்ப்பாசன கட்டணமென்ற வகையில் விவசாயிகளிடமிருந்து மூலவளங்கள் திரட்டப் படுவதற்கான முயற்சிகள் (வெற்றியின்றி) மேற்கொள்ளப்பட்டன. இவ்விதகட்டண சேகரிப்பு இலங்கையின் சமூகக் கலாச்சார சூழ்நிலைக் கேற்றதல்ல எனக்கூறப்பட்டது. எவ்வாறெனினும், விவசாயிகள் செயற்பாட்டு, பராமரிப்பு திட்டத்திற்கு உதவுதொகை வழங்குதல் வேண்டுமென்பதில் இணக்கம் காணப்பட்டு, விவசாயிகளும் இத்தத்துவத்தினை யேற்றுக் கொண்டனர்.

## ஆராய்ச்சியும் விஸ்தரிப்பும்

அரிசியில், குறிப்பாக இன விருத்தி நிகழ்ச்சித் திட்டத்தினைப் பொறுத்தளவில் இலங்கை அதன் கடந்தகால ஆராய்ச்சி. பெறுபேறுகளில் பெருமை கொள்ளலாம். பழைய மேம் படுத்தப்பட்ட இனங்களிலிருந்து பெறப்பட்ட புதிய நெல் விதைகள் 1957 இன் ஆரம்பகாலமளவில் முதன் முதலில் வெளியிடப்பட்டு, அதிகரித்த உருப் பிரயோகத்துடனும், நீர்ப்பாசன அபிவிருத்தியுடனும் இணைவுற்று நாட்டினை அரிசியில் ஓரளவுக்கு தன்னிறைவு காணும்நிலைக்கு கொண்டுவந்தன.

நீர்ப்பாசன முகாமைத்துவம் மீதான ஆராய்ச்சி கடந்த தசாப்தத்தில் அரும்புவிட்டுள்ளது. இத்துறையில் மேலதிகமுன்னேற்றங்களை, (எந்திரவியல், நிறுவன ரீதியான அம்சங்களிரண்டிலும்) குறிப்பாக நிறுவனரீதியான அம்சங்களில் எதிர்பார்க்கப்படலாம். மீண்டும் மீண்டும் கூறப்பட்டவாறு, ஏற்கெனவேயுள்ள நீர்ப்பாசன திட்டங்களின் செயலாற்றலை மேப்படுத்துவதன் மூலம் நீர்ப்பாசன விவசாய உற்பத்தியினை அதிகரித்தல், குறிப்பாக பயிர்ச்செய்கை செறிவினை அதிகரித்தல் அவசியமாகின்றது. நீர்ப்பாசனத்துறை எந்தளவிற்கு இத்தேவையைப் பூர்த்தி செய்யலாமென்பது ஆராய்ச்சிகளில் தங்கியுள்ளதெனலாம். ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கான தேசிய ஆற்றலை மேம்படுத்துவதில் இது தங்கியுள்ளது.

பயனுள்ள விவசாய விஸ்தரிப்பு, ஆராய்ச்சி போன்றே முக்கியமானதாகும். அரிசி விடயத்தில் இது மிகச்சிறந்த பயனையளித்துள்ளது. விவசாயிகளின் பங்குபற்றலுடனான பயிர் பன்முகப்படுத்துதல், சிறந்த நீர் நிர்வாகம் என்பவற்றின் தேவைப்பாடு தீவிர, செறிவான, பயனுள்ள விசேடப் படுத்தப்பட்ட விஸ்தரிப்பு சேவைகளை அவசியப்படுத்தும்.

## நீர் வளங்கள்

நீர்வள அபிவிருத்தி தொடர்பில் அவசிய கவனத்தைக்கோரும் ஒரு குறித்துரைக்கப்பட்ட விடயம், நதிமூல முகாமைத்துவமாகும். நீரோட்டப்பாவனைகளுக்குக் கிடைக்கக்கூடியதாகவுள்ள நீரின் அளவு, காலவாய்ப்பு, தன்மை என்பவற்றில் இது முக்கிய தாக்கத்தினையேற்படுத்தலாம். தற்போது சில நதிமூலங்களின் சீரழிவு, தவறான பயன்பாடுகள் பற்றிய சான்றுகளுள்ளன. நீருக்கான தேவை அதிகரிப்புடன், பொருத்தமான கொள்கைகளை உருவாக்கி, நடைமுறைப்படுத்துதல், மாற்றுத் தீர்வுகளில் ஆராய்ச்சிகளைப் பிரயோகித்து மேற்கொள்ளுதல், கண்டுபிடிப்புகளின் பெறுபேறுகளை அவதானித்து மதிப்பிடுதல் என்பவற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றில் ஒன்றிணைந்த நிலையான முயற்சி மேற்கொள்ளப்படா விடில் நீர்வழங்கல் பெருமளவுக்கு குறைந்து ஒழுங்கீனங்களைக் கொண்டதாக மாற முடியும்.

வீட்டுப்பாவனைக்குப் பயன்படுத்தப்படும் நீரின் அளவு, நீர்ப்பாசன வழங்கல் போன்ற ஏனைய தேவைகளுடன் ஒப்பிடுகையில் சார்புரீதியில் மிகக்குறைவாகவுள்ளது. ஆனால் இந்த வழங்கலை அது தேவைப்படும் இடத்திலும், நேரத்திலும் வழங்குதல் கடினமாகும். தற்போது பல்வேறு தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படும் நீரின் (குடிநீர், கைத்தொழில், நீர்ப்பாசனம், நீர்வலு போன்றவை) நம்பகமான மதிப்பீடுகள் உடனடியாகக் கிடைக்கக்கூடியதாக இல்லை. நீர்வளங்களின் அபிவிருத்தி, பயன்பாடு என்பவற்றிற்கான சிறந்த கொள்கைகளை வகுப்பதற்கு இருந்துவரும் பிரதான தடை ... கிடைக்கப்பெறும் தன்மைபற்றிய மதிப்பீடு, நீர்ப்பயன்பாட்டின் தற்போதைய மாதிரிகள் என்பவை பற்றிய நம்பகமான தரவுகள் கிடைக்கப் பெறாதிருத்தலாகும். நீர்த்துறையின் முன்னுரிமைகளில் ஒன்று நீரின் தற்போது கிடைக்கப் பெறும் தன்மையினதும், பயன்பாட்டினதும் தரவு அடிப்படைகளை சீராக்குவதாகும். தரவு சேகரித்தல், உறுதிப்படுத்தலும் முறைப்படுத்தலும், பாதுகாத்தல், தரவுகளை கம்பியூட்டர் மயமாக்குதல் என்பன மிக முக்கியமானவை என்பதுடன் முக்கிய கவனத்தையும் பெறுதல் வேண்டும்.

நீரை இனிமேலும் ஒரு வரையரையற்ற இலவச பொருளெனக் கொள்ளலாகாது' அதிகளவு நீர்ப்பாவனையுடன் நடைமுறை சாத்தியமானதும், பயன் நாட்டமுடையதுமான தொரு நீர்க்கொள்கையொன்று அவசியமாகின்றது. தற்போது வழிகாட்டல்களை வழங்கவென நீர்க்கொள்கை எவுமில்லையென்பதுடன், நீர்வளங்கள் எவ்விதம் ஆராயப்படல் வேண்டும், முகாமைத்துவப் படுத்தப்படல் வேண்டும், ஒதுக்கீடு செய்யப்படல் வேண்டும். பயன் படுத்தப்படல் வேண்டுமென்பதை யெல்லாம் தீர்மானிக்கும் ஒழுங்கமைப்பு, நிறுவன ரீதியான தத்துவங்களெதுவுமில்லை. இவ்விதம் உருவாக்கப்படும் நீர்க்கொள்கையானது பொதுவில் மொத்த சமூகப் பொருளாதார. சூழல் கொள்கைகளுடனும், குறிப்பாக காணி நீர்ப்பாவனையுடன் தொடர்புடைய துறைக் கொள்கைகளுடனும், இயைபுடையதாக இருத்தல் வேண்டும்.

(17 ம் பக்கத் தொடர்ச்சி)

புடன் வழங்கும் உயர் திறன்கள் கொண்ட முகவர் நிலையமாக இது இருக்கும்.

இரண்டாவதாக, நீர்ப்பாசன தொகுதிகள் மட்டத்தில் சிறியதும், நடுத்தர அளவினதுமான நீர்ப்பாசன தொகுதிகள் முழுவதும் சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட சக்திவாய்ந்த, பொறுப்பான விவசாயிகள் கழகங்களினால் முகாமைப்படுத்தப்படும்.

மூன்றாவது, இம்மாற்றங்களுக்கு ஊக்கமளிக்கும் பொருட்டு உயர் ரக பயிர்கள் பயிரிடப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் (அதிகமாக அரிசிக்கும் உப உணவாக மாற்றுப் பயிர்நடுகையை ஊக்கப்படுத்தவும்) நியாயமான கடனை விவசாயிகள் அதிகமாகப் பெறுவதற்கும் வழி வகுக்க அரசாங்கம் தக்க நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். எதிர்காலத்தில், இலங்கையில் விவசாயத்தை நவீன முறைகளில் அபிவிருத்திசெய்ய தனியார் பிரிவும், விவசாயிகள் கூட்டுத்தாபனங்களும் கூட்டுறவுகளும் பெரும் பங்கினை ஏற்றுக்கொள்வது அவசியமாகும். கைத்தொழில் மற்றும் சேவைப் பிரிவுகளை விஸ்தரித்து பன்முகப்படுத்துவதன் மூலமே எமது நாடு வெற்றிப் பாதையை அடைய முடியும்.

## முடிவுரை

நீர்ப்பாசன முகாமைத்துவத்தின் சமூக தொழில்நுட்ப தன்மையை இப்பொழுது நோக்குவோம். இவ்வாய்வுக்கட்டுரை. 1980 களிலும் 1990 களிலும் காணப்படும் நிறுவன அமைப்பையே, இலங்கை நீர்ப்பாசன விவசாயத்தின் எதிர்கால நவீனமயமாக்குதல் என காண்கிறது. 1980 களின் ஆரம்பத்தில் அதிகமாக அரிசியை உற்பத்தி செய்யும் பொருட்டு நீர்ப்பாசன கட்டமைப்பை உருவாக்குவதிலேயே முதலீடு வழிபடுத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து நிறுவக கொள்கை சீர்திருத்தங்கள் மீது அதிக கவனம் செலுத்தப்பட்டது. எமது நாடு, நீண்டகால அபிவிருத்திக்கான நோக்கங்களை அடைய வேண்டுமானால், பொருளாதாரம் நன்கு வளர்ச்சியடைவதுடன், கைத்தொழில் மற்றும் சேவைத்துறைகளிலும் அதிகமான உழைப்பை ஈடுபடுத்த வேண்டும். மறுபக்கத்தில், விவசாயதுறையும் நவீன முறைகளை கடைப்பிடிக்க வேண்டும். இதனால் விவசாயிகளின் ஊதியமும் அதிகரிக்கும். நீண்டகாலத்திற்கு, இந்நோக்கங்களை யுடைய, தொழில்நுட்பங்கள், புதிய பயிர்முறைகள் அவசியமாகும். இப்புதிய தொழில்நுட்பங்களை சிறப்பாகப் பயன்படுத்த நிறுவகங்களும் கொள்கைகளும் சரியான முறையில் இருக்கவேண்டியது அவசியமாகும். 2000 ஆவது ஆண்டில் நிறுவக கொள்கை சீர்திருத்தங்களை இலங்கை விவசாயிகள் கடைப்பிடிப்பார்களேயானால் இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியில் விவசாயிகள் அதிகமான பங்களிப்புக்களை வழங்குபவர்களாக இருப்பார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் நீர்ப்பாசன திட்டங்களை மக்கள்மயப்படுத்துதல் : சில அவதானிப்பு குறிப்புக்கள்

ஆரிய அபேசிங்க

அபிவிருத்தி பொருளியலாளரான ஆரிய அபேசிங்க இலங்கையின் அரசாங்க துறையில் பரவலான அனுபவம் பெற்றவர். கடந்த இரு தசாப்தகாலமாக அவர் அபிவிருத்தி பிரச்சினைகள் குறித்து எழுதி வருகிறார். பல சர்வதேச அமைப்புக்களில் ஆலோசகராகவும் பணி புரிந்துள்ளார். தற்பொழுது நீர்ப்பாசன, மகாவலி அபிவிருத்தி அமைச்சில் விவசாய திட்டமிடல் பணிப்பாளராக செயலாற்றி வருகிறார்.

பொருள் சார்ந்த மூல வளங்கள் தடங்கலாக இருந்து வந்த காலம் முடிந்துவிட்டது என்று ஜே. எல். சைமன் ''பதிலீட்டு யுகம்'' பற்றி குறிப்பிடுகிறார். குறுங்காலத்தில் மட்டும் இது ஒரு தடங்கலாக இருக்கும் என்கிறார் அவர், தொழில்நுட்ப மாற்றம், கட்டுப்பாடு மற்றும் ஒழுங்குபடுத்தும் முறைமைகளில் முன்னெப்பொழுதும் இருந்திராத அளவுக்கு பெரு மாற்றங்களை எடுத்துவரும் ஒரு யுகமாக அது இருக்கிறது. பொருளாதாரங்களில் காணப்படும் சிறுதுறை உற்பத்தி மற்றும் சேவைத்துறை அலகுகளின் நெகிழ்ந்து கொடுக்கும் தன்மையின் பின்னணியில், இவற்றின் மீது கட்டுப்பாட்டை வைத்திருப்பது மிகச் சிரமமான காரியமாக இருப்பதனை ஒழுங்குபடுத்துபவர்கள் உணர்கிறார்கள். இன்றைய வலுமிக்க நவீன பொருளாதாரத்தின் அடியாதாரமாக தகவல் தொடர்பு முறை அமைந்திருக்கிறது. அரச நிறுவனங்களுக்கு தகவலையும் அறிவினையும் பெறும் வாய்ப்பு உள்ளது. கம்ப்யூட்டர்கள் உலகளாவிய தரவல்களை துரிதமாக வழங்குகின்றன. அதிகாரிகளின் ஒழுங்குபடுத்தும் மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் வரவர சிரமமாகி வருகின்றன.

தனது பிரஜைகளுக்கு புதிய தொழில் நுட்பங்களுக்கான பிரவேசத்தை மறுக்கும் ஒரு நாடு அதற்கான விலையை இரு வழிகளில் செலுத்தியாக வேண்டும். முதலில், இந்நடவடிக்கை மூலம் தொழில் முனைவோரின் புதிய தலைமுறையொன்றை அது இழக்கிறது. அடுத்தது, வெளிநாட்டு கண்டுபிடிப்புக்களில் தொடர்ந்தும் தங்கியிருக்கும் எதிர்காலமொன்றை அது எடுத்து வருகிறது. தொடர்ந்த கட்டுப்பாட்டுக்கான விருப்பிலும் பார்க்க பொருளாதார வெற்றியை அடைவதற்கான விருப்பு மேலோங்கி நிற்குமானால், தனியார்மயமாக்கலுக்கான நிர்ப்பந்தம் மேன்மேலும் அதிகரித்து வரும் ஒரு நிலையையும், அரச தலையீடு குறைந்து வரும் ஒரு நிலையையும் நாம் காண்போம். அரசு, பண உட்பாய்ச்சல்கள் மூலம் பண வெளிப்பாய்ச்சல்களை நிதிப்படுத்துவதற்கான வழிமுறைகளை கண்டறிய வேண்டும். அரசின் குறிப்பிட்ட ஒரு அலகு எதிர்மறை பணப்பாய்ச்சலை உருவாக்கினால் பிறிதொரு அலகு அதனை சீர் செய்யும் மிகையொன்றை உருவாக்க வேண்டும். பணச்செலவு செய்யும் அரச தொழில் முயற்சிகள் கணிசமான அளவில் காணப்பட்டால் அரசாங்கம் முழுவதும் தவிர்க்க முடியாத வகையில் வற்றிப் போய்விடும். இதற்கு பரிகாரமாக வெறுமனே பணத்தாள்களை அச்சிடும் தீர்வு பணவீக்கத்தையும், வேலையில்லாத்திண்டாட்டத்தையும், பொருளாதார சரிவினையுமே எடுத்து வரமுடியும். முனைப்பு மிகுந்த பொருளாதார வளர்ச்சியே இதற்குள்ள சாத்தியமான ஒரே மாற்று வழியாகும். ஆனால், பல சந்தர்ப்பங்களில், பண மானியங்களை கோரி நிற்கும் அரச ஏகபோகங்கள் காணப்படுவதனால் வளர்ச்சி தடைப்படுகிறது.

மூலவளங்களுக்கான உரித்தின் இயல்பு, அந்த மூலவளங்கள் எவ்விதம் பயன்படுத்தப்படுகின்றன என்பதனை நிர்ணயம் செய்வதாக இருக்கிறது. ஒரு சொத்தின் உரித்து தனி நபர்களின் கைகளில் இருக்கும் போது, அதிலிருந்து உச்சமட்ட பயனைப் பெற்றுக் கொள்ளும் வகையில் அவர்கள் அதனைப் பயன்படுத்துவார்கள். அவ்விதம் செய்யாவிடில், அவர்கள் தனிப்பட்ட முறையில் நட்டமடைய வேண்டும். எனவே, உரித்து தெளிவில்லாமல் இருக்கும் போது வாய்ப்புக்களையும், வெகுமதிகளையும் பொறுப்புக்களையும் பிணைக்கும் சங்கிலி அறுந்து விடுகின்றது. உரித்து உரிமைகளை நிலைநாட்டுவதற்கு செலவு செய்ய வேண்டும். குறிப்பிட்ட ஒரு சொத்தின் நலன்கள் தம்மை அல்லது தாம் தெரிவு செய்யும் ஒரு குழுவை வந்தடை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் என்ற உறுதி இருந்தால் மட்டுமே தனிநபர்கள் அந்தச் சொத்தினை பாதுகாப்பதற்கும், பராமரிப்பதற்கும் முன் வருவார்கள். இந்த எளிய உண்மை, தாம் உழுது வந்த நிலங்களுக்கு - உழவனுக்கே நிலம் - தெளிவான உரித்துக்கள் வழங்கப்பட்ட போது அவதானிக்கப்பட்ட உழவர் விவசாயிகளின் நடத்தை மூலம் பல தலைமுறைகளாக அங்கீகாரம் பெற்று வந்திருக்கிறது. நிலச்சொந்தக்காரரின் செல்வத்தைப் பெருக்குவதாக உழைப்பதற்கோ மூலதன முதலீடுகளை மேற்கொள்ளவோ குத்தகைக்காரர்கள் விரும்புவதில்லை.

அறிவுசார் மூலதனம் வருங்காலத்துக்கான ஓர் உத்துவிசையாக இருக்கும் ஓர் உலகில், பொருள்சார் சொத்துக்களுக்கும் அப்பால் நமது சிந்தனை விரிந்து செல்ல வேண்டும். இந்த தர்க்க நியாயத்தை அடிப்படையாக கொண்ட பகுப்பாய்வு சமீப தசாப்தங்களில் பொருளாதாரத்தினால் வழங்கப்பட்ட மிகக் கணிசமான பங்களிப்பினை அளித்துள்ளது. தனியார் துறை அல்லாத தொழில் முயற்சிகள் மூலதனச் செறிவு கொண்டவை என்பதனையும், சொத்துக்களைப் பராமரிக்கும் விஷயத்தில் அவற்றின் செயற்றிறன் மிக மோசமானது என்பதனையும் வரலாறு நிரூபித்துக் காட்டியுள்ளது. அரசு சாரா தொழில் முயற்சிகளில் சொத்துக்கள் உயர்ந்த மதிப்பை பெற்றிருக்கின்றன. உரிமையாளர் அதனைப் பயன்படுத்தி, விருத்தி செய்து தனது முயற்சிகளுக்கூடாக சிறந்த அனுகூலங்களைப் பெற்றுக் கொள்ள முடியும். ஒரு சொத்தினை மாற்றி அதனிடத்தில் புதியதொன்றை வைக்கும் போது தனியார் உரிமையாளரே அதற்கான செலவை பொறுப்பேற்க வேண்டியிருக்கிறது. இது, பொருத்தமான கவனிப்புக்கும், பராமரிப்புக்குமான ஒரு தூண்டுதலாக செயற்படுகிறது.

நீர்ப்பாசனம், இலங்கையில் மரபுரீதியாக அரசுடைமையானதாக அல்லது அரச அனுசரணை பெற்றதாக இருந்து வந்துள்ளது. இன்றும் அவ்வாறே இருக்கிறது. ஆனால், கிடைக்கக் கூடியதாக இருக்கும் பெரும்பாலான சிங்கள நீர் தொடர்பான சட்டங்களின் பிரகாரம் நீர்ப்பாசன தொகுதிகள் சமூகத்துக்கு சொந்தமானதாகவும், விவசாயிகள் கழகங்களினால் நிர்வகிக்கப்பட்டவையாகவும் இருந்துவந்துள்ளன. ஆனால், இன்று நிலைமை மாறிவிட்டது. நீர்ப்பாசனத் திட்டங்களை தனியார் மயமாக்காமல் இருப்பதற்கான காரணங்கள் வருமாறு:

### (1) செல்வத்தின் மீள் பகிர்வு

எளிய வார்த்தைகளில் சொல்வதாயின், ஒருவர் மற்றொருவரின் செல்வத்தை பெருக்க விரும்பினால் அவர் செய்ய வேண்டியதெல்லாம் அந்த நபருக்கு பணம் கொடுப்பதுதான். எனவே, ஒரு குழுவிலிருந்து பிறிதொரு குழுவுக்கு செல்வத்தை இடமாற்றம் செய்வது, நீர்ப்பாசனத்தை தனியார் மயமாக்கல் செய்யாதிருப்பதற்கான காரணமாக அடிக்கடி சுட்டிக் காட்டப்படுகிறது.

### (2) இயற்கை ஏகபோகங்கள்

சம்பந்தப்பட்ட அனுகூலங்கள் தொடர்பாக, நீண்டகால சராசரிச் செலவு வளைகோடு வீழ்ந்து செல்லும் போது இயற்கை ஏகபோகங்கள் காணப்படுகின்றன. பெரும்பாலான இயற்கை ஏகபோகங்கள் வரிசெலுத்துவோரிடமிருந்து பெறப்படும் மானியங்களிலேயே உயிர் வாழ்கின்றன.

### (3) தேசிய கேந்திர காரணங்கள்

நீர் இன்றியமையாத ஒரு இயற்கை மூலவளமாகும். நீர்த் தட்டுப்பாடு உணவு உற்பத்தியை குறைத்து விடுவதன் மூலம் சனத்தொகை வளர்ச்சியிலும் பொருளாதார விஸ்தரிப்பிலும் வரையறைகளை எடுத்து வர முடியும். மனித இனம் பாவிக்கும் நன்னீரில் சுமார் 73% விவசாயத்துக்கே செல்கிறது. நீர்ப்பாசனம்பெறும் நிலப்பரப்பு கடந்த பத்தாண்டுகளில் 7% வீழ்ச்சியடைந்திருப்பதாக உலக கண்காணிப்பு நிறுவனம் மதிப்பிட்டுள்ளது. எனவே, நீர் பெறுமதிமிக்க இயற்கை மூலவளமொன்றாக கருதப்படுகிறது.

### (4) தொழில் முனைப்பு மற்றும் முகாமைத் திறன்களின் குறைபாடு

இலங்கை போன்ற நாடுகள், நவீன பொருளாதார வளர்ச்சியின் ஆரம்ப க்கட்டங்களில் நீர்ப்பாசனத் தொகுதிகள் போன்ற சிக்கலான அமைப்புக்களை இயக்கிச் செல்வதற்கு போதிய தொழில் முனைப்பினையும், முகாமைத் திறன்களையும் (தனியார் துறையில்) கொண்டிருக்கவில்லை. இன்றும் கூட, எந்த ஒரு தனியார் துறை நிறுவனமும் நீர்ப்பாசன தொகுதியொன்றை பொறுப்பேற்று நிர்வகிக்கவும் அபிவிருத்தி செய்யவும் முன்வருவதாக தெரியவில்லை. ஆகவே, நீர்ப்பாசனத் தொகுதிகளின் வடிவமைப்பு, நிர்மாணம், ஆராய்ச்சி, பராமரிப்பு என்பவற்றைப் பொறுப்பேற்பதற்காக பல்வேறு அரச திணைக்களங்களும் நிறுவனங்களும் அமைக்கப்பட வேண்டியிருந்தன, இந்த விஷயத்தில் அரசே தொடர்ந்தும் தொழில் முயற்சியாளர் பங்கினை வகித்து வந்திருக்கிறது. ஆனால், தொழில் முயற்சிகளுக்கு உகந்த சூழல் உருவாக்கப்பட்டால், தொழில் துணிபின்மை என்ற வாதத்துக்கு இடமில்லாது போய்விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(5) பொதுமக்களுக்கான பொருட்கள்

முயற்சிகளுக்குரிய பலாபலன்களைக் பெற முடியுமானால் மட்டுமே பொருட்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்வதற்கான ஊக்குவிப்பு இருக்கும். பொது மக்களுக்கான பொருட்கள் என்பவை தனியார் உற்பத்தியாளர்கள் கட்டணம் அறவிட முடியாத நிலையிலிருக்கும் பொருட்களாகும். ஏனெனில் இவற்றுக்கு அறவிடப்பட வேண்டிய கட்டணங்கள் மிகவும் உயர்ந்தவையாகவே இருக்கும். நீர்ப்பாசனத் திட்டங்களும் வெளிச்ச வீடுகளும் இதற்கான சிறந்த உதாரணங்களாகும். எனவே, நீர்ப்பாசனத் திட்டங்கள் போன்ற பொது மக்களுக்குரிய பொருட்கள், அவை ஸ்தாபிக்கப்பட்ட பின்னர் அனைவருக்கும் கிடைக்கக்கூடிய முறையில் இருக்க வேண்டுமென வாதிக்கப்படுகிறது. இவற்றை ஸ்தாபிப்பதற்கு தனியார் துறைக்கு எந்த ஊக்கவிப்பும் இல்லை. எந்தெந்தப் பொருட்களும், சேவைகளும் இயல்பில் பொது நலனுடன் தொடர்புபட்டவை என்பதை சமூகமே நிர்ணயிக்க வேண்டும். அதன் பின்னர், அவற்றை குறைந்த செலவில் வழங்குவதற்கான வழிவகைகளை அது கண்டறிய முயற்சிக்கலாம்.

பிரிட்டிஷ் அரசாங்கம், அரசுக்குச் சொந்தமான தொழில் முயற்சிகளை விற்பனை செய்யும் கொள்கையை துவக்கி வைத்ததன் பின்னர், ஐரோப்பாவில், வர்த்தக தொழில் முயற்சிகளை தனியார் அல்லாத துறையிலிருந்து மாற்றுவது குறித்து பரவலாக பேசப்பட்டது. துருக்கியில் அரசுக்குச் சொந்தமான 200 கம்பனிகளை தனியார்மயப்படுத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. பெரிய, வளர்ந்து வரும் தனியார் அல்லாத துறை செல்வந்த நாடுகள் மட்டுமே வைத்துச் சமாளிக்கக்கூடிய ஒரு செருகுப் பொருளாகும். வெற்றிகரமான பொருளாதார வளர்ச்சிக்கு, தனியார் அல்லாத துறை சரியான மார்க்கமாக மாட்டாது என்பது மிகத் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

நீர்ப்பாசனத்துறை, தனியார் மயப்படுத்தப்பட அல்லது மக்கள் மயப்படுத்தப்பட வேண்டுமா என்ற விஷயம் இப்பொழுது கலந்துரையாடப்பட்டு வருகிறது. நீர்ப்பாசனத்தொகுதிகளை தனியார்மயமாக்கல் அல்லது மக்கள் மயமாக்கல் சிந்தனை, கொள்கை வகுப்போரின் பலத்த எதிர்ப்பை சந்தித்து வருகிறது. ஒரு மாற்று உபாயமாக விவசாயிகளால் நிர்வகிக்கப்படும் நீர்ப்பாசனத்திட்டங்கள் குறித்த கருத்து முன் வைக்கப்படுகிறது. முடிவுகளை எடுப்பதில் விவசாயிகளின் பங்களிப்பை ஊக்குவிப்பதற்கும் இது வழி கோலும். சில நாடுகளின் உதாரணரங்கள் இங்கு தரப்படுகின்றன. இலங்கைக்கான கருதுகோள் ஒன்றினை வகுத்துக் கொள்வதற்கு இவை துணை புரிய முடியும்.

பொச்சாம்பட் நீர்பாசன திட்டம்

இந்தியாவில் ஆந்திரப் பிரதேசத்தில் அமைந்துள்ள இந்த திட்டம் தனது ஆளுகையின் கீழ் 1,590,000 ஏக்கர் பரப்பளவை வைக் கொண்டிருக்கிறது. இப்பகுதி முன்னர் நீர்ப்பாசனத்துக்காக 2200 குளங்களிலும், 4000 கிணறுகளிலும் தங்கியிருந்தது. முகாமை முடிவுகளை எடுப்பதில் விவசாயிகளை சம்பந்தப்படுத்திக் கொள்வதற்காக தாபன அமைப்பொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. நீர்ப்பாசன வலயங்கள் பிரிக்கப்பட்டு அவ்வலயத்தில் உள்ள விவசாயிகள் ஒரு குழுவாக திரட்டப்பட்டனர். வலயத்துக்கான தலைவர் தனது வலயத்தில் உள்ள விவசாயிகளின் நலன்களை பிரதிநிதித்துவம் செய்வார். இந்த பரீட்சார்த்தம் 1978/79ல் ஆரம்பமாகியது.

பிரிவுகளுக்கான கமிட்டிகள் பின்வரும் கடமைகளை நிறைவு செய்ய வேண்டியிருந்தன:

(அ) சுழல்முறை நிகழ்ச்சித்திட்டம் பின்பற்றப்படுவதனை உறுதிசெய்தல்.

(ஆ) வயல் கால்வாய்களை திருத்துதல்.

(இ) பிரச்சினைகளை அரச அதிகாரிகளிடம் எடுத்துச் செல்லல்.

(ஈ) விவசாயம் மற்றும் நீர்ப்பாவனை என்பன தொடர்பான அறிவை பகிர்ந்து கொள்ளல்.

இந்த கமிட்டிகள் காரணமாக பண்ணை அபிவிருத்தி வேலைகளிலும் நீர்ப் பகிர்விலும் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டது.

பண்ணை நீர் முகாமை திட்டம்

இந்த திட்டம் பாகிஸ்தானிலுள்ள பஞ்சாப்பில் அமைந்துள்ளது. இந்த பிராந்தியத்தில் 54,000 நீர் வழிகள் உள்ளன. இவை 2 கோடியே 27 இலட்சம் ஏக்கர் நிலத்துக்கு நீர்ப்பாசனத்தை வழங்குகின்றன. 1976ல் துவக்கி வைக்கப்பட்ட பண்ணையிலேயே நீர் முகாமை செய்யும் திட்டத்தின் கீழ் 4,000 ஏக்கர் நிலம் விருத்தி செய்யப்பட்டது. இத்திட்டத்தை நிர்வகிப்பதற்கென இயக்குனரகமொன்று உள்ளது. போக்குவரத்தில் இழக்கப்படும் நீர்ப்பாசன நீரின் அளவை முடியுமான வரையில் குறைப்பதே இந்த திட்டத்தின் முதன்மை அக்கறையாகும். விவசாயிகளின் பங்கெடுப்பு, திட்டத்தின் அடிப்படை அம்சமாக

இருந்தது. நிர்மாணத்தில் ஊழியச் செலவைக் குறைப்பதற்கும், நீண்டகால பராமரிப்புக்கும் உகந்த ஒரு முறையாக இந்த பங்கெடுப்பு கருதப்பட்டது.

### மடகஸ்கார்

ஒவ்வொன்றும் சராசரியாக 2960 ஏக்கர்களைக் கொண்ட, மடகஸ்காரின் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் பல வருட புறக்கணிப்புக்குப் பின் இப்பொழுது புனருத்தாரணம் செய்யப்பட்டு வருகின்றன. மத்திய உயர்நிலங்களில் அமைந்துள்ள அம்போஹிபாரி நீர்ப்பாசன தொகுதி, பங்கேற்பு முகாமை மாதிரிக்கான மிகச்சிறந்த முன்மாதிரியாகும். இதே வீச்சினைக் கொண்ட 116 நீர்ப்பாசன அமைப்புக்களில் இந்த முறை அறிமுகப்படுத்தப்பட்டது. குறுகிய கால்வாயொன்றுக்குச் செல்லும் திசை திரும்பும் அணைக்கட்டு ஒன்றின் மூலம் அம்போஹிபாரிக்கு நீர் பாய்ச்சப்படுகிறது. இது 1930 களில் நிர்மாணிக்கப்பட்டது. சுதந்திரத்தையடுத்து 1960ல் இத்திட்டம் அதன் தற்போதைய வடிவத்தைப்பெற்றது. அதாவது, 7,400 ஏக்கர் பெருந்தோட்ட மொன்றாக இருந்த பகுதி 7,000 காணிச் சொந்தக்காரர்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்டது.

இப்பொழுது இந்த திட்டம் 3 பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருப்பதுடன் ஒவ்வொரு பிரிவும் மெய்லி என்று அழைக்கப்படும் 10–15 உபபிரிவுகளைக் கொண்டுள்ளன. ஒவ்வொருமெய்லிக்கும் ஒரு தலைவர் இருக்கிறார். உலர் பருவத்தில் அவசியப்படும் நீர்ப்பகிர்வினை இந்த கமிட்டி நிர்வகிக்கிறது. மேலும், செய் திட்ட நடவடிக்கைகளுக்கான ஊழியத்தையும் இது திரட்டுகிறது. வருடாந்தம் கால்வாய் துப்புரவு செய்யப்படும் சந்தர்ப்பங்களில் விவசாயிகள் தமது ஊழியத்தை வழங்க (அல்லது தனக்குப் பதிலாக ஒருவரை வழங்க) முன்வரவேண்டும். இந்த ஊழியப் பங்கேற்பு நிரூபிக்கப்படாவிட்டால், அரசாங்கத்துக்கு நெல்லைச் சந்தைப்படுத்த முடியாத நிலை உருவாகும்.

### தாய்லாந்து

தாய்லாந்தின் நொனவல் முன்னோடி வேளாண்மை செய் திட்டம் 1970 களில் நிர்மாணிக்கப்பட்டது. நாட்டின் வடகிழக்கில் அமைந்துள்ள இத் திட்டம் 27,000 ஏக்கர் நிலத்துக்கு நீர்ப்பாசனம் வழங்குகிறது. சுழல் முறையில் நீர்வழங்கும் திட்டமொன்றும் அறிமுகப்படுத்தப்பட்டது. நீர் உபயோகிப்பாளர் குழுக்கள் சுழல் முறையில் நீர் பகிர்ந்தளிக்கப்படுவதனையும், பராமரிப்பையும் கண்காணிக்கும். இத்தகைய 169 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன, நீர் உபயோகிப்பாளர் குழுக்களை உருவாக்குவது கூட்டுறவு மேம்பாட்டு திணைக்களத்தின் பொறுப்பாக இருந்தது.

### மலேஷியா

மலேஷியாவின் கெமுபு விவசாய அபிவிருத்தி திட்டம் ஐந்து நீர்ப்பாசன தொகுதிகளை உள்ளடக்கியிருக்கிறது. இதன் ஆட்புலம் 79,000 ஏக்கர்களாகும். வட கிழக்கு மலேஷியாவில் உள்ள கெலன்டன் நதியின்மூலம் இது போஷிக்கப்படுகிறது. விவசாயிகள் மட்டத்தில். நீர்ப்பாசன முகாமை நடவடிக்கைகளை விவசாயிகளே ஒழுங்கு செய்து கொள்வதற்கு வசதியளிக்கும் எந்தவிதமான அமைப்புக்களும் இல்லை. அலகுகளுக்கிடையிலான எல்லைகள் தெளிவில்லாமல் இருப்பதுடன் அடிக்கடி மாறியும் வருகின்றன. நீர்ப்பாசன அலகுகள் இருந்து வருவது குறித்து விவசாயிகள் அறிந்திருக்கவில்லை என்று ஓர் ஆய்வு தெரிவித்தது. தாமும் தமது அயலவர்களும் ஒரே நீர் மூலத்தில் தங்கியிருக்கிறோம் என்பதும் அவர்களுக்கு தெரியவில்லை. இதனால் பொதுவான பணிகள், பிரச்சினைகள், நலன்கள் என்பவற்றை பகிர்ந்து கொள்ளும் ஒரு கூட்டுக்குழுவாக அவர்கள் தம்மை இனங்கண்டு கொள்ள முடியவில்லை.

### இந்தோனேஷியா

சிறு அளவு துறையை அபிவிருத்திசெய்யும் நோக்கில் இந்தோனேஷிய அரசாங்கமும், சர்வதேச அபிவிருத்திக்கான ஐ. அ. முகவரகமும் இணைந்து 1974ல உயர் செயற்றிறன் கொண்ட செடொர்ஹானா நீர்ப்பாசன திட்டத்தை துவக்கிவைத்தன. நிலைத்து நிற்கக்கூடிய நீர் உபயோகிப்பாளர் சங்கங்களை கட்டியெழுப்புவதே இதன் மூல நோக்கமாக இருந்தது.

### பிலிப்பைன்ஸ்

தேசிய நீர்ப்பாசன நிர்வாகம் பல தசாப்த காலமாக, நீர்ப்பாசன தொகுதிகளில் விவசாயிகளின் முகாமைப் பங்களிப்பினை அதிகரிப்பதற்கு முயன்று வந்திருக்கிறது. குறிப்பாக, விவசாயிகளிடமிருந்து திரட்டப்படும் நீர்ப்பாசன கட்டணங்கள் மூலம் அமைப்பு மற்றும் முறைமைகளுக்கான செலவுகள் நிதிப்படுத்தப்பட வேண்டும் என்று பிலிப்பைன்ஸ் அரசாங்கம் தீர்மானித்ததையடுத்து, 1974 தொடக்கம் இது இடம் பெற்றுவந்தது.

மானியங்களில் அதிகளவுக்கு தங்கியிருக்கும் நிலையை மாற்றியமைக்கும் நோக்கில் தேசிய நீர்ப்பாசன நிர்வாகம் 1976ல் சமூக நீர்ப்பாசன முறைகளை பரீட்சித்துப் பார்க்கத் தொடங்கியது. விவசாயிகளை தூண்டுவதற்கென சமூக அமைப்பாளர்கள் அறிமுகப்படுத்தப்பட்டனர். இந்த முயற்சியின் வெற்றி இந்த மாதிரி பாரிய நீர்ப்பாசனத் தொகுதிகளிலும் அறிமுகப்படுத்தப்படுவதற்கு ஊக்கமளிப்பதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. பூஹி-லாலோ செய்திட்டம் லூஸன் தீவின் தென் பாகத்தில் அமைந்திருக்கிறது. இந்த நீர்ப்பாசன தொகுதியின் பரப்பளவு 8100 ஏக்கர்களாகும். விவசாயிகளை சமூக முறையில் ஒழுங்கமைக்கும் அனுபவத்தை பாரிய தேசிய நீர்ப்பாசனத் தொகுதிகளுக்கும் அறிமுகப் படுத்தும் முதல் முயற்சி 1980ல் மேற்கொள்ளப்பட்டது.

பாகிஸ்தானில் மொத்த நீர்ப்பாசன வழங்கலில் 30% தனியார் குழாய் கிணறுகளிலிருந்தே கிடைக்கிறது. இந்த கிணறுகளில் மூன்றிலிரண்டு பகுதி டீசல் என்ஜின்களைக் கொண்டவை; மூன்றிலொரு பகுதி மின்சாரம் மூலம் இயக்கப்படுகின்றன. எனவே, பாகிஸ்தானின் வேளாண்மை உற்பத்தி அமைப்பில் நிலத்தடி நீர் முக்கிய பங்கினை வகிக்கிறது. பாகிஸ்தான் 1970 தொடக்கம் தனியார் குழாய் கிணறு அபிவிருத்திக்கு முக்கியத்துவம் கொடுக்கும் உத்தியோக பூர்வ கொள்கையொன்றை பின்பற்றி வந்திருக்கிறது. இக்கொள்கையின் கீழ், பொதுத்துறைக்கு சொந்தமான 213 கிணறுகள் 1990ல் விவசாயிகளுக்கு மாற்றப்பட்டு விடும். சாங்கா தோர்கா பகுதியில் 2100 தனியார் கிணறுகளை ஊக்குவிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

**இலங்கை**

இலங்கையில், நீர்ப்பாசன திணைக்களம், கமத்தொழில் சேவைகள் திணைக்களம், மகாவலி அதிகாரசபை, நீர் மூலவளங்கள் சபை, தேசிய நீர்வழங்கல், வடிகாலமைப்பு சபை என்பன விவசாய, கைத்தொழில் மற்றும் நுகர்வு நீருக்கு பொறுப்பாக இருக்கின்றன. சிறிய நீர்ப்பாசன அமைப்புக்களை சிறு குளங்களைப் பொறுத்தவரையில், நீர்ப்பாசன முகாமையில் விவசாயிகளின் பங்கெடுப்பு ஊக்குவிக்கப்பட வேண்டுமென உத்தேசிக்கப்பட்டுள்ளது. அமைப்புக்களையும், கால்வாய்களையும் பராமரிப்பதற்கும், குளங்களில் பரந்துள்ள சல்வீனியாவை சுத்தப்படுத்துவதற்கும், நீரை சமமாக பகிர்ந்தளிப்பதற்கும் 'வெவ் சபாக்கள்' என்ற குள சபைகள் பொறுப்பாக இருக்கும். இந்த சபைகளுக்கான தொழில் நுட்ப உதவி மட்டும் கமத்தொழில் சேவைகள் திணைக்களத்தால் வழங்கப்படும். பாகிஸ்தானில் காணப்படுவதைப் போன்ற தனியாருக்கு சொந்தமான குழாய் கிணறுகளை இங்கு உலர் வலயத்தில் அமைக்க முடியும். கிணறுகளை கண்டறிவதில் நீர்மூலவளங்கள் சபை உதவியளிக்கலாம். பாரிய நீர்ப்பாசன திட்டங்களைப் பொறுத்தவரையில் வேறுபட்ட உத்தி அவசியமாகும்.

**விவசாயிகள் அமைப்புக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய முகாமைப் பொறுப்புக்கள்**

1. தொழில்நுட்ப ஆளணியினருடனான திட்டமிடல் பணி.
2. கட்டமைப்புக்களின் அமைவிடம்.
3. நிர்மாணத்தில் பங்கெடுப்பு
4. பொது வசதியமைப்புக்களின் பராமரிப்பு.
5. நீர் வினியோகம்.
6. வடிவமைப்பு, நிர்மாணம் என்பவற்றில் நீர்ப்பாசன பொறியியலாளர்களுடன் பங்கெடுப்பு.

இந்த வகையில், விவசாயிகளின் பங்கெடுப்பினைப் பெறுவதன் மூலம் பேச்சு வார்த்தைகளில் அவர்களுக்கு அனுபவம் பெற வாய்ப்புக்கிட்டுகிறது. அத்துடன், இத்திட்டங்களை, ஒரு விவசாயிகள் சமூகம் என்றமுறையில் பொறுப்புடன் அவர்கள் கவனிக்கக் கூடியதாகவும் இருக்கும். விவசாயிகள் அமைப்புக்களின் சட்டபூர்வ அந்தஸ்து ஏற்றுக்கொள்ளப்படும் சந்தாப்பத்தில், தவறு செய்யும் உறுப்பினர்கள் மீது தடைகள் விதித்தல், பாக்கிகளை வசூலித்தல் என்பன எளிதாகிவிடும்.

**முடிவுரை**

நீர்ப்பாசனத்தில், இலங்கையில் பங்கெடுப்பு முகாமையினை கல்லோயா போன்றவற்றின் அனுபவங்களில் காணமுடிகிறது. இங்கு செய்திட்டத்துக்குள் விவசாயிகள் பங்கெடுப்பு கட்டியெழுப்பப்படுகிறது. மடகாஸ்கார், பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளின் அனுபவங்களும் எமக்கு படிப்பினைகளைத் தர முடியும். நீர்ப்பாசன முகாமையை தனியார் மயப்படுத்தல் சாத்தியமில்லை ஏனெனில் அது இங்கு செயற்பட முடியாது. இவ்விஷயம் தொடர்பாக இன்னும் பல முரண்பாடுகள் தீர்க்கப்பட வேண்டியுள்ளன.

- நீர்ப்பாசன முகாமையைப் பொறுப்பேற்கும் ஆற்றல் விவசாயிகளுக்கு இருக்கிறதா?
- அவ்விதம் செய்யக்கூடிய சட்ட ஸ்தாபனம் எது?
- அவற்றின் பணிகள், அதிகாரங்கள் எவை?
- அதிகாரிகளுடனான உறவு எப்படி அமைய வேண்டும்?
- ஏனைய விவசாயிகள் அமைப்புக்களுடனும், உத்தியோக பூர்வ முகவரகங்களுடனும் எத்தகைய பணிகள், தொடர்புகள் இருக்கவேண்டும்?

இந்த விஷயம் தொடர்பாக இலங்கையிலும் வெளிநாடுகளிலும் பெறப்பட்டுள்ள அனுபவங்கள் இன்னமும் போதியளவில் ஆராய்ச்சிக்குட் படுத்தப்படவில்லை. இது தொடர்பான தகவல்களை விரிவாக பதிவு செய்ய வேண்டிய அவசரதேவை உள்ளது. நாங்கள் வெறுமனே வெளிநாட்டு மாதிரிகளை பிரதி பண்ண முடியாது. எமது அரசியல், சமூக, பொருளாதார சூழ்நிலைக்கு உசிதமான மாதிரிகளை நாங்கள் உருவாக்கிக் கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றுச்சூழல், நிலம் மற்றும் நீர்

டப். எஸ். விக்கிரமாரச்சி

(ஆணையாளர், காணி ஆணையாளர் திணைக்களம்)

பல எழுத்தாக்கங்களில் 'நிலம்' என்ற பதத்துக்கு பொருள் விளக்கம் தரப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், நிலம் என்பது, பூமியுடன் இணைக்கப்பட்ட பொருட்களையும் (அல்லது) பூமியுடன் இணைக்கப்பட்டிருக்கும் ஏதேனுமொன்றுக்கு நிரந்தரமாக பொருத்தப்பட்டிருக்கும் பொருட்களையும் உள்ளடக்கியதாக இருக்கிறது. மரங்கள், மண், நீர் ஆகிய இயற்கைச் சொத்துக்களும், மற்றும் கட்டடங்கள் போன்ற மனிதனால் ஆக்கப்பட்ட அமைப்புக்களும் நிலத்தின் ஒரு பாகமாகும். நீரானது, வெளிப்பரப்பு நீரையும், உப வெளிப்பரப்பு நீரையும் தரைக்கீழ் நீரையும் கொண்டதாகும். மரங்களானவை, இயற்கையான காடுகள் மற்றும் சமுதாயத்தினால் ஆக்கப்பட்ட தோட்டக்காடுகள் என்பவற்றைக் கொண்டதாகும். எனினும், சுற்றுச்சூழல் என்று நாம் குறிப்பிடும்போது, இயற்கையினால் வழங்கப்பட்டுள்ள வளங்களையே கருதுகின்றோம். இது பௌதிக வளங்களை மட்டுமன்றி உயிரியல் வளங்களையும் கொண்டதாக இருக்கிறது.

நிலத்தின் மீதுதான் இயற்கையோடு அல்லது சுற்றாடலோடு மனிதன் எதிரெதிராக செயற்பட்டு வருகிறான். மனிதனுடைய எந்தச்செயலும் சுற்றாடலில் மாற்றங்களை ஏற்படுத்துகிறது. துரித கைத்தொழில் அபிவிருத்தியைத் தொடர்ந்து, காற்று, நீர் என்பன மாசாக்கப்பட்ட அனுபவத்தின் அடிப்படையிலேயே முதலாவது மண்டல நாடுகள் சுற்றுச்சூழல்பற்றி அதிகமாகச் சிந்திக்கத்தொடங்கின. எனவே இவ்விடயம்பற்றிய அனைத்து ஆய்வுகளும் சுற்றுச்சூழலின் தரத்தைப் பாதுகாப்பதனையே வலியுறுத்திவருகின்றன. எவ்வாறிருப்பினும், மூன்றாவது மண்டல நாடுகளைப் பொறுத்தவரையில் சுற்றுச்சூழல் பாதுகாப்பினைப் பார்க்கிலும், இப்பொழுது உள்ளவாறு அதனை பராமரித்துக் கொள்வதே முக்கிய பிரச்சினையாக உள்ளது.

அனைத்து மூன்றாவது மண்டல நாடுகளும் - எமது இலங்கை உட்பட - முக்கியமாக விவசாய நாடுகளாக இருக்கின்றன. இவை உள்ளூர் தேவைகளுக்கும், ஏற்றுமதிச் சந்தைகளுக்குமென முதல் நிலை விவசாயப் பண்டங்களை உற்பத்திசெய்யும் நாடுகளாகவே இருக்கின்றன. பயிர்களின் உற்பத்திக்கு வசதிசெய்வதால், நிலமும் நீருமே இந்நாடுகளின் முக்கிய இயற்கை வளங்களாய் அமைந்திருக்கின்றன. கைத்தொழில் நடவடிக்கையில் போன்றே பயிர் உற்பத்தியுடன் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளும் சுற்றாடலில் பெரும் மாற்றங்களைச் செய்கின்றன. நிலத்தை துப்புரவாக்கல், நீர்த்தேக்கங்களைக் கட்டுதல் ஆகியன ஆற்றின் நீரேந்து அமைப்பை மாற்றுகின்றன. புதிய பயிர்களை அறிமுகப்படுத்தல், சுற்றாடலின் இயற்கை நிலையை மாற்றியமைக்கின்றது. எந்த அபிவிருத்தி முயற்சிகளும் நல்ல நோக்கங்களையே கொண்டுள்ளன, எனினும், இத்தகைய முயற்சிகள் எமக்கு அனுகூலமாக இல்லாத பல நிலைமைகளைத் தோற்றுவிக்க முடியும்.

எனவே, ஏற்படக்கூடிய சுற்றாடல் மாற்றங்களைக் கண்டுபிடித்தல் (அல்லது முன்னராகவே மதிப்பிடுவது) மிகவும் அவசியமாகிறது. அத்துடன், முடியுமானவரை அத்தகைய நன்மை பயக்காத சுற்றாடல் தீங்குகளை வெகுவிரைவில் அகற்றக்கூடிய முறையில் நாம் செயற்படவேண்டும்,

நிலம், நீர் சம்பந்தப்பட்ட அபிவிருத்திச் செய்திட்டங்களுடன் தொடர்புபட்ட பெருந்தொகையான சுற்றாடல் மாற்றங்களை அல்லது தாக்கங்களை இனங்காண முடியும். இவற்றில் [illegible] ஆன தாக்கங்கள், ஒன்றி[illegible] ஒன்று பிரிக்கப்பட முடியாதவாறு பின்னிப்பிணைந்தவையாக உள்ளன. இவற்றை நாம் விளங்கிக்கொள்ள வேண்டுமென்றால், அவற்றின் பரஸ்பர இணைப்பு நிலைகளை கவனத்தில் கொண்டு ஒவ்வொன்றையும் தனித்தனியாக ஆராயவேண்டும். சுவாத்தியம் மற்றும் பௌதிக அம்சங்களின் அடிப்படையில் இடத்திற்கு இடம், செய்திட்டத்திற்கு செய்திட்டம் இவற்றின் முக்கியத்துவம் மாற்றமடைகின்றது.

மூன்றாவது மண்டல நாடுகளின் எழுத்தாக்கங்கள் பலவற்றில், அனேகமாக மண் அரித்தல், மண் வளம் குன்றல் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கே முக்கிய இடம் அளிக்கப்பட்டிருக்கிறது. அபிவிருத்திச் செய்திட்டங்களில் மண் அரித்தல், மண் வளம் குன்றல் என்பன மோசமான சூழல் தாக்கங்களை எடுத்து வந்துள்ளன. விசேடமாக, மழை வீழ்ச்சி அதிகமாக உள்ள உஷ்ண வலயப் பிரதேசங்களில் மண் அரிப்பு அதிகமாகக் காணப்படுகின்றது. நிலம் எந்தவொரு தாவர வகையினாலும் மூடப்படாமலிருப்பின், சுட்டெரிக்கும் வெய்யில் அடிக்கும்காலத்தில் நிலம் வறண்டு விடுகின்றது. உஷ்ணவலய நாடுகளில் செங்

குத்தான சரிவுகள் பொதுவாக காணப்படுகின்றன. இலங்கையில் ஆண்டுதோறும் இரண்டு கோடி மெட்றிக் தொன் நிலம் மண் அரிப்பினால் பாதிக்கப்படுவதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. மேலும், நீர்வழிகள் ஏற்பட்டால் இப்பாதிப்பு இன்னும் அதிகமாகும். உஷ்ணவலயப் பிரதேசங்களில் பொதுவாக மண் வளம் குறைந்திருப்பதுடன் கிடைக்கக்கூடிய போஷணைப் பொருட்கள் மேற்பரப்பில் மென்படலமொன்றில் திரண்டிருக்கின்றன. எனவே, மண் அரிப்பு, மண்ணின் வளத்தை அப்படியே ஒழித்துவிடக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. மலைச் சரிவுகளில் ஏற்படும் மண் அரிப்புக்கள் ஆறுகள், குளங்கள், பயிரிடப்படும் நிலங்களில் (வண்டல் நிலங்கள்) படிவுகள் சேரும் பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றன. இந்தியா, நேபாளம் ஆகிய நாடுகளிலுள்ள தாரல் ஆறுகளின் படுக்கை மட்டங்கள் ஏறக்குறைய ஆறு அங்குலங்கள் உயர்ந்துள்ளதாகவும் இதன் விளைவாக வடிநிலப் பகுதிகளில் வெள்ள மட்டம் முன்னொருபோதுமில்லாக அளவுக்கு உயர்ந்துள்ளதாகவும் கூறப்படுகின்றது. வெள்ளப் பெருக்கினால் பயிர்களும் பொருட்களும் மாத்திரம் அழிந்து போவது மட்டுமல்லாது மனிதர்களும் இறக்க நேரிடுகின்றது. நீர்த்தேக்கங்களில் வண்டல் படிவதனால் அவற்றின் வாழ்வெல்லை குறைவடைகிறது. இதற்கு பாகிஸ்தானிலுள்ள மங்களா நீர்த்தேக்கமும், ரபலா அணைக்கட்டும் உதாரணங்களாகத் திகழ்கின்றன. மேலும், நீர்த்தேக்கங்களிலும் ஏனைய நீர் நிலைகளிலும் காணப்படும் மேலதிகமான போஷணைப் பொருட்களினால் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இதன் விளைவாக நீரில் வாழும் ஜீவிகளுக்கும் மீன் வளத்துக்கும் சேதமேற்படுகின்றது. அதிர்ஷ்டவசமாக, இவை இலங்கையில் பாரதூரமான விளைவுகளை இன்னும் ஏற்படுத்தவில்லை. எனினும், இத்தகைய சூழ்நிலை ஏற்படமாட்டாது என்று நாம் கூறமுடியாது. பல இடங்களில் ஆறுகளில் காணப்படும் போஷணைப் பொருள் மட்டம் அபாயகரமான கட்டங்களை எட்டியிருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது.

நில நீர் அபிவிருத்திச் செய் திட்டங்கள், ஆற்றோட்ட மாதிரியில் மாற்றங்களைக் கொண்டுவரும் என பொதுவாக எதிர்பார்க்கப்படுகின்றன. நீர்த்தேக்கம் ஒன்றை ஆற்றுக்செதிராக அமைக்கும்போது ஆற்றுவழியில் நீர்வழங்கல் குறைகிறது. ஒரு பக்கத்தில், இக்குறைவு மழை நேரத்தில் ஏற்படலாம். இதனால் வெள்ள அபாயம் நீங்குகிறது. அதே சமயம், பயிர்களுக்காக சேமித்து வைக்கப்படும் நீரின் அளவும் குறையக் கூடும். தண்ணீர் குறைக்கப்படுதல் விவசாய வாழ்க்கை முறைகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தும். கோடை காலத்தில் நீர் குறைப்பினால் மக்களுக்குப் பல கஷ்டங்கள், இன்னல்கள் ஏற்படலாம். மேலும் நீர்வழிப் போக்குவரத்து காணப்படும் இடங்களில் குறைந்தளவு நீர், தடங்கல்களை ஏற்படுத்தும். வெள்ளப்பெருக்கு, பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தினாலும், இயற்கை தந்த வளங்களில் இதுவும் ஒன்றாயிருக்கிறது. வெள்ளப் பெருக்கினால் ஏற்படும் வண்டல் படிவுகள் ஆற்றுப் படுக்கையிலுள்ள போஷணைப் பொருட்களின் தரத்தை உயர்த்துகின்றன. ஆற்றுப் படுக்கைகளில் காணப்படும் மண்ணின் தன்மையும் சத்துள்ளதாயிருப்பதை காணக் கூடியதாயிருக்கிறது. எனவே, வெள்ளப் பெருக்கின் சுழல் முறையில் ஏற்படும் எந்தவொரு மாற்றமும் உற்பத்தி முறையில் தீய விளைவுகளைக் கொண்டுவரக் கூடும்.

புதிய குடியேற்றங்களுடனும், புதுப்புது இடங்களை வேளாண்மைக்காக அபிவிருத்தி செய்வதிலும் நில நீர் அபிவிருத்திச் செய் திட்டங்கள் சம்பந்தப்பட்டுள்ளன. ஆற்றுவழியில் மேற்கொள்ளப்படும் இந்த அபிவிருத்தி ஆற்று நீரின் தரத்தையும் பாதிக்கின்றது. பயிர்ச் செய்கைக்காகப் பயன்படுத்தப்படும் உரப்பொருட்கள் கசிவு காரணமாக ஆற்று நீருடன் கலந்து கொள்கின்றன. குடியேற்றத் திட்டங்களினால் வெளியேற்றப்படும் கழிவுப் பொருட்கள் நீரை அசுத்தப்படுத்துகின்றன. குடிநீரின் தரக் குறைவினால் பல்வேறு நோய்கள் பரவுகின்றன.

ஆற்று நீரோட்டத்தில் ஏற்படும் மாற்றங்கள் நீர் வாழ் உயிரினங்கள் மீது பிரதிகூலமான தாக்கங்களைக் கொண்டுவரக் கூடும். உஷ்ணவலய நாடுகளில் வாழும் கோடிக்கணக்கான வறிய மக்களின் ஒரே ஒரு உயர் விலங்குப்புரதமாக மீன் கிடைக்கின்றது. இதற்கு இலங்கையும் விதிவிலக்கானது அல்ல. உயர்ந்த தர மீனுக்கும், தரமான நீர் போஷணைப் பொருட்களுக்கும் நெருக்கமான சம்பந்தம் உண்டு. டி. டி. ரி. மற்றும் ரசாயன கழிவுகளின் வெளியேற்றம் நீரில் வாழும் ஜீவ ராசிகளுக்குத் தீங்கு விளைவிக்கின்றது. ஆற்றோட்டங்களில் ஏற்படும் மாற்றங்கள், வாவிகள், ஏரிகள், முகத்துவாரங்கள், சதுப்பு நிலங்கள், கழிமுகங்கள் போன்ற நீர்வாழ் ஜீவிகளின் வாழ்விடங்களை பாதிக்கின்றன. இந்த இடங்கள் மழைக் காடுகளுக்கு அடுத்தபடியாக, பெருமளவுக்கு விளைதிறன் கொண்ட உயிரினச் சூழல் தொகுதியொன்றாக இருந்து வருகின்றன. இவை அனேகம் உயிரினங்களுக்கு உறைவிடமாக அமைந்துள்ளன. நிரந்தரமாக இருக்கும் ஜீவிகளுக்கு மாத்திரமன்றி தற்காலிகமாக இந்த இடங்களைப் பயன்படுத்திக் கொள்ளும் பறவை. விலங்கினங்களுக்கு புகலிடமளிக்கின்றன. வர்த்தகத்திற்குப் பயன்படுத்தப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறால் போன்றவை இவற்றின் மீது தங்கியுள்ளன. ஆற்றோட்டத்தில் ஏற்படும் மாற்றங்கள், இந்த அமைப்புக்கு கிடைக்கும் போஷணைப் பொருட்களை குறைப்பது மட்டுமல்லாது நீர் வாழ் ஜீவிகளுக்கு அபாயத்தையும் எடுத்துவருகின்றன.

உஷ்ணவலய நாடுகளில் நிலம், நீர் அபிவிருத்தித் திட்டங்களில் மிகவும் முக்கியமானதும், அடிக்கடி நிகழ்வதும் பரவலாக பேசப்படுவதுமான விடயம் காடுகள் அழிக்கப்படுவதாகும். உலகம் முழுவதிலுமே இச்செய் திட்டங்கள் காடுகளுக்கு அழிவைக்கொண்டு வருகின்றன எனலாம். ஐ. நா. அபிவிருத்திட்ட மதிப்பீட்டின்படி ஏறக்குறைய ஒரு கோடி பத்து இலட்சம் ஹெக்டெயார் காட்டுநிலம் வருடாந்தம் இந்நாடுகளில் பயிர்ச் செய்கைக்காக துப்புரவாக்கப்படுகின்றன. ஆசிய, பசுபிக் பிரதேசங்களில் சுமார் 60 வீதம் பசுமைக் காடுகள் ஏற்கனவே சுத்திகரிக்பட்டு விட்டன.

காட்டுப் போர்வையை அகற்றுவது நீரியல் சுழல் முறையையும் பாதிக்கிறது. ஹோட்டன் சமவெளியில் நடாத்தப்பட்ட பரீட்சார்த்தமொன்றின் போது படிவு வீழ்ச்சி, திறந்த வெளிகளிலும் பார்க்க மரத்தடிகளில் அதிகளவில் இருப்பது கண்டறியப்பட்டது. உஷ்ணவலய நாடுகளில் பருவங்களுக் கேற்பவே நீர்கிடைக்கக்கூடியதாக இருப்பதால் இம் மாற்றங்கள் கிராமப்புற மக்களுக்கு கஷ்டங்களை எடுத்து வர முடியும். உஷ்ணவலய மழைக் காடுகள் உலகின் மிகவளமார்ந்த உயிரினச் சூழல் தொகுதியாகும். இங்கே 25,000 க்கும் அதிகமான செழித்து வளரும் தாவரங்கள் உள்ளன. உஷ்ணவலய காடுகளில் காணப்படும் தாவரங்களினதும், ஜீவராசிகளினதும் பன்முகப்பட்டதன்மை, உயிரினச் சூழல் நிலைபேற்றுக்கான இயற்கையின் அத்தியாவசிய கூறுகளில் ஒன்றாக இருக்கிறது. இவற்றுட் சில வர்த்தகப் பொருட்களாகவும், மிகவும் பெறுமதியானவையாகவும் இருக்கின்றன. சில மிகவும் அரிதானவையாகவும் இருக்கின்றன. சில ஒன்றின் மீது ஒன்று சார்ந்தும் இருக்கின்றன. சில இனங்களின் மறைவு பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தவும் கூடும். மனிதனும் மற்றும் ஜீவராசிகளுடன் சேர்ந்து சுற்றாடலைப் பயன்படுத்துவதனால் சில இனங்களின் மறைவு மனிதனையும் தாக்கக்கூடும். இந்த பன்முகப்பட்ட தன்மை பெருவாரியான பொருளாதார நடவடிக்கைகளுக்கான வாய்ப்புக்களை அளிக்கிறது. இவை மரத்தையும் விறகையும் தருகின்றன. பொருளாதார பெறுமதியுள்ள பொருட்களுக்கும் இவற்றை பயன்படுத்த முடிகிறது. இவை அவசியமான எண்ணெய் வகைகள், திரவகங்கள், மருந்துகள் போன்றவற்றை தம்மகத்தே கொண்டுள்ளன. சிலவற்றின் ஆற்றல்கள் இன்னமும் தெரியாமலிருக்கக்கூடும். பல இனங்கள் மிகவும் துரிதமாக வளர்ச்சியடைகின்றன. மூன்றாவது மண்டல நாடுகளில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பொருளாதார நடவடிக்கைகளில் இவற்றைப் பயன்படுத்திக கொள்ளமுடியும்.

காடுகள் மரத்தையும் வேறு பொருளாதார பெறுமதிமிக்க பொருட்களையும் வழங்குவதோடு உஷ்ணவலய மண்ணின் வளத்தினையும் பேணி வருகின்றன. உஷ்ணவலய காடுகள் உலகின் மிக பெறுமதிமிக்க உயிரினச் சூழல் தொகுப்பொன்றாக உள்ளன. இந்த சூழல் தொகுப்பின் 80 சதவீத போஷணைப் பொருட்கள் மரங்களில் பொதிந்துள்ளன. போஷணைப் பொருட்களை மீள உருவாக்கும் பொறிமுறையையும் இவைகொண்டுள்ளன. எனவே, இத்தகைய காடுகளை துப்புரவு செய்யும் போது அதன் சக்திவாய்ந்த சத்துப் பொருட்களையும் நாம் இழக்கின்றோம். உலக சுற்றுச் சூழலைப் பொறுத்தவரையில் காடுகள் மாபெரும் சுத்திகரிப்பு மையங்களாக உள்ளன. கார்பன்டையொக்ஸைட், கார்பன் மொனொக்ஸைட் போன்ற வளி மண்டலம் சார்ந்த மாசாக்கல் பொருட்களை உறிஞ்சிக்கொள்ளக் கூடிய சூழலின் ஆற்றல் காட்டுப் போர்வையிலேயே தங்கியிருக்கிறது. நில, நீர் அபிவிருத்திச் செய்திட்டங்கள் எப்போதும், காட்டு விலங்குகளுடன் இருப்பிடம் தொடர்பாக போட்டி போடுகின்றன. இதன் காரணமாக, பாரிய அளவிலான வன விலங்கு வாழிடங்கள் விவசாயத்தின் பொருட்டு சுத்திகரிக்கப்பட்டுள்ளன. எனவே முன்னர் விவரிக்கப்பட்ட சீவராசிகளின் பன்முகப்பட்ட தன்மையை பேணுவதற்கு வனவிலங்குகளை பாதுகாப்பது அவசியமாகும். இவற்றில் சில மிருகங்களை நாம் வீட்டு மிருகங்களாக்கவும் பழக்க வேண்டிவரும்; அல்லது வீட்டு விலங்குகளின் வருங்கால இனப் பெருக்கத்துக்காக இவற்றினைப் பாதுகாக்க வேண்டியும் இருக்கும். மேலும், சுற்றாடல் பாதுகாப்புக்கும் சில இனங்கள் உதவியாயிருக்கின்றன. மேலும் (கிருமிகள் உட்பட) மிருகங்கள் பற்றி ஆராய்ச்சி செய்வதன் மூலம், உயிரியல் கட்டுப்பாடுகளையும் நாம் அபிவிருத்தி செய்யக்கூடியதாயிருக்கும். வன சீவராசிகளின் இயற்கையான எதிர்ப்பு ஆற்றல் பற்றிய ஆராய்ச்சிகள், எதிர்கால இனப்பெருக்க நிகழ்ச்சித்திட்டங்களுக்கான செல்நெறிகளை வழங்குகின்றன.

குறிப்பாக, மூன்றாவது மண்டல நாடுகளில் வனவிலங்குகளின் அழகியல் அம்சத்தையும் விசேடமாக நாம் குறைவாக மதிப்பிடமுடியாது. இந்நாடுகளில் அமைந்துள்ள இயற்கை பூங்காக்களும் வன விலங்கு சரணாலயங்களும் பெருமளவு வெளிநாட்டுச் செலாவணி

யை பெற்றுத்தருகின்றன. சுற்றுலாத்துறைக்கு அதிகளவில் முன்னுரிமை வழங்கப்பட்டிருக்கும் நாடுகளில் சுற்றுலாப் பயணிகளை கவர்ந்திழுப்பதில் வன விலங்குகள் முக்கிய பங்கினை வகிக்கின்றன.

நில, நீர் அபிவிருத்திச் செய்திட்டங்கள் பொதுவாக ஆற்றுப் பள்ளத்தாக்கொன்றின் நீர் ஆளுகையை மாற்றியமைக்கின்றன. புதிய நிலங்களுக்கு வழங்கப்படும் நீர்ப்பாசன வசதிகள், பயிர்ச் செய்கையின் கீழ் புதிய நிலங்களைக் கொண்டுவருவதோடு, ஏற்கனவே உள்ள பயிர்ச்செய்கை நிலங்களையும் உற்பத்தி குன்றச் செய்துவிடுகின்றன. உவர்த்தன்மை, நீர்தேங்கி நிற்றல், வெள்ளப்பெருக்கு ஆகியனவற்றுடன் இப்பிரச்சினை சம்பந்தப்பட்டுள்ளது. அநேகமாக அனைத்து நீர்த் தேக்கங்களும் பரந்த பயிர்ச்செய்கை நிலங்களை வெள்ளத்துள் ஆழ்த்தும் பகுதிகளில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இத்தகைய நிலங்கள் விவசாய உற்பத்திக்கு நிரந்தரமாக இழக்கப்பட்டு விடுகின்றன. மித மிஞ்சிய நீர்ப்பாவனை அடித்தளத்தில் இருக்கும் உப்பையும் மேல் தளத்துக்கு கொண்டு வருகின்றது. மூன்றாம் மண்டல நாடுகளில் மோசமான வடிகால்கள் அமைப்பு இப்பிரச்சினையை மேலும் தீவிரமாக்கியுள்ளது. நீர் வழங்கலின் போதாமை, உவர்த் தன்மையை அதிகரித்துள்ளதுடன், உரம், நீர்ப்பாசன நீர் என்பனமூலம் படியச் செய்யப்படும் உப்புக்களை கழுவி அகற்றவும் ஆற்றலற்றதாக உள்ளது. எந்த ஒரு நீர்ப்பாசனத் திட்டத்திலும், தாழ்நிலங்கள் நீர் தேங்கிக் கிடப்பதனால் பாதிப்படைகின்றன. இலங்கையில் இப்பிரச்சினை குறித்த சரியான மதிப்பீடுகள் இன்னமும் தயாரிக்கப்படவில்லை. எனினும் பொதுவான மதிப்பீட்டின்படி, சுமார் 200,000 ஹெக்டெயர் காணி இப்பிரச்சினையினால் பாதிக்கப்பட்டுள்ளது எனலாம்.

நிலத்தடி நீர் மட்டத்தில் அறிமுகப்படுத்தப்படும் மாற்றங்களும் கவனிக்கப்பட வேண்டிய மற்றொரு விடயமாகும். ஆறுகளைத் திசை திருப்புவதால் அந்தப் பிரதேசத்தில் நிலத்தடி நீரில் தங்கியிருக்கும் மக்களுக்கு குடிநீர் வசதிகள் அற்றுப்போக முடியும். நிலத்தடி நீர் விவசாயத்திற்காகப் பயன்படுத்தப்படுவது கிராமியமக்களுக்கு சொல்லொண்ணாத் துயரங்களைக் கொடுத்துள்ளது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில், செல்வந்தர்களுக்கு இவை அனுகூலமாக இருப்பதுடன் சமுதாயத்தின் வறிய மக்களுக்கு குடிநீர் வசதிகள் கூட கிடைக்காது போகின்றன.

நோய்களை உண்டாக்கும் பல்வேறு கிருமிகள், பூச்சி புழுக்களுக்கு உறைவிடமாக வெப்ப வலயப் பிரதேசங்கள் திகழுகின்றன. இப்பகுதிகளில் மலேரியா, டெங்குக் காய்ச்சல், யானைக் கால்நோய், மூளைக் காய்ச்சல் ஆகிய நோய்கள் மிகவும் சர்வ சாதாரணமாகக் காணப்படுகின்றன. உஷ்ணவலய சுவாத்தியத்தில் இவை நன்கு பரவுகின்றன. எனினும், இவற்றிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கு இயற்கை தன் சொந்த பாதுகாப்பு முறைகளைப் பெற்றிருக்கிறது. உதாரணமாக, தொற்று நுண்மங்கள் பெருந்திரளாக வசிக்கும் இடங்களில் குறைந்த மழைவீழ்ச்சி, நீண்டவெப்ப காலம், குறைந்தளவு நீர் வழங்கல் என்பன காணப்படுகின்றன. இதன் விளைவாக இந்த நுண்மங்களின் பெருக்கம் கட்டுப்படுத்தப்படுகிறது. இச்சமநிலை நீர் அபிவிருத்திச் செய்திட்டங்களினால் மாற்றியமைக்கப்படுகிறது. நீரினால் ஏற்படும் நோய்களினால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை அதிகமாயுள்ளது என்பதை நீர்ப்பாசன செய்திட்டப் பதிவேடுகள் குறிப்பிடுகின்றன.

நில நீர் அபிவிருத்திச் செய்திட்டங்களின் பிரதான நோக்கம் மனித வாழ்க்கையின் தரத்தை உயர்த்துவதையே அடிப்படையாகக் கொண்டிருப்பதால் சமூக சுற்றுச் சூழலில் ஏற்படும் விளைவுகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். புதிய அபிவிருத்தித் திட்டங்களின் ஏற்புத்தன்மை, உறிஞ்சும் ஆற்றல்போன்ற பல காரணிகளிலேயே அதன் சமூகத்தாக்கம் தங்கியிருக்கிறது. எந்தவொரு புதிய திட்டமும், ஓரளவு மாற்றங்களுடன் திருப்தியான முறையில் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். பாரம்பரிய சமுதாயங்கள் தமக்கு வேண்டிய முறைகளை, தம் சுற்றாடலுக்கு ஏற்புவிதமாக அபிவிருத்தி செய்துள்ளன. பன்னூற்றாண்டுகால இந்த பாரம்பரிய முறைகள் (குறைந்த மட்டங்களிலேனும்) நிலைத்து நிற்கக்கூடிய பொருளாதாரமொன்றை உத்தரவாதப்படுத்தியுள்ளன. சேனைப் பயிர்செய்கை, கலப்பு பயிர்செய்கை, கால்நடைகளை மேய விடுதல் போன்ற முறைகளும் தமது சொந்த அனுகூலங்களைக் கொண்டுள்ளன, இம்முறைகளை கடைப்பிடிக்கும்போது பயிர் நாசம் சார்புரீதியில் குறைவாகவே இருக்கிறது. நிலம், நீர் ஆகியன தொடர்பாக ஏற்படக் கூடிய சுற்றுச் சூழல் பிரச்சினைகளை இனங்கண்டு கொள்வதற்கு இக்கட்டுரையில் இதுவரை ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. எனினும், சுற்றாடல் பற்றி நாம் கவனம் செலுத்துவது அபிவிருத்திக்கு எதிராக அல்ல; மாறாக சிறந்த வழிகள் மூலம் அபிவிருத்தியை எவ்வாறு அடைய முடியும் என்பதைக் கண்டு பிடிக்கும் நோக்கிலேயே இந்த அக்கறை காட்டப்படுகிறது. சுற்றாடல் பிரச்சினைகளை நாம் சரியாக மதிப்பீடு செய்வதுடன் அபிவிருத்திக்குத் தேவையான பொருத்தமான, சிறந்த வழிமுறைகளைத் தேர்ந்தெடுத்து அதன்மூலம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முயற்சி செய்யவேண்டும். சுற்றா

டல் பிரச்சினைகள் பற்றிய விபரங்களோ அல்லது அதுபற்றிய நீண்ட ஆய்வோ தனித்து அது பற்றி தீர்மானம் எடுப்பதற்கு கொள்கையாளர்களுக்கு உதவி அளிக்கமாட்டா. வரக்கூடிய தாக்கங்களை முறையாக அளவிட்டு, திட்டமிடல் பணியில் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய முறையில் கண்டு பிடிப்புக்களை சமர்ப்பிப்பது அவசியமாகும்.

பல்வேறு சுற்றாடல் பாதுகாப்பாளர்கள் முன்வைக்கும் வாதம் என்னவென்றால், பல சுற்றாடல் விளைவுகளை அளவிட்டு கூற முடியாது என்பதாகும். இதில் ஓரளவுக்கு உண்மையிருப்பினும், இந்த எதிர்மறை அணுகுமுறை பயனளிக்கப் போவதில்லை. அபிவிருத்திக்கான சிறந்தமாற்று வழிகளைக் கண்டுபிடிக்க வேண்டிய தேவை உள்ளது. பிரதிகூலமான விளைவுகளைச் சுட்டிக் காட்டி, அபிவிருத்தியைத் தடுத்து நிறுத்தமுடியாது. எனவே, அனைத்து பிரதிகூலமான விளைவுகளையும் அனுகூலமான விளைவுகளையும் கண்டுபிடித்து மதிப்பீடு செய்வதன் மூலம் குறிப்பிட்ட செய்திட்டம் சமுதாயத்திற்கு நன்மை தருமா என்பதை தீர்மானிக்க வேண்டும்.

பொருளாதார பெறுமதிகளின் அடிப்படையில், சுற்றாடலினால் ஏற்படும் அனுகூல பிரதிகூல விளைவுகளை மதிப்பீடு செய்வதே சிறந்த வழியாகும். அதாவது பொருளாதார நலன்கள் - செலவுகள் என்ற அடிப்படையில் இவற்றை மதிப்பீடுசெய்ய முடியும். ஒரு செய்திட்டத்தினால் சமுதாயத்திற்கு வரக்கூடிய நற்பேறுகளை கணிப்பதும் பிரதிகூலங்களைத் தவிர்ப்பதும் சமுதாயத்தைப் பொறுத்ததாகும். சுற்றாடலின் விளைவுகளை செய்திட்ட திட்டமிடல் முறையில் சேர்த்துக்கொள்வது மிகவும் அவசியமாகும். இதற்கான வழிமுறைகளை அபிவிருத்தி செய்ய பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன, அபிவிருத்தியடைந்துள்ள நாடுகளில் சுற்றாடலின் விளைவுகள், அவற்றின் தனிச்சிறப்புக்கள், உறுதியான இயல்பு, இயற்சக்தி, பாதிக்கப்படக்கூடிய இடங்கள் அல்லது இட அமைவுகள் ஆகியனவற்றைக் கண்டுபிடிப்பதற்குப் பல்வேறு வழிமுறைகள் பயன்படுத்தப்படுகின்றன. இந்த கண்டுபிடிப்பின் அடிப்படையில் இவை அளவிடப்பட்டு, மதிப்பிடப்படுகின்றன. இந்த அளவீடுகள் தீர்மான பகுப்பாய்வு அணுகுமுறையில் பயன்படுத்தப்படுகின்றன.

தீர்மான பகுப்பாய்வு அணுகுமுறை பொதுமக்களின் பங்குபற்றுதலில் பெருமளவுக்கு தங்கியுள்ளது. மேலும், விவேகமான தீர்மானங்களைச் செய்வதற்கு மக்கள் போதிய அறிவு உள்ளவர்களாக இருக்கிறார்கள் என இதன்மூலம் எதிர்பார்க்கப்படுகிறது. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் பெரும்பாலான மக்கள் வறியவர்களாகவும், வல்லமை குறைந்தவர்களாகவும், சுற்றாடல் விடயங்கள் பற்றிய போதிய அறிவு இல்லாதவர்களாகவும் இருப்பதால், இம்முறை படித்தவர்களினதும் தொழில் நுட்ப வல்லுனர்களினதும் செல்வாக்குக்கு உட்பட முடியும். பெரும்பாலான நாடுகளில் இத்தகைய சூழ்நிலையை நாம் காணக் கூடியதாயிருக்கிறது. அபிவிருத்திக்குப் பொருத்தமான மாற்று வழிகளை எடுத்துக் கூறாமல் எந்தவொரு அபிவிருத்திச் செய்திட்டத்தையும் எதிர்த்துவரும் ஒரு குழுவாக சுற்றுச்சூழல் பாதுகாப்பாளர்கள் விளங்குகின்றனர். எனவே அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்குள் ஒரே மாற்றுவழி, விளைவுகளை பொருளாதார அளவுகளில் மதிப்பீடு செய்வதாகும். பெரும்பாலான அபிவிருத்தித் திட்டமிடுவோருக்கு பரிச்சயமான வழக்கமான செலவு நலன் பகுப்பாய்வினை பயன்படுத்தமுடியும். சமூக குறிக்கோள்களை இச்செலவு நலன் பகுப்பாய்வு கொண்டிருக்கிறது. இப்பகுப்பாய்வு கருவிகள் திறமையான பொருளாதார கருவிகளை வசதிப்படுத்தும் முறையில் திட்டமிடப்பட்டுள்ளது. உச்சமட்ட சமூக நலன்களைப் பெற்றுக் கொள்வதற்கு சுற்றுச்சூழல் மூலவளங்களை எவ்விதம் உச்ச மட்டத்தில் பயன்படுத்த முடியும் என்பதைச் சுட்டிக்காட்டும் ஆற்றல் இக்கருவிகளுக்கு உண்டு. மேலும் மாசடைதல், நிலவளங்கள் சீரழிதல் போன்ற சுற்றுச்சூழல் பிரச்சினைகள் அடிப்படையில் பொருளாதார பிரச்சினைகளாகும், ஏனெனில், கட்டுப்பாட்டுக்கான எல்லா தொழில்நுட்பத் தெரிவுகளும் பொருளாதார தீர்வுகளாகவே உள்ளன. தொழிலில் ஈடுபடுத்தப்பட்ட மூலப்பொருள் மற்றும் வலு என்பவற்றின் விகிதத்தைக் குறைத்தோ (உற்பத்தி விகிதத்தைக் குறைத்தோ, தொழில்நுட்ப பொறியியல் சிறப்பை அதிகரித்தோ இதை அடைய முடியும்) அல்லது மீதப் பொருட்களை திரும்பப் பெற்று பயன்படுத்தியோ அல்லது மொ. தே. உ. உள்ளடக்கத்தை மாற்றியமைத்தோ குறிக்கோள்களை வென்றெடுப்பதே இததொழில் நுட்பங்களின் நோக்கமாகும். சுற்றாடலுக்கு தீங்கு விளைவிக்காத முறையில் அழுக்குகளை நீக்குவதற்கான நேரம், இடம் ஆகியனவற்றைத் தேர்ந்தெடுத்தலும் முக்கியமாகும்.

இவற்றை அமுல்படுத்த பொருளாதார வளம் இடமளிக்க வேண்டும். எனவே, திட்டமிடும் போது, சுற்றாடல் விளைவுகளைக் கருத்தில் கொண்டு, பொருளாதாரத்தையும் கணித்து சுற்றாடலின் செயல் விளைவுகளை மதிப்பீடு செய்யவேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர்ப்பாசனமும் சுற்றுச்சூழலும்

எஸ். எல். திலகசிரி

மக்கள் வங்கியில் சிரேஷ்ட ஆய்வாளராக பணி புரியும் திரு. திலகசிரி சுவீடனின் லின் கோபின் பல் கலைக்கழகத்தின் நீர் மற்றும் சுற்றுச்சூழல் கற்கை நிறுவனத்தில் பட்டப்பின்படிப்பு பட்டம் பெற்றவர். நீர்ப்பாசன நீர்ப்பயன்பாடு மற்றும் நிலக்குத்தகை என்பன குறித்து பல ஆராய்ச்சி அறிக்கைகளை அவர் தயாரித்துள்ளார்.

குறுகிய கால நோக்குகள் மற்றும் பசுமைப் புரட்சியின் வெற்றி என்பன காரணமாக, வேளாண்மை நீர்ப்பாசன அபிவிருத்தியின் நிலைத்து நிற்கக் கூடிய அம்சம் நீண்டகாலமாக புறக்கணிப்புக்குள்ளாகி வந்திருக்கிறது. இயற்கை பேரழிவுகள் அதிகரித்து வருவதனையடுத்து, இப்பொழுது, சுற்றுச் சூழல் சீரழிவு குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. எனினும், மிகச் சமீப காலம் வரையில், அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களில் சுற்றுச்சூழல் தொடர்பான அம்சம் அதிகளவு முக்கியத்துவம் பெற்றிருக்கவில்லை நீர்ப்பாசன அபிவிருத்தியை, சுற்றுச் சூழல் பராமரிப்புடன் இணைக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை இக்கட்டுரை எடுத்துக்காட்ட முயல்கிறது.

## நிலையான அபிவிருத்தி

தற்கால சமுதாயம் அதன் தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்கு வாய்ப்பளிக்கும் அதே வேளையில், வருங்கால சமுதாயம் தனது தேவைகளை நிறைவு செய்வதற்காக பெற்றுக் கொள்ளவிருக்கும் ஆற்றலை பங்கப்படுத்தாது இருக்கும் ஒரு நிகழ்வுப் போக்கே நிலையான அபிவிருத்தி என்று கூறப்படுகிறது. அபிவிருத்திப் பிரச்சினைகளுடன் சம்பந்தப்பட்டிருக்கும் கல்விமான்களையும், தொழில் சார் வல்லுனர்களையும் பொறுத்த வரையில் இது ஒரு புதிய கருதுகோள் அல்ல. அபிவிருத்தி நடவடிக்கையுடன் சுற்றுச்சூழல் பாதுகாப்பு விடயத்தை ஒன்றிணைக்க வேண்டிய அவசியம் ஓர் அடிப்படை தொனிப் பொருளாக 1970 களின் தொடக்கத்திலேயே கலந்துரையாடப்பட்டது. உலக பாதுகாப்பு உபாயம் (1980) சுற்றுச் சூழல் மற்றும் அபிவிருத்திக்கான உலக ஆணைக்குழு என்பவற்றின் ஸ்தாபிதத்துடன் இந்த கருத்து மேலும் வளர்ச்சி கண்டது. மூலவளங்களுக்கும் மனிதனுக்கும் இடையில் நிலவும் உறவின் சிக்கலான தன்மையை அங்கீகரித்துள்ள இந்த ஆணைக்குழு, சுற்றுச் சூழல் சீரழிவு, உலக வறுமைக்கான காரணமும் அதன் விளைவுமாகும் என்பதை சுட்டிக்காட்டியுள்ளது. எனவே நீர் மற்றும் நில மூலவளங்கள் பரந்த அளவில் பயன்படுத்தப்படும் நீர்ப்பாசன அபிவிருத்தி போன்ற ஒரு முயற்சியில், சுற்றுச் சூழல் பாதுகாப்பு விஷயத்தில் அதிகளவில் கவனம் செலுத்த வேண்டியது முக்கியமாகும்.

## புதிய உத்தியொன்றுக்கான தேவை

உலகின் சனத்தொகை வரவர அதிகரித்து வருகின்றது. அதனுடன் சேர்ந்து உணவுக்கான தேவையும் பெருகி வருகிறது. உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக பெருமளவில் நில, நீர் மூலவளங்களைப் பயற்படுத்தி விரிவாகவும், செறிவாகவும் வேளாண்மைத் தொழிலை மேற்கொள்ளவேண்டியுள்ளது. இந்த நிகழ்வுப் போக்கின் ஓர் உபவிளைவாக நிலச்சரிவுகள், உவர்த்தன்மை பெருகுதல், நீர் தேங்கி நிற்றல் போன்றவற்றை கொண்ட சுற்றுச் சூழல் சீரழிவு ஏற்படுகிறது. இராக், சிரியா, எகிப்து, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் விவசாயத்துறை உப்புத் தன்மை, நீர் தேங்கி நிற்றல் போன்ற பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றது. நிலம், நீர் என்பன துஷ்பிரயோகம் செய்யப்படுவதனாலேயே இப்பிரச்சினைகள் தோன்றுகின்றன

இலங்கையில், இது நாள்வரையில், பல்வேறு குடியேற்றத் திட்டங்களுக்காகவும் சுமார் 800,000 ஹெக்டெயர் அரசகாணிகள் மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. உலர் வலயத்தில் நீர்ப்பாசனத்தை அடிப்படையாகக்கொண்ட 107 குடியேற்றத் திட்டங்கள் உள்ளன இவற்றின் பரப்பளவு சுமார் 300,000 ஹெக்டெயர்களாகும்

நீர்ப்பாசனத்துக்கு போதிய அளவில் நீர் கிடைக்காமை, இலங்கையின் (அதேபோல இப்பிராந்தியத்தின் ஏனைய பல நாடுகளினதும்) பெரும்பாலான நீர்ப்பாசனக் குடியேற்றத் திட்டங்களில் காணப்படும் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கிய பிரச்சினையாகும். அதனால், நீர்ப்பாசனக் குடியேற்றத் திட்டங்களில் வாழும் உழவர்கள், பயிர்ச்செய்கைக்கான போதியளவு நீரைப் பெற்றுக் கொள்வதற்காக பல்வேறு உபாயங்களையும் பாவித்து வருகிறார்கள். வடிகால் கால்வாய்களைத் தடுத்து, தமது வயல் நிலங்களுக்கு அவற்றை திசை திருப்பிக்கொள்வது இவற்றில் ஓர் உபாயமாகும். நீர்ப்பாசனப் பயிர்ச்செய்கை பகுதிகளில் மிக மிஞ்சிய முறையில் அல்லது குறைவாக நீர் உபயோகிக்கப்படுவது பல சுற்றுச்சூழல் பிரச்சினைகளையும் தோற்றுவித்துள்ளது.

நீர் பிரச்சினை தவிர, குடியேற்றத் திட்டங்களில் பெருமளவில் முறைசாரா காணி கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறுவதனையும் ஆராய்ச்சிகள் எடுத்துக்காட்டியுள்ளன. குடிவார பிரச்சினைகளும் கிடைக்கக்கூடியதாக இருக்கும் நிலத்தின் மீது குடித்தொகைப் பெருக்க அழுக்கமும் நிலையான நீர்ப்பாசன விவசாயத்தை பாதிக்க முடியும். எனவே, உள்ளூர் முறைமைகளையும் அவற்றின் முக்கியத்துவத்தையும் ஆராய்ந்து பார்ப்பது அவசியமாகும்.

பாரம்பரிய கிராமமும் அதன் ஸ்தாபன அமைப்புக்களும் ஆராய்ச்சியாளர்களால் பல்வேறு வழிகளில் இனங்காணப்பட்டுள்ளன. உலர் வலயத்தைப் பொறுத்த வரையில், ஒரு கிராமத்தில் பல வலயங்கள் உள்ளன. குளம், குடியிருப்பு பகுதி, வயல் நிலம், காட்டுப்பகுதி என இந்த வலயங்கள் அமைந்துள்ளன. இந்த வலயங்கள் தற்சார்ப்புள்ள விவசாய - உயிரினச் சூழல் தொகுப்புக்கள் மற்றும் உப அமைப்புக்கள் என உல்லுவிஷேவா (1990) குறிப்பிடுகிறார். குளம், வயல் வெளி, சேனை, காடுகள், கால்நடை வளர்ப்பு நடவடிக்கைகள், அவற்றுக்கிடையிலான தொடர்புகள் என்பவற்றை இது எடுத்துக்காட்டுகிறது. ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக நீடியல் நாகரிகமானது, நிலம், நீர் மற்றும் உயிரியல் மூலவளங்கள் என்பவற்றை மிக வெற்றிகரமான முறையில் [illegible] படுத்தி வந்துள்ளது.

நிலைத்து நிற்கக்கூடிய தன்மையை கவனத்தில் எடுக்கும் நீர்ப்பாசன முறை குறித்த சில உதாரணங்களை இன்றும் கூட இனங்காண முடியும். பயிர்ச்செய்கைக்கு உவர்த்தன்மை மூலம் சேதம் ஏற்படுவதனை தடுக்கும் பொருட்டு, குளத்துக்கும் வயல் வெளிகளுக்கும் இடையில் ஒரு குறுகிய வெற்று நிலம் விட்டு வைக்கப்படுகிறது. இந்த வெற்று நிலங்களிலும் கால்வாய்களின் இரு கரைகளிலும் உவர்த்தன்மையை உறிஞ்சிக்கொள்ளக் கூடிய (வட்டகெய்யா போன்ற) விசேஷ மர வகைகள் நடப்படுகின்றன. குளத்தின் நீரேந்து பரப்பு பகுதி சேனைப் பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்தப்படுவதில்லை. பாரம்பரிய கிராமங்களில் நான்குவகையான குளங்கள் இருந்ததாகவும், அவற்றில் ஒருவகை மண்ணரிப்பினைக் கட்டுப்படுத்துவதற்கு பயன்படுத்தப்பட்டதாகவும் கோல்ட்ஸ்மித் (1984) குறிப்பிடுகிறார். எனினும், குடித்தொகைப் பெருக்கம் காரணமாக இந்த சிறப்பம்சங்கள் பல மாற்றங்களுக்குள்ளானதுடன் நீரேந்து பரப்பின் சில நிலப்பகுதிகள் சேனைப்பயிர்ச்செய்கைக்காவும் பயன்படுத்தப்பட்டன. வயல் வெளிகள் ஏனைய குளங்களின் நீரேந்து பரப்புக்கள் வரையில் விரிந்து சென்றுள்ளன. வயல் வெளிகளுக்கூடாக குளங்கள் பிணைக்கப்பட்டுள்ளன. இதன் விளைவாக மண்ணரிப்பும், குளங்களில் உவர்த்தன்மை பரவுதலும் [illegible]பட்டுள்ளன

பாரம்பரிய விவசாயிகள் நீர்ப்பாசன முகாமைத்துவம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பன தொடர்பான பிரச்சினைகளை வேளாண்மையில் பெற்ற நீண்டகால அனுபவம், பரம்பரை வழக்கங்கள் என்பனவற்றுக் கூடாக சமாளித்து வந்திருக்கிறார்கள் என்பதனையே இச்சான்றுகள் தெரிவிக்கின்றன. இன்றைய புதிய நீர்ப்பாசனத் திட்டங்களிலும் பழைய நீர்ப்பாசனத் தொகுதிகளை புனருத்தாரணம் செய்வதிலும், பாரம்பரிய நீர்ப்பாசனத் தொகுதிகளை ஆராய்ந்து பார்ப்பதன் மூலம், நீர்ப்பாசன அபிவிருத்திக்காக சில கருதுகோள்களையும், கோட்பாடுகளையம் பயன்படுத்திக் கொள்ளமுடியும்.

பெருந்தொகையான நீர்ப்பாசனத் திட்டங்கள் துவக்கிவைக்கப்பட்டிருந்த போதிலும் சமீப காலம் வரையில் திறமையான நீர்ப்பாவனை முறை குறித்து அதிகம் கவனம் செலுத்தப்படவில்லை. நிலம் ஒரு (வரையறுக்கப்பட்ட) மூலவளம் என்ற முறையில் 1960 களில் எப்படி முகியத்துவம் பெற்றதோ அதே போல 1970 களின் நடுப்பகுதியிலிருந்து நீரும் அதன் பாவனையும் அதிகரித்த கவனத்தை பெற்று வருகிறது. நீர்ப்பாசனக் குடியேற்றத்திட்டப் பகுதிகளில் தோன்றியுள்ள பல பிரச்சினைகள், நீர்ப்பாசன விவசாயத்தின் நிலைத்து நிற்கக்கூடிய தன்மை குறித்து பல கேள்விகளை எழுப்பியுள்ளன. எனவே, நீர் உபயோகம் எவ்வாறு சூழல் பிரச்சினைகளை உருவாக்குகிறது, 1990 களில் சூழல் பாதுகாப்புடன் நீர்ப்பாசன அபிவிருத்தியை அடைவது எப்படி என்பன குறித்து கவனம் செலுத்துவதற்கு இப்பொழுது தருணம் வந்திருக்கிறது. இந்த முயற்சியில் விவசாய, பொறியியல் துறைகளுடன் சம்பந்தப்பட்டவர்கள் மட்டுமன்றி, பொருளியலாளர்கள், சமூகவியலாளர்கள், உயிரினச் சூழல் வல்லுனர்கள் போன்ற பரந்த பிரிவினர் அக்கறை காட்டுதல் அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர்ப்பாசன புனருத்தாரணமும் அமைப்பு முகாமையும்

டி. எம். ஆரியரத்ன
(பணிப்பாளர், நீர்ப்பாசன முகாமைப்பிரிவு,
காணி, நீர்ப்பாசன மகாவலி அபிவிருத்தி அமைச்சு)

## 0.1 அறிமுகம்

1.1 இலங்கையில், நீர்ப்பாசன முகாமை தொடர்பாக புனருத்தாரணம் மற்றும் நீர்ப்பாசனத் தொகுதி முகாமை என்பவற்றைக் கொண்ட இரட்டை நிகழ்வுப் போக்கு மிக அண்மைக் காலத்திலேயே முக்கியத்துவம் பெற்றது. இவற்றின் தொடக்கத்தை, 1960 களின் நடுப்பகுதியில் இங்கு ஆரம்பமாகிய நீர்ப்பாசன நிகழ்ச்சித்திட்ட மீளாய்வு முயற்சிகளில் காண முடியும். பாரிய நீர்ப்பாசன அமைப்புக்களிலிருந்து நடுத்தர மற்றும் கிராமிய நீர்ப்பாசன அமைப்புக்களுக்கு மாறிச் செல்ல வேண்டும் என இந்த மீளாய்வு வலியுறுத்தியது. அத்துடன் புதிய நீர்ப்பாசன கட்டமைப்புக்கள்ள நிர்மாணிப்பதற்கு பதிலாக, தற்போதைய அமைப்புக்களை புனருத்தாரணம் செய்வதில் கவனஞ் செலுத்தப்பட வேண்டும் என்றும், நெல்லை மட்டும் பயிர் செய்யும் நிலையிலிருந்து பயிர் பன்முகப்படுத்தலுக்கு மாற வேண்டும் என்றும் வலியுறுத்திக்கூறப்பட்டது. இந்த சிபார்சுகளின் பின்னணியில் மறைந்திருந்த அம்சம், நீர்ப்பாசனத் திட்டங்கள் திறமையாகவும், சிக்கனமாகவும், அதிக விளைதிறனை தரக்கூடிய முறையிலும், அனைத்துக்கும் மேலாக ''நிலைத்து நிற்கக்கூடிய அடிப்படையில்'' முகாமை செய்யப்படவேண்டும் என்பதாகும்.

1.2 நீர்ப்பாசனத் தொகுதிகளை நிலைத்து நிற்கக்கூடிய முறையில் நிர்வகிக்கும் வழக்கம் பண்டைய இலங்கையில் நிலவி வந்தது. இந்த அமைப்புக்குள் பல வழக்கங்களும், நடைமுறைகளும் கட்டியெழுப்பட்டிருந்தன. இந்த வழக்கங்களை சமூகம் கூட்டாக ஏற்று, அனுசரித்து வந்தது. புராதன இலங்கையில் நீர்ப்பாசன மீளமைப்பு புனருத்தாரண வேலைகளை திட்டமிட்டவர்கள், நீர்ப்பாசனத்தை ஒரு முடிவுப் பொருளாக கருதவில்லை. மாறாக, அதனை, நெருக்கமாக பின்னிப்பிணைந்தன சமூகங்களை கட்டியெழுப்புவதற்கான பொதுக்கட்டமைப்புக்கள் என்றே கருதி வந்தனர். பிரிட்டிஷ் காலனித்துவ நிர்வாகம், முதலில், இந்த முகாமை முறையின் முக்கியத்துவத்தை உணர்ந்துகொள்ளத் தவறியது.

அதனால் 1832 கோல்புறாக்-கமரூன் சீர்திருத்தங்களின்போது இம்முறை ஒழிக்கப்பட்டது. ஆனால் 1856ல் 9 ஆம் இலக்க நீர்ப்பசனக் கட்டளைச் சட்டத்தின் முலம் இந்த வழமைகள், நடைமுறைகள் (சிரித்) என்பவற்றை அது மீண்டும் அறிமுகப்படுத்தியது. இவை சட்டங்களாகவும், விதிகளாகவும் தொகுக்கப்பட்டன. இவை சிறிய, நடுத்தர, பெரிய நீர்ப்பாசனத் தொகுதிகள் அனைத்துக்கும் பிரயோகிக்கக்கூடியனவாக இருந்தன,

1.3 அட்டவணை 1 நீர்ப்பாசனத் திட்டங்களின் வகைப்படுத்தல்களையும், அவற்றின் மற்றும் சிறப்பம்சங்கள் என்பவற்றையும் தருகின்றது. பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களை நிர்வகிக்கும் அறிவும், ஆற்றலும் ''சிறு விவசாயிகளிடம்'' இல்லை என்று கருதும் ஒரு போக்கு இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் தொழில்நுட்ப வல்லுனர்களிடையே காணப்பட்டது. இதன் விளைவாக நீர்ப்பாசன தொகுதிகளின் முகாமையை - அரசின் நேரடிப் பணி என்ற முறையில்-- தொழில் நுட்பவியாலாளர்கள் பொறுப்பேற்றனர். கடந்த ஐந்து அல்லது ஆறு தசாப்த காலத்தில், சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை திட்டமிடுவதிலும், மீளமைப்பதிலும், பராமரிப்பதிலும், நிர்வகிப்பதிலும் பாரம்பரிய வழமைகளிலும், நடைமுறைகளிலும் சிறப்பம்சங்கள் அனுசரிக்கப்பட்டு வந்துள்ள அதே வேளையில், பாரிய நீர்ப்பாசன அமைப்புக்களின் திட்டமிடலிலும் முகாமையிலும் தெரிந்தோ, தெரியாமலோ கொள்கை நிலையிலிருந்து பேரளவில் விலகிச் செல்லும் ஒரு போக்கினை காணக்கூடியதாக இருந்தது. நடுத்தர அளவு அமைப்புக்கள் சிலவற்றிலும் பாரம்பரிய முறைகள் பின்பற்றப்பட்டு வந்தன.

1.4 இந்த விலகிச் செல்லல் நிலைக்கு பல காரணிகள் வழிகோலியிருந்தன. முதலில், கிராமிய அமைப்புக்கள் உள்ளூர் சமூகத்துக்காக திட்டமிட்டு, அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தன. கிராம மட்டத்திலும், மாவட்ட விவசாய கமிட்டி மட்டத்திலும் கிராம சமூகத்துடன் கலந்தாலோசிக்கப்பட்டே இத்திட்டங்கள் வகுக்கப்பட்டிருந்தன. இரண்டாவதாக, பெரிய நீர்ப்பாசனத் தொகுதிகள் - குறிப்பாக குடியேற்றத் திட்டங்களுடன் சம்பந்தப்பட்ட

அட்டவணை 1

நீர்ப்பாசன அமைப்புக்களின் வகை

| வகை | அளவு | அம்சங்கள் | நிர்மாண முகவரகம் |
|---|---|---|---|
| சிறிய | 200 ஏக்.வரையிலான கிராமிய நீர்ப்பாசன அமைப்புக்கள் | விவசாயிகள் மூலம் பராமரிக்கப்படும் தனியொரு கால்வாய் மூலமான நீர்ப்பாசனம் — பிரதானமாக குத்தகை அல்லது தனியார் நிலம் — ஒரு பருவத்துக்கு (மகா) வடிவமைக்கப்பட்டது — பிரதானமாக நெற்பயிர் | முழுவதும் சொந்தக் காரர்களாலேயே அமைக்கப்படுகிறது |
| நடுத்தர | 200/500/1000 | பகிர்வு முறையைக் கொண்டது — நீர்ப்பாசன திணைக்களத்தால் பராமரித்து பரிபாலிக்கப்படுகிறது — தனியார் மற்றும் முடிக்குரிய காணிகளின் கலவை — மகா பருவத்துக்கும் ஓரளவுக்கு யாலா பருவத்துக்குமாக வடிவமைக்கப்பட்டது. பயிர் பிரதானமாக நெல் | முழுவதும் சொந்தக் காரர்களாலேயே அமைக்கப்படுகிறது. சில சந்தர்ப்பங்களில், மேசன் வேலைகளும், மதகு அமைப்பும் அரசாங்கத்தால் இலவசமாக வழங்கப்படுகிறது. சில சந்தர்ப்பங்களில் முழுவதும் அரசாங்கத்தால் வழங்கப்படுகிறது |
| பெரிய | 500/1000 தொடக்கம் 25,000 ஏக்கர் வரை | இணைக்கப்பட்டமையால், வயல் கால்வாய் என்பவற்றைக் கொண்ட முழு அளவு பகிர்வு அமைப்பு — பிரதானமாக காணி அபிவிருத்தி அனுமதிப் பத்திர நிலம் — வரையறுக்கப்பட்ட தனியார் நிலம் — மகா பருவத்துக்கும் (கணிசமான அளவு) யாலை பருவத்துக்கும் வடிவமைக்கப்பட்டது — நெல்லும் ஏனையனவும் — பரிபாலனமும் பராமரிப்பும் நீர்ப்பாசன திணைக்களம் | முழுவதும் அரசினால் அமைக்கப்படுகிறது. செலவை மீளப் பெறுவதற்கென நீர்ப்பாசன கட்டணம் அறவிடப்படுகிறது |
| பாரிய (ஆற்று வடிநில திட்டங்கள்) | | மேலே தரப்பட்டுள்ளதற்கு இணையானது. ஆனால், முகாமை முடிவுகளும் பகிர்வுகளும் மைய இடமொன்றில் மேற்கொள்ளப்படுகிறது. | |

ஆதாரம்:

(1) காணி, நீர்ப்பாசன மகாவலி அபிவிருத்தி அமைச்சு

(2) நீர்ப்பாசன கட்டளைச்சட்டம் இல. 32 (1946). இந்தச் சட்டம் சிறிய, பெரிய நீர்ப்பாசன அமைப்புக்களை வகைப்படுத்துகிறது.

(3) கமத்தொழில் சேவைகள் சட்டம் 200 ஏக்கர்களுக்கு குறைவான பரப்பளவைக் கொண்ட நீர்ப்பாசன அமைப்பை சிறு நீர்ப்பாசன அமைப்பு என வரைவிலக்கணம் செய்கிறது.)

(4) பாராளுமன்றத்திலிருந்து நிதிகளைப் பெற்று நீர்ப்பாசன பணிப்பாளரால் அல்லது அவரது அதிகாரத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டு, பராமரிக்கப்படும் நீர்ப்பாசன அமைப்புக்களை 1957 ஆம் வருட இல. 1 நீர்ப்பாசன சட்டளைச்சட்டம் "பாரிய நீர்ப்பாசன அமைப்புக்கள்" என்று குறிப்பிடுகிறது.

வை - (புனரமைப்பாக இருப்பினும் சரி, புதிய நிர்மாணமாக இருந்தாலும் சரி) மத்தியிலிருந்து, குறிப்பிட்ட ஒரு தொகுதி மக்களுக்காக திட்டமிடப்பட்டவையாக இருந்தன. இந்த திட்டங்களை திட்டமிடுவதிலோ அல்லது அபிவிருத்தி செய்வதிலோ (தர்க்கரீதியான சில காரணங்களினால்) இம்மக்கள் தொகுதியினரின் பங்களிப்பினை பெற்றுக்கொள்ள முடியவில்லை. மேலும், பாரிய திட்டங்களில் அமைப்பு மற்றும் முறைமை என்பவற்றுக்கென போதியளவில் மூலவளங்கள் இருக்கவில்லை. மூலவள திரட்டலுக்காக தாக்கமான நிறுவன ரீதியான ஏற்பாடுகளும் காணப்படவில்லை.

1.5 பெரிய திட்டங்களின் இயல்பு, அதாவது பரிமாணம், நலன் பெறுவோரை தெரிவு செய்யும் முறை, அவர்களின் பின்னணி, பௌதீக திட்டமிடல், குடியேற்ற மாதிரிகள், அரசின் நலன் புரி குறிக்கோள்கள் என்பன, இந்த திட்டங்களில் எந்த வகையான நலன் புரிவோர் பங்களிப்பினையும் பெறுவதனை கடினமாக்கி வருகின்றன. விவசாயிகள், திட்டமிடலில் சம்பந்தப்பட்டிருக்கவில்லையாதலாலும், இவை செயற்படும் விதம் குறித்து பரிச்சயமற்றவர்களாக இருந்ததாலும் பராமரிப்பிலும், முகாமையிலும் அவர்களுடைய பங்கெடுப்பு மிகக் குறைந்த மட்டத்திலேயே இருந்தது.

1.6 திட்டத்தின் வடிவமைப்பு, விரிவான, சிக்கலான நீர்பங்கீட்டு முறை, பெருந்தொகயான சிறு

விவசாயிகள் சம்பந்தப்பட்டிருந்தமை, பிரதான கட்டமைப்பும் நீர்த்தேக்கமும் நலன் பெறுவோரிடமிருந்து வெகு தொலைவில் அமைந்திருந்தமை போன்ற காரணிகள், நலன் பெறுவோர் முகாமையிலிருந்து அன்னியப்பட்டு நிற்கும் ஒரு நிலைமையைத் தோற்றுவித்தன. அரசாங்கத்தின் ''சமூக நலன்புரி கொள்கை'' போன்ற நிறுவன ரீதியான காரணிகள்; குடியேற்ற வாசிகள் பலதரப்பட்ட மக்கள் பிரிவினராக இருந்தமையால் சமூக கூட்டு நடவடிக்கை கடினமாக இருந்தமை; பாரிய திட்டமொன்றின் தேவைகளை நிறைவு செய்வதில் பயிர்ச்செய்கை கூட்டபொறி முறையின் குறைபாடுகள்; நலன் பெறுவோரின் பங்கெடுப்பைப் பெற்றுக்கொள்வதில் நீர்ப்பாசன அதிகாரி வர்க்கம் காட்டிய அலட்சியம் போன்ற பல காரணிகள் இந்த அன்னியமாக்கல் நிகழ்வுப்போக்கை மேலும் தீவிரமாக்கின. பலம் குன்றிய முகாமை முறைகள். இந்த திட்டங்களில் தலைதூக்குவதற்கு இந்த காரணிகள் அனைத்தும் பங்களிப்புச் செய்தன. இது, பல செய்திட்டங்கள் நடு அறுபதுக்களில் படிப்படியாக சீர்குலைவதற்கும், சிதைவடைவதற்கும் வழி கோலியது.

## 02. மீளாய்வும் பரீட்சார்த்தமும்

2.1 1960 களின் நடுப்பகுதியில் துவக்கிவைக்கப்பட்ட நீர்ப்பாசன நிகழ்ச்சித்திட்ட மீளாய்வு (The Irrigation Programme Review), பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களின் மேலே எடுத்துக் காட்டப்பட்ட பலவீனங்களை எடுத்துக்காட்டியதுடன், இச் செய்திட்டங்களின் உற்பத்தியையும், விளைதிறன் மட்டங்களையும் உயர்த்தும் பொருட்டு முகாமையை விருத்தி செய்து, புனருத்தாரணம் செய்யப்பட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியது.

2.2 அறுபதுக்களில் ''விசேஷ செய்திட்டங்களுடன்'' ஆரம்பமான சிந்தனைப் பாய்ச்சலும், பரீட்சார்த்தமும்; மகாவலி குடியேற்றங்களில் பங்கெடுப்பு சுய முகாமை நோக்கில் 1970 களில் உருவாக்கப்பட்ட விவசாயிகள் கமிட்டிகள்; நிலச் சீராக்கல் வரி; புதிய முகாமை உத்திகளுக்கான கல்லோய பரீட்சார்த்தம்; 1980 களின் துவக்கத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒருங்கிணைந்த நீர் முகாமை, விவசாய உற்பத்தி, விவசாயிகள் கழகங்கள் திட்டம்; இந்த அனுபவங்களின் அடிப்படையில் 1984ல் தொகுக்கப்பட்ட திட்டம், பங்கேற்பு முகாமை குறித்த பிந்திய 1980 களின் கொள்கைத் தொகுதி என்பன பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு உசிதமான, நிலைத்து நிற்கக்கூடிய முகாமை முறையொன்றுக்கான தேடலின் முக்கிய கட்டங்களாகும்.

(அடுத்த இதழில் முடியும்)

அட்டவணை 2

நீர்ப்பாசன முகாமையில் சமீபத்திய பரீட்சார்த்தங்கள்

| பெயர் | முகவரம் | இடம் | திகதி | படிப்பினைகள் | பலவீனங்கள் |
|---|---|---|---|---|---|
| 1. சிறப்புத் திட்டங்கள் | விவசாய அமைச்சு (மாவட்ட நிர்வாகத்துடன் சேர்ந்து) | தெரிவுசெய்யப்பட்ட 23 பிரதான நீர்ப் பாசன திட்டங்கள் | 1967/1970 | அதிகரித்த விளைச்சல்; சேவைகளுக்கிடையில் நல்ல தொடர்பு | நிறுவன அமைப்புக்களின் அபிவிருத்திக்கு தேவையான அமைப்புக்கள் இல்லாமை; நலன் பெறுவோர் பங்குபற்றாமை; தீர்மானமெடுத்தல் மத்தியமயப்படுத்தப்பட்டிருத்தல் |
| 2. மகாவலி சாத்தியவள யோசனைகள் | மகாவலி அபிவிருத்தி சபை | மகாவலி H பகுதி செய்திட்டம் I கட்டம் II | 1971/1876 | நலன்பெறுவோரை பங்கெடுக்கச் செய்வதற்கான முயற்சி, அமைப்பு என்பன முகாமைக்கு முக்கியத்துவம் | அதிகாரிவர்க்க கெடுபிடி, தலையீடு |
| 3. கல்லோயா இடது கரை புனருத்தாரண நீர் முகாமைதிட்டம் | காணி காணி அபிவிருத்தி அமைச்சு, நீர்ப்பாசன திணைக்களம் கமநல ஆய்வு, பயிற்சி நிறுவகம், கோர்னெல் பல்கலைக் கழகம் | கல்லோயா இடது கரை | 1979/1985 | எல்லா கட்டங்களிலும் நலன் பெறுவோர் பங்கெடுப்பு; பொருத்தமான விவசாயிகள் அமைப்புக்கள்: இயக்கத்திலும் பராமரிப்பிலும் விவசாயிகளின் பங்கெடுப்பு | ஊக்கத்தை நீடிக்கச் செய்ய முடியாத நிலை; திட்டத்தின் பாரிய அளவு; தொடர்ந்த ஆதரவுக்கான தேவை |
| 4. நீர் முகாமை திட்டம் | காணி, காணி அபிவிருத்தி அமைச்சு | தெரிவு செய்யப்பட்ட 25 பாரிய நீர்ப்பாசன திட்டங்கள் | 1982/1984 | நலன் பெறுவோர் பங்கெடுப்பு; விவசாயிகள் அமைப்புக்கள்; வளர்ச்சி, சேவைகளுக்கிடையில் ஒருங்கிணைப்பு | நீர்ப்பாவனை ஒருங்கிணைப்புக்கு போதிய நிர்வாக அதிகாரம் போதிய அளவில் இல்லாமை. |
| 5. விவசாய குடியிருப்பு திட்டங்களின் ஒருங்கிணைந்த முகாமைக்கான நிகழ்ச்சித்திட்டம் | காணி, காணி அபிவிருத்தி அமைச்சின் நீர்ப்பாசன முகாமை பிரிவு | 35 பிரதான நீர்ப் பாசன திட்டங்கள் | 1984 தொடக்கம் | நலன் பெறுவோர் பங்கெடுப்பு, விவசாயிகள் அமைப்புக்கள்; உதவியுடன் கூடிய தற்சார்பு | அமைப்புக்கான சட்ட அங்கீகாரம் இன்மை; சில திட்டங்களில் போதிய மூலவளங்கள் இல்லாமை; வெளிச் செல்வாக்குகள் |
| 6. பங்கெடுப்பு முகாமை குறித்த கொள்கை | காணி, நீர்ப்பாசன மகாவலி அபிவிருத்தி அமைச்சு | அனைத்து பிரதான நீர்ப்பாசன திட்டங்களும் | 1983 தொடக்கம் | | |

# வருங்காலத்தில் நீர்ப்பாசன விவசாயத்துக்கான தொழில்நுட்ப தெரிவுகள்

நிஹால் பெர்னான்டோ

நிஹால் பெர்னான்டோ காணி. நீர்ப்பாசன மகாவலி அபிவிருத்தி அமைச்சில் நீர்ப்பாசன பொறியியலாளராக பணிபுரிந்து வருகிறார். பட்டம் பெற்ற சிவில் பொறியியலாளரான அவர் நீர்ப்பாசன முகாமைக்கான சர்வதேச நிறுவனத்திலும் பணியில் அமர்த்தப்பட்டிருந்தார். கிரிந்தி ஓயா - உடவளவே செய்திட்டங்களில் நீர்ப்பாசன முகாமை மற்றும் பயிர் பன்முகப்படுத்தல் என்பன குறித்த வெளிக்கள ஆய்வொன்றையும் அவர் (1988-1990) மேற்கொண்டார்.

அபிவிருத்தி அடைந்துவரும் பொருளாதாரம் ஒன்றுக்கு பொருத்தமான கொழில்நுட்பம் அவசியமாகும். நீர்ப்பாசன விவசாய உபதுறைக்கும் இந்த விவாதம் பொருந்தும். இயற்கையின் இடையூறுகளை தணிப்பதும் வேண்டிய இடத்தில், வேண்டிய நேரத்தில், வேண்டிய அளவில் தண்ணீர் வசதியைப் பெற்றுக் கொடுப்பதும் நீர்ப்பாசனத்தின் முக்கிய நோக்கமாகும். உரிய விவசாய பொருளாதார நிலைமைகளின் கீழ் உணவு மற்றும் நார் இழைய உற்பத்திக்காக தண்ணீர் வசதியை செய்து கொடுப்பதும் இந்த நோக்கத்தில் அடங்கும். மேம்பட்ட தொழில்நுட்பம் - குறிப்பாக நீர்ப்பாசன விவசாய தொழிற்நுட்பம் - நீர்ப்பாசன விவசாயத்தின் திறமை, விளைதிறன், இலாபத் தன்மை என்பவற்றை விருத்தி செய்வதற்கு அத்தியாவசியமாகும்.

இலங்கையில் நீர்ப்பாசன, விவசாய தொழில்நுட்பத்தின் கடந்த கால அபிவிருத்திகள்; கொள்கைத்திட்டம்; முன்னேற்றங்கள் நிகழ்ந்த புற சூழ்நிலைகள்; 2000 ஆம் ஆண்டுகளில் அதற்கு அப்பாலும் தொழில்நுட்ப தெரிவை தீர்மானிக்கும் காரணிகள், எதிர்காலத்திற்கான சில விசேஷ தொழில்நுட்ப தேர்வுகள் ஆகியன பற்றி இந்தக் கட்டுரை சுருக்கமாக ஆராயவுள்ளது.

### கடந்த கால தொழில்நுட்ப முன்னேற்றங்கள்

நீர்ப்பாசன விவசாயத்தில் தொழில்நுட்பத்தின் கடந்த கால வளர்ச்சியும் முன்னேற்றமும் அடிப்படையில் அரசின் கொள்கைகள், முன்னுரிமைகள் ஆகியனவற்றிலேயே தங்கியிருந்தன. நிலம், நீர், மனிதன், நிதி மூலவளங்கள், சந்தை, கேள்வி, பல தரப்பட்ட விவசாய உற்பத்திகளின் பெறுமானம், ஆராய்ச்சி முயற்சிகள், பெறக்கூடிய அறிவு, தகவல் தளம் ஆகியனவற்றிலும் கூட இது தங்கியிருந்தது.

புராதன காலத்தில் செழிப்பு மிகுந்த நீரியல் நாகரிகமொன்றைக் கொண்டிருந்தது குறித்து இலங்கை பெருமைப்படுகிறது. அத்தகைய புராதன நீர்ப்பாசன கட்டமைப்பின் மிச்சசொச்சங்கள், திட்டமிடலில் அவற்றின் நேர்த்தியான சரியான பொறியியல் அம்சங்கள், வடிவமைப்பு, நிர்மாணம் ஆகியன மிகப்பழைய காலத்தில் முன்னேற்றகரமான சுதேச நீர்ப்பாசன தொழில்நுட்பம் இருந்தது என்பதை போதிய அளவு எடுத்துக்காட்டுகின்றன.

கைவிடப்பட்ட நீர்ப்பாசன கட்டமைப்புக்களை மீண்டும் கண்டுபிடித்து புதுப்பித்தல் மூலம் 19 ஆம் நூற்றாண்டு கடைசிப்பகுதியில் பிரிட்டிஷ் அரசு மேற்கொண்ட கொள்கை அந்தப் புராதன தொழில்நுட்பத்தின் ஒரு பகுதி மறுமலர்ச்சி காண்பதற்கு வழிவகுத்தது. புதுப்பிக்கப்பட்ட புராதன நீர்ப்பாசன அமைப்புக்கள் காணப்பட்ட பகுதிகளில் நிலமற்ற மக்களை 1930 களில் குடியேற்றிய காலகட்டத்தின்போது அரசின் முயற்சிகள் ஒரு புதிய கொள்கை அழுத்தத்தைப் பெற்றன. நிலம், நீர், நிதி, பயிற்சி பெறாத மனித வளம் ஆகிய மூலவளங்கள் அபரிமிதமாக கிடைத்த ஒரு சூழ்நிலையிலேயே குடியேற்றங்கள் இடம் பெற்றன. பயிர்கள், நிலம் நீர், தாவரங்கள் மற்றும் அவற்றுக்கு இடையிலான தொடர்புகள், தாக்கங்கள் ஆகியன பற்றிய தரவும், தகவலும் ஆரோக்கியமானதாக இருக்கவில்லை. ஆராய்ச்சிக்கு குறைந்த முன்னுரிமையே கொடுக்கப்பட்டிருந்தது. பயிற்சி பெற்ற வேலையாட்களும், தொழில்சார் நிபுணர்களும் அரிதாகவே இருந்தனர். இவ்வாறான புறச்சூழலுக்கு மத்தியிலேயே அந்தக் கொள்கைகள் செயல்படுத்தப்பட்டன. ஆகவே, நீர்ப்பாசனத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில் நிலம், நீர், நிதி, மனிதவள முகாமைத்துவ மூலகங்கள் குறித்து குறைந்த அக்கறை காட்டப்பட்டு வந்ததுடன் அது ஒரு சிவில் பொறியியல் நடவடிக்கையாகக் கருதப்பட்டது. நீர்ப்பாசனத்திற்காக நீரை பெற்று ஒழுங்குபடுத்தி சேமித்துவைப்பதற்கு தேவைப்பட்ட தொழில்நுட்பத்திற்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. அந்தக்காலத்தில் தென் இந்தியாவில் இருந்து வந்த குள நீர்ப்பாசன தொழில்நுட்பத்தையும் புராதன நீர்ப்பாசன தொழில்நுட்பத்தையும் அடிப்படையில் ஒத்ததாகவே இந்த புற சூழலுக்குள் பெற்றுக் கொள்ளப்பட்ட தொல்நுட்பம் அமைந்திருக்கிறது.

புதுப்பிக்கப்பட்ட நீர்ப்பாசன அமைப்பு பகுதிகளிலும் (பின்னர்) புதிய நீர்ப்பாசனத் திட்டங்களிலும் மக்களைக் குடியேற்றுவது சுதந்திரத்திற்கு பிற்பட்ட காலகட்டத்தில் அரசின் கொள்கையாக இருந்த போதிலும், குடியேற்ற அம்சம் மற்றும் நீர்ப்பாசன நீர், நிலம் ஆகியவற்றின் முகாமைத்துவத்துக்கு தேவையான தொழில்நுட்பங்கள் ஆகியவற்றிலும் பார்க்க நீர்ப்பாசன நிர்மாண தொழில்நுட்பத்துக்கே அதிக அழுத்தம் கொடுக்கப்பட்டது. எப்படி இருப்பினும் சமீப காலங்களில் கல்ஓயா நிர்மாணம், உடவளவே திட்டங்கள், மகாவலி திட்டத்தொகுதி ஆகியன குறிப்பிடத்தக்க நிர்மாண முயற்சிகளாகும். இவை நாட்டுக்குள் நவீன நீர்ப்பாசன நிர்மாண தொழில்நுட்ப உட்பாய்ச்சலை எடுத்து வந்தன.

நிலமானது, ஒரு வரம்பெல்லை கொண்ட மூலவளமாக படிப்படியாக மாறியபோது, அதற்கு ஏற்ப அரசாங்க கொள்கை இலக்கும் மாற்றமடைந்தது. அரிசியில் சுயதேவைப் பூர்த்தி அடைவது ஒரு தேசிய குறிக்கோளாகியது. நெற்செய்கைக்கான நீர்ப்பாசன நிலப்பரப்பை அதிகரிப்பதும், நில உற்பத்தியை (ஹெக்டேர் ஒன்றுக்கான நெல் விளைச்சல்) அதிகரிப்பதும் சுதந்திரமடைந்ததற்குப் பின்னர் அரசின் கொள்கையாக இருந்து வந்தது. புதிய கொள்கை காரணமாக இந்தக் காலகட்டத்தில் நீர்ப்பாசன விவசாய உபதுறையும், தொழில்நுட்பமும் ஒன்றுக்கு ஒன்று ஆதரவாக இருந்தன.

நீர்ப்பாசனத்தில் கடந்தகால தொழிற்நுட்ப முன்னேற்றங்களை பின்னோக்கிப்பார்க்கும் போது, நிலத்தின் விளைதிறனை அதிகரிப்பது தொடர்பான வெளிச்சூழல் இடையூறுகளை குறைப்பதற்கு பலதரப்பட்ட தெரிவுகள் முடுக்கிவிடப்பட்டதை அவதானிக்க முடியும். புவியீர்ப்பினாலான நீர்ப்பாசன முறைகளை - குளத்தில் தண்ணீரை தேக்கிவைக்கும் முறைகள் - (உலர் வலயத்தில் பொதுவாக காணப்படுவது), ஆற்றுநீர் ஓட்டப்பகுதிகள் அல்லது அணைக்கட்டு முறைகள் (ஈரவலயத்திலும், இடை மத்திய வலயத்திலும் காணப்படுவன) ஆகியன இதில் பிரதானமாக உள்ளடங்குகின்றன. ஏனைய தொழில்நுட்ப தீர்வுகள் வருமாறு: மேட்டு நிலங்களில் சாகுபடி செய்யப்படும் பயிர்களுக்கு நீரை மேல்நோக்கி பாய்ச்சும் நீர்ப்பாசன தொழில்நுட்பம்; வெள்ளக்கட்டுப்பாட்டு திட்டங்கள் (அதாவது நில்வளா பற்றும் ஜிங்கங்கை திட்டங்கள்) நீர் தேங்கி இருப்பதையும் வெள்ளத் தாழ் விவசாய நிலங்களில் நீண்ட காலம் தங்கியிருப்பதையும் குறைப்பதன் மூலம் பயிர்ச்செய்கையை சீராக்குவதற்கும் சமூக கட்டமைப்பை பாதுகாப்பதற்குமான வெள்ளக்கட்டுப்பாட்டு திட்டங்கள், வடிகால் சீராக்கல் திட்டங்கள்; அதாவது பயிர்ச்செய்கை காலங்களின்போது கரையோரப் பிரதேசங்களில் கடல் நீர் விவசாயக் காணிகளுக்குள் பாய்வதால் ஏற்படும் பயிர் பாதிப்பு, விளைச்சல் இழப்பு ஆகியவற்றைத் தடுப்பதற்கும், குறைந்த அலைக் காலங்களில் விவசாயக் காணியில் இருந்து கடலுக்கான வடிகால் வசதிகளாகவுமான உவர் நீர் வெளியேற்றுதல் தொழில்நுட்பம்.

புவியீர்ப்பு மூலமான நீர்ப்பாசன தொழிற்நுட்பத்தின் அளவும் பரிமாணமும் ஏனைய தேர்வுகளைப் பார்க்கிலும் மேலானவையாகும். இந்த தொழிற்நுட்பத்திலேயே பரிணாம வளர்ச்சிப்போக்கை அவதானிக்கமுடியும். சிறிய குளத் திட்டங்கள், ஆற்று நீர்த்திட்டங்கள், தனி நோக்கத்திற்கான அணைக்கட்டுகள், பிரதான நீர்த் தேக்கங்கள், (பராக்கிரம சமுத்திரம்) பலநோக்கு அணைக்கட்டுக்களும் நீர்த் தேக்கங்களும் (உதாரணம் கல்லோயா, உடவளவே மற்றும் விக்டோரியா போன்றன), இடையே இணைக்கப்பட்ட நீர்த்தேக்கங்கள் (உதாரணம் உல்ஹிட்டியா ரத்கிந்த - மதுறுஓயா) மற்றும் இறுதியாக ஒரு நதிப்படுகையில் இருந்து மறு நதிப்படுகைக்கு செல்லும் திசை திருப்பல் (உதாரணம் மகாவலி) ஆகியன இந்த முறையின் படிப்படியான வளர்ச்சிக்கட்டங்களாகும்.

மேற்படி நீர்ப்பாசன தொழிற்நுட்ப மேம்பாடுகள் முன்னேறி வருகையில், சமீப காலங்களில் குறிப்பாக 1920 ஆம் ஆண்டுக்குப் பின்னர் - தண்ணீரை திறமையாகப் பயன்படுத்தல் மற்றும் முகாமை செய்தல் ஆகியன தொடர்பான அக்கறைகள் அதிகரிக்க ஆரம்பித்தன. நிலத்தின் விளைதிறனை அதிகரிப்பதுடன் நீரின் உற்பத்தித்திறனையும் அதிகரிப்பதற்கான வழிவகைகளை கண்டு பிடிப்பதற்கான ஒரு புதிய கொள்கை திசைக்கு இது உந்திச் சென்றது. பருவகாலத்தில் (சிறு போகம், பெரும் போகம்) ஓர் அலகு நிலப்பரப்பில் (ஏக்கர் அல்லது ஹெக்டேர்) நெற்செய்கைக்கு பயன்படுத்தப்படும் நீரின் அளவை குறைப்பதற்கான





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய அக்கறை ஆரம்பத்தில் நீர் முகாமைத்துவம் என்ற பெயருடன் வெளித்தோன்றியது. தண்ணீரை பெற்று அதனை சேமித்து வைக்கும் செயல் முறையில் இருந்து, அதனை விநியோகிப்பது மற்றும் முகாமைத்துவம் செய்வதற்கான செயல்முறைக்கு நீர்ப்பாசன தொழில்நுட்பத்தை விஸ்தரிக்கும் கொள்கைப்பரிமாணம் இதன் விளைவாக உருவாகியது.

இந்த மாறும் புறச்சூழல் கடந்த இரண்டு தசாப்தங்களில் சில நீர்ப்பாசன தொழில்நுட்ப முன்னேற்றங்களுக்கு வசதி ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றது. நிலம் மற்றும் நீர் முகாமைத்துவத்துக்கு முககியத்துவம் அளிக்கப்பட்ட ஆராய்ச்சி முயற்சிகள், மண், நிலம் பயிர்கள் ஆகியன மீதான தரவு அடித்தளத்தையும், தகவல் மற்றும் அறிவுத் தொகுதிகளையும் போஷிப்பதற்கு பெரும் பங்களிப்புச் செய்துள்ளன. சொந்த முகாமைத்துவத்தை கவனத்தில் கொண்டு நீர்ப்பாசன கால்வாய் வடிவமைப்புகள் சில கருத்துருவ மாற்றங்களுக்குள்ளாகியிருக்கின்றன. அன்று தொட்டு போதிய கட்டுப்பாடு, ஒழுங்குபடுத்தல், அளவீட்டு உபாயங்கள் முகாமைத்துவத்திற்கு அழுத்தம் கொடுக்கும் வசதிகள் ஆகியவற்றை அளித்ததன் மூலம் நீர்த் தொகுதிகளின் உள்ளார்ந்த ஆற்றல்களை பெருக்கும் வகையிலேயே நீர்ப்பாசன தொழில்நுட்பத்தின் குவிமையம் அமைந்திருந்தது. பலதரப்பட்ட நீர் முகாமைத்துவ சீராக்கல் திட்டங்கள் மூலம் அவ்வாறான தொழில்நுட்ப முயற்சிகள் செயல்முறைப் படுத்தப்பட்டிருக்கின்றன. நீர்ப்பாசன புனரமைப்பு, அரசினால் மேற்கொள்ளப்பட்ட நவீனமயப்படுத்தல் திட்டங்கள், மகாவலி நீர்ப்பாசன வடிவமைப்பு நிர்மாணம் ஆகியன மூலமும் இவை அமுலில் விடப்பட்டன.

கடந்தகால நீர்ப்பாசன தொழில்நுட்பம் மீதான இந்தப் பகுதி பூர்த்தியாக்கப்படுவதற்கு முன்னர் சில கருத்துக்களை வலியுறுத்துவது அவசியமாகும். மாறிவரும் புறச் சூழல்கள், கொள்கை நோக்குகள் ஆகியனவற்றின் தேவைகளை அடைய நீர்ப்பாசன தொழில்நுட்பம் ஓரளவு வேகத்தில் முன்னேறிச் சென்ற போதிலும் பண்ணை நீர்ப்பாசன தொழில்நுட்பம் திருப்திகரமான முன்னேற்றத்தைக் காணவில்லை. வேறு களப்பயிர்களுக்கு நீர்ப்பாசனம் செய்யும் பலதரப்பட்ட பண்ணை முறைகள் பற்றி விவசாயத்திணைக்களமும் நீர்ப்பாசனத்திணைக்களத்தின் நிலப் பயன்பாட்டு பிரிவும் பல ஆராய்ச்சிகளை நடாத்தி வெற்றிகரமான முடிவுகளை அடைந்திருக்கின்றன. அந்த ஆராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்ட விஷயங்கள் நீர்ப்பாசன வடிவமைப்பில் போதியளவில் பயன்படுத்தப்படவில்லை. புதிய நீர்ப்பாசன வடிவமைப்பு கருத்துருவங்கள், நீர்ப்பாசன அட்டவணை முறைகள், கால்வாய் பண்ணை நீர்ப்பாசன கட்டமைப்பு. ஆகியவற்றை சிறந்த நீர் முகாமைத்துவத்தின் பொருட்டு அபிவிருத்தி செய்வதற்காக ஓரளவுக்கே ஆராய்ச்சி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### விவசாய தொழில்நுட்பம்

நீர்ப்பாசன விவசாய உபதுறை, விவசாய தொழில்நுட்பம் ஆகியனவற்றின் அபிவிருத்திகள் கடந்த மூன்று தசாப்தங்களிலும் ஒன்றுக்கு ஒன்று உதவியாக இருந்து வந்துள்ளன. நெல் விளைச்சலை அதிகரிப்பதற்கு விவசாய தொழில்நுட்பம் கணிசமான பங்களிப்பைச் செய்திருக்கிறது. தேசிய விவசாய ஆராய்ச்சி நிலையங்களில் உயர் விளைச்சல் தரும் குறுகியகால நெல் இனங்களை உருவாக்கிய உயிரியல் இரசாயன தொழில்நுட்பம், விவசாய இரசாயனப் பொருட்கள் மற்றும் இரசாயன உரங்கள் ஆகியன நீர்ப்பாசன தொழில்நுட்பத்தினால் உருவாக்கப்பட்ட பெரிய விவசாய நிலப்பரப்பில் விளைச்சலை பிரமாதமான அளவுக்கு அதிகரித்திருக்கின்றன.

இலங்கையில் நீர்ப்பாசன விவசாயத்துறையில் உயிரியல் இரசாயன மற்றும் பொறிமுறை தொழிற்நுட்ப வளர்ச்சி கடந்த சில தசாப்தங்களில் சிறப்பாக இடம் பெற்றுவந்துள்ளது. பாரம்பரிய குறைந்த விளைச்சல் இனங்களில் பெரும்பாலானவை புதிய நெல் இனங்களினால் மாற்றீடு செய்யப்படுகின்றன. நெற்செய்கைக்கான நிலத்தைப் பண்படுத்துவதில் விலங்கினங்களினால் இழுக்கப்படும் சாதனங்களின் இடத்தைகணிசமான அளவு உழவு இயந்திரம் பிடித்திருக்கிறது. பிரதான விவசாயப் பகுதிகளில் நாற்றுகளை இடம் பெயர்த்து நடும் சாதனத்தின் பயன்பாடு அடுத்து தொடர்ந்திருக்கிறது. களைகொல்லி, பீடை கொல்லிகளுக்கு கைதெளி கருவிகள் இப்போது பெரிதும் பயன்படுத்தப்படுகின்றன.

விவசாய நடவடிக்கைகளுக்காக மட்டுமன்றி, அன்றாட போக்குவரத்துக்கு வசதியாகவும் இரட்டைச் சக்கர உழவு இயந்திரம் குடியேற்றத்திட்டங்களில் மிகப் பிரபல்யம் அடைந்து வருகிறது. பலதரப்பட்ட நடுகை சாதனம், சூடடிக்கும் இயந்திரம், உழவு இயந்திரம் ஆகியன உருவாக்கப்பட்டிருந்த போதிலும் அவை போதியளவு ஊக்குவிக்கப்படவில்லை. இதனால் இலங்கையில் நீர்ப்பாசன விவசாயத்தில் அவை அதிகம் பயன்படுத்தப்படவில்லை. சூடடிப்பை இயந்திரமயப்படுத்தல், கால்வாய்கள், வடிகால்கள் ஏனைய தண்ணீர் நிலைகளில் இருந்து நீர்ப்பாசனம் செய்யமுடியாத மேட்டு நிலங்களில் பலதரப்பட்ட பணப் பயிர்களை சாகுபடி செய்வதற்கு வசதியாக தண்ணீரைக்கொண்டு செல்ல தண்ணீர் இறைக்கும் இயந்திரங்களைப் பயன்படுத்தல் ஆகியன புதிய போக்குகளாக உருவாகி வருகின்றன.

(அடுத்த இதழில் முடியும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர்ப்பாசன விவசாயத்தை பாதிக்கும் நிலம் தொடர்பான பிரச்சினைகள்

ஆர். டி. வணிகரத்ன

*கலாநிதி வணிகரத்ன மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு பிரிவின் பணிப்பாளராவர். அவர் பேராதனை பல்கலைக்கழக விரிவுரையாளராகவும், கமநல ஆய்வு பயிற்சி நிறுவகத்தில் துணை பணிப்பாளராகவும் முன்னர் செயற்பட்டுள்ளார். இலங்கையின் கமத்தொழில் மற்றும் நிலக்குத்தகை பிரச்சினைகள் குறித்து பல ஆராய்ச்சி அறிக்கைகளை அவர் தயாரித்துள்ளார்.*

அறிமுகம்

உற்பத்திக்கும் நுகர்வுக்குமான மூளவள ஒதுக்கீட்டின் அடிப்படையிலேயே, வறுமைக்கும் வளர்ச்சிக்குமிடையிலான உறவு அடிக்கடி விளக்கப்பட்டு வருகிறது. வறுமையையும் வளர்ச்சியையும் ஊக்கவிக்கும் நிலைமைகள் ஒன்றுக்கொன்று வித்தியாசமான மட்டங்களில் செயற்பட்டு வருகின்றன என்ற பொது அனுமானத்தை இந்த முற்கணிப்பு தருகிறது. ஆனால், இந்த நிலைமைகளானவை, தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப்படும் மூலதனக் குவிப்பு நிகழ்வுப் போக்குகளின் வேவ்வேறு வெளிப்பாடுகளே ஒழிய வேறில்லை. உதாரணமாக, உற்பத்திப் படிமுறையில் காணி உரித்துக்கள் குறித்த மாதிரி, வறுமையின் அளவிலும், இயல்பிலும் நேரடி தாக்கம் உடையதாக இருக்கிறது.

ஆகவே, இலங்கையைப் போன்ற கமத்தொழில் சமூக மொன்றில், வேளாண்மை முன்னேற்றம், பொருளாதார வாய்ப்புக்களின் உருவாக்கம் - அதே போல வறுமைப் பெருக்கம்- என்பவற்றை நிர்ணயிப்பவை விளைச்சல் வளர்ச்சியும், அந்த வளர்ச்சியின் அனுகூலங்கள் பரவலாக கிடைக்கக்கூடியதாக இருத்தல் என்பனவுமாகும். நீர்ப்பாசன விவசாயத்தை பாதிக்கும் நில உடமை, குடிவார முறை, நில உரித்துக்கள் போன்ற பிரச்சினைகளுடன் மேற் சொன்ன பின்னணி நிலை சம்பந்தப்பட்டிருப்பதால் நில ஆதாரத்தினால் வழங்கப்படும் தெரிவுகள் இவற்றின் அடிப்படையில் இங்கு பரிசீலனை செய்யப்படும்.

குடியேற்றத்திட்டங்களில் குடிவார முறை

கிராமப் புறங்களில் நிலம், உணவு, வருமானப் பாதுகாப்பு என்பவற்றை உத்தரவாதம் செய்வதற்கான படிப்படியான ஓர் உத்தி என்ற முறையில், மக்களை மீளக் குடியமர்த்தும் திட்டங்கள் நோக்கப்பட்டு வந்துள்ளன. 1930 கள் தொடக்கம் ஒன்றன் பின் ஒன்றாக வந்த அரசாங்கங்கள் அனைத்தும் இக்கொள்கையை பின்பற்றி வந்துள்ளன. ஈர வலயத்தில் வாழ்ந்த நிலமற்ற வறிய மக்களை கிராமப்புற விஸ்தரிப்புத் திட்டங்களின் கீழ் ஈர வலயத்திலேயே மீளக்குடியமர்த்துவதும், நீர்ப்பாசன வசதிகளையும், மானாவாரி வசதிகளையும் பெற்றுள்ள உலர் வலயத்தில் குடியமர்த்துவதும் முக்கியமான ஓர் உத்தியாக பின்பற்றப்பட்டு வந்தது, மேலும், உள்நாட்டு உணவு உற்பத்தியை பெருக்குவதற்கான ஒரு வழிமுறையாகவும், முழு அளவு கிராமிய அபிவிருத்திக்கான ஒரு முறையாகவும் அது கருதப்பட்டது.

1920 க்கும் 1985க்கும் இடையில் 793,468 ஹெக்டெயார் அரச காணிகள், பல்வேறு செய் திட்டங்களுக்கூடாக 870,622 குடும்பங்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்டன, (புதிய மகாவலித் திட்டம் மற்றும் சமீபத்திய செய்திட்டங்கள் என்பவற்றின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட காணிகளையும் இது உள்ளடக்கியுள்ளது.) 298,304 ஹெக்டெயார் பரப்பளவைக்கொண்ட 107 நீர்ப்பாசன குடியேற்றத்திட்டங்கள் உலர்வலயத்தில் உருவாக்கப்பட்டன. இத்திட்டங்கள், பல்வேறு செய்திட்டங்களின் கீழும் பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த நிலப் பரப்பில் 40% ஐ கொண்டிருந்தன. இந்த 107 திட்டங்களிலும் 326,083 நிலமற்ற, வறிய குடும்பங்கள் (மொத்தம் மீள மர்த்தப்பட்ட குடும்பங்களில் 26%) மீளக்குடியமர்த்தப்பட்டன.

நீர்ப்பாசன குடியேற்றத் திட்டங்களில் காணப்படும் சட்டபூர்வமான குடிவார முறை, 1935 ஆம் வருட 18 ஆம் இலக்க காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தில் விளக்கப்பட்டவா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ான, 99 வருட கால குத்தகையை அடிப்படையாக கொண்டதாகும். இந்த குத்தகை சில கட்டுப்பாடுகளையும் அதே போல நெகிழ்வுத்தன்மைகளையும் கொண்டுள்ளது. விற்பனை, அடகு, குத்தகை, உப பிரிவுகளாக பிரித்தல் என்பன மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருப்பது மட்டுமன்றி, கடன் பாக்கிக்காக பகிர்ந்தளிக்கப்பட்ட அரச காணிகளை சுவீகரித்துக்கொள்வதையும் இக்கட்டளைச்சட்டம் மிகத் தெளிவாக தடை செய்துள்ளது. குறிப்பிட்ட ஓர் அளவு உடைமை வரையில் இக்காணிகள் உப பிரிவுகளாக பிரிக்கப்படுவதையும் இச்சட்டம் தடை செய்கிறது. இந்த சட்ட ஏற்பாடுகளுக்கூடாக, குடியேற்றவாசிகள் நிலத்தின் மீது வரையறுக்கப்பட்ட உரித்துக்களைக் கொண்டிருப்பதனால், அது அவர்களுக்கு வெளி முதலீட்டாளர்களிலிருந்து பாதுகாப்பளிக்கின்றது.

நிலத்துக்கான அனுமதிப் பத்திரத்தை வைத்திருப்பவர், தனக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிலத்துக்கு ஒரு வாரிசுதாரரை குறிப்பிட முடியுமென 1935ன் கட்டளைச் சட்டம் விதித்துள்ளது. அனுமதிப்பத்திரம் பெற்றிருப்பவரின் மரணத்தின் பின்னர், உரித்து, அவரால் முறையாக பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும் வாரிசுதாரருக்குச் செல்கிறது. அவ்விதம் பெயர்கள் குறிப்பிடப்பட்டிராத சந்தர்ப்பங்களில் 99 வருட கால குத்தகை அனுமதிப் பத்திரத்துக்கு குடும்பத்திலிருந்து உரிமை கோருபவர்களில் ஒருவருக்கு முன்னுரிமை வழங்க முடியும். ஆகவே, இந்த 99 வருட குத்தகை முறை, நிலத்தின் அளவு, நிலத்தை மாற்றம் செய்தல், பகிர்ந்தளிக்கப்பட்ட நிலத்தை பெறுதல் என்பன மீது கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

1935 ஆம் வருட கட்டளைச் சட்டமும், 99 வருட கால குத்தகை முறையும் இரு முக்கியமான குறிக்கோள்களை அடிப்படையாக கொண்டிருந்தன. சிங்கெவி (1968) அவற்றைப் பின்வருமாறு கூறுகிறார்.

(அ) இலகுவான, இலவச உடைமை உற்பத்தியை அதிகரிப்பதற்கான அவசியமான ஊக்குவிப்பொன்றல்ல. வாரிசுரிமை காரணமாக, உடைமைகள் சிறு சிறு அலகுகளாக துண்டாடப்படும் போது, அது உற்பத்தி ஆற்றலைப் பாதிக்கிறது.

(ஆ) காணிச் சந்தை பூரணமற்றதாக காணப்படும் ஒரு சூழ்நிலையில், வரையறுக்கப்பட்ட குடிவார முறை, பகிர்ந்தளிக்கப்பட்ட அரச காணிகளில், ஒருவரே பெருமளவு காணிகளை குவித்துக் கொள்ளும் நிலைமையையும், நிலாச்சுவாந்தார் முறையையும் தடை செய்கிறது.

இலங்கையில் 1920 களில் தேசாதிபதியாக இருந்த சேர் கிளிபர்ட், விவசாயிகள் குடியேற்றத்திட்டங்களின் முதன்மை ஆலோசகர்களில் ஒருவராவார். அவரது கூற்றின்படி, ''வளமார்ந்த, தற்சார்புள்ள, தன்மானம்மிக்க உழவர்-நிலச் சொந்தக்காரர்களின் தொகுப்பொன்றை கட்டியெழுப்புவதே'' 99 வருட கால குத்தகையின் கீழ் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோளாகும். சுருக்கமாக சொல்வதானால், குடியேற்றத் திட்டங்களில், ''சந்தை நோக்கிலான'' குடும்ப பண்ணை முறையொன்றை உருவாக்குவதே இதன் நோக்கமாகும்.

இலங்கையின் வரண்ட வலயத்தில் நீர்ப்பாசனத்தின் கீழான குடியேற்றத் திட்டங்களை உருவாக்குவதில், 1935 தொடக்கம் அரசாங்கங்கள், இக்குடியேற்றத் திட்டப் பிரதேசங்களுக்கு, ஈர வலயத்தில் வாழ்ந்த நிலமற்ற குடும்பங்களை கவர்ந்திழுப்பதற்கு விரிவான பல உதவிகளை வழங்கிவந்தன. உலர் வலயத்தில் சூழ்நிலை ஆபத்தானதாக இருந்ததே இதற்கு காரணமாகும் எனினும், 1950கள் தொடக்கம், சார்புரீதியில் செலவு குறைந்த மீளக் குடியமர்த்தல் உத்திகள் பின்பற்றப்பட்டு வந்தன. ஒதுக்கப்பட்ட உடைமைகளின் அளவுகள் (வீட்டு வளவையும் சேர்த்து) வர வர குறைந்துகொண்டு வந்துள்ளன. இது 1930 களில் 3.5 ஹெக்டயார்களாகவும் 1940 களில் 2.9 ஹெக்டயார்களாகவும், 1950களில் 2 ஹெக்டயார்களாகவும் இருந்து, 1960களின் தொடக்கத்தில் 1.4 ஹெக்டயார்களாகவும் பின்னர் 1.1 ஹெக்டயார்களாகவும் மேலும் குறைவடைந்தது. இவ்விதம் காணியின் அளவு குறைக்கப்பட்டு வந்தமைக்கு பின்வரும் நியாயப்படுத்தல்கள் முன்வைக்கப்பட்டன.

(அ) குடியேற்றக் காணிகளுக்கு, நிலமற்ற நபர்களை உயர் அளவில் உறிஞ்சிக்கொள்ளல்.

(ஆ) உற்பத்தியை உச்ச மட்டத்தில் செறிவாக்குதல், அது போதியளவில் வெளியீடு, தொழில் வாய்ப்பு, வருமானம் போன்றவற்றை எடுத்து வரும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

குடியேற்றத் திட்டங்களில் பெருந்தொகையான பிரச்சினைகள் எழுந்துள்ள போதிலும், குடிவார பாதுகாப்பு முறைகள் நிலம் நிரந்தரமாக துண்டாடப்படுவதை பெருமளவுக்கு தடுத்து வந்துள்ளன. உலர் வலயத்தில் பகிர்ந்தளிக்கப்பட்ட காணிகளில் 7.8 சதவீதம் மட்டுமே தனியார் முதலீட்டாளர்களின் கைகளுக்கு சென்றிருக்க முடியும் என்று கருதப்படுகிறது.

(அடுத்த இதழில் முடியும்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆகவே சோஷலிசம் தோல்வி கண்டு விடமாட்டாது . . .

ஜோ. ஸ்லோவோ

சோஷலிசத்தின் எதிர்காலம் குறித்து கடந்த அக்டோபரில் நியூயோர்க்கில் இடம்பெற்ற சர்வதேச கருத்தரங்கொன்றில் நிகழ்த்தப்பட்ட உரையொன்றின் கட்டுரை வடிவம் இங்கு தரப்படுகிறது. ஜோ ஸ்லோவோ தென்னாபிரிக்க கம்யூனிஸ்டு கட்சியின் பொதுச் செயலாளர்; மற்றும் ஆபிரிக்க தேசிய காங்கிரசின் தேசிய நிறைவேற்று குழு உறுப்பினர். 'மன்த்லி ரிவியூ' சஞ்சிகையும் நியூயோர்க் மார்க்சிச பள்ளியும் இணைந்து நடாத்திய இக்கருத்தரங்கில் உலகெங்கணுமுள்ள முன்னணி செயல் வீரர்களும், ஆய்வறிஞர்களும் ஒன்று கூடியிருந்தனர். 'மன்த்லி ரிவியூ' சஞ்சிகைக்கு நன்றியறிதலைத் தெரிவித்து 'பொருளியல் நோக்கு' இக்கட்டுரையை வெளியிடுகிறது.

''சோஷலிசம் தோல்வி கண்டுவிட்டதா'' என்ற தனது முன்னைய சிறு பிரசுரத்தை தூக்கப்புள்ளியாக கொண்டு திரு. ஸ்லோவோ இந்த உரையை நிகழ்த்தியுள்ளார். இந்த தோல்விக்கு காரணம் சோஷலிசமோ அல்லது சோஷலிச கோட்பாடுகளோ அல்ல என்று வலியுறுத்தும் அவர் மார்க்சிசம் லெனினிசத்தை பிரயோகிப்பதில் சோஷலிஸ்டுகள் விட்ட தவறுகளே இதற்கான காரணமாகும் என்று கூறுகிறார். கேட்போர், இந்த சிறு பிரசுரத்துடன் நன்கு பரிச்சயமானவர்கள் என்ற அனுமானத்தின் அடிப்படையிலேயே இந்த உரை நிகழ்த்தப்பட்டுள்ளது.

இந்தப் பிரச்சினையைப்பற்றி நான் முன்பு ஆராய்ந்த பொழுது சற்று பெரிய மௌனங்களைச் சாதித்த குற்றத்தை ஒப்புக்கொள்கிறேன். அவற்றில் சிலவற்றை இப்போது பார்ப்போம். திரிபுகளையும் அவற்றின் விளைவுகளையும் பற்றி விபரிப்பது தெளிவாகப் போதுமானதல்ல. திரிபுகள் எப்படிச் சாத்தியமாயின? என்பதுதான் கேள்வியின் கரு.

உண்மையாக நடப்பில் உள்ள சோஷலிச அமைப்பில் ஸ்டாலினிசத்தை மீளப் புகுத்துவதன் வேர் தெளிவாக, உருவாகிவரும் ஒரு புதுவர்க்க அதிகாரிகள் மந்தியில் ஊன்றியுள்ளது. முதன்மைப் படுத்தப்பட்ட, செல்வாக்கான தமது நிலையைப் பேணிக்கொள்ளப் பொருளாதார அக்கறை கொண்டவர்கள் இந்தப் புதுவர்க்க அதிகாரிகள். நான் முன்பு ஆராய்ந்தது இந்த ஒரு மௌனம் தொடர்பானதும் தான்.

மாற்று விளக்கத்தை நான் இங்கு தரவிரும்புகிறேன். வர்க்கக் குறைவாக்கத்துக்கு எல்லை இல்லை. மனித வரலாற்றில் ஒப்பியல் ரீதியாக சிறுகாலத்துக்குப் பொங்கும் ஏற்றங்களினால் தனிமனிதர்களிடம் எழும் தற்காப்புத் தன்மையையும் எழுந்தமானப் போக்கையும் புறக்கணிப்பது அதேபோன்று தவறான வழியில் இட்டுச்செல்ல வழிவகுக்கும். அது அப்படி இல்லையானால், சோவியத் ஒன்றியத்துக்கும், கிழக்கு ஐரோப்பாவுக்கும் வெளியே உள்ள, எம்மைப் போன்ற பலரையும் உள்ளடக்கிய பலகோடி கம்யூனிஸ்ட்டுகளை போப்பரசரிலும் பார்க்க பரிசுத்தமானவர்கள் என்று இருந்தவர்களை, இன்றும் இருக்கும் சிலரை அதிகாரத்தையும் செல்வாக்கையும் அண்மிக்க முடியாதவர்களை எப்படி விமர்சிப்பது?

இந்த விடயம் முக்கியமானதென நான் கருதுகிறேன். ஏனெனில், ஒரு சர்வாதிகாரி அல்லது சர்வாதிகாரப் போக்குள்ள ஒரு குழு அதிகாரத்தைக் கைப்பற்றாமல் தடுக்க, வலுவுள்ள அமைப்புருப் பெற்ற உள்ளகக் கட்டமைப்பு ஜனநாயகத்தைப் பேணும் நெறிமுறைகளை சோஷலிச அரசியல் கட்டமைப்பு கட்டாயமாய் வேண்டி நிற்கிறது.

எனது அவசர தலையீட்டில் ஏற்பட்ட இன்னொரு மௌனம் மார்க்சிச - லெனினிசக் கோட்பாட்டில் லெனினிசத்தின் பங்கைப் பற்றியது. நாம் எல்லோரும் உண்டு வளர்ந்த லெனினிசம் என்ற உணவின் கணிசமான பகுதி உண்மையில் மீளக் கட்டித்தரப்பட்ட ஸ்டாலினிசம் தான் என்பது தெளிவு. அவற்றின் பெரும்பகுதி நியாயப்படுத்தலைத் தேடிய ஸ்டாலினிசம் தான். தற்காலிகமான குறிப்பிட்ட புரட்சி நடைமுறைகளை மாக்சிசத்தின் காலவரையறையற்ற உலகளாவிய நெறிகளாக மாற்றும் செயல் முறையாக அது அமைந்தது. இது சமூகத்திலும், கட்சிக்குள்ளும் ஜனநாயக விரோத முறைகளை நியாயப்படுத்த உதவிற்று. சமுதாய மாற்றம் செய்யப்பட்டபின் எழக்கூடிய எதிர்ப் புரட்சியின் நேரடித் தாக்குதலின்போதோ, அல்லது நாம் அனுபவித்தது போன்ற ஒரு சட்டவிரோத நடவடிக்கை நிலையிலோ, சிலவேளை தவிர்க்க முடியாததாகிவிடலாம். ஒரு லெனினிசக் கட்சி

எப்படி இருக்கும் என்ற தொகுப்பமைப்பில் இந்த ஜனநாயக விரோத நடவடிக்கைகள் சட்டபூர்வமாக்கப்பட்டுவிட்டன.

கம்யூனிஸ்ட் இயக்கத்தில் நீண்டகாலம் இருந்த எம்மைப் போன்றவர்களுக்கு, பல தசாப்தங்களுக்கு. ''என்ன செய்யப்படவேண்டும்? என்பதைத் தெரியும். 1902 இல் லெனின் எழுதிய இந்த நூல் எங்கள் மறைநூலாக மாறியது. ''என்ன செய்யப்பட வேண்டும்?'' என்ற நூலில் சொல்லப்பட்ட கட்சி பற்றிய கருத்து நிலை எவ்வளவு பொருத்தமற்றது, பொருந்தாதது என்பது இப்போது மிகவும் தெளிவாகி உள்ளது. சட்டபூர்வ நிலையில், அதிகாரத்தைக் கைப்பற்றிய நிலையில் இது பொருந்தாதது. சார் ஆட்சிக்கு எதிராக 1902 இல் லெனின் எழுதிய நூலில் உள்ள வழிமுறைகளை உண்மையான உலகுக்கு உயர்ச்சியாக அறிமுகப்படுத்துவது எவ்வளவு யதார்த்தமற்றது என்பது இப்போது தெரிகிறது. இதைத்தான் நாம் வினா - விடையாகப் படித்தோம்.

இவை எல்லாவற்றுடனும் தொடர்புடையதுதான் முன்னணி பற்றிய கருத்து நிலல. இந்தக் கருத்து நிலை புரட்சி எழுச்சிச் சூழல்களின் போதும், எதிர்ப்புரட்சிக் குழப்பங்களின் போதும் முதன்முதலாக இடம் பெற்றது. ஆனால் சோஷலிச குடிசார் சமூகத்தில் லெனினிசம் என்ற பெயரில் நிரந்தர இடம் தரப்பட்டுவிட்டது.

இது ஒரு கட்சி அரசு என்ற கருத்து நிலைக்கும் பொருந்தும். மார்க்சிச நூல்களில் எந்தக் குறிப்போ அன்றி முன்வரலாறோ இல்லாத நிலையில் - ஆனால் ஒரு குறிப்பிட்ட நாட்டின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தைப் பிரதிபலிக்கின்ற தன்மை கொண்ட - இந்த நிலையும், லெனினிச மார்க்கமாகத் தரப்பட்டுள்ளது.

எந்த வர்க்கத்தைப் பிரதிநிதித்துவப்படுதவதாக உரிமை கோரப்படுகிறதோ அந்த வர்க்கத்தினதோ அன்றிக் கட்சிக்கு, சமூகத்தினதோ, ஆதரவு இருக்கிறதோ. இல்லையோ என்பது இனிமேல் அர்த்தமற்றதாகிவிட்டது என்ற முடிவுக்கு இட்டுச் செல்கிறது. இது சட்டப்படியான தனியுரிமை பூண்ட தலைமைத்துவமே தவிர சமூக ஊடாட்டத்தினால் அல்லது ஆதரவினால் ஏற்பட்ட தலைமைத்துவம் அல்ல. உண்மையில் இனி எப்பொழுதுமே அது தன் இழையங்களோடு தொடர்புற்றிருக்கத் தேவையில்லை. இத்தனையும் லெனினிசத்தின் பெயரால் ஏற்படுத்தப்பட்டுவிட்டது.

தொழிலாளர் வர்க்கத்தின் சர்வாதிகாரம் என்ற கருத்து நிலையிலிருந்து குறுகிய காலத்தில் தொழிலாளர் வர்க்கத்தின் மீதான சர்வாதிகாரம் என்ற நிலைக்கு மாறிவிட்டது. அதாவது இன்றுள்ள நடைமுறைச் செயற்பாட்டில் இதுவே தொனிக்கிறது.

எப்படியாக இருந்தாலும் உண்மையான சோஷலிச அபிலாசைகள் மத்தியில் என்றாவது தொழிலாளர் வர்க்க சர்வாதிகாரம் என்ற கருத்து நிலைக்கு ஒரு பெறுமானம் இருந்ததா என்ற வினாவை நாம் எழுப்ப வேண்டும். மாக்சிச இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளவற்றிலும் பார்க்க மிகவும் இலகுபடுத்தப்பட்டுள்ள பூர்ஷுவா சர்வாதிகாரத்தை சோஷலிச சமூகத்துக்கான நியாயமான லெனினிசத்தின் மறுபக்கம் என்று சமன்படுத்த முடியுமா- அதாவது தொழிலாளர் வர்க்கத்தின் சர்வாதிகாரம் என்று? முழு சமூகத்தின் நலன்கள் பெயரால் அத்தகைய அதிகாரங்களை சோஷலிச அமைப்பு பிரயோகிக்கலாம் என்று நான் நம்பவில்லை. இதனை எந்த ஒரு வர்க்கத்தினதும் நியமான சர்வாதிகாரம் என்று விபரிக்க முடியாது.

கட்சிக்குள்ளும் சமூகத்துக்குள்ளும் சோஷலிசத்துக்கும் ஜனநாயகத்துக்கும் இடையே ஏற்பட்டுள்ள இடைவெளியை ஏற்படுத்திய அடிப்படைத் தவறுபற்றியே நாம் எல்லோரும் பொதுவாக ஆராய்கிறோம் என்று நான் நினைக்கிறேன்

இது உற்பத்தியாளனை சமூக பொருளாதார உருவமைப்பின் எல்லா மட்டங்களிலிருந்தும் சோஷலிசரீதியான ஒரு வகை அந்நியப்படுத்தலுக்கு இட்டுச் சென்றுள்ளது.

சோஷலிச அபிலாசைகளுக்கும் சோஷலிச யதார்த்தங்களுக்கும் இடையிலான இடைவெளியை நீக்குவதற்கு. 1985 முதல் கோர்பச்சேவ் எடுத்த முயற்சியினால் அவர் எதிர்நோக்கிய திரிசங்கு நிலை என்று எனக்குப்படும் விஷயத்தைப்பற்றி, இதை முடிப்பதற்குமுன் ஒரு சில சொல்ல விரும்புகிறேன்.

அவர் எதிர்நோக்கிய பிரச்சினைகளுள் ஒன்று. 1985 முதல் ஏற்பட்ட திருப்பங்களையும் திரிபுகளையும் விளக்குகின்றது. அவர் கட்சியின் உயர்பீடத்தை அடையுமுன் இருந்த 75 ஆண்டுகள் காலத்தின் நிலைமையின் பின்னணியில் அவர் எதிர்நோக்கியது தீர்வுகாண முடியாத திரிசங்கு நிலை என்னவெனில், கட்சியை ஜனநாயகப் படுத்தாமல் சமுதாயத்தை ஜனநாயகப் படுத்தாமல் சமுதாயத்தை ஜனநாயகப்படுத்தமுடியாது என்பதுதான். ஏனெனில், சமுதாயத்தின் ஒவ்வொரு நிலையிலும் கட்சி வகித்த மேலாதிக்க நிலைதான். ஆயினும், சமுதாயத்தின் அடிமட்டத்திலிருந்து ஜனநாயகப் பொருமல் ஏற்படாமல் கட்சியை ஜனநாயகப்படுத்தவழி ஏற்படாது. கேர்பச்சேவ் இதையே எதிர்நோக்கினார் தொடர்ந்து இன்றும் இதையே எதிர்நோக்குகிறார். கோழியா முட்டையா

( 51ம் பக்கம் பார்க்க )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை : 1990களில் அபிவிருத்தி ஆய்வு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள்

பொன்னா விக்னராஜா
(இணைப்பாளர், ஐ. நா. பல்கலைக்கழக தென்னாசிய செய்திட்டம்)

இக்கட்டுரை, கனடாவில் அமைந்துள்ள சர்வதேச அபிவிருத்தி ஆய்வு நிறுவனத்துக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வறிக்கையொன்றிலிருந்து தொகுக்கப்பட்டதாகும். இந்த ஆய்வினை ஒரு குழு மேற்கொண்டது. இக்குழுவில் கலாநிதி பொன்னா விக்னராஜா, கலாநிதி காமினி கொரயா, கொட்பிரே குணதிலக, என். எம். எம். ஐ. ஹுசைன், பேராசிரியர் பீ. ஹேவாவித்தாரண, ஏ. எஸ். ஜயவர்தன, பேராசிரியர் டப். டி. லக்ஸ்மன், எம். டி. டி. பீரிஸ், சரித்த ரத்வத்த, கலாநிதி நிமல் சந்தரத்ன, சுசில் சிரிவர்தன, திசரணி குணசேகர ஆகியோரும் அடங்கியிருந்தனர்.

முதலில், மூன்று தனித்தனி அறிக்கைகளில், இலங்கையின் இன்றைய பன்முகப்பட்ட அபிவிருத்தி மற்றும் ஜனநாயக நெருக்கடிக்கு வழிகோலிய பல்வேறு சமூக, பொருளாதார, அரசியல் பிரச்சினைகள் இனங்காணப்பட்டன. (வறுமை ஒழிப்பு-நடவடிக்கைத் திட்டத்துக்கான இறுதி அறிக்கை; நிர்வாக சீர்திருத்தங்கள் தொடர்பான அறிக்கை; இளைஞர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை) இந்த ஆவணங்கள், வழிகாட்டு கமிட்டி, இப்பிரச்சினைகள் குறித்து ஆழமான பகுப்பாய்வொன்றை மேற்கொள்வதற்கான துவக்கப்புள்ளியை வழங்கின. அராஜகத்திலிருந்தும் சமூகச்சீர்குலைவிலிருந்தும் நாட்டை உறுதியாக மீட்டெடுப்பதற்கு உதவக்கூடிய அபிவிருத்தி உபாயமொன்றினதும், ஜனநாயக கொள்கையொன்றினதும் கூறுகளை இனங்காண்டு கொள்வதே எதிரில் இருந்த மிகப்பெரிய சவாலாக இருந்தது. பெருமளவுக்கு இசைவான உபாயமொன்றை கட்டியெழுப்புவது எமது ஆராய்ச்சி ஆற்றலிலேயே தங்கியிருக்கிறது. எனவே, இந்த ஆற்றல் பரந்த முறையில் பலப்படுத்தப்பட வேண்டும் என்ற உண்மை தொடக்கத்திலேயே உணரப்பட்டிருந்தது. வறுமை ஒழிப்பு, அதிகார பகிர்வு, கல்வி முறையை பொருத்தமானதாக உருவாக்குதல் என்பன தொடர்பான இந்த மூன்று ஆணைக்குழுக்களினதும் மட்டுப்படுத்தப்பட்ட சிபார்சுகளும் கூட, தாக்கமான அமுலாக்கலுக்கு அதிகளவிலும் தர ரீதியில் வெவ்வேறு வகையினதுமான ஆராய்ச்சியை வேண்டிநின்றன.

இந்த துவக்கப்புள்ளியிலிருந்து, வழிகாட்டு கமிட்டி கலந்துரையாடல்களை நடாத்தியது. இனங்காணப்பட்ட பிரச்சினைகளுக்கு இடையிலான பரஸ்பர தொடர்பு குறித்து ஆழமாக பகுப்பாய்வு செய்வதற்கு ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. நமது நாட்டின் பன்முகப்பட்ட நெருக்கடியை மேலும் மோசமாக்குவதற்கு இந்தப் பிரச்சினைகளே பங்களிப்புச் செய்திருந்தன. அத்துடன் அவை ஒரே நேரத்தில் பீறிட்டு வெடித்தன. இப்பிரச்சினைகளாவன: (1) வறுமைப் பிரச்சினை-வறுமை, வறுமையை மீளுற்பத்தி செய்வது; (2) கலாச்சார போராட்டங்கள் - இனப்பிரச்சினை இதன் முன்னணியில் இருந்தது; (3) தலைமுறை இடைவெளி - தற்போதைய அமைப்பொழுங்குக்கெதிரான சவாலாகவும், இளைஞர் தீவிரவாதமாகவும் இது வடிவெடுத்தது; (4) இயற்கையைச் சூறையாடுவதுடன் தொடர்பான உயிரினச் சூழல் நெருக்கடி; (5) ஜனநாயக சீரழிவு - அரச அமைப்புக்கள் உடைந்து விடக்கூடிய அளவுக்கு பலவீனமடைந்தமையால் பல்வேறு கொந்தளிப்புக்களையும் சமனப்படுத்த அவற்றால் இயலவில்லை; பெருகி வரும் நெருக்கடியைச் சமாளிக்கும் ஆற்றலையும் அவை இழந்திருந்தன. (6) பால் முரண்பாடு - வறிய மகளிர் இரட்டைச் சுமைகளை சமாளிக்க வேண்டியிருந்தது; (7) சனப்பெருக்க நெருக்கடி, இறுதியாக, (8) பல்வேறு சர்வதேச மற்றும் பிராந்திய நிலைமைகள் இலங்கையின் மீது மோசமான பின் விளைவுகளை எடுத்து வந்தமை.

இந்தப் பிரச்சினைகள் அனைத்துமே ஒரே நேரத்தில் தலைதூக்கின. இவற்றை நுணுக்கமாக ஆராய்ந்து, அவற்றுக்கு எதிர்விளைவு காட்ட வேண்டிய பொறுப்பு அரசுக்கும் மக்களுக்கும் இருந்தது. ஏனெனில், இலங்கை மக்கள் உயர்ந்த கல்வியறிவு பெற்றவர்களாகவும், விழிப்புணர்வுள்ளவர்களாகவும் இருந்தனர். அத்துடன் இம்மக்கள், 1930 கள் தொடக்கம் ஜனநாயக அமைப்புக்களையும், சர்வஜன வாக்குரிமையையும் பரீட்சித்துப்பார்த்து வந்திருக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றார்கள். விரும்பியோ விரும்பாமலோ, இலங்கை தொடர்ந்தும் உலக அமைப்புக்குள் இணைந்து கொண்டு வந்தது, வெளிக காரணிகளை கட்டுப்படுத்தும் ஆற்றல் அதற்கு இருக்கவில்லை. இந்த சூழ்நிலையில், சுதந்திரம், சிறப்பானதும் நிலையானதுமான ஒரு சமூகம், பிராந்திய ரீதியிலும், சர்வதேசிய ரீதியிலும் பரஸ்பர தங்கியிருந்தல் என்பவற்றை யுள்ளடக்கிய நிகழ்வுப் போக்குகளில் அதிகளவில் அக்கறை காட்ட வேண்டியிருந்தது.

இந்த விஷயத்தில், சாதகமான ஒரு பக்கமும் இருந்தது. சார்பு ரீதியாக, சாதாரண வளர்ச்சி மட்டங்களிலும் கூட, விதிவிலக்காக உயர் அளவில் மானிட அபிவிருத்தி தரங்களை எட்டியுள்ள வறிய நாடொன்றுக்கான உதாரணமாக இலங்கை அங்கீகரிக்கப்பட்டிருந்தது. (பௌதீக வாழ்க்கைத்தர குறிகாட்டியும், ஐ. நா. அபிவிருத்தி திட்டத்தின் சமீபத்திய மானிட அபிவிருத்தி குறிகாட்டியும் இதனை தெளிவு படுத்துகின்றன). இரும்பு, நிலக்கரி, பெட்ரோலியம் போன்ற முக்கியமான இயற்கை வளங்களில் நாடு வறியதாக இருந்த போதிலும், நிலையான அபிவிருத்திக்கு பயன்படுத்தக்கூடிய ஏனைய மூலவளங்களை அது கொண்டிருக்கிறது. பிழைப்பூதிய பயிர்ச்செய்கைக்கும் ஏற்றுமதி பயிர்ச் செய்கைக்குமான நில மூலவளங்கள், கடல் சார் மூலவளங்கள், கனிப்பொருள் வளம், மழைவீழ்ச்சி மற்றும் நீர் வளங்கள், மிக முக்கியமாக மனிதவளம் என இவை விரிந்து செல்கின்றன. மூலதனமும் கூட ஒரு பிரச்சினையாக இருக்க மாட்டாது. ஏனெனில், நியாயமான ஒரு விகிதத்திலான உள்நாட்டு சேமிப்பும், கிடைக்கக் கூடிய சாத்தியமுள்ள வெளி-மூலதனமும் இதற்கு போதுமானது. இங்கு உள்நாட்டு அறிவுத் தொகுதியொன்று இருக்கிறது. இதனுடன் வெளித் தொழில்நுட்ப உதவி சேர்க்கப்படும் போது, அது பரந்த வீச்சிலான செலவுத்தாக்கம் கொண்ட தொழில்நுட்ப தெரிவுகளை வழங்க முடியும். நமது கலாசார விழுமியங்களான எளிய வாழ்க்கை முறையும், சிக்கனமும் இதற்கு மேலும் வாய்ப்பாக இருக்கிறது.

வழிகாட்டு கமிட்டி இந்த துவக்க புள்ளிகளை கவனத்தில் கொண்டு, இலங்கையில் நிலையான அபிவிருத்திக்கான நோக்கொன்றை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டது. இந்த அபிவிருத்தி முயற்சி மக்களை மையமாக கொண்டதாகவும், பங்கெடுப்பு இயல்புடையதாகவும், சுற்றுச் சூழலை பாதுகாப்பதாகவும், கலாச்சார ரீதியில் பொருந்தக் கூடியதாகவும் இருக்கவேண்டுமென அது கருதியது. கிடைக்கக் கூடியதாக இருக்கும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மூலவளங்களை வைத்து இந்த அபிவிருத்தி பாதையை உருவாக்கிக்கொள்ள முடியும் என்பதும் உணரப்பட்டது.

இலங்கையின் கடந்தகால அபிவிருத்தி முயற்சியில் மூன்று வேறுபட்ட கட்டங்கள் இனங் காணப்பட்டிருந்தன. பொருளாதாரம் தொடர்ந்தும் "தங்கியிருக்கும் முதலாளித்துவ" வகையைச் சார்ந்ததாகவே இருந்து வந்திருக்கிறது. ஆனால், இந்தக் கட்டம் ஒவ்வொன்றிலும் முரண்பட்ட அபிவிருத்தி தலையீடுகள் இருந்து வந்துள்ளன. வறியோருக்கு அரச மானியங்களையும், உள்ளீடுகளையும் வழங்கும் முயற்சிகளும் இவற்றுடன் இணைந்திருந்தன. 1977ன் பின்னர், உள்நாட்டு சேமிப்புக்களுக்கு குறைநிரப்பு செய்வதற்காக கணிசமான அளவில் வெளி உதவிப்பாய்ச்சல்கள் வந்துள்ளன. இந்த பல்வேறுபட்ட முயற்சிகளின் கூட்டு மொத்த தாக்கம், துரித வளர்ச்சியாகவோ அல்லது சிறப்பான பகிர்வாகவோ இருக்கவில்லை; நலன்புரி அரசொன்றும் உருவாக்கப்படவில்லை; மாறாக, மிகக்கடுமையான முரண்பாடுகள் தலைதூக்கத் தொடங்கின. வறுமையின் பெருக்கம், இளைஞர்கள் அன்னியமாதல், இனப்போராட்டம், சுற்றுச் சூழல் சீரழிவு போன்ற பிரச்சினைகளாக இவை உருவெடுத்தன. இப்பிரச்சினைகளை சமாளிக்கும் விதத்தில், குறிப்பாக 1980 களின் பின்னர், முடிவெடுக்கும் அதிகாரம் அதிகரித்த அளவுக்கு மத்தியமயப்படுத்தப்பட்டு வந்தது. ஜனநாயக முறையும் பலவீனமடைந்தது. இக்காரணிகள் அனைத்தும் படிப்படியாக ஒன்று திரண்டு, இன்றைய பன்முகப்பட்ட நெருக்கடிக்கு வழி கோலின. அத்துடன், இந்த நிகழ்வுப் போக்கை மாற்றியமைப்பதற்கு அவசியமான-மானிட மற்றும் பொருளாயத-மூலவள அடித்தளம் சீரழிந்திருந்தது. இலங்கைக்கு கணிசமான அளவில் வெளி மூலவளங்கள் வந்து சேர்ந்த போதிலும் கூட, சமூக கொந்தளிப்பினையும், வன்முறையையும் சமூக வீழ்ச்சியையும் அவற்றால் தடுக்க முடியவில்லை.

**விரிவான அபிவிருத்தி உத்தியொன்றுக்கான தேவை**

அதந்திரத்துக்குப் பிற்பட்ட இரு கட்டங்களில் கொள்கை வழிமுறைகளில் இரு வேறு அணுகுமுறைகள் காணப்பட்டன. 1960 - 1976 கட்டத்தில் அரச கட்டுப்பாடு பொருளாதாரத்தின் முனைப்புமிகு அங்கமாக இருந்தது. 1977-1988 கட்டத்தில் சந்தை நோக்கிலான கொள்கைகள் பின்பற்றப்பட்டன. எனினும், இந்த அணுகுமுறைகள், நலன்புரி நோக்கில் அமைந்த அரச, தனியார் துறை முறையில் எந்த அடிப்படை மாற்றத்தையும் எடுத்து வரவில்லை. மேலும், இந்த அமைப்புக்கு அவ்வப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதைக்கான கொள்கைகளும் திட்டங்களும் சேர்க்கப்பட்டன. இந்த கொள்கைத்தொகுதி வர வர சிக்கலாகிக் கொண்டு வந்தது. இவற்றுக்கென பல வார்த்தைப் பிரயோகங்கள் இருந்தன: இறக்குமதி பதிலீடு அல்லது ஏற்றுமதி ஊக்குவிப்பு, தனியார் தொழில் முயற்சி அல்லது அரச தொழில் முயற்சி, சந்தைச்சக்திகள் அல்லது அரச கட்டுப்பாடு, வளர்ச்சி அல்லது வறுமை ஒழிப்பு நவீன தொழில்நுட்பம் எதிர் பாரம்பரிய தொழில்நுட்பம், சிறிய தொழில் முயற்சிகள் எதிர் பெரிய தொழில்முயற்சிகள்.

இந்த வகையில், யதார்த்த நிலைக்கும் கோட்பாட்டு நிலைக்குமிடையில் விரிவான பிளவு காணப்பட்டது. இதற்கு நியாயப்படுத்தல்கள் வழங்கப்பட்டன. இந்தப் பிரச்சினைகள் தொடர்பாக, ஆராய்ச்சியையும், நுணுக்கமான பகுப்பாய் வினையும் அடிப்படையாக கொண்ட நடைமுறைச் சாத்தியமான உத்தியொன்றோ கொள்கைத் தொகுதியொன்றோ உருவாக்கப்படவில்லை. வெளியிடங்களில் அபிவிருத்தி செய்யப்பட்ட மாதிரிகளையும், நடைமுறைகளையும் அடிப்படையாக கொண்ட கோட்பாடுகளை வகுப்பதிலேயே அதிக கவனம் செலுத்தப்பட்டது. இவை எமது கலாச்சாரத்துக்கோ, அறிவுத் தொகுப்புக்கோ அல்லது கிடைக்கக் கூடியதாக இருந்த மூலவள அடித்தளத்துக்கோ பொருந்தக் கூடியவையாக இருக்கவில்லை,

இலங்கையில், பொருளாதார அபிவிருத்தியின் கலாச்சார பரிமாணத்துக்குள் ஆராய்ச்சிகள் நெறிப்படுத்தப்படுதல் வேண்டும். பொருளாதார வளர்ச்சியை தடுக்கக்கூடிய கலாச்சார காரணிகள் குறித்து போதியளவில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை. கிழக்காசிய மற்றும் தென்கிழக்காசிய நாடுகளுடன் ஒப்பிடும்போது. இலங்கையிலும் தென்னாசியாவின் பிற நாடுகளிலும் சார்புரீதியாக பொருளாதார செயற்றிறன் போதியளவில் காணப்படாதசுனை அவதானிக்கும் போது, தென்னாசியாவில் கலாச்சார காரணிகள் பொருளாதார வளர்ச்சிக்கு சாதகமற்ற நிலையில் இயங்குகின்றனவா என்ற கேள்வியை எழுப்ப வேண்டியிருக்கிறது. உதாரணமாக, இலங்கையில் சாதி அடுக்குமுறை பொருளாதார அபிவிருத்தியைப் பாதித்த ஒரு காரணியாக இருந்திருக்க முடியுமா என்ற கேள்வியை எழுப்பமுடியும். திருப்திகரமான பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமான மனப்பாங்குகளையும், விழுமியங்களையும் ஊக்குவிப்பதில், இலங்கையில் இயங்கும் கலாச்சார காரணிகளை புரிந்துகொள்வது தீர்க்கமான முக்கியத்துவமுடையதாகும்.

பொருளாதார அபிவிருத்தியின் கலாசார தாக்கம் தொடர்பான ஆய்வுகளும் அதேயளவுக்கு முக்கியமானவையாகும். பொருளாதார அபிவிருத்தி நிகழ்வுப் போக்கு தவிர்க்க முடியாத வகையில் கலாச்சார மாற்றத்தை எடுத்து வருகிறது. இந்த மாற்றம் சில சமயங்களில் சமூகரீதியில் அழிவுகரமானதாக இருக்கும் அபாயத்தைக்கொண்டதாக இருக்கமுடியும். "நவீனமயமாக்கல்" என்று வர்ணிக்கப்படும் நிகழ்வுப்போக்கு, இலங்கையில் அடிக்கடி எதிர்மறையான முறையில் நோக்கப்பட்டு வருகிறது. 1977 அரசாங்கம் பொருளாதாரத்தை தாராளமயமாக்கியதை அடுத்து இடம்பெற்ற துரிதகதியிலான வளர்ச்சி பொருட் குவிப்புக்கும் நுகர்வு வாதத்துக்கும் இட்டுச்சென்ற ஒரு நிகழ்வுப் போக்கு என்ற வகையிலும், பாரம்பரிய விழுமியங்களை அழித்து விடக்கூடிய ஒரு நிகழ்வுப்போக்கு என்ற வகையிலுமே பெரும்பாலும் நோக்கப்பட்டு வருகிறது.

பொருளாதார ரீதியில் வளர்ச்சி கண்ட ஒரு சமூகமாக நிலைமாறும் கட்டத்தை சமாளிப்பதற்கு, பொருளாதார வளர்ச்சியின் கலாச்சார பின்விளைவுகளை தொடர்ந்து ஆய்வுசெய்து வருவது அவசியமாகும்.

இந்த சூழ்நிலைகளின் கீழ், சமூக மாற்றத்துக்கான நிலைமாற்றப்பாதையை கண்டறிந்து நெறிப்படுத்துவது எப்படி என்பதும், முழுநாடும் அராஜகச் சேற்றுக்குள் விழுந்திருக்கும் நிலையை தலைகீழாக மாற்றியமைப்பது எப்படி என்பதுவுமே 1990 களில் இலங்கை எதிர்நோக்கும் நீண்டகால சவால்களாகும். சிக்கலான அபிவிருத்தி உத்திகளின் தொகுதியொன்றே இதற்கான தேவையாகும். தற்போதைய நெருக்கடிக்கும் நிலையான அபிவிருத்தி மார்க்கத்துக்குமிடையே காணப்படும் இடைவெளியை நிரப்பக்கூடிய ஆற்றலை இலங்கைக்கு கிட்டச் செய்வதற்கு அவசியமான நிலைமாற்றப் பாதையை இனங்கண்டு கொள்வதே உடனடி சவாலாக இருக்கிறது. கண்டறியப்பட வேண்டிய அபிவிருத்தி உத்திகளின் தொகுதி வறுமை ஒழிப்பு, போஷாக்கின்மை, இளைஞர் விரக்தி. வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற பிரச்சினைகளை நியாயமான முறையிலும், உடனடியாகவும் கவனிக்கக் கூடியதாக இருக்க வேண்டும். அது, அதே வேளையில், கைத்தொழில் மயமாக்கலிலும், நவீனமயமாக்கலிலும் கடந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளின் பலாபலன்களை முற்றிலும் ஒழித்து விடுவதாகவும் இருக்கக்கூடாது.

மக்கள் பங்கேடுப்பும், அதிகார பரவலாக்கலும் இன்றி, இப்பிரச்சினைகளை தாக்கமான முறையில் சமாளிக்க முடியும் என அனுமானிப்பது தவறாகும். நிர்வாகத் திறமையை விருத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வதன் மூலமும், அதிகாரத்தை அதிகளவுக்கு மத்தியமயப்படுத்துவதன் மூலமும் மட்டும் இந்த அமைப்பு முறையை இனியும் சமாளித்துவரமுடியாது. அத்துடன் தனியார் துறையின் முகாமைத் திறன்களை விருத்தி செய்வதும், வறுமை ஒழிப்புத் திட்டமும் கூட இதற்கு உதவப் போவதில்லை. மக்களை அனைத்து மட்டங்களிலும் ஒன்று திரட்டி, ஒழுங்குபடுத்தி விழிப்புணர்வூட்டும் பாரிய முயற்சியொன்று இதற்கு அவசியமாகும். மக்கள் பங்கெடுப்புடன் கூடிய, கலாசார ரீதியிலும் உயிரினச் சூழல் ரீதியிலும் வலுமிக்க வறுமை ஒழிப்புத் திட்டமொன்றுக்கும் தொழிற் செறிவுமிக்க, உள்நாட்டு மூலவளங்களின் அடிப்படையில் அமைந்த பன்முகப்படுத்தப்பட்ட கைத்தொழில் மயமாக்கல் திட்டமொன்றுக்குமிடையே ஓர் இசைவுநிலை காணப்படுதல் வேண்டும். வளர்ச்சிக்கும் சமத்துவத்துக்கும் பங்களிப்புச் செய்வதற்கு இவை இரண்டும் அவசியமாகும்.

இலங்கை, வரலாற்று ரீதியான மார்க்கமொன்றில் செல்லவேண்டியிருக்கிறது. வேறுபட்ட பின்னணிகளில், வித்தியாசமான சரித்திரச் சூழ்நிலைகளில் உருவாக்கப்பட்ட கைத்தொழில் மயமாக்கல் மாதிரிகளை (அவற்றின் வெற்றியை அடிப்படையாகக் கொண்டு) வெறுமனே கண்மூடித்தனமாக பின்பற்ற முயல்வது பொருத்தமானதாகவோ நிலைத்து நிற்கக்கூடியதாகவோ இருக்கமுடியாது. இலங்கை தனக்கேயுரித்தான வரலாற்று ரீதியான நிலைமாற்றத்தை இனங்கண்டு கொள்ளவேண்டும். இதற்கு இடையறாத ஆராய்ச்சியும், புதுமைப் புனைவிலான தெரிவுகளுக்கான தேடலும், பெருமளவுக்கு நெகிழ்ந்து கொடுக்கும் தன்மையும் அவசியமாகும்.

சார்க் நாடுகள் பின்பற்றக் கூடிய கைத்தொழில் மயமாக்கல் மற்றும் வறுமை ஒழிப்பு உத்திகள் குறித்து தென்னாசிய கண்ணோட்டத்திலான சிந்தனையும், ஆராய்ச்சியும் மிகக்குறைந்த அளவிலேயே இடம்பெற்று வந்திருக்கிறது. ஜப்பானிய மிகை மற்றும் கடல் கடந்த அபிவிருத்தி உதவியில் தென்னாசியாவுக்கு 20% ஐ வழங்குவதென்ற ஜப்பானின் முடிவு என்பன புதியதொரு வாய்ப்பை வழங்கியுள்ளன. இது தென்னாசியாவுக்கு பல்வேறு கொள்கைத் தெரிவுகளையும் எடுத்துவருகிறது. இலங்கை போன்ற நாடுகள் தேசியரீதியில் நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தி குறித்த உத்தியொன்றை வகுத்துக்கொள்ள முடியாதிருப்பின், தென்னாசிய பிராந்தியத்தின் பின்னணி அதிக தெரிவுகளை வழங்கமுடியும். குடிபெயர்ந்த தொழிலாளர்கள் அகதிகளாக திரும்பி வருதல், இதன்மூலமான வருமான இழப்பு, உயர் பெட்ரோலிய விலைகள். முக்கிய தேயிலைச் சந்தையொன்றின் இழப்பு போன்றவற்றை எடுத்து வந்த தற்போதைய மத்திய கிழக்கு நெருக்கடி, இலங்கை தென்னாசிய நாடுகளுடன் இணைந்து சர்வதேச பரிமாணங்களை பிறிதொரு முறையில் நோக்கவேண்டிய தேவையை ஏற்படுத்தியுள்ளது. மேலும், 1992ன் ஐரோப்பாவை எதிர்கொள்ள இலங்கையும் ஏனைய சார்க் நாடுகளும் தயார் நிலையில் இருப்பதாகவும் தெரியவில்லை. மாலைதீவு சார்க் உச்சி மாநாட்டில் பிராந்திய அபிவிருத்திக்கான சார்க் நிதியம் குறித்து அறிவிக்கப்பட்டமை, இப்பிரச்சினைகளை முழு அளவில் பகுப்பாய்வு செய்வதற்கு ஒரு வாய்ப்பினை அளித்துள்ளது.

### ஜனநாயகம் இராணுவமயமாக்கல் மற்றும் அதிகார பரவலாக்கல்

மேலே விவரிக்கப்பட்ட நிலையான அபிவிருத்திக்கான உத்தி (நாணயத்தின் மறுபக்கமான) பங்குபற்றும் ஜனநாயகம் இன்றி அமுல் நடத்தப்பட முடியாததாகும். சுதந்திரத்துக்கு பிற்பட்ட இலங்கையில் தேசத்தை கட்டியெழுப்பும் பணி பல தடங்கல்களை எதிர்நோக்கியது. சமீப காலத்தில், அராஜகம், வன்முறை, தீவிரவாதம் என்பன முன்னெப்போதுமிருந்திராத அளவில் நாடெங்கும் வியாபித்துள்ளன. குறிப்பாக வடக்கிலும் கிழக்கிலும் காணப்படும் இனப்பிரச்சினை மிக மோசமான கட்டத்தை அடைந்திருக்கிறது. சிங்கள பெரும் பான்மையினரையும் தமிழ் சிறுபான்மையினரையும் இது பிரித்து வைத்துள்ளது. மறுபுறத்தில், தென்னிலங்கையில் வர்க்கம், சாதி, தலைமுறை என்பவற்றை அடிப்படையாக கொண்ட பிரிவினைகள் பரவி வருகின்றன. பொது ஜனங்களிடையே நவீன நோக்கிலான, மதச்சார்பற்ற தேசிய விழிப்புணர்வொன்றை உருவாக்குவதற்கு வழிகோலக் கூடிய பரந்த சமூக அடித்தளமொன்றுக்கான அரங்கினை அமைப்பதில் இலங்கையின் சுதந்திர இயக்கம் தோல்வி கண்டிருந்தது. சரித்திரம் விட்ட இந்த தவறுகளின் விளைவுகளை, சிங்கள, தமிழ் இளைஞர்களின் இன்றைய ஆயுதந்தாங்கிய எழுச்சியில்காண்கிறோம். அத்துடன் பின்விளைவாக பாதுகாப்புப் படைகள் ஒடுக்கு முறையுடன் கூடிய எதிர் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன.

இந்த நிலைமைக்கு அரசு இரு வழிகளில் எதிர்விளைவு காட்டியது. ஒரு பக்கம், பாதுகாப்புப் படையணிகள் மிக வலுவான முறையில் கட்டியெழுப்பப்பட்டன. இதனையடுத்து, அரசு இராணுவமயமாகும் ஒருபோக்கு காணப்பட்டது. மறுபக்கம், ஆட்சியில் பிரயோகிக்கக்கூடிய மாற்று ஜனநாய அமைப்புக்களுக்கான தேடல் மேற்கொள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளப்பட்டது. அதிகார பரவலாக்கல், மாகாண சபைகள் மற்றும் கிராம மட்ட அமைப்புக்கள் என்பவற்றை நோக்கிய கொள்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. அத்துடன் சமூக நீதி, சமத்துவம், தேசிய விழிப்புணர்வு போன்ற பிரச்சினைகள் பொது மக்களிடையே பரவலாக விவாதிக்கப்பட்டு வந்தன. ஆட்சியதிகார பகிர்வு மற்றும் வறியோரதும் பலவீனமான சமூக பிரிவினரதும் பங்கெடுப்புடன் கூடிய பன்முகப்படுத்தப்பட்ட நிர்வாகம் என்பவற்றுக்கான அவசியம் இந்த விவாதத்தின் அடிப்படை விஷயமாக இருந்தது.

அதிகார பரவலாக்கம் என்பது நிர்வாகம், அரசியல் மற்றும் பொருளாதாரம் என்ற மூன்று பரிமாணங்களைக் கொண்டதாக இருக்கிறது. நிர்வாக சீர்திருத்த அம்சத்தில் தற்பொழுது காட்டப்பட்டு வரும் அழுத்தம், சமூக பொருளாதார மற்றும் அரசியல் பரிமாணங்களை ஆழமாக கவனத்தில் எடுப்பதன்மூலம் சமச்சீர் செய்யப்படவில்லை. அரசியல் சீர்திருத்தம் தொடர்பாக, அரசியல் அமைப்புக்களை ஜனநாயக மயப்படுத்தல் குறித்து போதிய ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. அதன் காரணமாக, அதிகார பரவலாக்கல் கொள்கையில் அடிப்படை மாற்றம் ஏற்பட்டிருந்த போதிலும் பின்பற்றப்பட்ட மாதிரிகள் அதே அடிப்படை அரசியல் கட்டமைப்பின் தொடர்ச்சிகளாகவே இருந்தன.

கொள்கை விளக்கங்களுக்கும் அவை அமுல் செய்யப்படும் விதத்துக்குமிடையே தொடர்ந்தும் பாரிய வித்தியாசம் காணப்பட்டு வருகிறது. மாகாண சபை முறை நடைமுறையில் பலவீனமாகாதாகவே இருக்கிறது. இந்த சபைகள் மத்திய அரசின் பிரதிபலிப்புக்களாக நோக்கப்படுவதனால், இவற்றில் மத்திய அரசு மாதிரியே மீள அமுல் செய்யப்படுகிறது. அத்துடன் அரசாங்கம் எதிர்க்கட்சி என்ற இரு கூறான நிலையும் காணப்படுகிறது. இலங்கையில், மத்தியமயப்படுத்தும் ஒரு கலாச்சாரம் நிலவி வருவதால் அது அதிகார பரவலாக்கலுக்கான முயற்சிகளை தடைப்படுத்திவருகிறது. வடக்கு கிழக்கில் காணப்படும் நிலைமை வேறுபட்டதாகவும், தென்னிலங்கையில் காணப்படும் பிரச்சினை வேறுபட்டதாகவும் இருப்பதால் அதிகார பரவலாக்கல் முறை குறித்து இன்னமும் ஆழமான முறையில் ஆராய்ச்சிகளை மேற்கொள்ள வேண்டிய தேவை உள்ளது. அதிகார பரவாக்கல், பன்முகப்படுத்தல், ஜனநாயகம், இன ஒற்றுமை, ஐக்கிய இலங்கையில் மக்கள் பங்கெடுப்புடனான ஆட்சி போன்ற பரந்த விடயங்கள் தொடர்பாக விரிவான ஆராய்ச்சிகள் நடத்தப்பட வேண்டியுள்ளது.

(46 ம் பக்கத் தொடர்ச்சி)

முதலில் வந்தது என்ற நிலையில் அவர் இருக்கிறார்.

இந்தப்புதிய சிந்தனையின் விளைவாக மயிரிழை வேறுபாடுகளை முற்றிலும் ஆதரிக்காமலும், சோவியத் சமூகத்தில் மேற்கத்திய முதலாளித்துவம் பற்றி நிலவும் திரிபு விளக்கத்தையிட்டுக் கூச்சம் அடையும் அதே வேளையில், சோவியத் ஒன்றியத்தில் இன்று ஏற்பட்டுள்ள மாற்றங்கள் உண்மையான சோஷலிசம் என்று நாம் விளங்கிக் கொள்ளும் சோஷலிசத்தின் ஏதோ ஒருவகை அல்லது மறுபிறப்பு ஏற்படுவதில் முடிவடையும் என்று நான் நம்புகிறேன்.

இறுதியாக எமது நிலைபற்றியும் எமது நிலைப்பாடுபற்றியும் ஒரு வார்த்தை. உலகநாடுகளுள் கம்யூனிஸ்ட் கட்சியும், சோஷலிசக் கருத்துகளும் தேய்மானம் அடையாத ஒரு சில நாடுகளுள் எமது நாடும் ஒன்று என்பதை உதாரணமாகக் காட்டப்படுவதை நீங்கள் எல்லோரும் அறிவீர்கள். எமது நாட்டில் எமது கட்சிக்கு தனித்துவமான ஒரு தோற்றப்பாடு உண்டென்பது உண்மை. நாடு பூராவும் கறுப்பர்கள் மத்தியில் ஒரு பழைமைப் பிடிப்புள்ள தேசிய பத்திரிகை அண்மையில் நடத்திய செல்வாக்குக் கணக்கெடுப்பில் எமதுகட்சி மூன்றாம் இடத்தைப் பெற்றது. முதலிடம் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ்; இரண்டாம் இடம் ஐக்கிய ஜனநாயக முன்னணி; மூன்றாவது இடம் எமது கட்சி. இன்னொரு அண்மைக்காலக் கணக்கெடுப்பில் நகர்ப்புறக் கறுப்பர்கள் 70% சோஷலிச வருங்காலத்துக்கு ஆதரவாக இருந்தனர் என்பது இன்னும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

கோர்பச்சேவ் சோவியத் ஒன்றியத்தில் கட்சியிலும் சமுதாயத்திலும் ஏற்படுத்த முயற்சி செய்த மாற்றங்களுக்கு முன்னதாகவே, சில அம்சங்களில் எமது கட்சி, முன்னணி பற்றிய கருத்து நிலை, பொதுமக்கள் அமைப்புகளுடனான உறவு, இன்னோரன்ன விஷயங்களில் இருந்த திரிபு வாதங்களினின்றும் பிரிந்து சென்றுவிட்டதே எமது கட்சியும் சோஷலிசமும் செல்வாக்குப் பெற்றதற்கு ஒருவகையில் காரணம் என்று நான் கருதுகிறேன்.

ஆனால் இவை எல்லாம் எமது வேலை என்று நாம் எம்மை ஏமாற்றிக்கொள்ள விரும்பவில்லை. அடிப்படையில் சோஷலிச அமைப்புக்கு தென்னாபிரிக்காவில் செல்வாக்கு ஏற்படக் காரணம், உண்மையில் சோஷலிசம் தோல்வியுற்று விடவில்லை. – முதலாளித்துவமே தோல்வியுற்றுள்ளது, மிகமோசமாக என்பதுதான். சோஷலிசம் தோற்றுப் போகாதிருக்க நாம் ஒரு கட்சி என்ற அடிப்படையில் முயற்சி செய்யவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாச்சார உரிமைகள் தொடர்பான பிரச்சினை

ரொடொல்போ ஸ்டவன்ஹகன்

ஐ. நா.வின் பொதுச்சபையி னாலும் மற்றும் சர்வதேச தொழில் ஸ்தாபனம், யுனெஸ்கோ போன்ற முகவராண்மைகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள மனித உரிமைகள் குறித்த சர்வதேச பட்டயம், பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கை போன்றவற்றில் கலாசார உரிமைகள் குறிக்கப்பட்டுள்ளன. அத்தகைய ஏனைய பல ஆவணங்களிலும் கூட இந்த விடயம் இடம்பெற்றுள்ளது. ஐரோப்பிய உடன்படிக்கை, ஆபிரிக்க பட்டயம், சமூக உத்தரவாதங்களுக்கான அமெரிக்க பட்டயம் போன்ற பிராந்திய ஆவணங்களிலும் கலாசார உரிமைகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. ஆனால் இந்த ஆவணங்கள் எவற்றிலும் கலாசார உரிமைகள் என்பதற்கு தெளிவான வரைவிலக்கணம் எதுவும் தரப்படவில்லை. கலாசார உரிமைகள் மனித உரிமைகளாக கருதப்பட வேண்டுமா என்பது குறித்து இப்பொழுது பரவலாக விவாதங்கள் இடம் பெற்று வருகின்றன. கலாசார உரிமைகள் என்றால் என்ன?

ஒரு கண்ணோட்டத்தின் படி, கலாசார உரிமைகள் என்ற கருதுகோள், கலாசாரத்துக்கான உரிமையென மிக எளிமையாக கூறப்படுகிறது. இதனை, யுனெஸ்கோ, கலாசார அபிவிருத்திக்கான உரிமையென பொதுவாக அர்த்தப்படுத்தியுள்ளது. கலாசார அபிவிருத்தி என்பது கலாசார மாற்றத்துக்கான குறிப்பான ஒரு நிகழ்வுப் போக்கு என்பதனை பல அரசாங்கங்களும், சர்வதேச அமைப்புக்களும் ஏற்றுக்கொண்டுள்ளன. இதனை சிலர் (பொருளாதார, சமூக, அரசியல் போன்ற) ஏனைய அபிவிருத்தி வடிவங்களுக்கு இணையானதாக நோக்குகிறார்கள்.

பொருளாதார அபிவிருத்தி என்பது, பொருட்களினதும் சேவைகளினதும் பெருக்கம், தலா நபர் தேசிய உற்பத்தி அதகரிப்பு மற்றும் மக்களுக்கிடையே சிறந்த முறையிலான பகிர்வு என்பவற்றைக் காட்டுவதாக இருப்பின், கலாசார அபிவிருத்தி என்பது, "அதிகளவு கலாசாரம்", பல்வேறு தரப்பு மக்களும் கலாசாரத்தை அடையக்கூடிய வாய்ப்பு போன்றவற்றைக் கொண்டதாக இருக்க வேண்டுமென விவாதிக்கப்படுகிறது. அனைத்துமே பெருமளவில் கிடைக்கும் ஒரு நிலையென இது பொதுவாக வர்ணிக்கப்படுகிறது. நிறைய நூல்கள், மேலும் மேலும் நூலகங்களை ஸ்தாபித்தல்; பெருமளவு செய்திப்பத்திரிகைகள், அருங்காட்சியகங்கள், டெலிவிசன் என்று அடுக்கிக்கொண்டே போகலாம். எனினும், அரசாங்கங்களினதும் அரசுகளுக்கிடையிலான அமைப்புக்களினதும் கலாசார அபிவிருத்தி தொடர்பான கொள்கைகளில் இந்த கலாசார அபிவிருத்தியின்தரம் அல்லது இயல்பு என்பன குறித்து அதிகம் பேசப்படுவதில்லை. "கலாசார அபிவிருத்தி" என்றால் என்ன என்பது குறித்து ஒரு கருத்தொருமைப்பாடு காணப்படுகிறது என்ற எடுகோளின் அடிப்படையிலேயே இவை யாவும் மேற்கொள்ளப்படுகின்றன.

இத்தகைய கருத்தொருமைப்பாடு காணப்படுவதாக நான் நினைக்கவில்லை. மேலும் "கலாசார அபிவிருத்திக்கான உரிமை" குறித்த பொதுவான கூற்றுக்கள், எமது சமூகத்தின் அடிச்சரடான கலாசார முரண்பாடுகளை மறைப்பனவாகவும் உள்ளன. சமூக, பொருளாதார, அரசியல் முரண்பாடுகளைப் போலவே இந்த கலாசார முரண்பாடுகளும் காணப்படுகின்றன. "கலாசாரத்துக்கான உரிமை" என்பது "பொது கலாசாரத்துக்கான உரிமை" அல்ல; அது "தனது சொந்த கலாசாரத்துக்கான உரிமை" என்ற உண்மையை நாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். பொது கலாசாரமும் ஒருவரின் சொந்த கலாசாரமும் ஒன்றாக இருக்க வேண்டுமென்பதில்லை.

கலாசார உரிமைகள் தொடர்பான முக்கியமான சில கேள்விகளை இது எழுப்புகிறது. உதாரணமாக, மனித உரிமைகள் தொடர்பான அகிலம் தழுவிய பிரகடனத்திலும் ஏனைய ஆவணங்களிலும் (பாரபட்சமின்மை அல்லது) சமத்துவம் குறித்த கோட்பாடு ஓர் அடிப்படை கூறாக இருக்கிறது. இரண்டாவது உலகப் போருக்கு பிற்பட்ட காலத்தில் மனித உரிமைகள் தொடர்பாக இடம்பெற்ற விவாதங்களின் போது, எவருக்கும் பாரபட்சம் காட்டாத கோட்பாடு கண்டிப்பான முறையில் பின்பற்றப்பட்டால், மனித உரிமைகளையும் "கூடையில்" உள்ள எல்லா பொருட்களையும் – இவை சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் இருந்தாலும் சரி, பொருளாதார சமூக, கலாசார உரிமைகளாக இருந்தாலும் சரி – அனைவரும் பெற்றுக்கொள்வதற்கு சமமான வாய்ப்பு வழங்கப்பட வேண்டுமென்று சுட்டிக்காட்டப்பட்டது. அனைவரும் அனைத்து உரிமைகளையும் அனுபவிப்பதனை உத்தரவாதப்படுத்துவதற்கு சம..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த்துவம் குறித்த கோட்பாடு மட்டும் போதுமானதா என்பது இன்றெழுந்துள்ள மிக முக்கிய மான ஒரு பிரச்சினையாகும். இன்றைய சமூகத்தின் அமைப்பு மற்றும் அதன் அசைவுப் போக்கு என்பவற்றைப் பொருத்தவரை யில், அனைவரும் அனைத்து உரிமைகளையும் பெற்றுக்கொள் வதற்கு சமத்துவக் கோட்பாடு குறித்த இந்த பிரகடனம் மட்டும் போதியதல்ல என்பதே பெருப்பாலானோரின் கருத்தா கும். எவருக்கும் பாரபட்சம் காட்டப்படாத நிலை உண்மை யில் காணப்பட்டாலும் கூட (அப்படி ஒரு நிலைமை இல்லை) அது கலாசார உரிமைகளுக்கான உத்தரவாதத்தை அவசிய மாகவே அளிப்பதில்லை. மக்கள் தமது தனித்துவமான கலாசார உரிமைகளை அனுப விப்பதனை உத்தரவாதப்படுத் துவதற்கு சிறப்பான நடை முறைகளும் பொறியமைப்புக் களும் உருவாக்கப்படுதல் வேண் டும்.

அமெரிக்காவில் இடம் பெற்ற நிகழ்வொன்றின் மூலம் இப் பிரச்சினையை விளக்க முடியும். இன்டர்நசனல் ஹெரால்ட் டிரி பியூன் (மே 24, 1989) பத்திரி கையில் இந்தச் செய்தி வெளி வந்தது.

டிரேசி வின் மொரோ பொது வான ஒரு முறைப்பாட்டின் மீது தனது வேலை கொள்வோருக் கெதிராக வழக்குத் தொடர்ந் தாள். தனது தோலின் நிறம் காரணமாக, தான் ஒரு கண் காணிப்பாளரால் துன்புறுத்தப் பட்டதாகவும், தனக்கு பாரபட் சம் காட்டப்பட்டுள்ளதாகவும் அவள் தெரிவித்தாள். ஆனால் இந்த முறையீட்டை வித்தியா சப்படுத்திக் காட்டிய அம்சம், அவளும் அந்தக் கண்காணிப் பாளரும் கறுப்பர்கள் என்ற விஷயமாகும். கறுப்புத் தோ லைக் கொண்ட கண்காணிப்பா ளர் வெளுப்புத் தோல்கொண்ட கறுப்பர்களுக்கு பாரபட்சம் காட்டுகிறார் என்று திருமதி மொரோ கூறினார். நிறம், இனம் என்பவற்றின் அடிப்படை யில் பாரபட்சம் காட்டப்படக் கூடாது என்ற கோட்பாடு குறித்து பேசும் போது நாம் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் சங்கடங்களை இது எடுத்துக் காட்டுகிறது. இன ஒதுக்கல் பற்றி நாம் குறிப்பிடும் போது உண்மையில் கலாசார விழுமி யங்களையே நாம் குறிக்கிறோம். இத்தகைய கலாசார தனித்து வங்களை வழக்குகளிலும் கூட மக்கள் எடுத்துக்காட்டுகிறார் கள். எனவே பாரபட்சம் காட் டப்படாமை என்ற வெறும் கோட்பாட்டுக்கு அப்பால் நாம் நோக்க வேண்டும். இனம், நிறம், கோத்திரம், வாழ்க்கை முறை தோன்றவற்றை எடுத்து வரும் கலாசாரப் பெறுமானங் களை இந்தச் சூழ்நிலையில் கவனத்தில் எடுப்பது அவசிய மாகும்.

அகிலம் தழுவிய தனிநபர் உரிமைகள் கோட்பாடொன்றுக் குள் கலாசார உரிமைகள் தொடர்பான கருதுகோளினை உள்ளடக்கிக் கொள்ள முடியுமா அல்லது இதற்கு ஒரு வித்தியாச மான அணுகுமுறை தேவையா என்பது கலாச்சார உரிமைகள் தொடர்பான இரண்டாவது மிக முக்கியமான பிரச்சினையாகும். இதற்கு பிறிதொரு அணுகுமுறை தேவை என்பதே எனது கருத்தா கும். உலகம் தழுவிய பிரகடனங் களில் சேர்க்கப்பட்டுள்ள பாரபட் சம் காட்டாதிருத்தல் மற்றும் சமத்துவம் என்பன குறித்த கோட்பாடுகள் அடிப்படையில் தனிமனித உரிமைகள் தொடர் பான கோட்பாடுகளாகும். ஆனால், கலாச்சார உரிமைகளும், அதேபோல பல சமூக, பொருளா தார உரிமைகளும் கூட்டு உரிமை களாகும். இந்த உரிமைகள் (றொபின்ஸன் குருஸோ போன்ற) தனிநபர்கள் சம்பந்தப்பட்ட வையல்ல. கூட்டு முயற்சியில் ஈடுபட்டுள்ள தனிநபர்கள், பொது விழுமியங்களைப் பகிர்ந்து கொள்ளும் தனிநபர்கள் என் போர் தொடர்பானவையாகும். தமது குழுவிலுள்ள ஏனைய உறுப்பினர்களுடன் இணைந்து இருப்பதன் மூலம் மட்டுமே அவர் கள் இந்த விழுமியங்களைக் கொண்டவர்களாக இருக்க முடியும்.

இந்த கூட்டுக்கள் எந்த வகை யைச் சேர்ந்தவை? இந்த உரிமை களைக் கொண்டிருப்பவர்கள் யார்? இந்த உரிமைகளை யார் கோர முடியும்? இது மிகவும் சிக்க லான ஒரு பிரச்சினை. சிறு பான்மை இனக்குழுக்கள், கலா சார குழுக்கள், மக்கள் பிரிவினர், சர்வதேச ஆவணங்களில் காணப் படும் தெளிவாக விளக்கமளிக்கப் படாத கருதுகோள்கள் என்ப வற்றை உள்ளடக்கிய பரந்த விச்சிலான கலந்துரையாட லொன்றுக்கு இது எம்மை இட்டுச் செல்லும்.

மேலும், கலாச்சார உரிமைகள் என்று கூறும் போது நாங்கள் விழுமியங்களின் சார்புரீதியான தன்மையையே குறிக்கிறோம். இது மனித உரிமைகள் தொடர் பான மையக்கருவுக்கு முரணாக செயற்படும் எனச் சிலர் கூறலாம். மனித உரிமைகள் கோட்பாட்டின் அடிச்சரடான அம்சம், இந்த உரிமைகள் அகிலம் தழுவியவை என்பதாகும். எல்லா மனிதர் களும் சமமானவர்கள்; மனிதர் கள் பல வழிகளில் வேறுபட்டவர் களாக இருந்த போதிலும் அனை வரும் ஒரேவிதமான உரிமை களையே கொண்டிருக்கிறார்கள். ஆனால், கலாச்சார மற்றும் கூட்டு உரிமைகள் குறித்து நாங் கள் பேசும் போது, பல்வேறு சமூகக் குழுக்களினதும் தனித் துவங்களை அங்கீகரிக்கும் பொருட்டு அகிலம் தழுவிய தன்மையை நிராகரிக்கும் ஒரு நிலை உருவாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த கலாச்சார சார்பு நிலை மனித உரிமைகள் கோட்பாட்டுக்கு பங்கம் விளைவிக்கிறது எனச் சிலர் கூறுகிறார்கள். ஆனால், இதனை ஆதரிப்போர், யதார்த்த உலகம், கலாச்சார தனித்துவங்களைக் கொண்ட பல்வேறு குழுக்களையும், இ மக்கள் பிரிவினரையும் கொண்டதாகவே இருந்து வருகிறது என்பதனை சுட்டிக்காட்டுகிறார்கள். ஒவ்வொரு குழுவுக்கும் சம்பந்தமுடைய குறிப்பான பிரச்சினைகளை நாம் அங்கீகரிக்காமல் இருப்பது வெறும் அபத்தமான செயலாகவே இருக்க முடியும்.

மனித உரிமைகள் குறித்த ஐ. நா. ஆணைக்குழு, அகிலம் தழுவிய மனிதஉரிமைகள் பிரகடனம் குறித்த பல்வேறு முன்வரைவுகளையும் கலந்தாலோசித்துக் கொண்டிருந்த 1947 அளவிலேயே, அமெரிக்க மானிடவியல் கழகத்தினால் இந்த அம்சம் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. உத்தேச பிரகடனம் முழு மனித குலத்துக்கும் பொருந்தக்கூடியதாக எவ்விதம் அமைய முடியும் என்ற கேள்வியை முன்வைத்த அறிக்கையொன்றை இந்த கழகம் ஆணைக் குழுவிடம் சமர்ப்பித்தது. மேற்கைரோப்பாவிலும், அமெரிக்காவிலும் நிலவி வரும் விழுமியங்களின் அடிப்படையில் மட்டும் இந்த பிரகடனம் சிந்திக்கப்படக்கூடாது என்பதனையும் அது வலியுறுத்தியது. ஒரு தனிநபர் தனது கலாசாரத்துக்கூடாகவே தனது ஆளுமையை உணர்ந்து கொள்கிறார். எனவே, இந்த வகையில், தனிநபர் வேறுபாடுகளுக்கு மதிப்பளிப்பது என்பது கலாச்சார வேறுபாடுகளுக்கு மதிப்பளிப்பதாகவே இருக்கும் என்று இக்கழகம் வாதிட்டது.

இரண்டாவதாக, கலாசாரங்களுக்கிடையிலான வேறுபாடுகளுக்கு மதிப்புக் கொடுப்பதை விஞ்ஞான உண்மையும் ஸ்தாபித்துள்ளது. ஏனெனில், கலாசாரங்களை தர ரீதியாக மதிப்பிடுவதற்கு இது வரையில் எந்தவொரு உத்தியும் கண்டுபிடிக்கப்படவில்லை.

மூன்றாவதாக, ஒவ்வொரு கலாச்சாரத்துக்கும் பிரத்தியேகமான தர நிர்ணயங்களும் பெறுமானங்களும் உள்ளன. எனவே, இந்த சூழ்நிலையில், அகிலம் தழுவிய பொது விதிமுறைகளையும், அறநெறிகளையும் வகுத்துக் கொள்வதென்பது சிக்கலான ஒரு விடயமாகவே இருக்கும்.

உத்தேச பிரகடனத்துக்கு, மனிதர்கள் தமது சொந்த பாரம்பரியங்களுக்கு ஏற்ப வாழும் உரிமையைக் கொண்டுள்ளார்கள் என்பதனை வலியுறுத்தும் ஓர் அறிக்கை சேர்க்கப்பட்டால் மட்டுமே, பல்வேறு மானிட குழுவினரதும் உரிமைகளையும், கடமைகளையும் தெளிவுபடுத்தும் அடுத்த முயற்சியை தற்போதைய விஞ்ஞான அறிவின் அடிப்படையில் மேற்கொள்ள முடியும் என்று அமெரிக்க மானிடவியல் கழகம் இறுதியாக தெரிவித்தது.

ஆகவே, 40 வருடங்களுக்கு முன்னர் மனித உரிமைகள் குறித்த அகிலம் தழுவிய பிரகடனம் வரையப்பட்ட காலத்திலும் கூட, முழு மானிட சமுதாயத்துக்கும் அதனை பிரயோகிக்க முடியுமா என்ற கேள்வியை அமெரிக்க மானிடவியலாளர்கள் எழுப்பினார்கள். இந்த பிரகடனம் தனியொரு கலாச்சாரத்தின் விழுமியங்களை மட்டுமே கொண்டுள்ளது என்பதனையும், இந்த தர நிர்ணய விதிமுறைகளை ஏனைய கலாசாரங்களுக்கு பிரயோகிக்க முடியாது என்பதனையும் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். சமீப காலத்தில் – குறிப்பாக பல ஆசிய; ஆபிரிக்க நாடுகள் ஐ. நா. வில் இணைந்த பின்னர் – மூன்றாவது மண்டலத்தைச் சேர்ந்த பல நாடுகள் இந்த நிலைப்பாட்டினை எடுத்துள்ளன.

அணுகுமுறையில் ஏற்பட்டுள்ள இந்த மாற்றத்தை ஆபிரிக்க மனித உரிமைகள் பட்டயத்தின் 29 ஆவது உறுப்புரையில் காண முடிகிறது. இந்த பட்டயம் உரிமைகளைப் பற்றி பேசவில்லை; கடமைகள் குறித்தே பேசுகிறது. ''தனி நபரொருவர் பின்வரும் கடமையையும் கொண்டிருப்பார்....'' என்று தொடங்கி அது அக்கடமைகளை விவரிக்கிறது. இந்த உறுப்புரையில் தரப்பட்டுள்ள ஏழாவது கடமை வருமாறு: ''தனிநபரொருவர் சமூகத்தின் ஏனைய உறுப்பினர்களுடனான தனது உறவுகளில் சாதகமான ஆபிரிக்க கலாச்சார விழுமியங்களை பாதுகாத்து, பலப்படுத்துதல் அவசியமாகும்'' இதனை ஒரு கடமையாக வலியுறுத்த முடியுமாயின், மறு புறத்தில், ஆபிரிக்க கலாச்சார விழுமியங்களுக்கு, அதற்கு இணையாக ஓர் உரிமை உள்ளது என்பதனை எடுத்துக் காட்ட முடியும்.

முதலில், உறுப்புரை 29 ல் ஆபிரிக்க விழுமியங்கள் வேறுபடுத்திக் காட்டப்படுகின்றன. என்பதனை நாங்கள் கவனிக்க வேண்டும். இரண்டாவதாக, ஆபிரிக்க கலாசார விழுமியங்களில் ஒரு பொதுமைப்பண்பினை அது வலியுறுத்துகிறது. மூன்றாவதாக, சாதகமான ஆபிரிக்க விழுமியங்கள் இருப்பதாயின், மறுபுறத்தில், பாதகமான அத்தகைய விழுமியங்களும் உள்ளன என்பதே இந்த வாசகத்தின் மறைபொருளாகும். அந்த விழுமியங்களை பாதுகாக்கவோ பலப்படுத்தவோ வேண்டிய அவசியமில்லை. இந்த ''சாதகமான ஆபிரிக்க விழுமியங்கள்'' எவை? இவற்றை வரைவிலக்கணம் செய்பவர்கள் யார்? அறிவார்ந்த தளத்திலிருந்து இதனை விளக்கிக் கூறுவது மிகவும் கடினமான பணியாகும். இந்த கோட்பாட்டை சட்டபூர்வமாக பிரயோகிப்பதும் கடினமாகும். இந்தப் பிரச்சினை எத்தனையோ சிக்கல்களை எடுத்து வர முடியும். எனினும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டபூர்வமான மனித உரிமைகள் பட்டயமொன்றில் இந்தக் கோட்பாடு காணப்படுகிறது.

கலாச்சார உரிமைகள் தொடர்பான பிரச்சினைக்கு பிறிதொரு பரிமாணமும் உள்ளது. பல்வேறு பிராந்தியங்களுக்கிடையிலும் அரசியல் முறைகளுக்கிடையிலும் காணப்படும் கலாச்சார வேறுபாடுகளை மட்டுமன்றி, தனியொரு அரசுக்குள் காணப்படும் அத்தகைய பன்முகத்தன்மையையும் நாங்கள் கவனத்தில் எடுக்க வேண்டும். சர்வதேச மனித உரிமைகள் ஆவணங்களில் கைச்சாத்திட்டுள்ள பெரும்பாலான நாடுகள், கதம்பமான கலாசாரங்களைக் கொண்ட நாடுகளாகும். ஒரு சில நாடுகள் மட்டுமே மிகவும் அரிதாக தனியொரு கலாசாரத்தைக் கொண்டனவாக உள்ளன. கலாசார அபிவிருத்தியின் மைய அம்சம் ஒருவர் தனது சொந்தக் கலாச்சாரம் தொடர்பாக கொண்டுள்ள உரிமையாகும். அதாவது, ஒரு மனிதன் பிறந்து வாழ்ந்து, அடையாளம் காணப்படும் குழுவின் கலாச்சாரத்துக்கான உரிமையாகும். கலாச்சார கொள்கைகளின் குறிக்கோள்களை வகுப்பவர்கள் யார் என்ற கேள்வி இப்பொழுது எழுகிறது. அதிகளவுக்கு கல்வி என்று கூறும் போது எந்த வகையான கல்வி என்ற கேள்வியும், பெருமளவு அருங்காட்சியங்கள் என்று கூறும் போது இந்த அருங்காட்சியங்கள் எவற்றைக் கொண்டிருக்கும் என்ற கேள்வியும் எழுகிறது. இவை சக்கரவர்த்திகளின் நினைவுச் சின்னங்களைக்கொண்டிருக்குமா அல்லது கிராம மக்களின் கலாச்சாரப்படைப்புகளைக் கொண்டிருக்குமா?

கலாச்சாரத்துக்கு வரைவிலக்கணம் வழங்குவது எப்படி என்ற பிரச்சினைக்கு இப்பொழுது வருவோம். இப்பொழுது எல்லோரும் ''தேசிய கலாச்சாரம்'' குறித்து பேசுகிறார்கள். கடந்த 45 வருட கால அபிவிருத்தி நிகழ்வுப் போக்கு தேசியத்தை கட்டியெழுப்பும் ஒரு நிகழ்வுப் போக்காக இருந்து வந்துள்ளது. ஆனால், இது எந்த வகையான தேசியம் என்ற விஷயம் தெளிவின்றி இருக்கிறது. இது தேசியத்தை கட்டியெழுப்பும் ஒரு முயற்சியாகவன்றி ''தேசியத்தை அழிக்கும்'' ஒரு நிகழ்வுப் போக்காக இருந்து வந்துள்ளது என்று அமெரிக்க அரசியல் தத்துவ ஞானியான வோர்கர் கொனர் குறிப்பிட்டுள்ளார். ஏனெனில், நவீன ''தேசிய அரசு'' என்ற பெயரில் பல தேசியமல்லாத அரசுகள் அழிக்கப்பட்டுள்ளன. ''தேசியத்தை கட்டி யெழுப்புதல்'' என்ற பதம் ''தேசிய ஒருங்கிணைப்பு'' அல்லது ''சங்கமம்'' என்பதனையே குறிக்கிறது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அதிகாரத்தில் உள்ள குழுவினரே பின்பற்றப்பட வேண்டிய தேசிய கலாசாரத்தை நிர்ணயிப்பவர்களாக இருக்கிறார்கள்.

அதிகாரத்தில் உள்ளவர்கள் ஒரு கலாச்சார குழுவைச் சேர்ந்தவர்களாகும். அதுவே முதன்மை கலாச்சார அல்லது இனக்குழுவாக இருக்கிறது. தமது சொந்த கலாச்சார அடையாளங்களின் பிரகாரம் தேசிய கலாச்சாரத்தை வரைவிலக்கணம் செய்யும் வாய்ப்பு அவர்களுக்கு கிட்டுகிறது. தமது கலாச்சார மாதிரியுடன் அனைவரும் இணங்கிச் செல்ல வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். நாட்டின் ஏனைய கலாச்சாரங்கள் ஒழிந்து போனாலும் பரவாயில்லை. இது இனக்கொலை என்று கூறப்படுகிறது. உலகமெங்கிலும் இது இடம் பெற்று வருகிறது.

தனித்துவம் என்பது சமகால விவகாரங்களில் ஒரு பிரதான பிரச்சினையாக மாறியிருக்கிறது. இதனாலேயே தனித்தன்மை கொண்டிருப்பதற்கான உரிமை மனித உரிமை ஆவணங்களில் வலியுறுத்தப்படுகிறது. கலாச்சார உரிமைகள் என்று கூறும் போது. ஒரு நாட்டில்வாழும் பல்வேறு குழுக்கள் தமக்கேயுரிய கலாச்சாரங்களை பின்பற்றுவதற்கு உள்ள உரிமையையும் அது குறிக்கிறது. ஒவ்வொருகுழுவும் தனது சொந்தக் கலாச்சாரத்தை (அது பிரதான கலாச்சாரத்திலிருந்து வேறுபட்டதாக இருந்த போதிலும்) பின்பற்றக் கூடியதாகவும் அதனை அபிவிருத்தி செய்து கொள்ளக்கூடியதாகவும் இருக்கவேண்டும்.

சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான உடன்படிக்கையில் சிறுபான்மையினர் தொடர்பாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதையும் நாம் கவனத்தில் எடுக்கவேண்டும். அகிலம் தழுவிய பிரகடனம் 1946-1948 வருடங்களில் வரையப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில், சில நாடுகள். சிறுபான்மை மக்கள் பிரிவினரின் கலாச்சார உரிமைகள் தொடர்பான விஷேச சரத்துகள் அதில் உள்ளடக்கப்படவேண்டுமென்று விரும்பின. எனினும் இது பொதுவான மனித உரிமைகள் தொடர்பான பிரச்சினை அல்ல என்ற கருத்து அப்பொழுது நிலவி வந்தது. சிறுபான்மையினர் பிரச்சினைமுற்றிலும் ஒரு ஐரோப்பிய விவகாரம் என்றும் பொதுவான மனித உரிமைகளுடன் அதற்கு எவ்வித சம்பந்தமுமில்லையென்றும் இந்த ஆணைக்குழுவின் அமெரிக்க தலைவி திருமதி எலினா ருஸ்வெல்ட் கூறினார்.

இதன் விளைவாக, பல நாடுகளும் பல மக்கள் குழுக்களும் அதிருப்திடையந்தன. அகிலம் தழுவிய பிரகடனம் அங்கீகரிக்கப்பட்ட அதே வேளையில், பொதுச் சபை நன்கு அறியப்படாத பிறிதொரு தீர்மானத்தையும் ஏற்றுக்கொண்டது. இந்த தீர்மானம் சிறுபான்மை மக்கள் பிரிவினரின் பிரச்சினையின் முக்கியத்துவத்தை அங்கீகரித்தது. ஆனால், இது சிக்கல்கள் நிறைந்த, கடினமான ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினையாக இருப்பதாக அது கருதியது. அதனால், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சிறுபான்மையினர் பாதுகாப்பு தொடர்பான உப குழுவிடம் இப்பிரச்சினையை ஆராயும் பணி ஒப்படைக்கப்பட்டது. ஆனால், நான்கு தசாப்தங்கள் கடந்து விட்ட பின்னரும் கூட இன்ன மும் சிறுபான்மையினர் உரிமை கள் தொடர்பாக எந்த ஒரு பிரகடனமும் மேற்கொள்ளப் படவில்லை.

சிவில் மற்றும் அரசியல் உரி மைகள் குறித்த நாடுகளுக்கிடை யிலான உடன்பாட்டின் உறுப் புரை 27 பின்வருமாறு கூறு கிறது: ''இன, மத மற்றும் மொழி சிறுபான்மையினர் வாழும் நாடுகளில், அத்தகைய சமூகங்களைச் சேர்ந்த நபர் களுக்கு, தமது சொந்த கலாச் சாரத்தை அனுபவிப்பதற்கும், தமது சொந்த மதத்தைப் பின் பற்றுவதற்கும், தமது மொழியை பாவிப்பதற்கும் உரிமை மறுக் கப்படக்கூடாது'' சர்வதேச மனித உரிமைகள் தொடர்பான ஆவணங்களில் சிறுபான்மை சமூகங்களின் கலாச்சார உரி மைகளை சிறப்பாக எடுத்துக் கூறும் ஒரேயொரு ஆவணம் இதுவாகும்.

கலாச்சார சிறுபான்மை சமூ கங்களின் உரிமைகளை அங்கீ கரிப்பதை நோக்கிய ஒருபடியாக சிலர் இதனை கருதுகிறார்கள். எனினும், இதில் காணப்படும் பல குறைபாடுகளும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. முதலில், இன, மத மற்றும் மொழி சிறு பான்மை சமூகங்கள், வாழும் நாடுகளில்...'' என இந்த வாச கம் தொடங்குகிறது.'' சிறுபான் மையினர்'' என்ற பதத்துக்கு வரைவிலக்கணத்தை வழங்குவது யார்? இந்த முக்கியமான கேள்வி இங்கே வெறுமனே விடப் பட்டிருக்கிறது, பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அரசுகளே இந்த வேலையை மேற்கொள் கின்றன. தமது நாட்டில் சிறு பான்மை சமூகங்கள் இருக்கின் றனவா? இல்லையா என்பதனை அரசாங்கங்கள் தாமாகவே நிர் ணயம் செய்து கொள்வதற்கு இது வாய்ப்பினை வழங்குகிறது. உதாரணமாக, இலத்தீன் அமெரிக்க நாடுகள், பல கால மாக, தம்து நாடுகளில் சிறு பான்மைச் சமூகங்கள் வாழ்கின் றன என்பதனை மறுத்து வந் துள்ளன. இப்பொழுது, அத்த கைய சிறுபான்மையினர் உள்ள னர் என்ற உண்மையை அவை ஏற்றுக்கொள்கின்றன.

இரண்டாவதாக, இந்த 27 ஆவது உறுப்புரை, சிறுபான் மைச் சமூகங்களைச் சேர்ந்த நபர்களையே குறிப்பிடுகிறது. அது சிறுபான்மை குழுக்களைக் குறிக்கவில்லை. ஆனால், தனி நபர், தான் சேர்ந்துள்ள குழு வுக்கு ஊடாக மட்டுமே இத்த கைய உரிமைகளை அனுபவிக்க முடியும் என்பது தெளிவாகும். கூட்டாக அடையாளம் காணப் படும் உரிமை ஒரு குழுவுக்கு மறுக்கப்பட்டால், தனிநபரின் உரிமை வரையறுக்கப்பட்டதாக அல்லது மறுக்கப்பட்டதாக மாறி விடும்.

''அத்தகைய சமூகங்களைச் சேர்ந்த நபர்களுக்கு, பிரஸ்தாப உரிமைகள் மறுக்கப்படக் கூடாது'' என எதிர்மறை வடி வில் இந்த உறுப்புரை வகுக் கப்பட்டுள்ளது, இதன் மூன் றாவது குறைபாடாகும். சாதக மான, உறுதியான உரிமை எத னையும் அது ஸ்தாபிக்கவில்லை.

சிறுபான்மையினரின் உரிமை களை ஒழிப்பதே வரலாற்று ரீதியான போக்காக இருந்து வந்திருப்பதால், இச்சமூகங்களின் கலாச்சார உரிமைகளைப் பாது காப்பதற்கு இது போதியதாக இல்லை. இன்றைய சமூகத்தின் அதிகார கட்டுக்கோப்பு, பொரு ளாதார அமைப்பு, தொடர்பு சாதனங்களின் பாவனை, வெளி யீடுகள், கல்விக் கொள்கைகள் ஆகிய அனைத்துமே சிறுபான்மை கலாச்சாரங்களை (மனமறிந்து அவ்விதம் செய்யப்படவில்லை என்ற போதிலும் கூட) ஒழித்து விடும் ஒரு போக்கையே காட்டு கின்றன. இது மிகவும் துக்ககர மான ஒரு யதார்த்தமாகும்.

இறுதியாக, அரச கொள்கை கள் தொடர்பான கேள்விக்கு இது வழிவகுக்கிறது. சிறுபான் மைச் சமூகங்கள் வாழும் பல நாடுகளில், தேசிய கலாச்சார மாதிரியுடன் சிறுபான்மை யினரை ஒருங்கிணைக்கும் நோக் கிலேயே கொள்கைகள் வகுக்கப் படுகின்றன. குடியகல்வு போன்ற சில விடயங்களில், இது, இரு தரப்பினரும் ஏற்றுக்கொண்ட ஒரு குறிக்கோளாக இருக்க முடியும். பல்வேறு பாகங்களி லிருந்தும் குறிப்பிட்ட ஒரு நாட் டுக்கு வந்து சேரும் மக்கள் தமது பாரம்பரியங்களை விட்டு விட்டு அந்நாட்டின் தேசியப் பெருவாழ்வின் ஓர் அங்கமாக மாறுவதற்கு விரும்பக்கூடும். ஆனால், பல்லாண்டு காலமாக இந்த கோட்பாட்டை பின்பற்றி வந்த சமூகங்களிலும் கூட இப் பொழுது இது கடுமையாக விமர்சிக்கப்பட்டு வருகிறது. தேசிய ஒருங்கிணைப்பு தொடர் பான கொள்கைகள், பல சந் தர்ப்பங்களில் ''கலாச்சார கொலை'' கொள்கைகளையே வெளிக்காட்டி வந்துள்ளன.

கலாச்சார அபிவிருத்தியானது - சிறுபான்மை மக்களதும் சரி பெரும்பான்மை மக்களதும் சரி - மக்களின் சுய நிர்ணய உரிமை யின் பின்புலத்தில் வைத்து நோக் கப்படுதல் வேண்டும். சுய நிர்ணய உரிமை என்பது, மனித உரிமை களில் மிக அடிப்படையான உரி மையாகும். இது இல்லாவிடில் ஏனைய உரிமைகளை உண்மை யாக அனுபவிக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தம் புதிய கெடுபிடி யுத்தத்தை நோக்கி

தயான் ஜயதிலக்

> தயான் ஜயதிலக கொள்கை கற்கைகள் நிறுவனத்தில் மோதல்கள் ஆய்வுப் பிரிவின் பணிப்பாளராவர். சோவியத் யூனியனுக்கு அவர் பலமுறை விஜயம் செய்துள்ளார். கடைசியாக, 1985ல், மொஸ்கோவில் நடைபெற்ற உலக இளம் மாணவர் விழாவுக்கு அவர் சமுகமளித்திருந்தார்.
>
> சோவியத் சமாதான முயற்சி, அதன் தோல்வி மற்றும் தரைத் தாக்குதலின் தொடக்கம் என்பவற்றுக்கு முன்னர் இக்கருத்துரைகள் பதிவு செய்யப்பட்டன.

சோவியத் யூனியனில் இடம்பெற்றுவரும் நிகழ்வுப் போக்குகளை விளங்கிக் கொள்வதற்கும் சோவியத் வரலாற்றின் அடிப்படையில், சில வளர்ச்சி மாதிரிகளை இனங்கண்டு கொள்வதற்கும் இக்கட்டுரையில் ஒரு முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. இங்கு நான் பல இணைவரைகளையும், ஒருமித்த தன்மைகளையும் எடுத்துக்காட்டுவேன். எனினும், கடந்த காலத்தின் மீள் நிகழ்வாகவே, எதிர்காலம் விரிகிறது என்ற வகையில் மட்டும் நோக்குவதனை நாம் கவனமாக தவிர்த்துக் கொள்ள வேண்டும். இன்றைய சோவியத் யூனியனின் நெருக்கடி அதன் விஷேச நிலையிலிருந்து புரிந்து கொள்ளப்படுதல் வேண்டும். சோவியத் வரலாற்றை – அதாவது ருஷ்ய புரட்சியின் வரலாற்றையும், வெளிச் சூழ்நிலையுடன் அப்புரட்சியின் தொடர்பின் வரலாற்றையும் - புரிந்து கொள்வதன் அடிப்படையில் அது அமைய வேண்டும்.

வளைகுடாப் போர் மற்றும் அதன் பின்விளைவுகள் என்பவற்றை மைய அம்சமாக கொண்டு இந்த பகுப்பாய்வு மேற்கொள்ளப்படுகிறது. இருபதாம் நூற்றாண்டில், மேலைத்தேச ஏகாதிபத்தியங்களுடன் ரஷ்ய ஆட்சியாளர்கள் தம்மை சம்பந்தப்படுத்திக் கொண்டமை, அந்த ஆட்சியாளர்களின் வீழ்ச்சியை எடுத்து வந்தது. அதைவிட முக்கியமாக, அது, அமைப்பு முறைகளின் வீழ்ச்சியை எடுத்து வந்தது. சுருக்கமாக சொல்வதானால், ரஷ்யாவின் உள் அரசியல் நிகழ்வுப் போக்குகளில் வெளி நிகழ்வுகள் நிர்ணயகரமான தாக்கங்களை எடுத்து வந்தன. 1905ம் ஆண்டு புரட்சி ரஷ்ய-ஜப்பான் போரில் ஜார் ஆட்சி ரஷ்யாவின் தோல்விக்கு வழிகோலியது. ஜார் ஆட்சி ரஷ்யா முதலாவது உலகப் போரில் ஈடுபட்டமை, பெப்ரவரி புரட்சிக்கும் ஜார் மன்னரின் எதேச்சாதிகாரத்தின் முடிவுக்கும் வழி வகுத்தது. மேலும், கெரன்ஸ்கி அரசாங்கம் ஏகாதிபத்திய போரிலிருந்து ரஷ்யாவை விடுவித்துக் கொள்ள முடியாதிருந்தமை அல்லது அதற்கு விருப்பின்றி இருந்தமை அந்த ஆட்சிக்கும், சில வர்க்கரீதியான தெரிவுகளுக்கும் - அதாவது ரஷ்ய நெருக்கடியை லிபரல் பூர்ஷ்வா தெரிவின் மூலம் பலப்படுத்தும் தெரிவுக்கு- முடிவு கட்டியது. அத்துடன், அக்டோபர் 1917 ன் தீவிரமான புரட்சிப் பாய்ச்சலுக்கு அது வழிகோலியது.

வளைகுடா மீதான மேற்கத்தைய யுத்த ஆக்கிரமிப்பில் கொர்பச்சேவ் அரசாங்கத்தின் இணக்கப்போக்கும், சம்பந்தமும் இதேவிதமான எதிர்விளைவு தாக்கங்களை எடுத்துவருமா? ஜார் அரசாங்கமும் கெரென்ஸ்கி அரசாங்கமும் முதலாவது உலக யுத்தத்தில் சம்பந்தப்பட்டது போல சோவியத யூனியன் வளைகுடாவில் இராணுவ ரீதியில் சம்பந்தப்படவில்லை என்பது உண்மைதான். அதனால் அந்த அளவிலான எதிர்விளைவுத் தாக்கமொன்று ஏற்பட முடியாது. எனினும், சோவியத் யூனியனின் இந்த சம்பந்தம் சில உள்நாட்டு தாக்கங்களை எடுத்து வரும். இப்பொழுது அத்தகைய தாக்கமொன்று காணப்படுகிறது. சோவியத் யூனியனில் அரசியல் சக்திகளின் சமநிலையிலும், இப்பொழுது இடம் பெறத் தொடங்கியிருக்கும் மேலாண்மைக்கான போராட்டத்திலும் அது தாக்கங்களை எடுத்து வரும். அண்மையில் லெப்டினன்ட் கர்ணல் விக்டர் அல்க்ஸ்னிஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சோவியத் லிபரல் சீர்திருத்தவாதிகளால் இவர் 'கறுப்பு கர்ணல்' என்று வர்ணிக்கப்படுகிறார்) பால்டிக் குடியரசுகளின் நிகழ்வுகள் குறித்து சுவாரஸ்யமான கருத்தொன்றை வெளியிட்டார். வெளிப்பார்வைக்கு அது ஒரு இன நெருக்கடியாக இருந்த போதிலும், இன்றைய சோவியத் யூனியனில் நிகழ்ந்து வருவது உண்மையான ஒரு அரசியல் போராட்டமே என அவர் கூறினார். மேலும், அவர் 1917ம் ஆண்டு குறித்தும் கெரென்ஸ்கி ஆட்சி குறித்தும் பேசினார். ஆகவே, மேற்கின் திட்டமிட்ட நடவடிக்கைகளில், ரஷ்யாவின் சம்பந்தம் குறித்த இந்த மாதிரி, உள்நாட்டில் ஸ்திரமற்ற நிலை தோன்ற வழி கோலக்கூடும்.

### ரஷ்யாவின் அடையாளம்

ரஷ்யாவின் அடையாளம் குறித்த போராட்டமொன்று இதன் கீழ் மறைந்திருக்கிறது. அது ஒரு மேலைத்தேச வல்லரசா? கீழைத்தேச வல்லரசா? அல்லது இவ்விரண்டையும் உள்ளடக்கியதா? கொர்பச்சேவ் அரசாங்கம் - குறிப்பாக, சோவியத் வெளிநாட்டுக் கொள்கைக்கான செர்வனாட்சேயின் நெறிப்படுத்தலின் கீழ் - தன்னை முற்றிலும் ஒரு மேலைத்தேச வல்லரசாக கருதுவது போல தெரிந்தது. 'மேலைத்தேச வாதிகளின்' முகாமில் கூட இரு போக்குகள் காணப்பட்டன. அமெரிக்காவுடனான உறவுகளே மிகவும் முக்கியமானவை என்று ஒரு பிரிவினர் நம்பினார்கள். இவர்கள் சோவியத் யூனியனை அமெரிக்காவின் ஒரு கூட்டுப் பங்காளியாகவும், நகலாகவும் பார்த்தார்கள். இரண்டாவது பிரிவினர், சோவியத் யூனியனின் தலைவிதி ஐரோப்பாவுடன் பின்னிப் பிணைந்திருப்பதாக கருதினார்கள். சோவியத் யூனியன், ஐரோப்பிய - ஆசிய வல்லரசொன்று என்பதைப் புரிந்து கொள்ளும் வகையில் பெண்டுலம் மீண்டும் அசையும் என நான் நம்புகிறேன்.

அடுத்த முக்கியமான அம்சம் மேற்கின் அரசியல் சக்திகளுக்கும் சோவியத் யூனியனின் உள்நாட்டு போராட்டங்களுக்கும், முரண்பாடுகளுக்கும் அரசியல் போட்டிக்கும் இடையே நிலவும் உறவுகளாகும். புரட்சிக்கு பிற்பட்ட ரஷ்ய வரலாற்றில், சோவியத் உள்நாட்டு அரசியல் கூறுகளுக்கு மேற்கின் முதலாளித்துவ சார்பு பிரிவிருந்தும் மற்றும் சமூக ஜனநாயக பிரிவுகளிலிருந்தும் ஆதரவும் அனுதாபமும் காட்டப்பட்டபோது அதற்கு எதிர்மறையான எதிர்விளைவுகளே கிடைத்துள்ளன. ஏதோ ஒரு காரணத்துக்காக சோவியத் அதிகாரிகள் அதிகளவுக்கு உணர்ச்சி வசப்படுபவர்களாக இருந்தார்கள்.

'இரண்டரை' சர்வதேசியத்துடனும் அதே போல இரண்டாவது சர்வதேசியத்துடனும் கூட்டு முன்னணியொன்றை உருவாக்கிக் கொள்வதற்கான லெனினின் முயற்சியை மிகச்சிறந்த ஒரு உதாரணமாக காட்ட முடியும். மேற்கு ஐரோப்பிய சமூக ஜனநாயகவாதிகளின் எதிர்நடவடிக்கைகளினால் இந்த முயற்சி தோல்வி கண்டது. போல்ஷ்விக் எதிர் இடதுசாரிகளுக்கெதிராக புரட்சிகர ரஷ்யாவில் நடைபெற்று வந்த வழக்குகளையொட்டியே அவர்கள் இந்த எதிர்விளைவை காட்டினார்கள்.

லெனின், எதிர்ப்புரட்சி வடிவில் ஐரோப்பிய தாக்குதலை எதிர்கொண்ட போது மேற்குறிப்பிடப்பட்ட இரண்டு சர்வதேசியங்களுக்கும் ஓரளவுக்கு இடமளித்தார். ஒன்றுபட்ட நடவடிக்கைகளுக்கும், ஒன்றுபட்ட உழைப்பாளர் அணியொன்றுக்குமான யோசனைகள் முன் வைக்கப்பட்டிருந்தன. சோவியத் பக்கத்தின் சார்பில் அனுபவம் வாய்ந்த போல்ஷ்விக்குகள் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருந்தனர். எனினும், மென்ஷ்விக்குகள் ஒடுக்கப்பட்டது தொடர்பாக போல்ஷ்விக் பிரதிநிதிகள் ஐரோப்பிய சமூக ஜனநாயகவாதிகளுக்கு அதிகளவு சலுகைகளை வழங்கிவிட்டதாக லெனின் கருதினார். சமூக ஜனநாயகவாதிகள் இந்த ஒடுக்குதலை கண்டித்ததுடன் தூக்குத்தண்டனைகளை நிறுத்துமாறும் வேண்டிக் கொண்டனர் என நினைக்கிறேன். வழக்குகள், அவதானிப்பாளர் முன்னிலையில் நடைபெற வேண்டுமென அவர்கள் விரும்பினார்கள். ஆனால், இந்த சலுகைகள் வழங்கப்பட முடியாது என்பதில் லெனின் மிகக் கடுமையான முறையில் உறுதியுடன் நின்றார். இப் பேச்சுவார்த்தைகள் முறிந்துவிடுமளவுக்கு இது சென்றது. இந்தப் பிரச்சினை மென்மையாக கையாளப்பட்டிருந்தால், அது, முதலாளித்துவ உலகுடனான ரஷ்ய உறவுகள் குறித்த புதிய கருதுகோளுக்கு இசைவானதாக இருந்திருக்கும்.

பால்டிக் குடியரசுகள் ஒடுக்கப்பட்டது குறித்து அமெரிக்க மற்றும் ஐரோப்பிய கண்டனங்களும், யெல்ட்சினுக்கான மேலைத்தேச ஆதரவும், சோவியத் யூனியனின் குறிப்பிட்ட சில பொருளாதார நிகழ்ச்சித் திட்டங்களும் அதே வகையிலான எதிர்த்தாக்குதல் முறையைக் கொண்டிருக்க வாய்ப்பிருக்கிறது. சோவியத் பிரதமர் வலன்டின் பொவ்லோவ், கம்யூனிச ஆட்சியை பலவீனப்படுத்துவதற்கான மேலைத்தேச பொருளாதார சூழ்ச்சி குறித்து பேசியுள்ளார். (பாராளுமன்ற தூதுக்குழுவொன்றுடன் இலங்கைக்கு விஜயம் செய்த) கென்னடி பில்ஷின் ராஜினாமா செய்துள்ளார். இவற்றில் இந்த எதிர்த்தாக்குதலின் தொடக்கத்தை காண்கிறோம்.

### வர்க்கப் போராட்டமும் புதிய பொருளாதார கொள்கையும்

மூன்றாவது விஷயம், பெருமளவுக்கு பழம்பாணியிலான கருத்தொன்று - அதாவது வர்க்கப் போராட்டம் குறித்த கருத்து - சம்பந்தப்பட்டதாகும். ''வர்க்கங்களையும், வர்க்கப்போராட்டத்தையும் ஒரு போதும் மறந்துவிடக் கூடாது'' என்று 1962ல் மாவோசேதுங் கூறினார். வர்க்கப் போராட்டத்தின் இயக்க விசையும், வர்க்கப் போராட்டத்தின் தீவிரமாக்கலும் சில சந்தர்ப்பங்களில் மார்க்சிஸ்டுகளின் மிதவாதத்துக்கான மன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்ந்த முயற்சிகளையும் கூட பலவீனப்படுத்தி விடுகின்றன. புதிய பொருளாதார கொள்கையை உதாரணமாக எடுப்போம். மேற்குக்கு பாரிய சலுகைகளை வழங்க லெனின் முன்வந்தார் என்பது எமக்குத் தெரியும். ஆனால், இது கோட்பாட்டு அளவில் மட்டுமே இருந்தது. செயலில் நிறைவு பெறவில்லை. மேற்கு இதற்கு சாதகமான விளைவினை காட்டவில்லை. அது ஏன்?

ரஷ்யப் புரட்சியை முற்றிலும் ஒழித்துக் கட்டிவிடுவதே மேற்கத்தைய கொள்கை வகுப்போரதும் அரசியல்வாதிகளினதும் விருப்பமாக இருந்தது. சோவியத் யூனியன் தன்னை ஸ்திரப்படுத்திக் கொள்வதற்கு இடமளிக்கக் கூடாது என்று அவர்கள் கருதினார்கள். மேற் சொன்ன பொருளாதார தொடர்புகள் அந்நாடு தன்னை ஸ்தாபித்துக் கொள்வதற்கு உதவும் என்றும் அவர்கள் நம்பினார்கள். எனவே, புதிய பொருளாதார கொள்கை காலகட்டத்தில், அனுமதிக்கத்தக்கவை என்றும் விரும்பத்தக்கவை என்றும் லெனின் கருதிய வெளிநாட்டு முதலீட்டு வகை, வியாபார தொடர்புகள் மற்றும் உலக பொருளாதாரத்துடனான ஒருங்கிணைப்பு என்பனவற்றுக்கு உசிதமான ஒரு அபிப்பிராய நிலை மேற்கில் காணப்படவில்லை. அந்த விஷயத்தைப் பொறுத்த வரையில், புதிய பொருளாதாரக் கொள்கை தோல்வியைத் தழுவியது. இதனை ஒரு பொருளாதார திட்டமாக மட்டும் நோக்க முடியாது. புரட்சிகர மிதவாதத்தின் நல்லெண்ணத்துக்கு பள்ளம் பறிக்க முயலும் உலகலாவிய வர்க்கப் போராட்டத்தின் ஒரு குணாம்சமாகவே காண வேண்டும்.

அநேகமாக இதற்கு ஒத்தான ஒரு நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. தனது உபாய ரீதியிலான தாக்குதல் கிழக்கைரோப்பாவில் வெற்றி கண்டதனையடுத்து தைரியமடைந்த மேற்கு - குறிப்பாக ஐக்கிய அமெரிக்கா - இதனை தொடர்ந்து மேற்கொள்வதற்கு முடிவு செய்தது. இந்த தாக்குதல் முறை அரசியல் மற்றும் இராணுவ அம்சங்களைக் கொண்டிருந்தது. நேட்டோவின் தொடர்ச்சியான இருப்பு, வார்சோ ஒப்பந்தத்தை குலைத்து விடுவதற்கான நிர்ப்பந்தம், ஜேர்மன் ஒற்றுமைப்படுதலை தாமதப்படுத்த மறுத்தமை, ஜேர்மனி தொடர்ந்தும் ஒரு நேட்டோ உறுப்பு நாடாக இருக்க வேண்டுமென்பது குறித்த வலியுறுத்து என்பன எதிர்தாக்குதலின் அரசியல் - இராணுவ அம்சங்களின் ஒரு பாகமாக இருந்தன. ஆனால், இந்த முயற்சியின் சித்தாந்த மற்றும் பொருளாதார அம்சங்கள் அதிகளவில் வெளியில் தென்படாதவையாக இருந்தன. சந்தைப் பொருளாதாரம் என்று தாம் அழைக்கும் ஓர் அமைப்பினை நோக்கி துரித நிலைமாற்றம் இடம் பெற வேண்டுமென சோவியத் யூனியனில் ஒரு பிரிவினர் விரும்பி வருகின்றனர். உண்மையில், முதலாளித்துவம் என்பதற்கே சந்தைப் பொருளாதாரம் என்ற இந்தச் சொல் பிரயோகிக்கப்பட்டு வருகிறது. இந்தப் பிரிவினருக்கு மேற்கு ஆதரவும், உற்சாகமும் அளித்து வருவது தெளிவாக தெரிகிறது. அமைதியான முறையில் முதலாளித்துவத்தை மீள ஸ்தாபித்துக் கொள்வதும் - அதன் மூலம் சோவியத் அரசின் வர்க்க குணாம்சத்தை மாற்றுவதும் - மேற்கில் உள்ள சில சக்திகளின் (அவற்றின் சோவியத் கூட்டாளிகளினதும்) விருப்பமாகும். இவர்கள் மானிடப்பிறவிகள் அல்லர் என்றோ அல்லது தீய சக்திகள் என்றோ நான் கூறவில்லை! மேற்கிலும் சோவியத் யூனியனிலும் உள்ள இந்த பிரிவினர், சோவியத் மக்களுக்கும், முழு மனித குலத்துக்கும் மிகச் சிறந்ததாக தோன்றும் ஒன்றையே தாம் ஆதரித்து வருவதாக எண்ணக்கூடும். சந்தையின் விந்தைகளில் அவர்கள் நம்பிக்கை கொண்டவர்களாக இருக்கலாம். ஆனால், புறவயமாக நோக்கும் போது, இவர்களின் இந்த திட்டம், புரட்சியின் சோஷலிச குணாம்சத்தை தலைகீழாக மாற்றிவிடக் கூடியதொன்றாகவே உள்ளது. கடிகார முள்ளை 1917 அக்டோபருக்கும் முன்னால் தள்ளிவைக்க இவர்கள் விரும்புகிறார்கள். லெனினின் சிலைகளை அகற்றுதல், சமாதியிலிருந்து லெனினின் உடலை அப்புறப்படுத்தல், லெனின்கிராடின் பெயர் மாற்றம் போன்ற முயற்சிகள் அமைதியான இந்த எதிர்ப்புரட்சிக்கு கட்டியம் கூறும் நிகழ்வுகளாகும். சோவியத் யூனியனில் உள்ள வேறு சில சக்திகள் எதிர் நடவடிக்கையில் இறங்குவதற்கு இது தூண்டியது.

இந்தப் போராட்டம் எவ்வாறு விரியும் என்பது எனக்குத் தெரியவில்லை. வளைகுடா நிகழ்வுகள் அமெரிக்க கொள்கையில்மாற்றத்தை ஏற்படுத்தவும் முடியும். (குடியரசுக்கட்சி அல்லது ஜனநாயக கட்சியில்) மிதவாத தலைமை முன்னணிக்கு வந்து சோவியத் யூனியனுடான அதன் உறவுகளை மீளமைத்துக்கொள்ள தீர்மானிக்கக் கூடும். ஆனால், இப்போதைக்கு, அமெரிக்காவிலும் மேற்கு ஐரோப்பாவிலும் சோவியத் உள்நாட்டுக் கொள்கை தொடர்பாக அதிகரித்த அளவில் கண்டனங்கள் தெரிவிக்கப்படும். இந்த கண்டனங்கள் பால்டிக் குடியரசுகள் தொடர்பான சோவியத் கொள்கை குறித்த கண்டனங்களாக ஆரம்பமானபோதிலும் அதற்கு மட்டும் அது மட்டுப்பட்டதாக இருக்க மாட்டாது. சோவியத் யூனியனில் பொதுவாக 'வளைந்து கொடுக்காதவர்கள்' என்று அழைக்கப்படும் தரப்பினர் இதற்கு மேலும் அதிகளவில் எதிர்விளைவு காட்டுவார்கள்.

புதிய பொருளாதார கொள்கையின் வெளிநாட்டு அம்சம் புறப்பட்ட இடத்திலேயே நின்றுவிட்ட அதே வேளையில், அதன் உள்நாட்டு அம்சமும் கூட சில வருடங்களின் பின்னர் தரை தட்டிவிட்டது. கொள்கை வேறுபாடுகள் காணப்பட்டது உண்மைதான். ஆனால், இவையாவற்றுக்கும் மேலாக புரட்சிக்கு பிற்பட்ட ரஷ்யாவில் புதிய பொருளாதார கொள்கையின் செயற்பாட்டுக்கு முட்டுக்கட்டையாக இருந்தது வர்க்கப் போராட்ட தர்க்கவியலே என்பது எனது கருத்தாகும். கிராமப்புறங்களில் வர்க்க கூர்ப்பு நிலையும், குலாக்குகளின் எழுச்சியும் சோவியத் நகரங்களில் பாரிய பிரச்சினைகளைத் தோற்றுவித்தன. பண்ணை உற்பத்தி

துளை விடுவிக்காது வைத்திருக்கும் ஒரு நிலை உருவாகியது. சோவியத் பொருளாதார கொள்கையில் குறிப்பான மாற்றமொன்றை எடுத்துவர வேண்டிய தேவை காணப்பட்ட ஒரு நிலைமையை இந்த நிகழ்வுகள் எடுத்து வந்தன.

பொருளாதாரத்துக்கு அப்பாற்பட்ட பலவந்தக் கூறுகளை அறிமுகப்படுத்த வேண்டிய தேவையை இந்த 'மாற்றம்' எடுத்து வந்தது. நாஜிஸ முற்றுகை இந்த நிலைமையை மேலும் தீவிரமாக்கியது. ஆனால், எந்த வகையான பாசிச அச்சுறுத்தல் கூறுகளும் இன்றைய சோவியத் யூனியனில் காணப்படவில்லை என்றே கருதுகிறேன். ஆனால், சோவியத் இராணுவம் மற்றும் கே. ஜி. பி. (சோவியத் உளவு நிறுவனம்) என்பவற்றின் விஷயத்தில் புதிய சுற்றிவளைப்பொன்று இடம்பெற மாட்டாது என உறுதியாக கூற முடியாதுள்ளது. பால்டிக் குடியரசுகளில் (சோவியத் யூனியனிலும் கூட) மேற்கத்திய செல்வாக்கின் ஊடுருவல், வளைகுடாவில் மேற்கத்திய போர், மத்திய கிழக்கில் புதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்த எதிர்பார்ப்புக்கள் என்பன சோவியத் யூனியனுக்கு ஐரோப்பிய கண்டத்தில் ஒரு முக்கிய பங்கினை வழங்கக்கூடும். வார்சோ ஒப்பந்தம் குலைக்கப்படும் ஒரு பின்னணியில் இது ஏற்படலாம்.

இந்த காரணிகளை சேர்த்து நோக்கும் போது, **1930** களில் காணப்பட்டதற்கு ஒத்ததான நிலைமைகளையே காண முடிகிறது. இந்தக் காலகட்டத்திலேயே ஸ்டாலினின் தலைமையின் கீழ் புதிய பொருளாதார கொள்கையிலிருந்து மாறிச் செல்லும் போக்கு தொடங்கியது. சோதனைகளில் இராணுவமும், கே. ஜீ. பீ. யும் இணைந்து செயலாற்ற அனுமதி வழங்கப்பட்டமை சில தொழில் முயற்சிகளை சோதனையிடுவதற்கான அனுமதி என்பன பொருளாதாரத்தை ஓரளவுக்கு இராணுவமயமாக்குவதற்கு இணையான நடவடிக்கைகளாகும். (லியோன் ட்ரொஸ்ட்ஸ்கி பொருளாதாரம் இராணுவமயமாக்கப்படுவதனை பெருமளவுக்கு ஆதரித்தவர் என்பது ஒரு சுவாரஸ்மான விஷயம். அவர் செஞ்சேனைக்கு தலைமை வகித்த போது இதனை வெற்றிகரமாக செய்து முடித்தார்). இப்பொழுது இந்த வகையான இராணுவமயமாக்கல் மீண்டும் இடம் பெறத்தொடங்கியுள்ளது. எல்லாவற்றுக்கும் மேலாக பொருளாதாரம் செயற்பட வேண்டுமானால் இதனை மேற்கொள்வது அவசியமாகும் ஒரு நிலை கூடத் தோன்றலாம். ஒரு வகையான போர் சார் கம்யூனிசம் தவிர்க்க முடியாததாக இருக்கலாம். குறிப்பிட்ட சில வர்க்க ரீதியிலான நலன்களையும், குணவியல்புகளையும் கொண்ட சோவியத் அரச அமைப்புக்களின் நடவடிக்கைகள், தற்போதைய 'புதிய பொருளாதார கொள்கை ஆட்கள்' மீதான வர்க்க ரீதியான ஒரு மேலாதிக்க முயற்சியன்றி வேறல்ல. உழைக்கும் வர்க்க ஐக்கிய முன்னணி, கடினமான நிலைப்பாட்டை எடுக்கும் மிக முக்கியமான நிர்ப்பந்தக் குழுக்களில் ஒன்றாக இருந்து வருவது ஆச்சரியமூட்டும் விஷயமல்ல. கம்யூனிஸ்டு கட்சியின் உறுப்பினர்களான உழைக்கும் வர்க்கத்தின் சில பிரிவினர், தமது வர்க்க நலன்களை குறிப்பிட்டளவு விழிப்புணர்வுடன் காத்துக் கொண்டு வருகிறார்கள். அது குறிப்பிட்டுக் கூறக்கூடிய ஒரு விஷயமாகும். ஆகவே, இந்த சக்திகளின் சங்கமம் இந்த 'மாற்றத்துக்கு' வழி கோலும் ஒரு புதிய அணியை உருவாக்கக்கூடும்.

இந்த இயங்கியல் ஸ்டாலினுடைய காலத்திலும் கூட செயற்பட்டது. பரந்த பாசிச எதிர்ப்பு அணியொன்றை உருவாக்க ஸ்டாலின் முயன்றார். எழுச்சியடைந்து வரும் பாசிசத்துக்கு எதிராக இணைந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென அவர் மீண்டும் மீண்டும் வேண்டுகோள் விடுத்தார். ஆனால், மேற்கு இதனை இழுத்தடித்து, தாமதப்படுத்தியது; பாசிச அச்சுறுத்தலை கிழக்கு நோக்கி திருப்பிவிடலாமென்று நம்பியது. மீண்டும், மொலொடோவ் - ரிப்பன்டிரொப் உடன்படிக்கைக்கூடாக கால அவகாசம் பெற ஸ்டாலின் முயன்றார். இதன் விளைவாக, இடைக்காலத்தில் ஓரளவுக்கு ஆறுதல் கிடைத்த போதிலும் அவர் எதிர்பார்த்த அளவுக்கு அது நீடிக்கவில்லை. இந்த இரு சந்தர்ப்பங்களிலும் சோவியத் தலைமை ஒரு மிதவாத கொள்கையை, ஒத்துழைப்பு கொள்கையை, நல்லிணக்க கொள்கையை பின்பற்றும் விருப்பினையும், நெகிழ்ச்சித் தன்மையையும் காட்டி வந்த போதிலும், மேற்கின் ஏகாதிபத்திய கூறுகள் வேறுவிதமான நோக்கங்களை கொண்டிருந்தன. அவை பாரிய அபிலாஷைகளை வைத்துக் கொண்டிருந்தன. இன்று மேற்கின் அபிலாஷைகள் கோர்பச்சேவின் எண்ணங்களை விடவும் மிக விசாலமானவையாக இருக்கின்றன. இது கோர்பச்சேவின் அரசாங்கம் பெருமளவுக்கு பலவீனமடைந்து போகும் ஒரு நிலைக்கு வழிகோலியுள்ளது.

**1945**ன் பின்னர் சோவியத் தலைமை கணிசமான அளவு தன்னடக்கத்துடன் செயற்பட்டு வந்திருக்கிறது. கைப்பற்றப்பட்ட நாடுகளின் பாசிச எதிர்ப்பு இயக்கங்களில் தேசிய குணாம்சமொன்று உருவாவதற்கு வசதி செய்யும் பொருட்டு, முதலில் **1943**ல் கொமின்டோர்ன் கலைக்கப்பட்டிருந்தது. இதனால் அந்நாடுகள் ஏதோ ஒரு வழியில் சோவியத் யூனியனுக்கு கடப்பாடு செலுத்த வேண்டும் என்ற அவசியம் ஒழிந்தது. இரண்டாவதாக, மேற்கு இரண்டாவது அணியொன்றை துவக்குவதற்கு இது வசதி செய்தது. இரண்டாவது அணியை துவக்குவதில் மேற்கு காலம் கடத்தியது என்பதனை நாங்கள் நினைவில் கொள்ளல் வேண்டும். சோவியத் யூனியன் இன்னும் கொஞ்சம் இரத்தம் சிந்தட்டும் என மேற்கு எண்ணியதே இதற்கான உண்மைக்காரணமாகும். கம்யூனிஸ்டு சர்வதேசியத்தை கலைத்துவிடுதல் போன்றவற்றின்வடிவில் சோவியத் யூனியன் அதன் பங்குக்கு சலுகைகளை வழங்கியது.

சோவியத் யூனியனை தூண்டுவதற்காகவே அமெரிக்கா ஹிரோஷிமாவிலும், நாகசாகியிலும் அணுகுண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை விசியது. குறிப்பாக, மூன்றாவது உலகைப் பொறுத்த வரையில், சோவியத் யூனியன் பின்பற்ற வேண்டிய புதிய விளையாட்டு விதிகள் குறித்த சமிக்ஞையொன்றை அந்நாட்டுக்கு விடுப்பது, ஐக்கிய அமெரிக்காவும் ஐக்கிய இராச்சியமும் வளைகுடாப் போரை துவக்கியதன் நோக்கங்களில் ஒன்றாக இருப்பது சாத்தியமில்லை.

யுத்தத்தினை உடனடுத்து வந்த காலத்தில் ஸ்டாலின் மிகுந்த அடக்கத்துடன் செயற்பட்டார். பிரான்ஸ், இத்தாலி, கிரீஸ் போன்ற நாடுகளில் பலம் பொருந்திய கம்யூனிஸ்டுக் கட்சிகள் இருந்தன. அவர், இக்கட்சிகளுக்கு உற்சாகமூட்டவோ அல்லது அதிகாரத்துக்கு வருவதற்கு ஆதரவளிக்கவோ இல்லை. யுத்தத்துக்கு பிற்பட்ட கால கட்டத்தில் நிலவிய அதிகார சம நிலையை யதார்த்த பூர்வமாக மதிப்பிட்டு, அதன் அடிப்படையிலேயே அவர் தனது நடத்தையை வகுத்துக் கொண்டிருந்தார். அந்நாட்களில், ஐக்கிய அமெரிக்கா அணு ஆயுதத்தில் ஏகபோகத்தை கொண்டிருந்தது. இயக்கவலு மிகுந்த பொருளாதாரமொன்றையும் போரினால் சின்னாப்பின்னப்படாத பெரு நிலமொன்றையும் அது கொண்டிருந்தது. அதேவேளையில், சோவியத் யூனியன் போரில் 2 கோடி மக்களை இழந்திருந்தது. அத்துடன் மத்திய தரைக்கடல் பகுதியில் ஆங்கில-அமெரிக்க கடற்படையின் பிரசன்னம் பிரமாண்டமான அளவில் காணப்பட்டது. அச்சந்தர்ப்பத்தில், சோவியத் யூனியனின் எந்த ஒரு பிடிவாத நிலையும் பிரதிகூலமானதாகவே இருந்திருக்கும். இக்காரணங்கள் அனைத்தின் விளைவாகவும் யுத்தத்துக்கு பிற்பட்ட காலத்தில், சோவியத் நடத்தை தன்னடக்கத்தை கொண்டதாக இருந்தது. ஆனால் கெடுபிடி யுத்தத்தை அமெரிக்காவும் பிரிட்டனுமே – குறிப்பாக பிரிட்டன் - துவக்கி வைத்தன. சேர்ச்சிலின் பியுட்டன் உரை, யுத்தத்துக்கு பிற்பட்ட பிரெஞ்சு மற்றும் இத்தாலிய கூட்டரசாங்கங்களிலிருந்து கம்யூனிஸ்டு கட்சி வெளியேற்றப்பட்டமை, ஜேர்மன் பாசிசத்துடன் இணைந்து செயற்பட்ட கிரீஸ் முடியாட்சிக்கு எதிராக தலையிட்டமை போன்ற நிகழ்வுகள் கெடுபிடியுத்தத்தின் துவக்கத்துக்கு வழி கோலின. எனவே, அக்கால கட்டத்தில் சோவியத் யூனியன் தன்னடக்கத்துடன் செயற்பட்ட போதிலும், மேற்கு கம்யூனிச செல்வாக்கை ஒழித்துக்கட்டும் தீவிர கொள்கையொன்றை பின்பற்றி வந்தது. தனக்கு அனுகூலமாக இருந்த எல்லா வாய்ப்புக்களையும் அது நன்கு பயன்படுத்திக் கொண்டது. இந்த அமெரிக்க – ஐக்கிய இராச்சிய தாக்குதலுக்கெதிராகவே ஸ்டாலின் கிழக்கைரோப்பிய அணியை பலப்படுத்தத் தொடங்கினார்.

ஸ்டாலினுக்கு பிற்பட்ட காலத்தில் நிறைய நம்பிக்கை தென்பட்டது. மேற்குக்கு அனுகூலம் அளிக்கும் விஷயத்தில் மேலும் விட்டுக்கொடுப்பதற்கு குருஷேவ் விரும்பி இருந்தார். மொலொடோவ் - கங்கோவிச் குழுவினரை அவர் சோவியத் கம்யூனிஸ்டுக்கட்சியிலிருந்து வெளியேற்றினார். எனினும், அமெரிக்காவுடன் உறுதியான, சுமுகமான உறவொன்றை கட்டியெழுப்ப அவரால் முடியவில்லை. 1956ல் ஹங்கேரி, சுயெஸ் கால்வாய் என பல நெருக்கடிகள் தோன்றின. ஹங்கேரி சம்பவம், சோவியத் யூனியன் குறித்த மேற்கின் அணுகுமுறைகளை கடினமாக்கின. பின்னர் தோன்றிய கியூபா ஏவுகணை நெருக்கடி நிலைமையை மேலும் கடினமாக்கியது. சோவியத் யூனியனைப் பொறுத்தவரையில், குருஷேவின் முடிவினையே அது குறித்தது. மீண்டும் ஒரு முறை அமெரிக்காவினால் அவமானப்படுவதில்லை என்பதில் சோவியத் இராணுவம் உறுதியாக நின்றது. இதன் பின்னர் அட்மிரல் கோர்ஷ்கோவின் ஆற்றல் மிகு தலைமையின் கீழ் சோவியத் கடற்படை புரட்சிகரமான முறையில் விஸ்தரிப்படையத் தொடங்கியது.

இந்த அகவயமான காரணிகள் மீண்டும் ஒரு முறை அரங்குக்கு வரக்கூடும். தான் அவமானத்துக்கு உட்படுத்தப்பட்ட ஓர் உணர்வும், கிழக்கைரோப்பாவிலிருந்து வெளியேற்றப்பட்டு விட்டதான ஓர் ஆதங்கமும் சோவியத் இராணுவத்தில் நிலவி வருவதற்கான அடையாளங்கள் தென்படுகின்றன. சோவியத் இராணுவத்தினர் பாரிய முகாம்களிலும், கொட்டகை நகரங்களிலும் தங்க வைக்கப்பட்டிருக்கிறார்கள். இது செஞ்சேனையில் கட்டுப்பாடின்மையும், விரக்தியும் தோன்றுவதற்கு வழி கோலியுள்ளது. மேலைய நாடுகள் வளைகுடாவில் நிகழ்த்திய மூர்க்கமான போர், இந்த அவமான உணர்வை மேலும் அதிகரிக்கச் செய்திருக்கும். உள்நாட்டு அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக தனது முழுச்சக்தியையும் காட்டும் ஆற்றலை சோவியத் யூனியன் இழந்திருக்கிறது. எனினும், கூட்டு மொத்த சக்தியை அது இன்னமும் இழந்துவிடவில்லை. சோவியத் அரசியல் அமைப்பு, அமெரிக்க அரசியல் அமைப்பைப் போல பொதுஜன அபிப்பிராயத்தினால் எளிதில் பாதிப்படைவதில்லை. எனவே சோவியத் யூனியன் அமெரிக்காவிலும் பார்க்க இலகுவில் தனது சக்தியை வெளிக்காட்டும் ஆற்றலை மீளப் பெற முடியும். வளைகுடா போரின் விளைவாக எழக்கூடிய ஸ்திரமற்ற நிலையின் போது, சோவியத் யூனியன் - முக்கியமாக சோவியத் இராணுவம் - தனது சக்தியை வெளிக்காட்ட தூண்டப்படுவதற்கு பெருமளவில் வாய்ப்பிருக்கிறது. இத்தகைய முயற்சிகளுக்கூடாக சக்திகளின் பரஸ்பர சார்பு நிலையை மாற்றியமைக்க அது முயலக்கூடும்.

வளைகுடா யுத்தம் உட்பட மூன்றாவது உலகில் காணப்படும் நெருக்கடிகள் போர்கள் என்பவற்றின் விளைவாக அமெரிக்க - சோவியத் உறவில் உடனடியாக ஒரு வெடிப்பு கிளம்பும் என்று நான் கூறவில்லை. 1972ல் அமெரிக்கா ஹனோயிலும், ஹய்பெங்கிலும் குண்டு வீசிய போது, பிரஷ்னேவ் மாஸ்கோவில் நிக்சனை வரவேற்றார். ஹெல்சிங்கி ஒப்பந்தம் மற்றும் அப்பலோ சோயுஸ் கூட்டு பயணம் என்பவற்றின் போது 1975ல் கெடுபிடி தளர்வின் உச்சகட்டத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரண முடிந்தது. ஆனால், ஓராண்டு முடிவதற்குள்ளேயே ஜெரால்ட் போர்ட் கெடுபிடி தளர்வு என்ற சொற்பிரயோகத்தை கைவிடத்தொடங்கியிருந்தார். வியட்னாம் தேசிய விடுதலைப் படைகளின் வெற்றி மற்றும் அங்கோலாவின் தேசிய விடுதலை இயக்கத்துக்கு சோவியத் உதவி என்பவற்றின் விளைவாக கெடுபிடித்தளர்வு முடிவுக்கு வந்தது. எனவே, கால இடைவெளி இருந்த போதிலும் 1917 தொடக்கம் 1979 வரையில் சக்திகளின் இயங்கு திசையை நாங்கள் தெளிவாக காண்கிறோம். இந்த வரலாற்று பின்னணியிலேயே, முக்கியமாக, வளைகுடா போரின் விளைவாக - ஆனால், தனித்து அது மட்டும் காரணமல்ல - நிகழ்வுகள் மீண்டும் இடம் பெறக்கூடிய வாய்ப்பினை நான் எதிர்பார்க்கிறேன்.

இலங்கையில் வாழும் நாம், எமது இனப்பிரச்சினையின் தாக்கம் தமிழ்நாட்டில் உணரப்பட்டபோது அதனையடியொற்றி டெல்லி நடந்து கொண்ட விதத்தை கண்டோம். அதன் விளைவுகளை அனுபவித்தோம். வளைகுடா போராட்டம், முஸ்லிம் பெரும்பான்மையினரைக் கொண்ட சோவியத் குடியரசுகளில் எடுத்துவரும் தாக்கத்தை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க சோவியத் யூனியன் நிர்ப்பந்திக்கப்படலாம். வளைகுடா மீதான மேலைய உலகின் ஆக்கிரமிப்பு போர், ஏற்கனவே அமெரிக்க எதிர் அரபு தேசியவாதத்தினதும், இஸ்லாமிய தீவிரவாதத்தினதும் எழுச்சிக்கு வழி கோலியுள்ளது. இது இன்னும் உச்சகட்டத்தை அடையவில்லை. தமிழ் நாட்டில், தமிழ் தேசியவாதம் மத்திய அரசுக்கு எதிரான ஒரு குணாம்சத்தைப் பெறும் அபாயத்தை தவிர்ப்பதற்கு திருமதி காந்தி விரும்பினார். அதே போல, சோவியத் மத்திய ஆசிய குடியரசுகளில் வாழும் முஸ்லிம் மக்களின் உணர்வுகளை புண்படுத்தும் ஒரு நிலையில் இருப்பதனை மொஸ்கோ விரும்பமாட்டாது. இது வளைகுடாவில் சோவியத் இராணுவ தலையீட்டை எடுத்து வரப்போவதில்லை. ஆனால், வளைகுடா போர் தொடர்பாக மேற்குக்கும் சோவியத் யூனியனுக்குமிடையே இராஜதந்திர ரீதியான முறிவொன்றுக்கு வழி கோலக்கூடிய உக்கிரமான இராஜதந்திர முனைப்புக்களை தோற்றுவிக்கும். இந்த பிரிந்து செல்லல் நிலை (நான் ஏற்கனவே விபரித்த) அமெரிக்க - சோவியத் உறவின் ஒவ்வாமை நிலை தோன்றி வளர வழிகோலும். ஜனாதிபதி கொர்பசேவ் இந்த பிரிவின் போது தனது சொந்த இராணுவத்துடன் இணையாது, அமெரிக்க இராணுவத்தின் வழியில் செல்ல தலைப்படுவாராயின் அது அவரது அரசியல் நிலைமையை பலவீனப்படுத்தக்கூடும்.

## கிழக்கு நோக்கிய பார்வை

நிலைமைகள் இவ்விதம் இருக்கும் போது, சோவியத் யூனியன் கிழக்கில் சீனாவை நோக்கிச் செல்லும் வாய்ப்பும் தென்படுகிறது. சீனாவில் இப்பொழுது எழுச்சியடைந்து வரும் சக்திகள் மாவோயிச, கலாச்சாரப் புரட்சிவாத போக்குகளையோ அல்லது டென்சியாவோபிங் போக்குகளையோ பிரதிபலிக்கவில்லை. இச்சக்திகள் இராணுவத்தில் கணிசமான அளவில் காணப்படுகின்றன. ஸ்டாலின் காலத்தில் சோவியத் யூனியனுடன் நெருக்கமான உறவுகளை வைத்திருந்த நினைவுகளை இப்போக்குகள் கொண்டிருக்கின்றன. குருஷேவுக்குப் பின்னர் சீன - சோவியத் நல்லிணக்க நிலையொன்றை உருவாக்குவதற்கு மாவோ மறுத்த போது இவர்களில் பலர் அதிருப்தியடைந்தனர். மார்ஷல் சென் யுன், யே செய்ன் யெங், லீஹிஸ்ன் நீன் போன்றோரையே இங்கு குறிப்பிடுகிறேன்.

சீனாவின் இந்த குறிப்பிட்ட பிரிவினர், ''திட்டமிடப்பட்ட சந்தைப் பொருளாதாரத்தை'' ஆதரிக்கிறார்கள். சந்தை, கூண்டிலிருக்கும் ஒரு பறவையை ஒத்ததாக இருக்க வேண்டுமென அவர்கள் விரும்புகிறார்கள்; கூண்டு சோஷலிச திட்டமிடலைக் கொண்டிருக்கிறது. சோஷலிசத்தில் சில புறவயமான பொருளாதார விதிகள் உண்டு என ஸ்டாலின் குறிப்பிட்டதை இவர்கள் அடிக்கடி குறிப்பிட்டு வந்தார்கள். எனவே, யாவோ ஸியாங்கை ஒரு வலதுசாரி திரிபுவாதியாகவும், கலாச்சார புரட்சி வாதிகளையும், நால்வர் குழுவையும், தீவிர இடது சாரிகள் என்றும் அழைக்க முடியுமாயின் இந்தப் பிரிவினரை புதிய ஸ்டாலின் வாத, மத்திய போக்கினைச் சேர்ந்தவர்கள் என்று வர்ணிக்க முடியும். சோவியத் இராணுவத்துடன் ஒன்றுபடக்கூடிய பல குணாம்சங்கள் இவர்களிடம் காணப்படுகின்றன. சோவியத் இராணுவம், தனக்கு மேற்கிலிருந்தும் தெற்கிலிருந்தும் அச்சுறுத்தல்கள் வரும் என்று கருதினால், கிழக்கிலுள்ள சோஷலிச சக்திகளுடன் ஒரு நல்லிணக்க நிலையை விரும்பக்கூடும். கிழக்கிலுள்ள இந்த நாடுகளும் ஏகாதிபத்தியத்தின் அடக்குமுறைகளை எதிர்நோக்கியுள்ளன. ஓரளவுக்கு ஸ்டாலினிச கொள்கையின் அடிப்படையிலான சீன - சோவியத் நல்லிணக்க நிலையொன்று உருவாக மாட்டாது என ஒரேயடியாக கூறிவிட முடியாது. இதற்கு பலம் வாய்ந்த பொருளாதார காரணங்களும் உள்ளன. மந்தம் மற்றும் அரசியல் அதிருப்தி என்பன காரணமாக, சோவியத் யூனியனுக்கான மேற்கத்தைய உதவி குறைந்து, அரசியல் ஸ்திரமின்மை காரணமாக வெளிநாட்டு முதலீடுகள் அந்நாட்டுக்குள் வருவதற்கு தயக்கம் காட்டினால், சோவியத் யூனியனுக்கும் சீனாவுக்கும் மற்றும் சோஷலிச அணி நாடுகளுக்கும் இடையில் பொருளாதார ஒத்துழைப்பை உருவாக்குவதே கொர்பச்சேவுக்குள்ள ஒரே தெரிவாக இருக்கும்

## சோவியத் ரீகன்வாதம்

வியட்னாம் போருக்கு பிற்பட்ட காலத்தில் அமெரிக்கா எதிர்நோக்கிய அதே நிலைமையையே இன்றைய சோவியத் யூனியனும் எதிர்நோக்கியிருக்கிறது. ஆப்கானிஸ்தான் சோவியத் யூனியனின் வியட்னாமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வகையில் கொர்பச்சேவ் அதன் ஜிம்மி கார்டரா வார். எனவே, ஒரு வகையான சோவியத் ரீகனிஸத்தை - சோவியத் பலம் மீள வலியுறுத்தப்படலை - அதாவது சோவியத் யூனியனின் பலம் பொருந்திய வல்லரசு அந்தஸ்து வலியுறுத்தப்படலை நாம் காணப்போகி றோம். இப்பொழுது சில காலமாக ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறவில்லை. மூன்றாவது உலகில் - குறிப்பாக இரானில் - அமெரிக்காவுக்கு ஏற்பட்ட அவமானத்தை யடுத்து உளவியல் ரீதியாக ரீகனிஸம் தோன்றியது. எனவே, சோவியத்தின் 'கார்ட்டர் யுகம்' முடிவுக்கு வரக்கூடும். பாரசீக வளைகுடாவில் அமெரிக்காவின் முக்கியமான நலன்கள் சம்பந்தப்பட்டிருப்பதாகவும், அமெரிக்கா அங்கு இராணுவ ரீதியாக தலையிடும் என் றும் கூறி கார்ட்டர் 1979ல் இந்த மாற்றத்தை துவக்கி வைத்தார் என்பதை நாங்கள் மறந்துவிட முடியாது. ஐரோப்பாவில் ஏவுகணைகளை வைப்பதற்கான தீர் மானமும் எடுக்கப்பட்டது. கொர்பச்சேவ் இத்தகைய மாற்றமொன்றின் விளிம்பில் இருக்கக்கூடும்.

கொர்பச்சேவ் தாமே இதனை செய்யும் ஆற்றல் பெற்றிருப்பாரா? அல்லது சோவியத் யூனியனில் ஒரு புதிய தலைவர் தோன்றுவாரா? நிச்சயமாக தெரிய வில்லை. பேவிஸ் குரோமோவ் போன்ற மக்கள் அபி மானம் பெற்ற அதிகாரிபொருவரின் தலைமையில் செஞ்சேனை நாட்டை பொறுப்பேற்பதற்கு அல்லது லிகாசேவ் போன்ற அரசியல் தலைவர்கள் எழுச்சியடை வதற்கு வாய்ப்பில்லாமல் இல்லை. சோவியத் இராணு வமும், கே. ஜீ. பி. உளவு நிறுவனமும் எங்கும் வியா பித்துள்ள அதிகார கூட்டில், மீள் உள்ளடக்கமே பிரச்சினைக்குரியதாக இருக்கிறது. இலத்தீன் அமெ ரிக்க காட்சியுண்மையின் - அதாவது சிவிலியன் இரா ணுவ கும்பலின் - சோவியத் மறுவடிவம் என இதனை விளக்கலாம்.

இது கருத்தியல்ரீதியான பிரச்சினையொன்றை எடுத்து வருகிறது. அமெரிக்க அதிகாரத்தை மீள உறுதிப்படுத்திக்கொள்வதற்கு, நீதி நெறி சார்ந்த தார் மீக கட்டமைப்பொன்றை அது உருவாக்கிக் கொள்ள வேண்டியிருந்தது. இதன் ஒரு பாகத்தை மனித உரிமை கள் அம்சத்தை வலியுறுத்துவதன் மூலம் கார்ட்டர் நிறைவு செய்தார். மிகுதியை ரீகன் தனது வீரதீர வார்த்தை ஜாலங்கள் மூலம் பூர்த்தி செய்தார். அமெரிக் காவின் சித்தாந்த ஆயுதம் கிழக்கைரோப்பிய நிகழ்வு களினால் மிகச்சிறந்த முறையில் கூர்மையாக்கப்பட்டு, வளைகுடாவில் அதன் நடத்தை காரணமாக மழுங்கச் செய்யப்பட்டிருப்பதனை அந்நாடு காண்கிறது. அந்த வகையில், வளைகுடா அமெரிக்காவின் ஆப்கானிஸ் தானாக - தார்மீக அடிப்படையில் கூறும் போது-மாற முடியும். ஐக்கிய அமெரிக்கா, வளைகுடா போரின் பின்னர் மீண்டும் ஒரு முறை தனிமைப்பட்டிருக்கும் காலகட்டமொன்றுக்குள் நுழையக்கூடும். சோவியத் யூனியன் இந்நிலைமையை தனக்கு சாதகமாக பயன் படுத்திக் கொள்ள முடியும். அதற்கான உளவியல் மற்றும் சித்தாந்தரீதியான ஆயுதங்கள் அதற்கு தேவை. அமெரிக்க நிகழ்ச்சி ஒழுங்கில் - அதாவது கார்டரிசத்தை யடுத்து ரீகனிஸம் - இது இடம் பெறுமா? வேறு வார்த் தைகளில் சொல்வதானால் கொர்பச்சேவிசத்தை யடுத்து வேறொன்று இடம் பெறுமா? அது என்னவாக இருக்கும்? ரீகன் சித்தாந்தத்துக்கு இணையாக சோவி யத் யூனியனில் எழுச்சியடையப் போவது என்ன? எத்த கைய சக்திகள் அல்லது முகவரகங்கள் இதற்கான சித் தாந்த உள்ளீடுகளை வழங்க முடியும்? செஞ்சேனையும் கே. ஜீ. பி. யும் மட்டுமே இதனைச் செய்ய முடியும் என்று நினைக்கிறேன். அண்மையில் மொஸ்கோ நியூஸ் நடத்திய கருத்துக் கணிப்பொன்று எனக்கு ஆச் சரியத்தையளித்தது. இது ஸ்டாலினிசத்துக்கு எதிரான, சீர்திருத்தத்துக்கு ஆதரவான இதழ். ஆனால், சோவி யத் யூனியனில் பெருமளவுக்கு மக்கள் அபிமானம் பெற்ற வரலாற்று நபர்களில் ஒருவர் பீலிக்ஸ் ஸேர் கென்ஸ்கி என்பது இந்த கருத்துக் கணிப்பின் போது தெரியவந்தது. கே.ஜீ.பி. க்கு முன்னோடியான சேகா வின் ஸ்தாபகர் இவர். கே. ஜீ. பி. யும் (சோவியத்தின் ஏனைய அமைப்புக்களுடன் ஒப்பிடுகையில்) சார்புரீதி யில் மக்கள் அபிமானத்தைப் பெற்றுள்ளது என்பதனை வேறு சில அபிப்பிராய கணிப்புக்கள் தெரிவித்தன. கொடூரமான, ஆனால் சார்புரீதியில் அப்பழுக்கற்ற ஓர் அமைப்பாக இது நோக்கப்படுகிறது. லெனினிஸம் - மார்க்சிஸத்தின் மீது இன்னமும் நம்பிக்கை வைத்திருக் கும் சோவியத் யூனியனின் மிகச் சில சமூக முகவரகங் களில் செஞ்சேனையும் ஒன்றாகும். சோவியத் யூனிய னின் இந்த சித்தாந்த மீளமைப்பு பணி இச்சக்திகளின் - அதாவது செஞ்சேனை மற்றும் கே. ஜீ. பி. யின் - பொறுப்பில் விடப்படக்கூடும். எனவே, சோவியத் ரீகனிஸம், கே. ஜீ. பி. க்கும், செஞ்சேனைக்கும் முக்கிய மான பங்கொன்றினை வழங்குவதனை அவசியப்படுத் தும்.

## ஸ்டாலின் பிரச்சினை

கிளாஸ்நொஸ்த் மற்றும் பெரித்ஸ்ரோய்கா நிகழ் வுப் போக்கு ஸ்டாலினை ஆதரிப்பதற்கும், புனருத் தாரணம் செய்வதற்கும் வழி வகுத்துள்ளது என்பது ஓர் எதிர்முரண் நிலையாகும்! பிரஷ்னேவ் காலத்தில் ஸ்டா லின் நூற்றாண்டு (1979) போன்ற நிகழ்வுகள் இடம் பெற்றன. ஆனால் பிரதானமாக மௌனப் போர்வை யொன்றையே எங்கும் காண முடிந்தது. குருஷேவின் ஸ்டாலின் எதிர் கண்டனங்கள் வீரியமிழந்தன என்பது உண்மைதான். ஆனால், பெருமளவுக்கு, ஸ்டாலினின் பெயர் பிரஸ்தாபிக்கப்படாத நிலையே நிலவி வந்தது. கிளாஸ்நொஸ்த் காரணமாக, ஸ்டாலின் மீது பெரு வாரியான கண்டனக் கணைகள் அலையலையாக எழுந்தன. அத்துடன் சோவியத் கலந்துரையாடல்களில் ஸ்டாலினின் பிரசன்னம் தீவிரமாக உணரப்பட்டது. பிரஷ்னேவ் ஆட்சியில் காணப்பட்ட சித்தாந்தரீதியான சமரச நிலை சமீப ஆண்டுகளில் வீழ்ச்சி கண்டு வந்துள் ளது. பிரஷ்னேவிய வகை வலதுசாரி திரிபுவாதம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழிந்துவிட்டது. இதனிடத்தில் பல கருத்து நிலைகளின் கூர் முனைப்பினை காண்கிறோம். முன்னெப்போதுமிருந்திராத அளவில் முதலாளித்துவ சார்பு, லெனினிய எதிர்ப்பு போக்கு இப்பொழுது தலைதூக்கியிருக்கிறது. உதாரணமாக, ஸ்டாலினை அப்பட்டமாக ஆதரித்து எழுதப்பட்ட அந்தயேவாவின் கடிதம் - பிரஷ்னேவ் காலத்தில்கூட பெற்றிருக்கக்கூடிய - முதன்மை நிலையை பெற முடியவில்லை. சீர்திருத்தவாத வலது சாரி அணி, மேலைய நலன்களின் ஆதரவுடன் மேலும் மேலும் முன்னே செல்லும் போது, இதன் உச்ச கட்டமாக, ஸ்டாலின் ஆதரவு நிலையும், மறுமலர்ச்சியும் தோன்றும். செஞ்சதுக்கத்தில் இடம் பெற்ற 1990 புரட்சியின் கொண்டாட்டங்களின் போது சோவியத் கம்யூனிஸ்டுகள் (பல வருடங்களின் பின்னர்) ஸ்டாலினின் உருவத்தை தாங்கிச் சென்றது ஒரு தற்செயல் நிகழ்வல்ல! பல்லாண்டுகளின் பின்னர் முதன் முதலாக எஸ் எஸ் - 25 வகை கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. இந்த இரு நிகழ்வுகளும் நான் ஏற்கனவே விவரித்துக்கொண்டிருந்த சங்கமத்தை - அதாவது சோவியத் இராணுவத்துக்கும் கம்யூனிசத்தின் தீவிர கருத்துப் போக்குக்கும் இடையிலான சங்கமத்தை - எடுத்துக் காட்டுவதாக உள்ளன. கொர்பச்சேவ், தான் முதலில் ஆதரித்த 500 நாள் சட்டாலின் திட்டத்திலிருந்து பின்னர் விலகிச் சென்றமையே சோவியத் அரசியல் நிகழ்வுப் போக்கின் மாற்றப் புள்ளி எனப் பல அவதானிகள் கருதுகிறார்கள். ஆனால் மாஸ்கோவில் நவம்பர் 7ஆம் திகதி இடம்பெற்ற புரட்சி தின அணிவகுப்பே இந்த மாற்றப்புள்ளி என நான் கருதுகிறேன்.

சோஷலிச எதிர்ப்பு அலையை திசை திருப்ப வேண்டுமாயின், ஸ்டாலின் பிரச்சினை குறித்து தாம் மௌனமாக இருக்க முடியாது என்பதை சோவியத் கம்யூனிஸ்டுகளும், ரஷ்ய கம்யூனிஸ்டுகளும் உணரத்தொடங்கியிருக்கிறார்கள். ஸ்டாலின் அனைத்துக்கும் உறைகல்லாக இருக்கிறார். ''இரு வாள்கள் உள்ளன. ஒன்று லெனின் மற்றையது ஸ்டாலின்'' என்று 1960 களிலேயே மாவோ பகுத்துணர்ந்து கூறியிருந்தார். ''கம்யூனிஸ்டு கட்சிதலைமை ஸ்டாலின் என்ற வாளை கைவிட்டுள்ளது. ஸ்டாலின் என்ற வாளை கைவிட்டு விடுபவர்கள், லெனின் என்ற வாளையும் கைவிட்டு விடுவார்கள்'' என்று தீர்க்கதரிசனத்துடன் அவர் கூறினார். இது உண்மைதான். கிழக்கு ஐரோப்பாவிலும், சோவியத் யூனியனிலும் ஸ்டாலின் ஒழிப்புவாதம், சோவியத் கம்யூனிஸ்டு கட்சி மீதும், ஓர் அமைப்பு என்ற முறையில் சோஷலிசத்தின் மீதும் அக்டோபர் புரட்சியின் செல்லுபடியாகும் தன்மை மீதும் 1917ன் சோஷலிச தெரிவு மீதும் - அனைத்துக்கும் மேலாக லெனின் மீதும் - ஈவிரக்கமற்ற தாக்குதல்கள் தொடுக்கப்படுவதற்கு வழிகோலியுள்ளது.

கொர்பச்சேவும் இதே பாதையில் செல்வார் என்று கூறுவதற்கில்லை. மேலாதிக்கத்துக்கான போராட்டத்தில் ஸ்டாலினிச போக்கு வெற்றியடையும் என்றும் கூறிவிட முடியாது. வேறு சாத்தியங்கள் உள்ளன. கொர்பச்சேவ் இப்பொழுது இராணுவத்துடன் ஐக்கியப்பட்டுக்கொண்டிருக்கிறார் என எண்ணுகிறேன். பின்னர், இராணுவம் மித மிஞ்சிய அளவில் எதிர் விளைவு காட்டும் போதும் அபகீர்த்தியைத் தேடிக் கொள்ளும் போதும் இராணுவத்தில் தங்கியிருக்கும் நிலையிலிருந்து மெதுவாக கழன்று கொள்ள முடியும் என்று அவர் நம்புகிறார். அல்லது யெல்ட்சின் போன்ற அரசியல் எதிரிகளை ஒடுக்குவதற்கு அவர் இராணுவத்தை பயன்படுத்தக்கூடும். பின்னர் அவர் யெல்ட்சின் மற்றும் வலதுசாரி சீர்த்திருத்தவாதிகளின் நிகழ்ச்சித் திட்டத்துக்கு இணையான ஒரு திட்டத்தை அமுல் செய்ய முடியும். 'பினோசெட் தெரிவு' என்று அழைக்கப்படும் ஒரு திட்டத்தை பின்பற்றுமாறு 'எகனமிஸ்ட்' சஞ்சிகை அவரை தூண்டி வருகிறது. இத்தகைய திடீர் கரணங்கள் குறித்த வரலாற்று முன் நிகழ்வுகளும் உள்ளன. ட்ரொஸ்கி தலைமையிலான இடதுசாரி எதிரணியை ஒடுக்குவதற்காக, ஸ்டாலின், புகாரினிஸ்ட் வலதுசாரி எதிரணியுடன் இணைந்து கொண்டார். பின்னர் இடதுசாரி எதிரணி

முன்வைத்திருந்த திட்டத்தை (அதைவிடவும் தீவிரமான வடிவில்) அவர் அமுல் செய்யத் தொடங்கியிருந்தார்!

ஒரு பொதுமைப்படுத்தலொன்றை எடுத்துக் காட்டலாம் என்று விரும்புகிறேன். 1960 களிலும், 1970 களின் தொடக்கப் பகுதியிலும் முதலாளித்துவ உலக அமைப்பின் புற எல்லைகளில் - உதாரணமாக கிரீஸ் - இராணுவ சர்வாதிகார ஆட்சிகளும், சிவிலியன், இராணுவ ஆட்சிக் கும்பல்களும் தோன்றியிருந்தன. இது முதலாளித்துவ அபிவிருத்தியின் ஒரு கட்டமாக மாறியிருந்தது. இதனையடுத்து, இந்த ஆட்சி மாதிரிகள் நவீனமயப்படுத்தப்பட்டு, பூர்ஷ்வா ஜனநாயக ஆட்சிகள் முன்னணிக்கு வந்தன. ஆனால், முதலாளித்துவ உற்பத்தி உறவுகளுக்குள்ளேயே இவை அனைத்தும் இடம் பெற்றன. வேறு வார்த்தைகளில் கூறுவதாயின், இந்நாடுகளில் ஏற்பட்ட இராணுவ சர்வாதிகார ஆட்சிகளின் வீழ்ச்சி, முதலாளித்துவ அமைப்பின் வீழ்ச்சியாக இருக்கவில்லை. சோஷலிச உலகின் எஞ்சியிருக்கும் பகுதிகளில் இராணுவ ஆட்சிகள் அல்லது சிவிலியன் இராணுவ ஆட்சிகள் தோன்றும் ஒரு கால கட்டத்துக்குள் நாம் பிரவேசித்துக் கொண்டிருக்கிறோம் என நினைக்கிறேன். போலந்தின் ஜெருசல்கி ஆட்சியை இதற்கு முன்னோடியாக கூறலாம். ஆனால், அந்நாட்டில் சோஷலிசத்தின் வேர்கள் பலவீனமுற்று இருந்தபடியால் அது நிலைத்து நிற்க முடியாததாகவும், வீழ்ச்சிக்கான முன்னோடியாகவும் இருந்தது. சோஷலிச உலகின் எஞ்சியுள்ள பகுதிகளில் அமைப்பு வீழ்ச்சியொன்று ஏற்படுமென நான் நினைக்கவில்லை. சோவியத் யூனியனில் - யூகோஸ்லாவியாவிலும் கூட - அரச கருவிகள் - முக்கியமாக இராணுவம் - புதிய அதிகார கூட்டில் நிர்ணயகரமான பங்கொன்றினை வகிக்கும் என்றே நான் நினைக்கிறேன்.

பொருளியல் நோக்கு, பெப்./மார்ச் 1991



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்சிக் குறிப்பேடு

ஜனவரி

1. கொழும்பு நுகர்வோர் வாழ்க்கைச் செலவுச் சுட்டெண் 1991 ஜனவரியில் 1082.0 புள்ளிகளாக இருந்ததெனக் குடித்தொகை கணிப்பீட்டு, புள்ளிவிவரவியல் திணைக்களம் அறிவித்தது. இது 1990 டிசம்பரில் 1094.9 புள்ளிகளாகவும், 1990 ஜனவரியில் 937.7 புள்ளிகளாகவும் இருந்தது. கடந்த 12 மாதங்களுக்குமான சராசரி விகிதம் 1020.6 புள்ளிகளாக இருந்தது. அதற்கு முந்திய 12 மாதங்களின் சராசரி 854.6 புள்ளிகளாகும்.

16. தேவையேற்பட்டால், மலேசியா, இலங்கைக்கு அரிசி, சீனி என்பன தவிர வேண்டிய அளவு மசகெண்ணெய்யையும் வழங்கும் என்று வர்த்தக, வாணிப அமைச்சு அறிவித்தது.

18. வளைகுடா அகதிகளுக்கு உதவுவதற்கென, ஜப்பான் ஐ. நா. வுக்கு மேலதிகமாக 3 கோடியே 80 இலட்சம் டொலர்களை வழங்கும். இந்த நிதி ஐ. நா. வின் பேரழிவு நிவாரண ஒருங்கிணைப்பாளர் அலுவலகத்துக்கு வழங்கப்படும்.

21. காணிச்சீர்திருத்த சட்டம் அமுலுக்கு வந்ததிலிருந்து, தனி நபர்களுக்கு பொருத்தமற்றமுறையில் பகிர்ந்தளிக்கப்பட்ட காணி உரித்துக்களை இரத்து செய்யும் வகையிலான சட்டமாக்கமொன்றை உடனடியாக அறிமுகப்படுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக காணி, நீர்ப்பாசன, மகாவலி அபிவிருத்தி அமைச்சின் செய்திக் குறிப்பொன்று தெரிவித்தது.

22. இலங்கையில், வன்செயல்கள் காரணமாக தமது இருப்பிடங்களை இழந்த ஆயிரக்கணக்கான மக்களுக்கு உதவும் பொருட்டு, அவுஸ்திரேலியா 250,000 அமெரிக்க டொலர்களை வழங்க விருப்பதாக பதில் வெளிநாட்டமைச்சர் தெரிவித்தார். இருப்பிட பொருட்கள், உடை, மருந்து வகைகள் என்பவற்றைக் கொள்வனவு செய்வதற்காக இலங்கையில் செயற்பட்டு வரும் சர்வதேச ஸ்தாபனங்களுக்கு இந்நிதிகள் வழங்கப்படும்.

28. ஜப்பான் - இலங்கை தொழில்நுட்ப - கலாசார ஒத்துழைப்பு சங்கம், சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்களில் இலங்கையரை ஜப்பானில் பயிற்றுவிப்பதனை ஊக்குவிக்கும் நிகழ்ச்சித் திட்டமொன்றை துவக்கி வைத்துள்ளது. பிரேமதாச அரசாங்கத்தின் புதிய கைத்தொழில் கொள்கையினை அடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டது என அச்சங்கத்தின் தலைவர் கூறினார்.

30. அழிக்கப்பட்ட திரையரங்குகளை மீளமைப்பதற்கும், புதிய திரையரங்குகளை நிர்மாணிப்பதற்குமென உலக வங்கி நிதிகளை வழங்க இணங்கியிருப்பதன் மூலம் இலங்கையின் திரைப்படத் தொழிலுக்கு அது பெரும் உற்சாகத்தை அளித்துள்ளது.

பெப்ரவரி

2. இலங்கை வங்கி, வைப்புக்களுக்கான வட்டியில் ஒரு சதவீத அதிகரிப்பினை அறிவித்தது. சமீபத்தில், மத்திய வங்கி, வங்கி வீதத்தை இரண்டு சதவீதம் உயர்த்தியதனாலும், தனது சொந்த வைப்பு வட்டி வீதங்கள் அதிகரிக்கப்பட்டிருப்பதாலும் வங்கியின் நிதிகளுக்கான செலவு உயர்ந்து சென்றுள்ள போதிலும், கொடு கடன் வட்டி வீதங்கள் அடுத்த மூன்று மாத காலத்துக்கு அதே அளவில் வைக்கப்பட்டிருக்கும்.

தேயிலைத் தொழிற்சாலை உரிமையாளர்களுக்கு, ஏலத்தில் விற்பனை செய்யப்படாத தேயிலைகளுக்கு நிதிகளை வழங்கும் நிவாரணத்திட்டமொன்று அமுலுக்கு வந்தது. இத்திட்டத்தின் கீழ், ஏல விற்பனைகளில், கேட்போர் இன்மையால் கிலோ ஒன்று ரூ. 60க்கு மேற்பட்ட தரப்படுத்தப்பட்ட தேயிலைகளை வாபஸ் பெற்றுக்கொள்ளும் தொழிற்சாலை உரிமையாளர்களுக்கு தொழிலாளர் கூலிகளை வழங்கவென முற்பணம் வழங்கப்படும்.

6. பின்லாந்து அரசாங்கம், அடுத்த சில வருடங்களுக்குரிய இலங்கைக்கான அதன் அபிவிருத்தி உதவியை குறைத்துள்ளது. 1980ல் 4 கோடி ரூபாவாக இருந்த பின்லாந்து அபிவிருத்தி உதவி, 1987க்கு பின்னர் ஆண்டொன்றுக்கு 55 கோடி ரூபாவாக அதிகரித்திருந்தது. 1991-1994 காலத்துக்கு வழங்கப்பட்ட மொத்த அபிவிருத்தி உதவி 120 கோடி ரூபாவாகும்.

இலங்கை, இவ்வாண்டில் வளைகுடா நெருக்கடியின் விளைவாக, குறைந்த அளவிலான தொழிலாளர் பண அனுப்பீடுகளையும், அப்பிராந்தியத்துக்கான தேயிலை மற்றும் ஏனைய பொருட்களின் ஏற்றுமதிகளில் வீழ்ச்சியினையும் எதிர்கொள்ள விருப்பதால் சர்வதேச நாணய நிதியத்திலிருந்து 45 கோடி அமெரிக்க டொலர் வரையிலான அதிகரித்த அளவு அமைப்புரீதியான சீராக்கல் வசதியை கோரும் என தகவலறிந்த பொருளியல் வல்லுனர்கள் தெரிவித்தார்கள்.

ஜப்பானிய அரசாங்கத்தின் சிறு அளவு உதவித்திட்டத்தின் கீழ், செவிப்புலன் இழந்தோருக்கான தேசிய கவுன்சில் 19,614 அமெரிக்க டொலர் பெறுமதியான செவிப்புல சாதனங்களை பெற்றுக்கொள்ளும். இக்கொடை ஒப்பந்தத்தில் இலங்கைக்கான ஜப்பானிய ஸ்தானிகரும் இக்கவுன்சிலின் தலைவரும் ஒப்பமிட்டனர்.

8. குறிப்பாக், வளைகுடா போரினால் பாதிப்படைந்திருக்கும் ஆறு நாடுகளுக்கு அவசர உதவி வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி திட்டமிட்டுள்ளது. பிலிப்பைன்ஸ், பங்களாதேஷ், பாகிஸ்தான், இந்தியா, இலங்கை, நேபாளம் ஆகிய நாடுகளுக்கு உதவிகள் வழங்கப்படும்.

12. ரூ. 58 கோடி செலவில், 101 கிலோ மீட்டர் நீளமான கொழும்பு - காலி நெடுஞ்சாலையை புனருத்தாரணம் செய்வது தொடர்பான ஒப்பந்தமொன்றில் கொரியாவுடன் கைச்சாத்திடப்பட்டதாக நிதியமைச்சின் செய்திக் குறிப்பொன்று தெரிவித்தது. தென் கொரிய பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியத்தினால் 3.5 சதவீத வருட வட்டியில் வழங்கப்படும் இக்கடன் இந்த வேலை 20 வருட காலத்தில் திருப்பிச் செலுத்தப்படல் வேண்டும். 34 மாத காலத்தில் பூர்த்தி செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

13. திரிபோச நிகழ்ச்சித் திட்டத்தின் அமுலாக்கல் முகவரகமான கெயார் இன்டர்நசனல் அமைப்புக்கு, ஜப்பானிய அரசாங்கத்தின் சிறு அளவு கொடை உதவித்திட்டத்தின் கீழ் 18,756,000 அமெரிக்க டொலர் பணக்கொடையொன்று வழங்கப்பட்டதாக ஜப்பானிய ஸ்தானிகராலயத்தின் செய்திக் குறிப்பொன்று தெரிவித்தது

ஜோர்ஜ் பெரேரா எழுதிய "அபிவிருத்தி முயற்சியின் முன்னுரிமை குறிகாட்டி ஒன்று என்ற முறையில் ஏற்றுமதி செயலாற்றுகையின் முக்கியத்துவம் " என்ற கட்டுரையின் தொடர்ச்சி (இடப்பற்றாக்குறை காரணமாக) இவ்விதழில் இடம்பெறவில்லை. அது அடுத்த இதழில் இடம்பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை அஞ்சல் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. பதிவு எண்: கிவ்ட / 09 / செய்தி / 91

"உற்பத்திசார் நீர்ப்பாசன விவசாயமொன்றுக்கு அத்தியாவசியமான துணை நிறுவனங்களையும், சேவைகளையும் வரும் பத்தாண்டுகளில் வகுத்துக் கொள்ள முடியுமாயின், இலங்கை 2000 ஆவது ஆண்டுக்குப் பின் துரித வளர்ச்சியையும் நிலை மாற்றத்தையும் அடைய முடியும். இதுவே 1990 களின் பத்தாண்டில் நம் முன் உள்ள மிக முக்கிய பணியாகும்."

சீ. ஆர். பானபொக்கே

*2000 ஆவது ஆண்டில் நீர்ப்பாசன விவசாயம்*

(இரட்டை இதழ்)
பிரதி விலை: ரூ. 20/-
வருட சந்தா: ரூ. 120/-

மக்கள் வங்கியின்
ஆராய்ச்சிப்பிரிவு வெளியீடு

உரிய முறையில் 'பொருளியல் நோக்கின்' பெயரை குறிப்பிட்டு, அதில் இடம்பெறும் கட்டுரைகளை மேற்கோள் காட்டவோ மீளப்பிரசுரிக்கவோ முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed by Sumathi Publishers, No. 445/1, Sirimavo Bandaranayake Mawatha, Colombo 14.